பேரளம் இரேவண சித்தர் அருளிச் செய்த

# சிவஞான தீபம்

(தெளிவான உரையுடன்)



சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீடு எண். 129.

பேரளம் இரேவண சித்தர் அருளிச் செய்த

# சிவஞான தீபம்

(தெளிவான உரையுடன்)

**

பதிப்பாசிரியர் :

**வித்துவான் திரு. அடிகளாசிரியர்,**

தமிழ்ப் பேராசிரியர்.

கரந்தைப் புலவர் கல்லூரி. தஞ்சாவூர்.

வெளியிடுபவர் :

**இயக்குநர்,**

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**

2014 விலை : ரூ. 175.00

சிவஞான தீபம்
0129
T.M.S.S.M-2016

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | ... | Sivagnanadeepam |
| Editor | ... | Thiru Adlgalasiriyar |
| Publisher | ... | Director;<br>Sarasvati Mahal Library |
| Publication No. | ... | 129 |
| Language | ... | Tamil |
| Edition | ... | III Edition |
| Date of Publication | ... | March 2014 |
| Paper used | ... | 18.6 kg TNPL |
| Size of the Book | ... | 21 × 14 cm. |
| Printing Type used | ... | 12 pt. |
| Number of pages | ... | 236 |
| No. of copies | ... | 500 |
| Price | ... | Rs.175/- |
| Printer | ... | **Sivakasi Press, Railady, Thanjavur.** |
| Binding | ... | **Art Board** |
| Subject | ... | Saiva Siddhanta |

# சிவஞான தீபப் பொருளடக்கம்


1. முகவுரை

2. பதிப்பாசிரியர் முன்னுரை I—XX

3. சிவஞான தீப உரையுள் எடுத்தாண்ட எடுத்துக்காட்டு நூல்கள். XXI—XXII

4. சிவஞான தீபம் (பொழிப்புரையுடன்) 1—177

5. சித்திலிங்கேசன் வணக்கம் 178—180

6. சிவஞான தீபச் செய்யுள் முதற்குறிப்பு அகர வரிசை 181—183

7. சிவஞான தீபத்திலுள்ள சமயக் குறியீட்டுச் சொற்களும் சமய நுண் பொருள்களும் 185—207

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்.
21—9—90.

**மு. சதாசிவம்,** எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

# PREFACE

Sivajnana Deepam, a Tamil work in verses, is a standard text of the Veerasaiva School of *Saivism of the South. It may be remembered* that the mighty Vijayanagar Empire had its foundations laid by the spirit and philosophy of this school. The Administrative Committee of the Sarasvati Mahal Library proposed to publish this book with a clear commentary and entrusted this work to Vidvan, Thiru Adigalasiriyar, a a worthy scholar and head of a Veerasaiva Mutt, who has fulfilled the expectations of the Administrative Committee by properly editing the work with appropriate introductions, clean commentary and a useful index. We hope this book will become more popular and reach a wider public on account of the edition. This publication is based on two manuscripts preserved in this Library bearing the numbers M. 597 and M, 759.

We are thankful to the Government of Tamil Nadu for enabling us to publish this work with their grant, to Vidvan Thiru Adigalasiriyar for his scholarly editorship, and to the Cauvery Colour Press, Kumbakonam, for their neat execution of the printing of the work.

**N. KANDASWAMI,**
Honorary Secretary,
T. M. S. S. M. LIBRARY,

Thanjavur,
5—1—1970

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, ni your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DIRECTOR,**

Sarasvati Mahal Library, Thanjavur.

# பதிப்பாசிரியரின் முன்னுரை

## பழங்கால நிலை

மிகப் பழைய காலத்திலே மக்களுடைய வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கலாம் என்பதை நாம் நம் அறிவுக் கண்ணால் ஆராய்ந்து அறிதல் வேண்டும். மக்களின் வாழ்க்கை நெறி காலந்தொறும் வளரக்கூடிய இயல்புடையதாகையினால், இக் காலத்திலுள்ள நாகரிக வாழ்க்கையினைப் போன்றே பழங்காலத்தி லிருந்த மக்களுடைய வாழ்க்கையும் இருந்திருக்க முடியா தன்றோ ?

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்த ''மாமூலனார்'' என்னும் புலவர் அவர் காலத்திலே பாலை நிலத்துச் சீறூர்களில் மக்கள் எவ்வாறு வாழ்ந்திருந்தனர் என்பதைத் தம் பாட்டோவியத்திற் காட்டியுள்ளனர்.

*" ... ... ... ... ... பொறையடைந்து*
*இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய*
*நிணம்பொதி விழுத்தடி நெருப்பின்வைத் தெடுத்து*
*அணங்கரு மரபிற் பேஎய் போல*
*விளருன் தின்ற வேட்கை நீங்கத்*
*துகளற விளைந்த தோப்பி பருகிக்*
*குலாஅ வல்விற் கொடுநோக் காடவர்*
*புலாஅற் கையர் பூசா வாயர்*
*ஒராஅ வுருட்டுங் குடுமிக் குராலொடு*
*மராஅஞ் சீறூர் மருங்கிற் றூங்கும்*
*செந்நுதல் யானை வேங்கடம் தழீஇய*
*வெம்முனை அருஞ்சுரம்"*

(அகநானூறு–295)

என்பது அப் பாடலாகும். ''வளைவயின்கண் வளைந்த வலிய வில்லினை யுடைய கொடிய பார்வையினை யுடைய ஆடவர்

தமக்குப் பசி வரின் பக்கத்திலுள்ள மலைக்குச் சென்று அங்கே யுள்ள காட்டெருதுகளைப் பிடித்துக் கொன்று அவற்றின் கொழுப்புப் பொருந்திய தசையை நெருப்பிலே வைத்தெடுத்து, 'கண்டார்க்கு அச்சத்தைத் தரும் பேய் போல' வெள்ளையான அவ் வூனைத் தின்பர். பின்னர் தாக வேட்கை நீங்கக் குற்றம் அற விளைந்த தோப்பி என்னுங் கள்ளினைப் பருகுவர். அதன்பின் புலால் படிந்த கையினை யுடையவராய்க் கழுவாத வாயினை யுடையவராய் மராமரம் நிறைந்த சீறூரின் பக்கத்திலே மெல்ல அசைந்தாடுவர்'' என்பது அப் பாட்டின் பொருளாகும். இப்பாட்டு பாலைநிலச் சீறூர் மக்கள் வாழ்க்கை ''கண்டார்க்கு அச்சத்தைச் செய்யும் பேய் வாழ்க்கை போல'' உள்ளதென்று கூறுகிறது.

## சமயத் தோற்றம்

இத்தகைய மக்களிடத்தே விழுப்பந் தரும் நல்லொழுக்க மில்லை. நல்லொழுக்கத்தை உணர்த்தும் கல்வி யறிவில்லை. கல்வியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நல்லுணர்ச்சியில்லை. இவ் வில்லாமைகளால் இவர் தம் வாழ்வு ''கண்டார்க்கு அச்சந் தரும் பேய் வாழ்க்கை போல் இருக்கின்றது'' ''இப் பேய் வாழ்க்கை மக்களிடத்திலே யிருந்து ஒழிய வேண்டும். அவர்களெல்லாம் நல்வாழ்க்கை வாழ வேண்டும். அதற்காகவே சமய நெறிகள் உலகில் தோன்றின.

"ஒழுக்கம் கல்வி உயரறி வின்றியே
இழுக்க மேபயில் ஏழையர் யாவரும்
செழுக்க வாழ்ந்து சிவம்பெறச் செய்தலே
வழுக்கில் சைவ வளம்பெறு கொள்கையால்"

## சமயம் என்பதன் பொருள்

'சமயம்' என்னும் சொல் காலத்தையும் உணர்த்தும். சைவம் வைணவம் முதலான மதங்களையும் உணர்த்தும். 'சமயம்' என்னுஞ் சொல்லிற்கு 'நன்றாக அறியப்படுவது'

என்று அறிஞர் பொருள் கூறுகின்றனர். காலமும் யாண்டு, திங்கள்; பெரும் பொழுது, சிறுபொழுது முதலிய கூறு. பாட்டால் நன்றாக அறியப்படுகிறது. மதங்களும் நன்றாக அறியப்படும் பொருள்களை உடையன.

## பல சமயங்கள்

இம்மைப் பயனைமட்டும் கருதிய சமயம், இம்மைப் பயனுடன் மறுமைப் பயனையும் கருதிய சமயம் என்று சமயங்களை இரண்டு வகையாகப் பகுத்துக்கொள்ளலாம். உலோகாயத சமயமும் பூதவாதியின் சமயமும் இம்மைப் பயனைமட்டும் வலியுறுத்தும் சமயங்களாகும். பௌத்தம் சைனம் வைணவம் சைவம் முதலிய சமயங்களெல்லாம் இம்மைப் பயனுடன் மறுமைப் பயனையும் வலியுறுத்தும் சமயங்களாகும். உலோகாயதமும் பூதவாதியின் சமயமும் உயிர் என்கின்ற தனித்த பொருள் இல்லை; பூதங்களின் கூட்டுறவால் தோன்றிய அறிவே உயிர்; கூடிய பூதங்கள் பிரிந்த காலத்திலே அறிவாகிய உயிரும் அழியும்: ஆகையால், உயிர் மறுமையில் எதனையும் அடைவதில்லை; இம்மையிலே அரசன் ஆணைக்கிசைய நடந்து நாள்தொறும் பொருளீட்டி உண்டு உடுத்து மகளிரொடு கூடி இன்பம் துய்த்தலே பயனாகும் என்று கூறும்.

## பௌத்தமும் சைனமும்

மேற் கூறிய இரண்டு சமயங்கள் கூறிய கருத்திற்கு மேல் பௌத்தமும் சைனமும் உயிர் உண்டு; அவ்வுயிர் அடையும் மறுமைப் பயனும் உண்டு; நல்வினை தீவினை உண்டு; ஆனால் உயிர்க்கு வினைப்பயனை ஊட்டுதற்குக் கடவுள் என்ற ஒரு பொருளில்லை என்று கூறும்.

## பௌத்த சமயம்

மணிமேகலை 'நூலாசிரியர்' கீழ்வருமாறு பௌத்த சமயக் கொள்கையைக் கூறுகிறார். இவ்வுயிரைப் பாசங்களால் கட்டினோரு மில்லை; அக் கட்டிலிருந்து விடுவிப்

போரும் இல்லை; உயிர்களாகிய தாம் காம வெகுளி மயக்கங்களுடன் கூடியிருப்பதே கட்டிற்கு (பந்தத்திற்குக்) காரணமாகும். அவற்றிலிருந்து விடுதலைபெறுதலே வீட்டிற்குக்காரணமாகும் என்பன அவர் கூறும் கருத்தாகும்.

"கட்டும் வீடும் அதன்கா ரணத்தது
ஒட்டித் தருதற் குரியோர் இல்லை
யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்"

(மணிமேகலை-30,250—253)

## சைன சமயம்

சைன சமயத்தவர் தங்கள் சமயதத்துவப் பொருள் களை ஏழு வகையாகப் பகுத்துக் கூறுகின்றனர்.

1 உயிருள்ளது (ஜீவ தத்துவம்)
2 உயிரில்லாதது (அஜீவ தத்துவம்)
3 வினைகள் வருதல் (ஆஸ்ரவ தத்துவம்
4 வினைகள் ஆன்மாவைப் பந்திப்பது (பந்த தத்துவம்)
5 வினைகள் வரும் வாயிலைத் தடுப்பது (ஸம்வர தத்துவம்)
6 ஆன்மாவிற் சேர்ந்த சில வினைகளைத் தடுப்பது (நிர்ஜரா தத்துவம்)
7 ஆன்மாவிற் சேர்ந்த எல்லா வினைகளையும் தவத்தினால் நீக்கல் (மோட்ச தத்துவம்)

மேற்கூறிய ஏழு தத்துவங்களுள், இவ் வுலகத்தையும் உலகப்பொருள்களையும் ஆக்குதல் காத்தல் அழித்தல் முதலியன செய்யும் 'ஈஸ்வர தத்துவம்' கூறப்படாமலிருப் பதை அறிஞர் கருதி உணர வேண்டும். சீவனானது குரோதம், மானம், மாயை, லோபம் என்னும் கஷாயத்து டன் கூடியுள்ளது; அது கர்மம் வருவதற்குத் தகுந்த பரிசம், இரசம், கந்தம், நிறம் என்னும் புத்கலங்களை நுகர்கிறது; 'அதுவே பந்தம் என்பர். ஞானா வரணம், தர்சனா வரணம், அந்தராயம் முதலான எல்லாக் கர்மங்

களும் சீவன் செய்யும் தவத்தினாற் கெட, அது மேல் நோக்கிச் சென்று உலகத்தின் மேற் பாகத்தில் தங்கியிருக்கும்; 'அதுவே மோட்சம்' என்பர்.

## கன்ம மீமாஞ்சகர் கூறுவது

'கன்ம மீமாஞ்சகர்' என்போர், 'வினையைச் செய்தவர்க்கு அவ் வினையே துறக்கம் முதலிய பயன்களை உதவும்; இவ் வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒருவன் உண்டென் பதும், அம் பரமான்வினால் உலகம் தோன்றி அழியும் என்பதும் பொய்; உலகம் முத்தொழிற் படாமல் என்றும் இவ்வாறே நிலை பெறும்'' என்பர். இவர்தம் கொள்கை சைன சமயவத்தவர் கொள்கையினை ஒத்திருத்தற் காண்க.

## சைவம் வைணவம்

நம் நாட்டிலே மிகச் சிறந்த சமயங்களாகக் கருதப் படும்; சைவம், வைணவம் என்னும் இரண்டு சமயங்களும் உயிர்கள் உள்ளன; உயிரை இயக்குகின்ற கடவுட் பொருள் உண்டு; உயிரின் பந்தத்திற்குக் காரணமான பொருள் உண்டு என்று கூறுகின்றன.

## தொல்காப்பியர் கூறுவது

சைவ சமய உண்மைப் பொருளை ஆராய்வதற்கு முன்னர்த் தொல்காப்பியர் கூறியுள்ள ஒரு நூற்பாவின் கருத்தை நோக்குவோம். ஒரு குயவன் குடம் முதலானவற்றை வனைகின்றான். அவ் வனையுந் தொழிலை நிகழ்த்த அக் குயவன் நிமித்த காரணமாய் அமைகிறான். அவன் குடம் முதலியனவற்றைச் செய்யுந் தொழிலில் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஆதலால் அத் தொழிற் பயிற்சியும் அத் தொழிலால் செய்யப்படுவது குடம் முதலாகிய செயப்படு பொருளாகையால் அச் செயப்படு பொருளும் அத் தொழிற்குக் காரணமாகிறது. அத் தொழில் நிகழ இடம் வேண்டும், காலம் வேண்டும், மண் ஆகிய

முதற் காரணம் வேண்டும். தண்டம் சக்கரம் முதலாகிய துணைக் காரணங்களும் வேண்டும். இவ் வனைதலாற் றோன்றிய குடம் முதலானவற்றை யார் பெற்றுக் கொள்ளு கின்றனரோ அவரும் அத்தொழில் தோன்றுவதற்கோர் காரணமாய் அமைகின்றனர். அக் குடத்தை வனைந்த தனால் ஏதாவது பயன் ஏற்படும் அன்றோ? அப்பயனும் அத் தொழில் தோன்றுவதற்கோர் காரணமாகிறது.

இங்ஙனம் வனைதலாகிய ஒரு தொழிலை நடத்து தற்குச் செய்பவன் முதலான பல காரணங்கள் வேண்டி யுள்ளன. அவற்றால் வனைதல் என்ற தொழில் நிகழ் கின்றது. இதனைப் போலவே ஒவ்வொரு தொழிலுக்கும் பல காரணங்கள் முன்னேயிருக்க வேண்டும். அவற்றால் அத் தொழில் தோன்றும் என்பதை நாம் உணர்ந்துள் ளோம். இந்த உண்மையை "ஒல்காப் புலமைத் தொல் காப்பியர்"

" வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே"

என்ற நூற்பாவுள் நன்கு தெரிவித்துள்ளார்.

## அருணந்தி சிவம் கூறுவது

மேற்கூறிய தொல்காப்பியர் கருத்தை வைத்துக் கொண்டு "அருணந்தி சிவம் சிவஞான சித்தியாரில் கூறியுள்ள ஒரு பாட்டின் கருத்தினைப் பார்ப்போம்.

வினை செய்வதற்கு வினைமுதலா யிருக்கும் உயிர் களானவை இடமாகிய உலகும் உடலும், கருவிகளாகிய கரணங்களும், முக்காலங்களுள் ஒன்றாகிய காலமும் செயப்படுபொருளாகிய பயனும், இன்னதற்காக இது, பயனாக என்பவைகளாகிய நியதிகளும், செயலாகிய செய்தியும் ஆகிய இக் காரணங்களையெல்லாம் துணை யாகக் கொண்டு வினைகளைச் செய்து இன்ப துன்பமாகிய

போகத்தை நுகர்ந்துவரும் என்ற கொள்கை அறிஞர்க் கெல்லாம் ஒப்பமுடிந்ததாகும். மேற்சொன்ன பொருள் களுள் உயிர் நீங்கலாக ஏனையவையெல்லாம் அறிவில்லாத பொருளாகையாலே (சடப்பொருளாகையாலே) தாமாக ஒன்று சேர்ந்து இயங்கி ஒரு தொழிலை உயிர்க்கு உதவா: அவற்றை இன்றியமையாத உயிரும் உரிமையில்லாத சிற்றறிவுப் பொருளாயிருப்பதால் அவற்றைத் தன்னுடன் கூட்டி வினைகளைச் செய்யும் ஆற்றலில்லாததாய் உள்ளது ஆகவே பாரிசேட அளவையால் உயிரையும் உலகு உடல் முதலானவற்றையும் கூட்டுவிக்கும் பேரறிவுப் பொருள் ஒன்று உண்டென்பது அறிவுடையோ ரெவர்க்கும் புலனாகும் என்று கூறுகின்றார்?

" உலகுடல் கரணம் காலம்
உறுபலம் நியதி செய்தி
பலவிவை கொண்டு கன்மம்
பண்ணுவ துன்ப தானால்
நிலவிடா இவைதாம் சென்று
நினைத்துயிர் நிறுத்திக் கொள்ளா
அலகிலா அறிவன் ஆணை
அணைத்திடும் அருளி னாலே"

(சித்தியார்-2-22)

என்பது அப் பாட்டாகும்.

## திருவள்ளுவர் கூறுவது

உயிர்கள் எண்ணிய காரியம் சில காலத்தில் எண்ணிய வாறு முடிகிறது. சில காலத்திலே எண்ணியவாறு முடியாமற் போகின்றது. இவற்றிற்குக் காரணம் என்ன? அவ் வுயிர்களின் ஆகூழும் போகூழுமே அவற்றிற்குக் காரண மாகின்றன. ஆகூழும் போகூழு மாகிய நல்வினை தீவினைகள் சடப்பொருள்கள் ஆகையினாலே, அவை தாமாகச் சென்று உயிர்களை அடையா, வினைப் பயனைப் பெறுகின்ற உயிர்களும் பேரறிவும் பேராற்றலும் உரிமை

யும் இல்லாதன ஆகையினாலே, அவ் வினைகளைத் தாமே அறிந்து அவற்றின் பயனைத் தம் நுகர் பொருளாய்க் கூட்டிக் கொள்ளா. ஆகவே, பாரிசேட அளவையால் வினைகளை உயிருடன் ஒன்றுவிக்கும் இறைவன் உளன் என்பது பெறப்படுகிறது. இக் கருத்தினைத் "தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்" திருக்குறளில் ஊழ் என்னும் அதிகாரத்தில், ஊழ்வினைய உயிர்களுடன் வகை யறிந்து கூட்டுபவனாகிய இறைவனை 'வகுத்தான்' என்னும் பெயரால் ஓதி, அவ் விறைவன் அவ்வவ் வுயிர்களின் வினை யறிந்து வகுத்தவாறே உயிர்களுக்கு வினை நுகர்ச்சி ஏற்படும் என்று கூறியுள்ளார்.

" வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" (377)

என்பது அக் குறட்பாவாகும். இதன் உரையிற் "பரிமேழைகர்" ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ் வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தான்' என்றார் என்று சிறப்புரை எழுதியுள்ளார்.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பலருள்ளும் சிறந்த உரையாசிரியர் என்ற கருதப்படும் "சேனாவரையர் "காலம் உலகம்" (தொல்-சொல்-57) என்னும் நூற் பாவினுள் 'பால்வரை தெய்வம்" என்னுஞ் சொற்றொடருக்குப் "பால்வரை தெய்வம் என்பது எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுக்கும் தெய்வம்" என்று உரை கூறியுள்ளார்.

இக் கருத்தினை நம் "மெய்கண்ட தேவ நாயனார் "அவ்வினையைப், பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" என்று தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

## சேக்கிழார் கூறும் சைவ நெறிச் சிறப்பு

சேக்கிழார், சாக்கிய நாயனார் புராணத்தே சாக்கிய நாயனார் எல்லாச் சமய நெறிகளிலும் சைவ சமய நெறியே சிறந்த தென்று உணர்ந்த முறையைச் சொல்லுமிடத்து

" செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள்சிவனென்
றருளாலே உணர்ந்தறிந்தார்"

செய்யப்படும் வினையும், அதனைச் செய்கின்ற உயிர் வர்க்கங்களும், செய்வினையின் பயனும், அப் பயனை உயிர்கட்குப் பேராமல் ஊட்டும் முதல்வனும் என்று மெய்ப் பொருள் நான்காகும். இந் நான்கினை மெய்பொருளாகக் கொண்டொழுகும் இயல்பு சைவ நெறிக்கே உண்டு. ஏனைய சமயங்களுக்கு இல்லை என இறைவன் திருவருளா லே சாக்கிய நாயனார் உணர்ந்து அறிந்தார் என்று கூறும் சைவ நெறிச் சிறப்பு அறிஞர்கள் அறிந்து கொள்ள வேண்டுவதாகும்.

## சைவ சமயத்தின் பேதம்

வாமம் என்றும், தக்கணம் என்றும் மிசிரம் என்றும், சித்தாந்தம் என்றும் சைவசமய பேதம் நான்காகும். இவற்றுள் வாமம் என்பது சத்தியினை மேலாகக் கொள்வதாகும், தக்கணம் என்பது வைரவ சமயமாகும் மிசிரம் என்பது ஏழு தெய்வ மாதர்களைப் போற்றுங் கொள்கையினை யுடையது. சிந்தாந்தம் என்பது வேத சம்மதமான மதமாகும். இக் கருத்தினை

" ஒது வாமம் ஒழிவறு தக்கணம்
மேதை யாகும் மிசிரம் முனிவர
தீதி லாதசித் தாந்தம் எனவரு
பேதம் நான்கும் பெறும்புகல் சைவமே"
"வாமஞ் சத்தி பரஞ்சொல் வயிரவர்க்
காமங் தக்கண மம்மிசி ரத்தெழு
நாமங் கொண்டுறு மாதர் நணுகுவார்
ஏமஞ் செய்மறை யின்மதம் மற்றதே"

என்னும் "சித்தாந்த சிகாமணியால்" (உபதேசம் 10, 11) அறிந்து கொள்ளலாம், "பிங்கல நிகண்டு' சைவ சமய பேதங்களை உட் சமயம் என்னும் பெயரால் ஆறாகக் கூறுகிறது.

" வைரவம் வாமம் காளாமுகம் மாவிரதம்
பாசுபதம் சைவமென் றுட்சமய மாறே"

என்பது (3-6) அந் நூற்பாவாகும்.

## சித்தாந்த சைவம்

மேலே கூறிய சைவ பேதம் நான்கனுள் சித்தாந்த சைவம் என்பது வேத சிரம், வேதாந்தம் எனப்படும் உபநிடதக் கொள்கையைத் தழுவிநின்று, வேறு மதக் கொள்கைகளைத் தருக்கித்து நீக்கிச், சிவாகம அறத்தைக் கூறுவதாகும். இக் கருத்தினை

"மறையு ரைக்கும் தருமம் வகுத்தலால்
புறம தத்தொடு நின்று பொருதலால்
திறம டுத்த சித்தாந்தம் சிவாகம
அறமு ரைக்கும் மறைமத மாகுமால்"

என்னும் "சித்தாந்த சிகாமணியால்" (உபதேசம்-2) அறிதல் கூடும். "சித்தாந்தம்' என்னுஞ் சொல்லிற்கு "நிச்சயம்" என்று "அமரகோசம்" பொருள் கூறுகின்றது. எனவே நிச்சயமான பொருளைக் கூறுவது சித்தாந்த சைவமாகும். "ஸித்தாந்தோ வேதஸார த்வாத்" என்று "சுப்பிரபேதாகமமும்" "வேதாந்தார்த்தமிதம் ஜ்ஞானம் ஸித்தாந்தம் பரமம் சுபம்" என்று "மகுடாகமமும்" சித்தாந்த சைவத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

## வேதாந்தக் கொள்கையுடன் ஒவ்வாத சைவம்

வேதாந்தம் என்னும் உபநிடதக் கொள்கையுடன் ஒவ்வாத சைவங்களும் உள்ளன. அவை யெல்லாம் "சாதாரண" சைவம் எனப்பெறும் என்று "திருமூலர்" கூறுவர்.

*"வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்*
*நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்*
*வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்*
*சாதா ரணமன்ன சைவர் உபாயமே"*

என்பது (1435) திமந்திரம். "பிரம்ம சூத்திரத்தே பாசுப தாதி கரணத்தே "அவைதிக நகுலீச பாசுபத மத நிரா கரணம்" கூறப் பெம்ற்றிருப்பதும் மேற் கருத்தை வலி யுறுத்தும்.

## வீரசைவ சித்தாந்தம் வேதாந்தக் கொள்கையைத் தழுவியது

வேதாந்தம் என்னும் உபநிடதங்களால் உண்டாகும் ஞானமே அரிய வித்தையாகும். அவ்வித்தையிற் கலந்தவன் யாரோ (வீ-வித்தை; ர-ரமிப்பவன்) அவன் வீரசைவ னாவான். இக் கருத்தினை.

*"அரியவே தாந்தத்தி னாகு ஞானமே*
*மருவரும் வித்தையென் றுரைப்பர் மற்றதில்*
*விரவினோன் யாவன்மற் றனையன் வீரனென்*
*றுரைதரு கிற்பர்மெய் யுணர்ந்து ளோர்களே"*

என்னும் சித்தாந்த சிகாமணியால் (உபதேசம்-18) அறிந்து கொள்ளலாம்.

## வீரசைவ சமய வடமொழி நூல்கள்

வீரசைவ சமயக் கருத்தினை வடமொழி நூல்களுள் இருக்கு, யசுர் என்னும் வேதத்தும் வேதாப்த சாரோப நிடதம், பத்தியோகோப நிடதம், நிர்லேபோப நிடதம், சிதம்பரோப நிடதம், சித்தாந்த சிகோப நிடதம், இலிங் கதாரணோப நிடதம், பிரசாதசாப லோபநிடதம், வீரலிங் கியோப நிடதம் முதலாய "உபநிடத்ததும்" சூட்சுமாகமம, வாதுளாகமம், பாரமேச்சுராகமம், வீராகமம் காமிகாகமம், சுப்பிரபோதாகமம், சுவபுராணம் காரணாகமம், முதலாய "சிவாகமத்தும்" சிவபுராணம் சௌரபுராணம், காந்த

புராணம் முதலான "புராணத்தும்" சித்தாந்த சிகாமணி முதலான "சிறப்பு நூல்களிடத்தும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

## வீரசைவ சமய தமிழ் நூல்கள்

தமிழ் நூல்களில் திருமூலர் செய்தருளிய "திருமந்திர மாலையொன்றே" வீரசைவ சமய நுண்மைகளை எடுத்தோதும் பழைய நூலாக உள்ளது. ஏனைய வீரசைவ சித்தாந்த நூல்களெல்லாம் இந் நூலுக்குப் பின்னர் எழுந்தவையேயாகும். அவை திருவாசகம், வசவ புராணம், பிரபுலிங்கலீலை, சித்தாந்த சிகாமணி, சிவப்பிரகாச விகாசம், அத்துவிதவெண்பா, வீரசைவதத்துவப் பிரகாசம்.சிவஞான தீபம், வீராகமம, சடுத்தலம், சாந்தலிங்கர் நூல்கள் முதலியன வீரசைவ சமய உண்மைப் பொருள்களை கூறுகின்ற "தமிழ் நூல்களாகும்"

## சிவஞான தீபம் ஆசிரியர்

மேற் கூறிய தமிழ் நூல்களுள் "சிவஞான தீபம் என்பதும் ஒன்றாகும். இதனை இயற்றிய ஆசிரியர் பெயா "இரேவண சித்தர்" என்பதாகும். வடக்கேயிருந்து "கமல சித்தர், இரேவண சித்தர்" என்னும் வீரசைவப் பேரறிஞர் இருளர் சோணாட்டிற்கு வந்தன ரென்றும், அவருள் "இரேவண சித்தர்" என்பார் தஞ்சை மாவட்டத்திலுள்ள "பேரளத்தில் தங்கி அங்கே திருமடம் அமைத்துக்கொண்டு அங்கே எழுந்தருளி யிருந்து பலர்க்கு ஞான நூல் உபதேசம் செய்து வந்தாரென்றும; இவர் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வல்லுநர் என்றும், இவர் கும்பகோணத்திலுள்ள 'பெரிய மடமாகிய வீரசைவ மடத்துடன் தொடர்புடையவராக இருந்தனர் என்றும் அறிஞர் கூறுகின்றனர்.' இரேவணாராத்திரியர் என்றும் பெயர் வழங்கும்.

இவர் தமிழிலே செய்த நூல்கள் பல. அவை "திருப்பட்டீசுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம், அகராதி நிகண்டு, சிவஞான தீபம்" என்பன

வாகும். அவற்றுள் அகராதி நிகண்டும், சிவஞான தீபமும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஏனைய நூல்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

அகராதி நிகண்டினை "அரிய சகாத்தம் ஆயிரத்தைஞ் ஞூற் றொருபத் தாறென உரைத்திடும் யாண்டினில்" செய்ததாக அவர் குறிப்பிடுவதால், அந் நூல் சாலியவாகன சகம் 1516 இல் இயற்றப்பட்ட தென்று அறிகிறோம். எனவே அந் நூல் கி. பி. 1594 இல் இயற்றப்பட்டதாகும். இதனால் இரேவண சித்தர் காலம் பி. கி. 16-ஆம் நூற் றாண்டின் பிற்பகுதி என்று துணியப்படுகின்றது. வீரசைவ நூல்கள் பலவற்றைத் தமிழில் இயற்றியருளிய சிவப்பிரகாச சுவாமிகள் 17-ஆம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்தவர் ஆகையால் இவர்க்கு இரேவணசித்தர் காலத்தால் முற்பட்டவராவார்.

அகராதி நிகண்டில் இவர் பெயர் "சிதம்பர ரேவண சித்தன்" என்று காணப்படுகின்றது. மேலும் அந்நிகண்டில் "தொண்டைநன் னாடு துலங்கிய புலியூர் எண்டருஞ் சிதம்பர ரேவணன்" என வருவது கொண்டு, தொண்டை நாட்டிலே உள்ள புலியூரில் வாழ்ந்திருந்தார் என்றும், "திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம் தெரிதரு சிதம்பர ரேவணன்" என வருவது கொண்டு, இவர் தொண்டை மண்டிலத்தில் உள்ள திருக்கச்சி மேற்றளிக்குப் புராணம் பாடினர் என்றும், "சித்திர சேனன் தனக்கொரு நாலு புத்திரர் தரும் புனிதன்" "தன்ம சன்மனைச் சார் குணக் குருவினை" என வருவது கொண்டு, சித்திரசேனன் புதல்வர் நால்வருள் ஒருவராகிய தன்மரிடம் கல்வி பயின் றார் என்றும், "பகர்தரு புலியூர்க் கங்கை குலாதிபன் அருள் பெறு சிதம்பர ரேவணன்" "மேழித் துவசன் விளங்கிய புலியூர் வாழ்நற் சிதம்பர ரேவண சித்தன்" என வருவது கொண்டு, கங்கை குலாதிபனும், மேழித்துவசனும் ஆகிய வள்ளல் ஒருவனால் அருளப்பட்டிருந்தா ரென்றும் அறிந்து கொள்கின்றோம். மேலும் அந் நிகண்டில் "பவமறத்

தெளிந்த சிவதெரிசனத்தோன், புவிமகிழ் சிதம்பரரேவண சித்தன்" என்றும், "கலையா வையுமுணர் காவியத் தொடையான் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தன்" என்றும் வருதலை நோக்கினால், இவர் கலைகலையும் காவியங் களையும் நன்கு உணர்ந்து சிவமாகிய செம்பொருளை அகமும் புறமும் கண்டிருந்த உயர் ஞானியாயிருந்தனர் என்பதும் புலனாகின்றது.

பலமறத் தெரிந்த சிவ தெரிசனத்தராகிய இரேவண சித்தரால் "மேவரிய சிவஞான தீபம்" என்ற இந் நூல் இயற்றப் பட்டுள்ளது.

## சிவஞான தீபம்

இந் நூல் பாயிரம், பொது, உண்மை என்று மூன்று பகுப்பாயிருக்க வேண்டும் என்பது சிலர் கருத்தாகும், ஆனால் சென்னை அரசாங்கத்துக் கீழ்க்கலைப் பழஞ்சுவடி நிலயத்திலுள்ள சுவடியிலும், "தஞ்சைச் சரசுவதி மாகால் நூல் நிலயத்திலுள்ள சுவடியிலும்" திரிசிரபுரம் மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்ட மிகப் பழைய பதிப்பிலே பாயிரம், நூல் என்ற இரண்டு பகுப்பே உள்ளன. எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்த 174 பாடங்கள் இந் நூலில் உள்ளன. பாயிரத்துள் விநாயகர் காப்பும், மன்றுளாடும் பெருமான், சிற்பரை, குருபரன் வணக்கங்களும், அவையடக்கம் இரண்டும் உள்ளன

சிவஞான தீப நூலுள் ஆசிரியர் சிவாகமப் பொருள்கள் பலவற்றைக் கூறிச் செல்லுகிறார். "திருமந்திரத்திலிருந்து" பல செய்திகளை எடுத்துத் தம் நூலில் அமைத்துக்கொண்டுள்ளனர், அவற்றை அங்கங்கே உரையுள் எடுத்துக் காட்டியுள்ளேன். பல செய்திகளை உரையுள் விளக்கியிருப்பதால் அவற்றையெல்லாம் இங்கே எழுத விரும்பவில்லை. இன்றியமையாத சிலவற்றைமட்டும் இங்கே கூறுகின்றேன்.

## ஞான யோகம்

வீரசைவ நூலாகிய "சித்தாந்த சிகாமணி" அங்க இலிங்கத் தலங்களின் இயல்பினைக் கூறுவதாகும். அந் நூலில், மகாலிங்கத்தலத்தில், "பாண்டத் தலம் என்பதொன்றாகும். பாண்டத்தலமாவது. மகாலிங்கமாகிய பரசிவத்தின் நினைவு என்னும் விமரிச சத்தியே எல்லா அண்ட கோடிகளையும் படைத்துக் காத்து அழிப்பதாம். அதனால், உயிர் உலகு உடல் சரணம் முதலான எல்லாப் பொருள்களும் அச் சத்தியால் இயக்கப்பட்டு அச் சத்தியாகிய பாண்டத்தையே தமக்கு ஆதாரமான இடமாகப் பெற்றிருக்கின்றன. மேற் கூறப்பட்ட இவ் வுண்மையை உணர்ந்து எல்லாத் தத்துவங்களையும் அச் சத்தியாகிய பாண்டத்தில் வைத்துத் தன்னையே (தன்னையும் தனக்காதாரத் தலைவனையும்) கண்டிருந்து சீவன் முத்தனாதல் என்று கூறும். இதனை

" அண்ட நூறுகோ டிகள்படைப்
புடனிலை யழிவு
கொண்ட தோரிட மாகிய
வதனையே குறித்துக்
கண்ட தோர்விம ரிசந்தனைக்
கசடற வுணர்வாற்
பண்டை நூலுணர் பவர்பாண்டத்
தலமெனப் பகர்வார்"

" பரந்த தாகிய விமரிச
பாண்டத்தி லடங்க
விரிந்த தத்துவ மியாவையும்
மேவுற வைத்துத்
தெரிந்த தன்னையே கண்டிருப்
பன்றிசுழ் முத்தன்"

என்னும் சித்தாந்த சிகாமணிப் பாட்டால் (பாண்டத்தலம் 1, 4) அறிந்து கொள்ளலாம். இதனைச் சிவஞான தீபம் ஞானத்து யோகம்" என்று கூறுகின்றது.

" ஞானத்து யோகமிறை ஞானந் தானே
நாடுமிட மெங்கும்நிறை வென்று காண்டல்"

என்பது (159) அப்பாடலாகும் தாயுமான சுவாமிகளும்

" தன்னை அறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற் குபாயம் பராபரமே"

என்று இதனைக் கூறுதலைக் காண்க.

## திருவருண் ஞானத்தால் சமய நுண்பொருள்களை உணர்தல்

''காமிகாகமம் பரம், அபரம் என்னும் வேறுபாட்டால் ஞானம் இருவகைப்படும், என்றும், பதியாகிய பொருளைக் காட்டுவது பரஞான மாகும் என்றும், உயிர்களை அறிவுறுத்துவது அபர ஞானமாகும், என்றும், சிவத்தைப் பிரகாசிக்கச் செய்யும் ஞானமே பரம் என்னும் சிவஞானமாகக் கருதப்படுகிற தென்றும் கூறுகிறது.

பராபரேண பேதேந பதிபஸ் வர்த்த தர்சகம் |
சிவரப் காசகம் ஜ்ஞானம் சிவஜ்ஞானம் பரம்ஸ்மிருதம் ||
காமிகாகமம் (தந்திர-15)

உலகப் பொருள்களையும் உயிரையும் அறிய வேண்டின் திருவருளால் இயக்கப்பட்ட மாயா காரியமாகிய அறிகருவிகளால் காட்சி முதலான அளவைகளால் அறிதல் கூடும். ஆனால் சிவமாகிய பரம்பொருளை அறிவதற்கு அக் கருவிகளின் துணை சிறிதுமின்றித் திருவருள் என்னும் பேரறிவுப் பொருளின் துணையே வேண்டுவதாகும், இக் கருத்தினைச் ''காரைக்காலம்மையார்''

" அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே
னெஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெமக்கு"

(அற்புதத் திருவந்தாதி)

என்று கூறிய பாட்டில் ''இறைவனுடைய திருவருட் கண்ணால் எவற்றையும் நோக்கி அறியும் முறைமையுடையேன்; அதனாலே, எல்லாப் பொருளும் எமக்கு நன்றாகப் புலனாகின்றது' என்று திருவருண் ஞானச் சிறப்பினைக் கூறியுள்ளார்.

அத் திருவருண் ஞானம் மாயா காரியமாகிய கரணங்களால் அறியப்படும் காண்டலளவையு மன்று; கருதலளவையு மன்று; உரை யளவையு மன்று; அது எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று அப் பொருள்களை அறிவித்தல் போல இறைவனிடத்திலுள்ள விமரிச மெனுஞ் சத்தி (திருவருட் சத்தி) எல்லாப் பொருளிலும் வியாபித்து நின்று உயிர்கட்குப் பெத்த நிலையில் உலகப் பொருள்களை உணர்த்தி நுகரச் செய்யும் அத் திருவருட் சத்தி தானே உயிரின் பக்குவ காலத்திலே உயிரையும் முதல்வனையும் உயிர்க்கு ஐயந் திரிபற வுணர்த்தி, உயிரை முதல்வனுடன் கூட்டுவிக்கும். மேலே கூறிய கருத்துக்களை

" சங்கரன் விமல ஞானம்
சாற்றிலத் தியக்கந் தானன்
றங்கனு மான மென்ப
தன்றுரை யன்றென் றாலும்
இங்குறு பொருளெ வற்று
மென்றுநின் றிலங்கு மென்னுந்
திங்களங் கண்ணி வேய்ந்த
செஞ்சடைப் பகவன் நூலே"

என்னும் சதமணிமாலைப் பாடலாலும்,

" திங்கள் வெண்ணிலா வனைத்தையும்
திகழ்த்துதல் போலச்
சங்க ரன்றனி லுறுவிம
ரிசமெனுஞ் சத்தி
இங்க னைத்தையு மொருங்குற
விளக்குமென் றிசைப்பர்"

என்னும் 'சித்தாந்த சிகாமணிப் (பாசநத்தலம் 4) பாடலாலும்,

" ஒருசிவ சத்தி தானே
உயிரொடு பரசி வத்தைத்
திரிவற வுணர்த்தி யன்ன
திகழ்வுறச் சந்திப் பிக்கும்"

என்னும் "சதமணிமாலைப் பாடலாலும் அறிதல் கூடும்.

உலக விளக்காகிய இச் சிவஞானம் படர்க்கை, முன்னிலை தன்மை என மூன்றாயிருக்கும். படர்க்கை ஞானம் நூல் வடிவமா யமைந்தவையாகும், முன்னிலை ஞானம் சிவஞான தேசிகனின் உபதேச மொழியாகும். தன்மை ஞானம் இறைவன் உள்நின்று உணர்த்தும் உய்த்துணர் ஞானமாகும். இம்மூன்றும் முறையே ஒன்றை விட ஒன்று சிறந்தவையாகும். உமாபதிசிவம் தன்மை ஞானத்தைக் "கருத்திலுறை திருவருள்' அரண உணர்வு' (41) என்று கூறும்.

தொடக்கத்திற், சிவஞான நூல்களைச் சிவஞான தேசிகரிடத்தே தெளிவுறக்கேட்டு நன்கு பயின்றதால், கருத்திலுறை திருவருள் ஞானம் மிகப் பெற்றவரே மெய்ப் பொருளுணர்ச்சியில் தலைசிறந்தவ ராவார். அவரே சமய நுண்பொருள்களை அறிந்தோதும் ஆற்றலுடைய வராவார். அத் திருவருள் ஞானம் கைவரப் பெறாதார் குறை அறிவாகிய தம் அறிவால் (ஆன்ம போதத்தால்) அறிந்து கூறுவன வெல்லாம் மெய்ப்பொருளாகாவாம். இக் கருத்தினைச் 'சிவஞான தீபம்'

அமலனருண் ஞானமுயிர்க் குயிராய் நின்றே
அனைத்தினையு மியற்றிடுமற் புதமோ ராமல்
தமதறிவால் அலகிறந்த சமய பேதத்
தர்க்கமொடுத் தரவாதஞ் சாதிப் போர்க்கும்
சிமயவரை தரையுயர்விண் கெடுத்துத் தேடுஞ்
சிதடருக்குந் தினகரனைப் பகலிற் றேடுஞ்
திமிரமட வருக்குமுயி ரிலையென் றோதும்
தீமையர்க்கு மொப்புலகிற் செப்பொ ணாதே"

என்று (173) தெளிவாகக் கூறுகிறது.

## சிவஞான தீபத் சிறப்பு

இச் "சிவஞான தீபம்" தான் தோன்றிய காலத்தி லிருந்தே சிறந்த திருவருண் ஞான நூலாக அறிஞரால்மதிக் கப்பெற்று வருகின்றது. கலைஞானமும் சிவஞானமும் ஒருங்கு கைவரப் பெற்றுத் திருவருள் யோகச் செம்மலாய் விளங்கிய "திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளவர்கள் கொலை மறுத்தல். வைராக்கியசதகம், அவிரோத வுந்தியார் என்னும் சாந்தலிங்க சுவாமிகள் நூல்களுக்குத் தாம் எழுதிய உரையுள் ஒன்பது இடங்களில் இந் நூலை மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளனர். சிறந்த வீரசைவ நூலாகிய 'அத்துவித வெண்பா' உரையிலும் இந் நூல் எடுத்தாளப்பட்டுள்ளது.

## சரஸ்வதி மகால் நூல் நிலயத்துச் சிவஞான தீபச் சுவடி

இவ்வாறு சிறந்த இச் சிவஞான தீபம் தஞ்சாவூர் சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலயத்தில் M.597 D-750 என்னும் எண்ணுள்ள ஓலைச் சுவடியாக இருக் கின்றது. இதனை ஆராய்ந்து தெளிவான பொழிப்புரை யுடன் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று சரசுவதி மகால் நூல்நிலயச் செயற்குழுவினர் முடிவு செய்தனர். அப்பொழுது அக் குழுவினருள் ஒருவரும், சரசுவதி மகால் நூல் நிலையக் கௌரவக் காரியதரிசியா யிருப்பவரும் பேரறிஞரும் ஆகிய பள்ளி யகரம் உயர்திரு நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடும் செயலறிவு வாய்ந்தவர்களாதலினால். இப் பணியைச் செய்யுமாறு அடியேனுக்கு ஆணையிட்டார்கள். இதற்கு முன்பேயே இந் நூலின் அருமை பெருமைகளையெல்லாம் நன்கு ணர்ந்து யான் இந் நூலினை ஆராய்ந்து கொண்டிருந்த படியால் இப்பணியினை மிகவும் உவப்பாக ஏற்றுக்கொண்

டேன். ஏற்றுக்கொண்ட யான், நன்கு ஆராய்ந்து திருத்தமான பாடம் அமையச் செய்யுட்களை எழுதிக் கொண்டு கிடைத்த சுவடி வேறுபாடுகளையும் விடாமல் குறித்துக் கொண்டேன். பின்னர் கருத்துரை, பொழிப்புரை வேண்டும் இடங்களில் விளக்கவுரை, எடுத்துக்காட்டு என்னும் இவை அமையுமாறு உரையையும் எழுதினேன். அதன்பின் இவற்றையெல்லாம் அச்சிடுவதற்குத் தகுதியாக அச்சுப் படிகளையும் எழுதிச் சென்ற யாண்டிலேயே நூல் நிலயத்தாரிடம் கொடுத்துவிட்டேன். ஆனால், ஏதோ சில தடைகளால் இந் நூல் சென்ற யாண்டில் அச்சாகிவர முடியாமற் போயிற்று. இப் பொழுது கும்பகோணம் "காவேரி கலர் அச்சகத்தார் நன்கு அச்சிட்டுத் தந்துள்ளார்கள்.

## நன்றி

இச் 'சிவஞான தீபத்தின்' அருமை பெருமைகளை அறிந்து ஆராய்ந்து வெளியிட முடிவு செய்த தஞ்சைச் சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலயச் செயற் குழுவினருக்கும் அப்பணியை முன்னின்று செய்தருளிய கௌரவக் காரியதரிசி உயர்திரு நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கட்கும், நூலகத் தலைவர், உயர்திரு. வே. கோபால ஐயங்கார், M. A., அவர்கட்கும் என் ஆழ்ந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறேன்.

கரந்தைப் புலவர் கல்லூரி
தஞ்சாவூர்—2
21—11—69

இங்ஙனம்
திரு. அடிகளாசிரியன்
தமிழ்ப் பேராசிரியன்

# சிவஞான தீப உரையுள் எடுத்தாண்ட
# எடுத்துக்காட்டு நூல்கள்

—✿—

(பக்க எண்)


| | |
|---|---|
| அத்துவித வெண்பா | 162, 166 |
| அத்துவித வெண்பா உரை உதாரணம் | 159 |
| அமரகோசம் | 144 |
| அவிரோத வுந்தியார் | 149 |
| இருபா இருபஃது | 41 42, |
| உண்மை விளக்கம் | 123 |
| காமிகாகமம் | 99, 100, 101, 102 |
| குறுந்திரட்டு | 22, 52, 55 |
| கொலை மறுத்தல் | 158 |
| சதமணி மாலை | 146 |
| சித்தாந்த சிகாமணி | 13, 114 |
| சிவஞான சித்தியார் பரபக்கம் | 28, 30 |
| சிவஞான சித்தியார் சுபக்கம் | 63, 67, 68, 134, 139 |
| சிவஞான போதம் | 68 |
| சிவஞான போத மாபாடியம் | 43, 91 |
| சிவதரு மோத்தரம் | 154 |
| சிவநெறிப் பிரகாசம் | 29, 57 |
| சிவநெறிப் பிரகாச உரையாசிரியர் | 49 |
| சிவப்பிரகாசம் | 49, 68, 136, 143, 148, 153 |
| சிவப்பிரகாச விகாசம் | 64, 117, 155 |
| சூத்த சாதகம் | 144 145 |
| செவ்வந்திப் புராணம் | 45 |

| | |
|---|---|
| தத்துவ தீபிகை | 55 |
| தத்துவப் பிரகாசம் | 14, 35, 44, 48, 49, 51, 84, 103, 137, 138 |
| தத்துவப்பிரகாச உதாரணம் | 17, 177 |
| திருக்குறள் | 168 |
| திருமந்திரம் | 9, 10, 20, 45, 66, 71 97, 110, 112, 113, 114, 116, 119, 120, 121, 122, 132, 138, 148, 157, 166 |
| திருவாலவாய்க் கட்டளை | 29 |
| திருவுந்தியார் | 24 |
| திவாகரம் | 57, 60 |
| துகளறு போதம் | 72, 136, 141, 170 |
| பிங்கல நிகண்டு | 10, 18, 19, 25, 50. 59, 60 |
| பெருந்திரட்டு | 23, 41, 42, 53, 54 |
| போற்றிப் பஃறொடை | 68 |
| மெய்ஞ்ஞான விளக்கம் (பெருந்திரட்டு) | 167 |
| வடமொழிச் சுலோகம் | 160 |
| வாதுளாகமம் | 163, 164 |
| வீட்டுநெறி (பெருந்திரட்டு) | 53. 54 |
| வீராகமம் (தமிழ்) | 126, 165 |

உ

இறைவன் துணை

## பேரளம் இரேவண சித்தர் என்னும்

## இரேவணாராத்திரிய தேசிகர் அருளிச் செய்த

# சிவஞான தீபம்

### பாயிரம்

### காப்பு

1 விரைமருவுங் கமலமலர் விரிஞ்சன் வாழ்வும்
விண்ணவர்கோ னரும்பதமு மிக்கோர் வாழ்வுந்
திரைமருவு நிதிபதியிற் றிருவின் கேள்வன்
செல்வமு [1]மாறாதபெருஞ் சித்தி யாவும்
பரையுதவுங் கரிமுகவன் செப்பொற் பாதம்
பற்றாகத் [2]தம்போதுப் பற்று நீங்கி
வரைவறுமன் பினிற்றொழுமெய் யடியார் பாதம்
வணங்குமடி யாரடியார் மதித்தி டாரே. 1

(இதன் பொருள்) பராசத்தியார் உலகிற் குதவிய யானைமுகக் கடவுளுடைய சிவந்த பொன் போன்ற திருவடியைப் பற்றும் பொருளாகக் கொண்டு, தமது சிற்றறிவினால் (ஆன்ம போதத்தால்) தோன்றுகிற யான், எனது என்னும் இருவகைப் பற்றும் நீங்கிச், சிவபோதத்துடன் அளவறும் அன்பினால் கைகுவித்துத் தொழும் உண்மைத் தொண்டருடைய திருவடியை வணங்கும் தொண்டர்க்குத்

சுவடி வேறுபாடு .— [1] ஆனாத [2] நம்போதப்

தொண்டராயிருப்பவர், மணம் பொருந்திய தாமரை மலரில் வாழும் நான்முகக் கடவுளுடைய வாழ்வினையும், தேவர்தமக்கு வேந்தனான தேவேந்திரனுடைய உயர்ந்த பதவியையும், அப் பதத்தைக் காட்டிலும் மிக்க தேவ குரு முதலானவரின் வாழ்வினையும், அலைபொருந்திய நதிகட்குப் பதியாகிய திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமகளின் கணவனாகிய திருமாலின் செல்வத்தினையும், மாறாத பெரிய அட்டமாசித்தி முதலான யாவற்றையும் அடையத்தக்க ஒரு பொருளாகக் கருதிடார் (என்றவாறு).

குறிப்புரை : விரை மருவுங் கமல மலர் — திருமாலின் திருவுந்திக் கமலம். நதிபதி—கடல்; ஈண்டு திருப்பாற் கடல்.

## மன்றாடியார் வணக்கம்

சீராரக் கரமுதலாங் கலைக ளியாவுஞ்
சிவஞ்சத்தி முதலியதத் துவமி யாவும்
[1] ஏராருஞ் சராசரமா முயிரி யாவும்
எண்ணரிய புவனமுமற் றியாவு மெல்லாம்
ஆராத கருணையினா லாக்கி நோக்கி
அழித்திரவி விழிநறையும் அவரும் போலப்
பேராம லுயிர்க்குயிராய் மன்று ளாடும்
பெருமானை யவளருளாற் பேணு வாமே. 2

(இ - ள்) சீர்த்தி பொருந்திய எழுத்து முதலாகக் கூறப்படும் வேதம் ஆகமம் முதலிய கலைகள் யாவற்றையும் சிவம் சத்தி முதலாகக் கூறப்படும் மூவகைத் தத்துவப் பொருள்கள் யாவற்றையும், எழுச்சி பெருந்திய இயங்குதிணை நிலைத்திணை என்னும் உயிர்கள் யாவற்றையும், கணக்கிடுதற் கரிய உலகங்கள் யாவற்றையும், மற்றுள்ள பொருள்களாகிய எல்லாவற்றையும் மிக்க அருளினால் படைத்துக், காத்து, அழித்து ஞாயிற்றினது

பா—வே : 1. ஏராருஞ்

ஒளியும் கண்ணினுடைய ஒளியும் போலவும், மணமும் மலரும் போலவும், உயிர்க்குயிராய் நீங்காமல் (அத்துவித மாய்) நின்று, திருவருள் வெளியாகிய மன்றினுள் ஆடுகின்ற பெருமானை, யாம், அவன் திருவருளால் போற்றுவோம் (எ - று).

கு - ரை : அக்கரம் முதலானவை—எழுத்து, பதம், தொடர் மொழிகள். தத்துவங்கள்—சிவ தத்துவம், வித்தியாதத்துவம், ஆன்ம தத்துவம் என்பன.

## சிற்பரை வணக்கம்

தற்பரனுக் குலகுதனு கரண மாகிச்
சாற்றிலள வறுபேத சத்தி யாகி
அற்புதமாம் விந்துமோ கினிமா னாகி
அனைத்தினையும் படைத்துயிர்கட் கன்னை யாகிச்
சொற்பரவு மறைமுதலாங் கலைக ளானுந்
தொழிலானும் நினைவானுந் தொடரொ ணாத
சிற்பரையைப் பொற்பொதுவி லாடல் காணுந்
திருவருளைப் பவமகலச் சிந்தை செய்வாம். 3

(இ - ள்) 'தத்' என்னும் மகாவாக்கியப் பொருளாகிய பரமேசுரனுக்கு, உலகம் உடம்பு கருவி என்னும் முத்திறப் பொருளாகி, இன்னுஞ் சொல்லின், பராசத்தி ஆதிசத்தி முதலிய அளவற்ற வேறுபாட்டினை யுடைய சத்திகளாகி, வியத்தலுக் குரியவாம் விந்து மோகினி மான் என்னும் முப்மாயைகளாகி, எல்லாப் பொருள்களையும் படைத்து உயிர்கட்குத் தாயாகிச் சொல் வடிவாய்ப் பரந்து விளங்கும் வேதம் முதலான கலைகளாலும், அவற்றைக் கற்றுச் சொல்லுகின்ற தொழிலாலும, மனத்தாலும் பின்பற்றி உணர முடியாத அறிவு வடிவான பராசத்தியை, பொன் மன்றிலே நடிக்கும் பரமேசுரனுடைய ஆடலைக் காண்கின்ற திருவருட் சத்தியை யாம் பிறவி நீங்க எப்பொழுதும் நிலைத்தலைச் செய்வாம் (எ - று).

## குருபரன் வணக்கம்

திருமறைமா முனிவருக்கன் றால நீழற்
றிருந்தவற முரைத்தபெருந் தகைதா னிந்த
இருநிலமே லருளுருவாய் வந்து தோன்றி
[1] இயைந்திடுநெற் றவிடுமுளை யுமிபோ லேய்ந்த
திரிமலவே ரினைநினைவா லுரையான் ஞானச்
செய்கையினா லறுத்திருதாள் சென்னி சூட்டுங்
குருபரனை மருளுலக வாதை நீக்குங் 4
குணக்கடலை மனத்திலுற வணக்கஞ் செய்வாம்.

(இ - ள்) அறிவுச் செல்வம் நிறைந்த திருமறையினை உணர்ந்த பெரிய சனகர் முதலிய முனிவர்கட்கு முன்னர்க் கல்லால நிழலின்கண் எழுந்தருளியிருந்து செவ்வையாக அறுதியான பொருளை உரைத்தருளிய பெருந்தகைதானே, இன்று, இப்தப் பெரிய நிலவுலகத்தின்கண்ணே திருவருளே தனக்கு வடிவமாய்ப் பொருந்த எழுந்தருளித் தோன்றிப், பொருந்திடும் நெல்லின்கண் தவிடும் முளையும் உமியும் போலப் பொருந்தியுள்ள ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மல வேரினைத் தன் நினைவாலும், சொல்லாலும், ஞானத்தொடு கூடிய தீட்சாகாரியத்தாலும், அறுத்துத், தன் இரண்டு திருவடிகளைச் சிறியேனாகிய எனது தலைமேற் சூட்டியருளும் குருவாகிய மேலோனை, மயக்கஞ் செய்யும் உலகத் துன்பத்தினை நீக்குகிற நற்குணக் கடலாய் விளங்கு பவனை மனத்தில் நினைத்து வணங்குதல் செய்வாம் (எ – று).

## அவையடக்கம் இரண்டு பாட்டு

பூவுலகின் முழுதுமொருங் குணர்ந்த [1] நல்லோர்
புகன்றருளு ஞானநூற் றிறமு நோக்கி
நாவலர்முன் னருந்தமிழின் செய்யு ளீதி
நலமுணரா வினையேனு நகைநா ணாமன்

---

க - வே : 1 இசைந்திடு.

மேவரிய சிவஞான தீப மென்றே
விளம்பியது வளந்தருபால் வேலை தன்னைத்
தேவர்கடைந் திடவெழுந்த [2] வமுதம் போலச்
சிறுபுனலைக் [3] குடைந்துநுரை திரட்டு மாறே. 3

(இ – ள்) நிலவுலகின்கண்ணே, (தாம் பெற்ற வியாபக அறிவால், அனைத்தையும் ஒருங்கே அறிந்த ஞானிகள் மொழிந்தருளிய ஞான நூற் கூறுபாடுமுழுதையும் முதற்கண் நோக்கி அறிந்துகொண்டு, (பின்னர் அதனைச் செய்யு ளாகச் செய்வதற்காக) நாவில் வல்ல புலவர்முன் சென்று, அரிய தமிழ்ச் செய்யுளைச் செய்யும் யாப்பிலக்கண முறை யின் நலத்தை உணர்ந்துகொள்ளாத தீவினையுடை யேனாகிய யானும், ஞானிகளும், நாவலரும் நகைக்கும் நகைப்பிற்கு நாணமுறாமல், மேவுதற்கு அரிய சிவஞான தீபம் என்று பெயர் வைத்துச் சிவஞானப் பொருளைத் தமிழ்ச் செய்யுளால் சொல்லியது எத்தகையதெனில்? வளந்தரும் திருப்பாற் கடலினைத் தேவர் கடைந்திட எழுந்த அமிழ்தத்தைப் போல, ஒருவன் சிறிது தண்ணீரைக் கையினாற் குடைந்து நுரையைத் திரட்டியது போலாம் (எ – று).

பாயிரம் முற்றும்

சிவனுடைய மாமரத்தைச் சேர்ந்து நின்ற
திரண்மரமு மதனிறமா மொருமை போலுங்
குவலயமீ தினிற்காகம் மேருச் சாரிற்
குலவியபொன் னிறமாகு நிலைமை போலும்
உவர்மருவு முததியினில் வந்து கூடும்
உதகமதி னொன்றாகுந் தகைமை போலுந்
தவமருவு மறிவுடையோ ரவைமுன் னியானுஞ்
சாற்றியவிப் புன்சொலுமத் தன்மை யாமே. 6

---

க – வே : 1. மேலோர். 2. அமுதாம். 3. கடைந்து.

(இ - ள்) தவ ஒழுக்கம் பொருந்திய அறிவுடைப் பெருமக்களே நிறைந்த நல்ல அவையுள், தவமும் அறிவும் இல்லாத யான் கூறிய இப் புல்லிய சொல்லெல்லாம், சிவபெருமான் எழுந்தருளியுடைய மாமரத்தினைச் சேர்ந்து நின்ற திரண்ட மரங்களெல்லாம் அதன் நிறமாய் விளங்கும் ஒருமை போன்ற அத்தன்மையாகும். இன்னும், நிலவுல கத்தில் வாழும் காகமானது பொன்மலையாகிய மேருமலை யைச் சார்ந்தால் மலைநிறமாகிய பொன்னிற மாகும் நிலைமை போன்றதாம். இன்னும், உப்பின் தன்மை பொருந்திய கடலினிடத்தே வந்து கூடும் யாற்று நீர் அக் கடலிற் கலந்து ஒன்றாகுந் தன்மை போன்றதாம் (எ - று).

பாயிரம் முற்றும்

# நூல்

## முதல்வன் மூவகை உயிர்க்கும் அருளும் முறை

கருணைமிகும் பரஞான வடிவி னாலே
கழிக்குமலம் விஞ்ஞான கலருக கீசன்
அருணிலவுங் குடிலைவடி வாக மேவி
அரும்பிரள யாகலருக் ககற்றும் பாசம்
மருணிலவுஞ் சகலருக்கா தார மாகி
வருமாயை யுருவினிற்றீ வகமா மென்னத்
தரணிதனி லறுவகையா மவுத்தி ராதி
தன்னான்மும் மலமகற்றித் தருந்தன் றாளே. 7

(இ - ள்) பரமேசுரன் ஒருமலமுடைய உயிராகிய விஞ்ஞானகலர்க்கு அருள் மிகும் சிற்சத்தி வடிவமே தனக்குரிய வடிவமாகக் கொண்டு அவர்தம் அறிவுள் நின்று ஆணவமலத்தைப் போக்கியும், இரண்டுமல முடைய அரிய பிரளயாகலர்க்கு அருள் பொருந்திய சுத்தமாயையின் வடிவமே தனக்குரிய வடிவமாகக் கொண்டு அவ் வடிவத் துடன் அவர்முன் தோன்றிப் பாசத்தை நீக்கியும், அறியாமை நிலவும் மூன்றுமலம் உடைய உயிர்வர்க்கமான சகலர்க்கு அவர்க்கு இடமாகி வரும் அசுத்த மாயையின் உருவினில்

பார்வை விலங்கு போலும் என்று கூறும்படி, மானிட உருவ முடைய ஆசிரிய வடிவமாய் இவ் வுலகத்தின்கண் வந்து நயனம், பரிசம், வாசகம், மானசம், சாத்திரம், யோகம் என்னும் அறுவகையாய், ஓம சம்பந்த முடையதாய்ச் செய்யப்படும் ஔத்திரி முதலான தீட்சையால் மும்மலங் களை அகற்றியும் தன் திருவடிப் பேற்றைத் தந்தருள்வன் (எ – று).

'தரும் தன் தாள்' என்பதை விஞ்ஞான கலர் முதலிய மூவர்க்கும் கூட்டுக.

## பரமன் குருவாய் வரினும் பக்குவ மில்லார் நிலை

பாசவிரு ளைவகையு மிரிய நோக்கிப்
பரமனருட் குருவாய்வந் துணர்த்தி னாலும்
[1] பாசமக லாமல்பிர பஞ்ச வாழ்க்கை
பரிந்தாசை யுடனுயிர்கள் விரும்பு நீர்மை
ஓசையுத தியினீரை யெடுத்து மேகம்
உவரகற்றி யமுதாக்கி யுலகம் போற்ற
நேசமுற வைத்திடினு நில்லா தோடி
நெகங்கடல்புக் குவராகு நீரொப் பாமே.

(இ - ள்) பரமேசுரன் அருள் ஆசானாய் இருக்குமிடந் தேடி வந்து, ஐவகைப் பாச இருள் முற்றும் போகுமாறு அருள்நோக்கம் புரிந்து மெய்ப்பொருள் அது என்று கூறி உணர்த்தினாலும், மக்களிற் பலர் அவன் உணர்த்தியதால் பாசம் நீங்கப் பெறாமல் பரிவு கொண்டு ஆசையுடன் பொய் யான உலக வாழ்க்கை ஒன்றினையே விரும்பிச் செல்லுந் தன்மை எது போன்றதெனில்? முகிலானது ஒலியுடன் கூடிய கடல்நீரை எடுத்து அதிலுள்ள உப்புத்தன்மையை அகற்றி, அமிழ்தம் போன்ற நன்னீ ராக்கி, உலகமெல்லாம் போற்றி நுகரும் நன்னிலையில் வைத்தாலும், அந்நீரானது அந்த உயர்ந்த நிலையில் நில்லாமல் ஓடிப் பெரிய கடலிற் புக்கு அமிழ்தத் தன்மை யிழந்து, மீண்டும் உப்புத் தன் மையை அடைந்தாற் போலும் (எ - று).

---

க - வே : 1. பாசமகலாது, பாசமகலாத

## முதல், இடை, கடை, என்னும் சீடர்,

பொருளுடலா வியுமிறைவ னுடைமை யென்றே
பொருவிலருட் குரவன்பா[1] லளித்த ஞான
மருளகலு முத்தமாமைப் முத்தி சேர்வர் ;
மற்றொருபா லாசானுக் கெனவே நல்கிற்
றெருளுமுருத் திரருலகம் புகுவா ; எல்லாம்
திகழுமனையாள் புதல்வருக்கென் றாக்கி யாசாற்(கு)
இருளுமனத் தாலியன்ற துதவுஞ் சீடன்
இரவிமதி யுலகடைவ னிறக்குங் காலே.

(இ - ள்) பொருளும் உடம்பும் உயிரும் அரன் உடைமையாகும் என்று தேற்றமாக உணர்ந்து, அம் மூன்றையும் ஒப்பற்ற அருட்குருவினிடத்தே அளித்துப் பயின்ற உண்மை ஞானத்தால் மருள் அகலப்பெற்ற தலைமாணாக்கர் பரமுத்தியாகியஉண்மை முத்தியை அடைவர். அவ்வாறன்றித், தன் பொருளில் ஒருபகுதியை ஆசானுக் கென்றே கொடுத்த இடைமாணாக்கர் தெளிவான உருத்திர புகுந்து வாழ்ந்திருப்பர். அவ்வாறு மின்றித் தன்னுடைய பொருள் களெல்லாவற்றையும் மனைவி, மக்கட் கென்றே உரிமை யாக்கி. அறியாமை தங்கிய மனத்தால் ஆசானுக்குத் தன்னாலியன்ற பொருளினை உதவும் கடைமாணாக்கர் தாம் இறந்த பின்னர்ச் சூரிய சந்திர உலகத்தை அடைவர் (எ - று).

*தலைமாணவர்க்குச் சிவபதம் கிட்டும் என்பதை*

*"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக*
*உள்ள பொருளுடல் ஆவி யுடனீக*
*எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று*
*தெள்ளி அறியச் சிவபதந் தானே"* (1698)

*என்னும் திருமந்திரத்தால் அறிக.*

---

சு - வே : [1] லளித்தஞ் ஞான,

## துறவிக்குக் கொலையாதி நீங்கிய ஞானத்துடன் கூடிய தவமும், இல்வாழ்வானுக்குக் கொலையாதி நீங்கிய அறத்துடன் கூடிய செல்வ நுகர்ச்சியும் சிறந்தன என்றல்.

*கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே*
*கூறரிய மேலான ஞான மாகுங்*
*கொலையாதி [1] நெறியகன்ற தவங்க டாமே*
*குற்றமிலா நற்றவமென் றுரைக்கு [2] நூலும்*
*கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே*
*குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகும்*
*கொலையாதி [2] யகன்றபெருஞ் செல்வந் தானே*
*கூறிலுயிர்க் கிதமான வாழ்வ தாமே.* 10

(இ - ள்) கொலைத்தொழில் முதலான பாவ நெறியில் நீங்கிய துறவியின் மெய்யுணர்வுதானே சொல்லுதற்கரிய மேலான மெய்யுணர் வாகும், கொலைத்தொழில் முதலான பாவ நெறியில் நீங்கிய துறவியின் தவத்தொழில்கள்தாமே குற்றஞ் சிறிது மில்லாத நல்ல தவங்களாகும் என்று நூல்கள் கூறும்.

கொலைத்தொழில் முதலான பாவ நெறியில் நீங்கிய இல்வாழ்வான் செய்யும் நல்ல அறங்கள்மட்டுமே உலகத்தில் ஒப்பில்லாத அறங்களாகும். கொலைத்தொழில் முதலான பாவநெறி நீங்கிய இல்வாழ்வானின் செல்வ நுகர்ச்சி தானே கூறுமிடத்து உயிர்கட்கு நன்மை தரும் வாழ்வாகும் (எ - று).

கொலையாதி பாவங்களைக்

*"கொலையே களவு கள்குரு நிந்தை*
*பகரும் பொய்யுடன் பஞ்சபா தகமே"*

என்று பிங்கல நிகண்டு கூறும்.

*"கொலையே கள்வுகட் காமம்பொய் கூறல்*
*மலைவான பாதக மாம்அவை நீக்கித்*
*தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்(கு)*
*இலையாம் இலைஞானா னந்தத் திருத்தலே"* (200)

என்பது திருமந்திரம்

சு - வே : 1. யகன்றொழுகுந் 2. நூல்கள் 3. யகன்று பெறுஞ்

## பாவத்திற் றலையாயது உயிர்களைக் கொன்றருந்துதல் என்பது.

[1] எவ்வுயிரும் பரா பரன்சந் நிதிய தாகும்
இலக்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்
எவ்வுயிரு [2] மெம்முயிர்போ லென்று நோக்கி
இரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
[3] வவ்வியமன் தூதரருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைசெய் திடுவரென வோது நூலே. 11

(இ - ள்) எல்லா உயிர்களும் பரமேசுரன் எழுந்தருளி யிருக்கும் இடமாகும். விளங்கும் அவ் வுயிருடன் கூடிய உடம்பு முற்றிலும் அவனுடைய திருக்கோயில்களாகும். எல்லாவுயிர்களும் எம்முடைய உயிர்போன்றவை என்று கருதி, இரக்கங் கொள்ளாமல், அவற்றைத் தம் உணவின் பொருட்டாகக் கொன்று உண்ணும் இழிசெயல் புரிபவரைக் கூற்றுவனுடைய தூதர்கள் கவர்ந்துகொண்டு சென்று, பொறுத்தற்கரிய தண்டனையைச் செய்து, வலிய இரும்பினை உருக்கி அவர்தம் வாயில் வார்த்துக், கொடிய தீய ஏழாம் நரகத்திலே தள்ளி இடையறாத துன்பத்தினைச் செய்திடுவர் என்று அற நூல் ஓதும் (எ – று).

தண்டஞ் செய்வது கொலைப்பாவத்திற்கும், இரும்பை உருக்கி வாயில் வார்ப்பது புலால் அருந்திய பாவத்திற்கும், நரகில் வீழ்த்தி மாறா வேதனை செய்திடுதல் கொன்றருந்துந் தொழிலை இடைவிடாமற் கொண்டொழுகியற் குமாம் என்க.

க - வே ; 1 எவ்வுலகும் 2. தம்முயிர்போல் 3. வவ்வியபின்

## சிவாகமத்தை ஓதுதற்கும் கூறுதற்கும் உரிய ரல்லாதார்.

நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சீலம்
நிறையறிவு கருணைதவ [1] நெறிநி லாமல்
கொலைகளவு கட்காம முதலா யுள்ள
கொடும்பாவ மேதவமாய்க் கொள்ளுந் தீயோர்
[2] உலகிலருஞ் சிவனருணூ லோத லாகா
[3] தோதினுமங் கவருரைகொள் ளொணாது நீலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே. 12

(இ - ள்) தாம் மேற்கொண் டொழுகும் ஆசிரம நிலையும், அதற்கேற்ற மன வுறுதியும், தூய்மையும், நல்லொழுக்கமும், நற்பண்பும், மன ஒடுக்கமும், அறிவும், அருளும் என்னும் தவநெறிக்கண் நிலைத்து நில்லாமல்; கொலைபுரிதலும், களவுசெய்தலும், கட்குடித்தலும், காமம் நுகர்தலும் என்னும் அவநெறியினையே தவநெறியாகக் கொண்டொழுகும் தீயவர் இவ் வுலகத்தில் சிவன் அருளிச் செய்த சிவாகம நூல்களை ஓத லாகாது; இவ் விதி கடந்து அவர் ஓதினும், அவர் கூறும் நூற்பொருளைக் கேட்டுக் கொள்ளுதல் கூடாது; அத் தீயவர்தம் உள்ளத்திலும் உரையிலும் உதித்த சிவாகம நூல் எத்தகையதெனின்? புலாலுண்பவரே பொருந்தி வாழும் தெருவின்கண் உள்ள தீய சேறு பொருந்திய குழியிலே நீலோத்பல மலர் மலர்ந்தது போலாம் (எ - று).

## திருநீற்றினை அணியும் முறை.

அருந்தவர்கள் [4] இறையருணூல் விதிவ ழாமல்
அணிந்திடுவர் கற்பமுத லாதி யாகப்
பொருந்தியநீ றவனிசலம எரிகால் அண்டம்
புகல்வடிவம் போலமெய்ம் முழுதும் பூசல்

---

சு - வே ; 1 நெறிநில்லாமல் 2 உலைவிலருஞ் 3. வோதினு

வருந்துகுறைப் புண்டரம் [1] நீடாயுக் குன்றும்
மலிதீர்க்க புண்டரம்மா தவங்கள் நீங்கும்
திருந்துவிழி யிணைநிறுவும் பிரமா ணத்திற்
றிகழ்திரிபுண் டரப்பவநோய் தீரு மன்றே. 13

(இ - ள்) அரிய தவமுடையோர் இறைவன் அருளிச்செய்த சிவாகமநூல் விதி வழாமல், கற்பம் முதலாகப் பொருந்திய நான்குவகையான திருநீற்றினை அணிந்து கொள்வர். அதனை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்கட்குக் கூறப்பட்ட நாற்கோணம், பிறைவடிவம், முக்கோணம், அறுகோணம், வட்டம் என்னும் சொரூபங்களைப் போல, உடம்பு முற்றிலும் உத்தூளனமாகப் பூசுக. அதனை நீரிற் குழைத்துத் திரிபுண்டரமாக அணியின், அணிய வேண்டிய அளவில் குறையும்படிக் குறைப்புண்டரமாக அணியின் நீண்ட ஆயுள் குறுகும். அளவிற்குமேல் நெடிதாக அதனை அணியின் பெரிய தவங்கள். நீங்கும். அவ்வாறன்றித் திருந்திய விழி இரண்டு வரை நிற்கும் அளவில் அணியப்படும் திரிபுண்டரத்தால் பிறவிப்பிணி நீங்கும் (எ – று).

அன்று, ஏ அசைகள்.

திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பமென நால் வகைப்படுமாதலின் "கற்பமுதலாகிய" என்றார். புதியகோமயத்தைச் சத்தியோஜாத மந்திரத்தால் எடுத்து, வாமதேவ மந்திரத்தால் உருண்டை செய்து, தத்புருட மந்திரத்தால் உலர்த்தி 'அகோர மந்திரத்தாற் சுட்டு' ஈசான மந்திரத்தால்எடுத்து வைத்தது கற்பமென்னுந் திருநீறாகும். காட்டிலே உலர்ந்து கிடக்கும் கோமயத்தை எடுத்து அம்முறை சுடுவது அநுகற்பமென்னுந் திருநீறாகும். தீயால் சுடப்பட்டு உண்டாகிய சாம்பலைத் தூய்மை செய்து கோசலம் விட்டுப் பிசைந்து முன்போல் உருட்டி உலர்த்திச் சுட்டு எடுத்தமைந்த திருநீறு உபகற்பமாம். இவ் வகைகளன்றி வேறுவகையாக அமைத்துக் கொண்ட திருநீறெல்

---

க - வே : 1. இறையருநூல் 4. நீடாயுள்.

லாம் அகற்பமாகும். (சித்தாந்த சிகாமணி வீபூதி 8-9) 'அக்நிரிதி பஸ்ம' என்னும் மந்திரத்தால் மெய்ம் முழுதும் பூசுக என்றுமாம்.

## திருநீற்றினை இவ்வாறு அணியற்க, இவ்வாறு அணிக என்றல்.

ஒருகரத்தை நீட்டிவிரல் [1] முன்னால் வாங்கி
ஒருவிரலால் [2]பிடித்திறங்கி [3]ஒளிவெண் ணீறு
பெருநிலத்தில் விழப்புனைவோர் இரவி சோமன்
பெருங்காலம் அருநரகிற் பேரா தாழ்வர்
இருகரத்தால் தொழுதேற்றங் கிறைவன் ஆசான்
எரிபதங்கெ அசுத்தநிலத் தெதிர்பூ சாமல்
திருவரைதோள் செவிவிரவப் புனைவோர் என்றும்
திருவருளால் இறையுலகுஞ் செறிந்து வோரே.14

(இ - ள்) (ஆசிரியன் முதலிய பெரியோர் திருநீற்றினை அளித்திடின்) அதனை ஒருகையினை மட்டும் நீட்டி விரல் நுனியால் வாங்கி, ஒருவிரலால் தாழப் பிடித்து ஒளியுள்ள திருநீறு பெரிய நிலத்திலே சிந்தும்படி அணிபவர், ஞாயிறும் திங்களும் உள்ள பெருங்காலம்வரை அரிய நரகத்திலே மாறாமல் ஆழ்ந்திருப்பர். அவ்வாறன்றி, அவர் தரும் திருநீற்றினைக் கும்பிட்டு, இரண்டு கைகளால் அகங்கையில் ஏற்று ஆசான், நெருப்பு, வழி, தூய்மையற்ற இடம் என்னும் இவற்றின்முன் பூசாமல், வேறு நல்ல இடத்திலிருந்து. அழகிய மலைபோன்ற தோள்கள், செவிகள் என்னும் இவ் வுறுப்புகளிடத்தே பொருந்தும்படி அதனை அணிவோர் எப்பொழுதும் இறைவனுடைய திருவருளால் அவன் உலகத்தினை அடைபவராவார் (எ - று).

திருநீறு அணியப்பெறாத இடத்தினை
"நிச்சயமே சிவனங்கி குருவித்தை முன்னும்
நீசர்முன்னும் நடவையினும் அணியற்க நீறே"
என்று (66) தத்துவப்பிரகாசம் கூறும்.

---

க – வே : 1. முன்றால் 2. பிடித்திறங்கி, பிடித்திரங்கி 3. ஒளிர்

## மூலமந்திரத்தை உரைத்துத் திருநீறணியத் தீவினை நீங்கு மென்றது

[1] நிரதமன வாக்குடலால் அணைந்த கன்மம்
நீங்குவதெவ் வாறெனவே [2]யியம்ப [3]வேண்டா
பரந்தகொலைப் பாதகன்கைக் கத்தி யேனும்
பரிசனவே தியைப்பரிக்கப் பொன்னா மாபோல்
விரிந்தமரத் தமர்ந்தபல பறவை யெல்லாம்
விரைந்தொருகல் லெறிந்திடவிட் டேகு மாபோல்
அரன்றிருநா மத்தையுரைத் தொருகால் வெண்ணீ
[4]றணிந்திடவே வினையனைத்தும் அகன்று போமே.

(இ - ள்) புலன்களிற் கலந்த மனத்தாலும் மொழியாலும், மெய்யாலும் ஒருவனுக்குச் சேர்ந்த வினைகள் நீங்குதல் எவ்வாறெனக் கூறல் வேண்டா ; மிக்க கொலைப் பாதகன் கையிலுள்ள கத்தியாயினும், பரிசித்த உலோகத்தையெல்லாம் பொன்னாக வேறுபடுத்தும் மருந்தினைத் தாங்கின் அது பொன்னாகுமாறு போலவும், விரிந்த மரத்தின் கண் தங்கியுள்ள பலவகைப் பறவைகளெல்லாம் விரைந்து ஒருகல்லினை எறிந்திட, அவைகள் மரத்தைவிட்டு ஏகுமாறு போலவும், பரமேசுரனுடைய திருநாம மாகிய மூலமந்திரத்தை உரைத்துக்கொண்டு ஒருமுறை ஒருவன் திருவெண்ணீற்றினை அணிந்திடவே அம்மூன்றுவினைகளும் அகன்றுபோகும்; அவனும் தூய்மை யடைவன் (எ - று).

## யாக்கை நிலையாமையை உணர்ந்தோர் தவமே விரும்புவர் என்றல்

மண்ணறலை [5]நெருக்கிடும்போழ் துதகமே னோக்கும்
மண்ணெகிழ்ந்தாற் றிருந்தவெழுத் திடுமயிர்தோல் [6]திரங்கும்
தண்ணறலங் கியைநெருக்கி லுணவு [7]செலா ததனால்
தாதுக்கள் வற்றிடுந்தீச் சமீரணகனை நெருக்கில்

சு - வே : 1. நிரைந்த 2. நிகழ்த்த 3. வேண்டாம் 4. அணிந்திட வெவ். 5. நெருக்கிடும் பொழுது 6. மிகத்திரங்கும் 7. செல்லா.

உண்ணிலவு வளிசுருங்குங் கண்ணொளிபோ [1]மதனால்
ஓடல்நடந் திடலரிதா மொலிவிசும்பை நெருக்கில்
திண்ணமிகுஞ் செவிமந்தித் துரக்குமேன் மூச்சு
சேணுயிரை நெருக்கிமனங் [2]கலங்குர் விடுஞ் சீவன். 16

(இ - ன்) நிலம் முதலான ஐம்பூதங்கள் கலந்த மயக்கமே உடலாதலால், உடலுள் மண் என்னுந் தத்துவம் நீர் என்னுந் தத்துவத்தை நெருக்கிடுங் காலத்திலே அந் நீர் செறிவு நீங்கி மேல் நோக்கும்; அப்பொழுது, மண் என்னுந் தத்துவம் நெகிழும்; அது நெகிழ்ந்தால் மண்ணின் கூறாகிய மயிர் நன்கு வெளுக்கும்; தோல் சுருங்கும். தண்மையான நீர் என்னுந் தத்துவம் தீ என்னுந் தத்துவத்தை நெருக்கினால் உணவு செல்லாது; அதனால், அத் தண்ணீரின் கூறான வெண்ணீர் (சுக்கிலம்) முதலான தாதுக்கள் வற்றும். தீ என்னுந் தத்துவம் காற்றென்னுந் தத்துவத்தை நெருக்கின், உள்ளே உள்ள காற்று சுருங்கும்; அதனால், தீயின் கூறாகிய கண்ணொளி போம்; அதனால், ஓடுதல் நடத்தல் முதலாகிய இயக்கம் அரிதாகும், காற்றாகிய தத்துவம் ஆகாயமாகிய தத்துவத்தை நெருக்கில், வலிய செவி மந்தமாகி மேன்மூச்சு மிகும். ஆகாய மென்னுந் தத்துவம் உயிரை நெருக்கில், அதனால் மனம் கலங்கும், சீவன் உடலை விடும் (எ—று).

இட்டமிகு மிளமைநல மீரையாண் டதனி
லிருபதனில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகும்
உட்டகைய மேதையுநாற் பதுவருடத் துடலி
லொண்பலமும் ஐம்பதனி லறுபதனிற் றாதும்
திட்டியுமங் கெழுபதனி லெண்பதனி செவியும்
திகழ்மனமுந் தொண்ணூறிற் சீவனும்நூ றளவில்
[3]விட்டகல விரவியுதித் தொடுங்குவதென் றுணர்ந்தோர்
வீணாள்பட் டழியாமல் விரும்புவர்நற் றவமே. 17

---

சு - வே : 1. மாதலினால் 2. கலங்கிடுஞ் சென்றிடுஞ் சீவன்.
3. விட்டகலும் விரவியுதித், விட்டகலு மிரவியுதித்.

(இ - ள்) பத்தாண்டில் விருப்பம் மிகும் இளமை அழகும், இருபதுயாண்டில் உடல் வளர்ச்சியும், முப்பது யாண்டில் அழகும், நாற்பது யாண்டில் உடற்பினுள் தகுதியுடைத்தாயிருக்கும் மேதையும், ஐம்பது யாண்டில் உடம்பிலுள்ள சிறந்த பலமும், அறுபதுயாண்டில் தாதுவும், எழுபது யாண்டில் கண்ணொளியும், எண்பது யாண்டில் செவிப்புலனும், தொண்ணூறு யாண்டில் மனத்தின் ஆற்றலும், நூறாவது யாண்டில் உயிரும் உடம்பினை விட்டு நீங்க, இவற்றிற்கிடமான யாக்கைதானும் இளமை நலம் முதலியன விரவியிருக்குமாறு தோன்றி அழியும் இயல்புடையதென்று யாக்கை நிலையாமையை உணர்ந்தோர் வாணாளெல்லாம் வீணாள்பட்டழியாமல் நல்ல தவத்தினையே விரும்புவர் (எ - று).

## மனமும் பிராணவாயுவும் மதியும் இரவியுமா மென்றல்

மதியிரவி பொருந்துநிலை திருந்தக் கூறின்
　　மனம்மதியாம் மனந்தனில்வேர் கொண்ட வாயு
முதிரினனாம் இதுமதியின் களங்க மாக
　　மொழிந்திடுவர் மூலவளி திறனும் ஈதாம்
மதியிலகு கலைகளிரு பக்க மாக
　　மரித்தொடுங்கி உதிப்பதுமிவ் வளியின் பாலாம்
கதிநிறுவுங் குணமாதி கரண மெல்லாம்
　　கருதியகாற் றினிலடங்கி யுதிக்கு மாபோல் 18

(இ-ள்) திங்களும் ஞாயிறும் சேரும் நிலையினைத் திருந்தக் கூறினால், மனம் என்னும் அந்தக்கரணம் திங்களாகும். அம் மனத்தில் வேர் கொண்டிருக்கும் உயிர்க்காற்று (பிராண வாயு) முதிர்ந்த ஞாயிறாகும். இந்த உயிர்க்காற்றினை மதியிலுள்ள களங்கமாகக் கூறுவர். எதனால் அவ்வாறு கூறுவரெனின்? அம் மூலவளியாகிய உயிர்க்காற்றின் நிறமும் களங்கத்தின் நிறமும் கலங்கத்தின் நிறமாகிய (கருமை) நீலநிறமாயிருத்தலினாலென்க. மனமாகிய திங்களிடத்தே உள்ள பதினாறு கலைகளும்

சூரியகலை சந்திரகலை என்னும் இரண்டாகப் பிரிந்து அழிந்தொடுங்கிப் பின் தோன்றுவதும் இப்பிராண வாயுவின் பாலதாம், எவ்வாறெனின்? ஓடல்முதலான குணங்களும் சில கருவிகளும் காற்றினில் அடங்கியிருந்து பின்தோன்றுவது போலெனக (எ-று)

ஓடல் முதலான குணங்களை,

"ஓடல் பரத்தல் ஒடித்திறுத்தல் தூளியாய்ச்
சாடல் மணங் காட்டல் தண்ணென்றல் - நேடித்
திரட்டல் உடல்வீக்கல் சேர்காந்த போதில்
இரட்டியெண் ணான்குகாற் கென்"

என்னும். தத்துவப்பிரகாச உதாரணப்பாட்டால் அறிக.

## உடம்பில் பத்து வாயுக்களிருக்கும் இடம் முதலியன

இதயமதிற் பிராணன்நிலை அபானன்உறும் குதத்தில்
இலஞ்சியினில் உதானன்உடல் எவ்வளவும் வியானன்
திதமுறுகண் டத்திடையிற் சந்ததனிற் சமானன்
திகழ்நாகன் முடக்கலும்நீட் டுதலுடன்கொட் டாவி
விதமலியுங் கூர்மனிமைத் திடுதன்மயிர்ப் புளகம்
வெம்மைசினந் தும்மல்கிரி கரண்முகத்தில்[1] இளைத்தல்
[2] சதுர்வியர்வோ டற்றேவ தத்தன்[3] தனஞ்சயன்சேர்
தனுவகலி லுடல்[4] வீக்கித் [5] தலைகீழ்த்திட் டேகும். 19

(இ-ள்) நெஞ்சமாகிய அவ் விடத்தே பிராணவாயு என்னும் உயிர்க்காற்று நிலைபெறுவதாம். அபானன் (கீழ்க் காற்று) என்னும் காற்று குதத்தில் உறும். உதானன் கொப்பூழில் உறும். வியானன் என்னும் காற்று உடம்பு முற்றிலு மிருக்கும். (அது தோலைப் பற்றி நின்று ஊற்றுணர்ச்சியை அறிவிக்கும்) உறுதியான கழுத்திடையிலே உள்ள சந்தில் சமானன் என்னும் காற்று இருக்கும். விளங்குகிற நாகன் என்னும் காற்று முடக்குதல், நீட்டுதல்,

---

சு-வே ; 1. விளைக்கும் 2. சதுர்விதிர்ப் போடல் 3, தனஞ்சன் 4. வீங்கி 5. தலைகிழித்திட்

கொட்டாவி விடுதல் முதலியவற்றைச் செய்யும் கூரமன் என்னுங் காற்று கண்ணிலே நின்று இமைப்பிக்கும் : மயிர்க் குச்செறியச் செய்யும். கிரிகரன் என்னுங் காற்று முகத்திடை நின்று வெம்மையும், சினமும், தும்மலும் விளைவிக்கும். இளைத்தல், வியர்த்தல், ஓடல் இவற்றைத் தேவதத்தன் என்னுங் காற்று நிகழ்விக்கும், உயிர் உடம்பைவிட்டு அகன்ற பொழுதும் அகலாமல், தனஞ்சயன் என்னுங் காற்று உடம்பினைச் சார்ந்திருந்து உடலை வீங்கச் செய்து பின்னர்த் தலையைப் பிளந்திட்டு ஏகும் (எ-று).

பத்து வாயுக்களின் இயல்பினை,

"இருதய மண்டலத் தியங்கும் பிராணன்"
"எச்சத் தலத்திடை நிற்ப தபானன்"
"நாபியி னின்றங் கோவாத துதானன்"
"வியான னெங்கும் வியாபியாய் நிற்கும்"
"கந்தரக் குழியிற் சந்திடைச் சமானன்"
"முடக்கலு நீட்டலுங் கிளப்பது நாகன்"
"உரோமம் புளகித் திமைப்பது கூர்மன்"
"கிரிகரி னென்பது முகத்திடைக் கெழுமித்"
தும்மலுஞ் சினமுவ் வெம்மையும் விளைக்கும்"
"ஓட்டமும் இளைப்பும் வியர்ப்புந் தேவதத்தன்"
"ஒல்கா அன்பின் நல்லவர் கேண்மையின்
உயிருடல் விடினுந் தானுடல் விடாது
ஒக்க நின்றங் குடலினை வீக்கித்
தலைகிழித் தகல்வது தனஞ்சய னாகும்"

என வரும் பிங்கல நிகண்டால் அறிக.

## மேற் கூறிய பத்து வாயுக்களின் நிறம்

இந்திரநீ லத்தொளியாம் பிராணனிறம் அபானன்
இந்திரகோ பத்தொளியாம் மின்னொளியாம் உதானன்
முந்தியபால் நிறமாகும் வியானவிருஞ் சமானன்
முருகவிழும் பூவைப்பூ நிறமகலா நாகன்

*சந்தமிகும் இளங்கதிரோன் நிறமினிதாங் கூர்மன்*
*[1]தருகுருந்து மலர்நிறமாங் கிரிகரனஞ் சனமாம்*
*அந்தமுறும் பளிங்குநிறந் தேவதத்தன் தனஞ்சன்*
*[2]அந்நீலத் தொளியாகி யாக்கைநடத் திடுமே* 20

(இ-ள்) பிராணவாயுவின் நிறம் இந்திரநீலத் தொளி போன்றதாம். அபானக் காற்றின் நிறம் இந்திரகோபத் தொளிபோன்றதாம். உதானக் காற்றின் நிறம் மின்னலின் ஒளிபோன்றதாம். வியானன் என்னுங் காற்றின் நிறம் முதன்மையான பால்நிறம் போன்றதாம். பெரிய சமானன் என்னுங் காற்றின் நிறம் மணம் விரியும் காயாமலரின் நிறமாகும். நீங்காத நாகன் என்னுங் காற்றின் நிறம் அழகு மிகும் இளைய ஞாயிற்றின் நிறம் போன்றதாம். இனிமையாகும் கூர்மன் என்னுங் காற்றின் நிறம் குருந்த மரத்தின் மலர் நிறமாகும். கிரிகரன் என்னுங் காற்று, கருமை நிறமாம். தேவதத்தன் என்னுங் காற்று அழகு பொருந்தும் பளிங்குக் கல்லின் நிறமாகும். தனஞ்சயன் என்னுங் காற்று மேலே சொன்ன இந்திரநீலத் தொளியின் நிறமுடையதாகி உடலை நடத்திடும் (எ-று)

*பிராணவாயு நீல நிறம் உடைய தென்பதை*
*"நீல நிறனுடை நேரிழை யாளொடு*
*சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு*
*ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்*
*பாலனு மாவர் பராநந்தி யாணையே"*

*என்னும் (**734**) திருமந்திரப் பாட்டால் அறிக.*

## பிராணவாயுவின் இயக்கம்

*நயந்துசமா தியிலியங்கும் பன்னிரண்டங் குலிதான்*
*நடந்திடிலீ ரெட்டுவிரல் இயங்கியிடும் நவையார்*
*துயங்கவிரைந் தோடிடிலை யாறுவிர லியங்கும்*
*துயிலுறிலெண் ணைந்துவிரற் கிடையுடல் விட்டகலும்*

---

*சு-வே : 1. தருகுருந்த 2 அஞ்சனநீலத் தொளியாய்*

தயங்கியவேல் விழியாரை முயங்கியிடும் பொழுதிற்
றரியாதெண் ணெண்விரலி னளவுயிர்விட் டியங்கும்
பயங்கொளிடை பிங்கலைக ளொருவழிப்பட் டிடவே
பரிந்தநற்குண் டலியோகம் பொருந்திடுமங் குறவே.

(இ-ள்) உயிர் என்னும் பிராண வாயுவானது விரும்பிச் சமாதியில் (உறங்குதலும் நடத்தலுமின்றிச் சம நிலையில் வீற்றிருக்கும் பொழுது பன்னிரண்டங்குலம் அளவுள்ளதாய் இயங்கிக்கொண் டிருக்கும், நடத்தலாகிய தொழிலைச் செய்யின் பதினாறு விரல் அளவுள்ளதாய் இயங்கும். குற்றம் பொருந்தவும் தளர்ச்சி உண்டாகவும் விரைந்து ஓடுதலைச் செய்யின் முப்பது விரல் அளவுள்ளதாய் இயங்கும், உறங்குதலைச் செய்யின் நாற்பது விரல் அளவுள்ளதாய் உடம்பை விட்டுச் செல்லும். பொருந்திய வேல் போன்ற விழியினையுடைய மங்கையரைக் கூடிடுங் காலத்திலே அறுபத்து நான்கு விரல் அளவுள்ளதாய் அது இயங்கும்.

பயன் கொள்கின்ற இடைகலை, பிங்கலை என்னும் இரண்டும் ஒருவழிப்பட்டால், விரும்பிய நல்ல குண்டலி யோகம் அப்பொழுது நன்கு பொருந்தும் (எ-று)

## பிராணவாயுவின் இயக்கத்தை ஏழு ஆதார தெய்வங்கட்கும் பகுத்தல்

கரிமுகவற் கறுநூறாம பிரமன்
கண்ணுதற்கு மூவாறா யிரம தாகும்
பரிவினிய மகேசனுக்கா யிரம தாகும்
பகர்வரிய சதாசிவற்கும் ஈரைஞ் ஞூறாம்
தெரிவரிய சிற்பரைக்கும் ஈரைஞ் ஞூறாம்
திகழ்ந்திடுமே மூலாதாரத் தியங்கும் வாயு
அரியவறு நூறுடனா யிரமூ வேழும்
அகாரவுகா ரம்மகரத் தடங்குந் தானே 22

(இ-ள்) விளங்கிடும் ஏழு ஆதாரங்களில் இயங்குகின்ற பிராணவாயுவின் உயிர்ப்பினைக் கூறின், மூலாதாரத்திலே விநாயகற்கு அறுநூறாகவும், சுவாதிட்டானத்திலே பிரமனுக்கு ஆறாயிர மாகவும், அனாகதத்திலே திருமாலுக்கு ஆறாயிர மாகவும் விசுத்தியில் மகேசனுக்கு ஆயிர மாகவும் ஆக்கினையில் சதாசிவற்கு ஆயிர மாகவும், நாதாந்தத்தில் சிற்பரைக்கு ஆயிர மாகவும் கூடிய தொகை இருபத்தோராயிரத்து அறுநூறு உயிர்ப்புகளும் (சுவாசங்களும்) அகர உகர மாகிய பிரணவத் தடங்கும் (எ-று)

பிராணவாயுவைப் பூரித்தல் அகரமும், கும்பகஞ் செய்தல் உகரமும், இரேசித்தல் மகரமும் ஆதலின் இருபத்தோராயிரத்து அறுநூறு உயிர்ப்புகளும் அகர, உகர மகரமாகிய பிரணவத் தடங்கும் என்றார். இதனை,

> "பிராணா யாம மென்பதுதான் பிராணன்
> வசமாக் குதலதுதான், இரேசா காதி மூன்றவைதாம்
> எழுத்து மூன்றி னுருவாகும், பரவு மிவையோங்
> காரமெனப் படுமற் றதனாற் பகர்வுற்ற, பிராணா
> யாமம் ஓங்கார மயமென் றறிஞர் பேசுவரால்"

என்னும் குறுந்திரட்டுப் பாடலால் அறிக.

## மேற்கூறிய அகர உகர மகரத்தின் சிறப்பு

அகாரமூல கினைவிரிக்கும் உகாரமொடுக் குவதாம்
அவ்விரண்டும் நடத்துமதற் குள்ளொளியாம் மகாரம்
அகாரவுகா ரம்மகரம் பிரணவமா மதுவே
ஆரணவித் தாமசபை அதனிடமா யியங்கும்
அகாரவுகா ரம்மகரம் இலிங்கபீ டமுமாம்
ஆருயிர்கள் ஐம்புலனும் அதனிடமா யருந்தும்
அகாரவுகா ரம்மகரம் பிண்டமுமண் டமுமாம்
அகாரவுகா ரம்மகரம் அண்டகடா கமுமே. 23

(இ-ள்) அகாரம் அயனாயிருந்து உலகங்களைப் படைக்கும், உகாரம் அரியாயிருந்து அவ் வுலகத்தை ஒடுக்கும்.

அத் தொழிரண்டையும் நடத்துகின்ற அவற்றிற்கு உள் ளொளியாய் விளங்குவது உருத்திரனாகிய மகார மாகும்.

சொல்லுலகில் அகார உகார மகாரமென்னும் மூன்றும் தனித்த (வியட்டி) பிரணவமாகவும், ஒன்று சேர்ந்த (சமட்டி) பிரணவமாகவும், விளங்கும். அப் பிரணவமே வேதம் முதலிய கலைகள் தோன்றுவதற்கு முதலாயிருக்கும். அசபா மந்திரம் அவற்றிற்கு உயிர்ப்புக் காற்றாக (பிராண வாயு) அவற்றிடையே இயங்கும்.

அகார உகார மகார மென்னும் மூன்றும் இறைவன் திருமேனியாகிய இலிங்கத்திற்குப் பீடமாகவும் விளங்கும்.

பொருந்திய உயிர்கள் ஐம்புலப்பொருளை நுகரும் பொழுது, அகங்காரம், புத்தி, மனம் என்னும் அந்தக் கரணங்களை அடைவே அகார, உகார, மகாரஞ் செலுத்த அவற்றால் அறிந்து நுகருமாதலின், உயிர்கள், ஐம்புலனை யும் அகாரம் முதலானவற்றால் நுகருமென்க,

அகார, உகார, மகாரம் பிண்டமாகிய உடலாகவும், அண்டமாகிய உலகாகவும் ஆகும். அவையே அண்டத் திற்கு அப்பாற்பட்டவையுமாகும் (எ-று)

அகாரம் முதலிய தெய்வங்களாயிருந்து படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் என்பதைப் "பிரமனே அகார மாகும் பேசுங்கால் அரியு காரம், அரனதாம் மகார நாதம் காரணமாகும்" என்னும் பொருந்திரட்டால் அறிக, ஹம்+ஸம் என்று பிரிக்கப்படும் ஹம்சமந்திரம் அசபா மந்திரமாகும்.

### மூன்று மண்டலங்கள்

மூலமதின் நாற்சதுரம் நாலிதழ்முக் கோணம்
முழுச்செம்மை நிறம்புனன்மண் ணடுவெரிமண்டலமாம்
கோலுமித யத்திலறு கோணமித ழெட்டாம்
குறிதருபொற் பளிங்குநிறம் குலவெரிகா னடுவே

மாலுமரம் பையின்முகைபோ லதோமுகமா மதனின்
மனோன்மணியெண் சத்தியுடன் மகிழ்கதிர்மண்டலமாம்
பாலமுத கலையொழுகுங் கபாலநடுக் கோடி
பனிமதியின் நிறம்பரையி னிடம்மதிமண் டலமே 24

(இ-ள்) மூலாதாரத்திலே நான்கு சதுரமாய், நடுவே நான்கு இதழுடன் கூடிய மூன்று கோணமாய், முழுமையான சிவப்பு நிறத்துடன், நீர் என்னுந் தத்துவமும் மண்ணென்னுந் தத்துவமும் கூடியுள்ள நடுவிடத்தே யிருப்பது நெருப்பு (அக்னி) மண்டலமாகும்.

நெஞ்சத் தானத்திலே அறுகோண மாய், நடுவே எட்டிதழ்களை உடையதாய்க் குறிக்கப்படும் பொன்னுடன் கூடிய பளிங்கு நிறம் பெற்றுத். தீயென்னுந் தத்துவமும் காற்றென்னுந் தத்துவமும் கூடியுள்ள நடுவிடத்தே வாழை மொட்டுப்போல இதயமலர் கீழ் நோக்கி யிருக்கும். அவ்விடம் மனோன்மணி முதலான எட்டுச் சத்தியுடன் கூடிய ஞாயிற்றின் மண்டல மாகும்.

பால் போன்ற அமுதகலை ஒழுகும் கபாலத்தின் நடுவிலே, கோடித் திங்கள் தோன்றினாற் போன்ற நிறத்துடன், பராசத்திக்கு இடமா யிருப்பது திங்கள் மண்டலமாகும் (எ-று).

குறிப்பு : அக்னிமண்டலம் மூலாதாரத்திற்கு இருவிரற்கடை மேலிருக்கும், ஆதித்தமண்டலம் உந்திக்கு நான்கு விரற்கடை மேலிருக்கும் திங்கள் மண்டலம் தலையின் நடுவிலிருக்கும்.

## ஆதார யோகம் முதலியன

ஆதாரம் நிராதாரம் மீதான மெனமூன்
[1]றாமுயிர்க ளிறைவனடி அடையுநெறி யதுதான்
ஆதாரம் தத்துதே வதைவடிவைத் தியானித்
ததுவதுவாய் நின்றவற்றின் பலன்களருந் துவதாம்

---

க - வே : 1. றாருயிர்க

ஓதாரும் நிராதாரம் [2]கருவியெலா மகன்றே
உயிர்க்குயிரா யோங்கொளியோ டொழிவறநிற்
பதுவாம்
மீதானம் அவ்வொளிக்கு முதலாய் நின்ற
விமலனுடன் [3]மலமறவே மேவுதலாம் விதியே

(இ-ள்) உயிர்கள் முதல்வன் திருவடியை அடைகிற வழியாகிய அதுதான் ஆதாரம் என, நிராதாரம் என, மீதானம் என மூன்றாகும்.

அவற்றுள் ஆதார யோகமாவது, மூலாதாரம் முதலிய இடங்களிலே நிலம் முதலான தத்துவங்களையும் அயன் முதலான தெய்வ வடிவங்களையும் வைத்துத் தியானிக்கும் முறையில் தியானித்து அவ்வத் தெய்வ வடிவாய் நின்று அவற்றால் விளையும் பயன்களை நுகர்வதாகும்.

சொல்லுதற் கரிய நிராதார யோகமாவது, இச்சைக் கருவி, அறிவுக் கருவி, செயற்கருவிகளான தத்துவங்களை யெலாம் அகன்று, உயிர்க்கு உயிராய் ஓங்கும் திருவருள் ஒளியொடு நீக்கமற நிற்பதுவாம். மீதானத் தெய்தலாவது, மலம் நீங்க, அத் திருவருள் ஒளிக்கு முதலாய் நிற்கும் தூய முதல்வனுடன் மேவுகின்ற முறையாகும். (எ-று)

இதனை,

"ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற" (8)

என்னும் திருவுந்தியார்ப் பாட்டால் அறிக.

பிங்கல நிகண்டு அட்டாங்க யோகத்தைக் கூறும்பொழுது, எட்டாவ தாகிய சமாதியை

"இந்துவும் பானுவும் விந்துவும் நாதமும்,
சந்தியில் வைத்தல் சமாதி யாகும்"

என்று கூறுகின்றது. இந் நூற்பாவில் அதன் உரையாசிரியர் "சமாதியாவது, ஆதார தரிசனத்தையும் நிராதார தரிசனத்தையும் கடந்து மீதானத்தே நிற்றலாம்" என்பர்.

2. கருவியெல்லாங் கழன்றே 3. மலமகல. மலமற மேவுத லாகும்

## மேற்கூறிய ஆதாரம் முதலியன

(இ - ள்) நான்முகன் நிறம் பொன்னிறமாம்; அத்தெய்வம் மூலாதாரத்தே எழுந்தருளியிக்கும். திருமால் நிறம் கருப்பாகும்; அந் தெய்வம் நாபி என்னும் ஆதாரத்திலே எழுந்தருளியிருக்கும். அரன் நிறம் சிவப்பாகும்; அத் தெய்வம் நெஞ்சகமாகிய ஆதாரத்திலே எழுந்தருளியிருக்கும். மகேசுரன் நிறம் புகைநிறமாகும்; அத் தெய்வம் கண்டமாகிய ஆதாரத்திலே எழுந்தருளியிருக்கும. சதாசிவன் நிறம் திங்கள் நிறமாகிய வெண்மையாய்; அத் தெய்வம் நாவாகிய ஆதாரத்தே எழுந்தருளியிருக்கும். விந்து பளிங்குக் கல்லின் நிறமுடையது; அத் தெய்வம் புருவத் திடையாகிய ஆதாரத்திலே எழுந்தருளியிருக்கும். நாதமும் அவ்விடத்திற் றானேபளிங்கில் தெளிவுபோல் விளங்கும். உயர்ந்த புருவத்தின் விந்து நாதங்கட்கு மேல் ஆதாரத்தே ஆணவ மலம் உள்ளதாம். அந்த ஆணவத்தின் மேலிடத்தே திரோதான சத்தி உள்ளது. முறையாகக் கூறிய இவ்வாதாரங்கட்கு மேலிடத்தே, முதலும் நடுவும ஈறும் அகன்று எல்லாத் தெய்வங்கட்கும் அதிகமாயும், எவ்வொளிக்கும் உள்ளொளியாயும் உள்ள, நிராதாரப் பொருளாகிய பராசத்தி உள்ளதாம். அதற்குமேல் உள்ள அரிய சிவமே பராசத்திக்கு முதலாகிய மீதானப் பொருளாம். உயிர் பராசத்தியையும் சிவத்தினையும் அடுத்து அவ் விருவரிடை உள்ளதாம் (எ – று).

### மேற்கூறிய வற்றில் ஆணவம் திரோதை உயிர் என்னும் மூன்றினை ஒழித்து, ஏனைய ஒன்பதை உருவம், அருவம், அருவாரூபம் என்று பகுக்கின்றது.

பிரமரரி யுருத்திரரோ டீசர் நான்கும்
பெருகுறதில் நிலைமருவும் உருவ மாகும்
பரவரிய புந்துவுடன் நாதம் மீதிற்
பரைபரம சிவமெனவே பகர்ந்த நான்கும்

---

சு-வே : 1. வளர் பளிங்கி னிறம்

அருவநிலை யாமுபய கூட்டந் தானே
அருணிலவு லிங்கசதா சிவம தாகும்
உருவமதிற் சிருட்டி; திதி உபயந் தன்னின்;
ஒடுக்கிடுவ னருபத்தா லனைத்து மேகன். 27

(இ-ள்) நான்முகன் திருமால் உருத்திரன் மகேசன் என்னும் நான்கும் பெருகுகின்ற வலிமைநிலை பொருந்தும் முதல்வன்றன் உருவத் திருமேனியாகும், புகழ்தற் கரிய விந்து, நாதம் அதன் மேலுள்ள பரை, பரமசிவம் எனப் பகர்ந்த நான்கும் முதல்வனுடைய அருவநிலையாகும் அருள் விளங்கும் இலிங்க ரூபமாகிய சதாசிவ வடிவமே முதல்வனுடைய அருவத் திருமேனியாகும்.

இவ்வாறு நவந்தரு பேதமாய் நடிக்கும் ஏகன் என்னும் அவ் வொருவன்றானே, உருவத் திருமேனியால் அனைத்தை யும் படைத்தும், அருவுருவத் திருமேனியால் அவற்றைக் காத்தும், அருவத் திருமேனியால் அவற்றை ஒடுக்கியும் இவ்வாறு முத்தொழிற் செய்வன் (எ - று).

## பரபக்க மறுப்பு

உருவமுடன் அருவமரு வுருவ மென்றே
உரைத்தநவ விதமுமர னுருவ மாகின்
இருவரரி பிரமரைவே றாகக் கொண்டே
இகழ்வதுவென் னெனிலதனை இயம்பக் கேணீ
பொருவிலுடல் தனில்வாயி லொன்பான் றன்னைப்
பொருந்துமுயி ரேகமதிற் பொருந்திற் றேனும்
மருவுகுத முபத்தமிவை அசுத்த மாக
வரைந்திடுவ ரதுபோல மதித்துப் பாரே. 28

(இ - ள்) மேற்பட்டில் உருவம் நான்கொன்றும், அரு வம் நான்கென்றும், அருவுருவம் ஒன்றென்றும் உரைத்த ஒன்பஃதும் பரமேசுரனுடைய வடிவமாகில், அவ் வொன் பான் வடிவத்துள் இரண்டு வடிவத்தைச் சார்ந்தவ ராகிய நான் முகனையும் திருமாலையும் வேறாகக் கருதி இகழ்ந்

தொதுக்குதற்குக்காரணம் என்னையோ வெனில்? அதனைக் கூறக் கேட்பாயாக; ஒப்பற்ற உடம்பதனிலுள்ள ஒன்பது வாயிலையும் பொருந்தியிருக்கும் உயிர் ஒன்றாய் அவற்றிற் பொருந்திற்றேனும், அவ் வுயிர் பொருந்தியுள்ள மலங்கழி வாயிலும், நீர்கழி வாயிலுமாகிய அவற்றை மக்கள் தூய்மையற்றன வாகக் கருதி வரைந் தொழுகுவர்; அதனைப் போல என்று இதனையும் கருதிப் பார்ப்பாயாக (எ - று).

## இதுவும் அது

முருந்துநகை உமைகணவ னிணையி றில்லா
 முதல்வனுடன் றுளபமணி முடியோன் றன்னைப்
பொருதுமிறை யெனநிகரா யுரைக்கும் பேதைப்
 பொறியிலிகாள் ஒருதிவசம் [1] புரிந்து நெய்யை
அருந்துமெலி [2]சுடரெரிய முடுக ஞாலம்
 அனைத்தினையு முகந்திறைவ னளித்தான் மாயன்
திருந்திய[3] மூவுலகினையன் றுறப்பெற் றோற்குச்
 சிறையளித்தா னுத்தமரார் தெளிந்தி டீரே.

(இ - ள்) வெண்மையான பல்லினைப் பெற்றிருக்கும் உமாதேவியாரின் கணவனாகிய ஒப்பும் இறுதியுமில்லாத முதல்வனுடன், துளபமாலையை அணிந்த முடியுயோனாகிய திருமாலைப் பொருந்துந் தலைமைத் தன்மையுடையோனென ஒப்பாய் உரைக்கும் அறிவில்லாதவர்களே! விரும்பி நெய்யினை உண்ணும் எலி ஒன்று, ஒரு நாள் விளக்கு எரியுமாறு தூண்டிவிட அச் செயலுக்காகப் பரமேசுரன் மகிழ்ந்து, உலகமெல்லாவற்றையும் ஆளும்படி அதற்கு அளித்தான், மயக்கி வஞ்சிக்கும் இயல்புள்ள திருமால் திருந்திய மூன்றுலகத்தையும் சிவன்பால் நன்கு பெற்று ஆண்டுவந்து அந்த மகாபலி என்னும் அரசனுக்குச் சிறை

---

க-வே: 1. புரிந்த 2. சுடரெரிதான் 3. மூவுலகினையன் றுவவினோற்குச்

யினை அளித்தான். இவ் விருவருள் நல்லோர் யார் என்பதனை அவர்தம் செயலையே கட்டளைக் கல்லாகக் கொண்டு தெளிந்து கொள்ளுவீராக (எ—று)

இக் கருத்தினைச் சிவஞான சித்தி ஆசிரியர் பரபக்கத்துள்

"தானமென் றிரந்து செல்வத் தனக்குமு வடிகொ டுப்ப
வானமும் அளந்து கொண்டு மாபலி தன்னைப் பின்னை
ஈன மாஞ் சுறையி லிட்டான் இறையன்றோன் றீத்தோர் தங்கட்
கூனஞ்செய் திடுவோர் தாங்கொ ளுத்தம ரல்ல ராகும்"

என்று கூறுதலைக் காண்க.

## இதுவும் அது

அரியீரைந் தவதாரச் செயலி யாவும்
அரன்செயலாம் மாலறியா தகந்தை கூறல்
திரிவாகு முடல்வாலை தருணம் மூப்பின்
செயலுயிரின் செயலாகுஞ் செய்தி போலும்
வரிவாமைந் தொழிலையுமெம் மிறைவன் றானே
மிகுபடர்க்கை முன்னிலைதன் மையிலுண் டாக்கும்
தரியாதன் றிராமனுடன் பரசு ராமன்
சமர்பொருத கதையுலகிற் சாற்று வீரே.

(இ—ள்) திருமால் பத்தவ தார மெடுத்த செய்திகள் முற்றிலும் பரமேசுரன் நிமித்த காரணனாயிருந்து செய்த செயலாகும். இதனைத் திருமால் அறந்து கொள்ளாமல் நானே எல்லாச் செயலையும் செய்கின்றேன் என்று கூறுதல் திரிபாக வுணர்ந்து கூறியதாம். உடம்பின் குழந்தைப் பருவத்துச் செயலும், தருணப் பருவத்துச் செயலும், கிழப் பருவத்துச் செயலும் உயிரின் செயலாகுதல் போன்றது பரமேசுரன் செயலாகும். எம் இறைவன்றான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளால் என்று விரிவாகக் கூறும் ஐந்து தொழில்களையும் மிக்க படர்க்கையாகவும் முன்னிலையாகவும், தன்மையாகவும் நின்று இயற்றுவன். திருமால் பத்தலதார மெடுத்த செயலெல்லாம் பரமேசுரன்

நிமித்தகாரணனா யிருந்து எடுப்பித்த செயல் என்பதைப், பரசுராமன் பொறுக்காமல் அன்று இராமனுடன் போரிட்ட கதையினால் அறிந்து உலகத்திற்கு உரைப்பிராக (எ-று).

முதல்வன், தன்மை முன்னிலை படர்க்கையாக நின்று ஐந்தொழிலும் செய்யும் முறையாவது:— "பரமசிவம் ஆன்மாக்களை இரட்சிக்கும் பொருட்டு, அருவமாகிய சிவம் சக்தி நாதம் விந்து நான்கும், அருவுருவமாகிய சதாசிவம் ஒன்றும், உருவமாகிய மகேசுவரன், உருத்திரன் இருவரும் இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரம விஷ்ணுக்கள் இருவரும் ஆக ஒன்பது மூர்த்திகளுமாய் உபாதானத் திரயங்களைக்கொண்டு, சிருட்டித்தும், திதித்தும், சங்கரித்தும், திரோபவித்தும், அனுக்கிரகித்தும் இங்ஙனம் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யா நிற்கும் எங்ஙனம் செய்யுமெனின்? தன்மை, முன்னிலை, படர்க்கையாக நின்றியற்றும்.

இவற்றுள் தன்மையாவது, பரிபூரணமாயிருக்கை, முன்னிலையாவது, இச்சா ஞானக் கிரியைகளாயிருக்கை, படர்க்கையாவது, மனம், புத்தி, அகங்காரம், சித்தம், உள்ளம் ஆக ஐந்து; அகாரம் உகாரம்; மகாரம்; விந்து, நாதம் ஆக ஐந்து; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆக ஐந்து ஆகிய பதினைந்து பிரகாரமா யிருக்கை" என்பது திருவாலவாய்க் கட்டளை.

உயிர்கட்கு இறைவன் அறிவிப்பதும் தன்மை முன்னிலை படர்க்கையென மூன்றாயிருக்கு மென்பதை "தன்மை முன்னிலை படர்க்கை" (70) என்னும் சிவநெறிப்பிரகாசப் பாட்டால் உணரலாம்

திருமால் பிரமன் என்னும் இருவரையும் படைத்த நிமித்த காரணன் சிவபெருமான் என்பதை

"நாரணன் அயனை யீன்றும் அயனும்நா ரணனை ஈன்றும்
காரணம் ஒருவருக்கங் கொருவர்தாம் இருவருக்கும்
வாரணம் உரித்த வள்ளல் காரண னென்று மன்ற
ஆரணம் உரைக்கும் பக்கத் தவர்களும் அடைந்தா ரன்றே"

என்னும் சித்தியார் பரபக்கப் பாட்டால் அறிக.

## இதுவும் அது

வருடையெருச் சிலைமமணல்நீர் குளம்மா வன்னம்
மலர்மாலை நவநீதம் மடவார் கொங்கை
வெருடருமா மொக்கணிகன் றாப்பு நாழி
விலங்குலவை குசைதடிவா ளினுமெங் கெங்கும்

அருடருமெம் மிறையுளனென் றிறைஞ்சு வோருக்
கடிநடுவீ றிலாமுதல்வ னாத லாலே
மருடருபேய் வயிணவனே விசையன் மாலை
வழுத்தியதில் வாறெனவே மதித்தி டாயே. 31

(இ-ள்) சிவனைப் பூசிக்கும் நியம முடைய அருச்சுனன் கண்ணனையே சிவமாகக் கருதிப் பூசிக்க, அப் பூசை சிவ பெருமானல் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அரியும் சிவனும் ஒன்றென்பதே போந்த தெனின், இங்ஙனம் கூறிய மருண்ட பேய் போன்ற (அஞ்சத்தக்க கொள்கையினை யுடைய) வயிணவனே வரையாட்டினும், எருவினும், கல் லினும், மணலினும், நீரினும், வெல்லத்தினும், மாவினும் அன்னத்தினும் மலரினும், மாலையினும், வெண்ணெயினும் பெண்களின் நகிலினும், வெருளுகின்ற குதிரைக்குரிய கொள்ளுப் பையினும், கன்றாப்பினும், நாழியினும் உலவையினும், தருப்பையினும், தடியினும், வாளிலும், வேறு எங்கெங்குள்ள பொருளினும் இறைவன் உளன், என்று இறைஞ்சு வோர்க்கு, அவன் கருதுவார் கருதும் பொருளிலிருந்து அருள் தருவான். எதனாலெனின்? அவ் விறைவன் பிறரால் தோற்றுவித்தலும், காக்கப்படுதலும் அழிவித்தலும் இல்லாத, சர்வ வியாபியான முதல்வனாக இருத்தலினா லென்க (எ-று)

## இதுவும் அது

சதுரயுக மவையிரண்டா யிரந்தாஞ் சென்றால்
சதுர்முகனுக் கொருதிவசந் தகையார் வாணி
பதிமகிழுந் தினத்திலொரு பகலில் றானே
பதினால்வ ரிந்திரர்தம் பதம்போ மிந்த
விதியடைவே பிரமரொரு கோடி நீங்கின்
விண்டுவினுக் கொருபகலாய் விழியாற் றுஞ்சும்
மதிதிருமா லொருகோடி இறக்குங் காலம்
மலரளக மவிழ்த்துமையாண் முடிக்கு நேரம் 32

(இ-ள்) நான்கு யுகம் சேர்ந்த அவை ஒன்றாக, இரண் டாயிரம் அளவுள்ள காலஞ் சென்றால், அக் காலம் நான் முகனுக்கு ஒரு நாளாகும். தகுதி பொருந்திய கலை

மகளின் கணவனாகிய அவன் மகிழ்ந்திருக்கும்நாளொன்றில் பகற் காலத்திற்றானே பதினான்கு இந்திரர்தம் பதவிகள் தோன்றிக் கழியும், இக் கால முறைப்படி நூறுயாண்டுகள் வாழ்ந்த பிரமதேவர்கள் ஒரு கோடி பேர் அழியின் திருமாலுக்கு ஒரு பகற்காலம் முடிந்து உறக்கங்கொள்ளும், அவ்வாறு கால அளவு கருதப் பெற்ற திருமாலுக்கு நூறு யாண்டுகள் நிகழ்ந்து முடிந்தால் அவர் இறப்பார், அவ்வாறு ஒருகோடி திருமால்கள் இறக்குங் காலமானது உமாதேவியார் மலர் அணிந்த கூந்தலை அவிழ்த்து முடிக்குங் காலத்திற்குச் சமனாயிருக்கும் (எ-று),

## இதுவும் அது

ஆரணநா லரிபிரமர் [2]நுவன்றாரென் றுரைப்பீர்
ஆரணமுன் னூல்பலவு மக்கரத்தா லுளவாம்
சீரணியு மக்கரநால் வாக்கதனா லுளவாம்
சிவமுதலை வரும்நான்கு வாக்கதனைச் செலுத்தும்
ஏரணியும் மூவகையா முயிர்தமக்கு ஞானம்
இசைந்திடுமிங் [2]கிவற்றாலே ஈரிருவாக் கிலையேல்
நாரணனம் புயன்றனக்கு மறிவுதியா மறைநூல்
நவிலுவதெப் படி? ஈசன் [1]நவிற்றியதென் றுணரே, 33

(இ-ள்) வேதமாகிய நூலினைத் திருமாலும் பிரம வேதனும் மொழிந்தன ரென்று கூறுபவரே! இவ் வுண் மையை நன்கு கேட்பீராக; வேதம் முதலான அறிவு நூல் களெல்லாம் அகரம் முதலான எழுத்துக்களால் தோன்று வன வாகும்; சீர்த்தி பொருந்திய அவ்வெழுத்துக்களெல் லாம் சூக்குமை. பைசந்தி, மத்திமை, வைகரி, என்னும் நான்கு வாக்கால் தோன்றுவன வாகும்; அந் நான்கு வாக்குகளைச் சிவம், சத்தி, சாதாக்கியம், மாகேசுரம், சுத்தவித்தை என்ற ஐவரும் இயக்குவர்; அழகு பொருந்தும் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை உயிர்கட்கெல்லாம் அறிவு தோன்றப்பெறுவது இந்த

சு—பே : 1. நவின்றார் 2. கிதனாலே

நான்கு வாக்கு களினா லாம்; இந் நான்கு வாக்கும் இல்லையேல், திருமால், பிரமதேவன் முதலானவர்க்கும் அறிவு தோன்றப் பெறாது; இக் காரணத்தால், அவர் தாமாக வேதமாகிய நூலினைக் கூறுவது எவ்வாறு கூடும்? ஆகையால், நான்கு வாக்குகளையும் இயக்குகிற பரமேசுரனே வேதங்களைக் கூறினான் என்றலே பொருந்துவதாம். (எ-று)

## இதுவும் அது

*விழிகளிலா தவர்கள் சிலர் வேழங் காணும்*
*விருப்பினுடன் செவிதுதிக்கை எயிறு பாதம்*
*[1]வழிவறுவால் உடலதனைக் கரத்தால் [2]நோக்கி*
*வாரணமிவ் வாறெனவே மதித்துத் தம்மில்*
*இழிவினுடன் தனித்தனிமுன் கண்ட வாறே*
*[3]யானையென இயம்பி [4]மலைந் திடுதல் போலும்*
*ழிநிறுபுங் கபடநெறிச் சமயத் தோர்கள்*
*பரனியல்பை வெவ்வேறு பகுக்கு மாறே.* 34

(இ-ள்) அறிவுடையோரால் பழிக்கப்படும் குற்றமான பொருள்களைத் தங்கள் கற்பனையாற் கூறி, அதனையே நிலைநிறுத்தற்கு வாதிட்டு முயலும் வஞ்சக நெறிக்கண் செல்லும் சமயவாதிகளெல்லாம் திருவருண் ஞானத்தாலே உணரப்படும் மேலான பரன் இயல்பினைத் தங்கள் சிற்றறிவால் வெவ்வேறாகப் பகுத்துக் கூறுவது எவ்வாறெனின்? பிறவிக் குருடராகிய சிலர், யானையை அறிந்துகொள்ள வேண்டும். என்ற விருப்பத்தினுடன் யானையிடம் சென்று அதனுடைய காது, தும்பிக்கை, தந்தம், கால்கள், பின்னேயுள்ள வால், உடம்பு என்னுமிவற்றைக் கையால் தடவிப் பார்த்துத் தாங்கள் கண்ட ஒவ்வொரு உறுப்பே யானை என்று கருதித் தம்முட் கூடி, இழிவுடன் தனித்தனித் தாம் கண்ட உறுப்புக்களே யானையென்று கூறி, வாதிப்பது போன்றதாம். (எ-று).

---

சு - வே : 1. வழுவறு 2. பற்றி 3. யானையினேர்
4. யணைந்திடுதல்

கூடட் நெறிச் சமயிகள், இறைவனுடைய திருவருளறிவு கைவரப் பெற்று அதனால் அறிய முற்படாமல், மலமறைப்புடன் கூடிய தங்கள் சிற்றறிவால் இறைவனைப்பற்றி ஏதோ அறிந்து கூறுகின்றாராதலின், கண்ணால் கண்டுணர வேண்டிய யானையைக் கையாற்றடவி உணர்ந்து வாதிட்ட பிறவிக் குருடரின் கதை அவர்க்கு உவமையாயிற்று.

## புறச்சமய நிலையோர் பேறும்;
## அகச் சமய நிலையோர் பேறும்.

தன்னறிவாம் புறச்சமய நிலையோர் பேறு
தலையினால் நடந்துகதி அடைதல் போலும்
உன்னரிதாம் அகச்சமய நெறியில் [1]நின்றே
[2]ஓண்சரியை கிரியைமிகு யோக ஞானம்
என்னுமிவை ஒருநான்கும் இயற்றி னோர்கள்
இவ்வடைவே கால்வேகம் பறவை வேகம்
பன்னருமா ருதவேகம் மனவே கம்போல்
பற்றிடுவர் சிவானந்த முத்தி தானே. 35

(இ - ள்) இறைவனுடைய திருவருள் அறிவினைத் துணையாகக்கொண்டு அறியாமல் சிற்றறிவாகிய தன் அறிவினையே கருவியாகக் கொண்டு மெய்ப்பொருளறியும் புறச்சமயத்தி லுள்ளோர் பெறுகின்ற பேறு, ஒருவன் தான் அடையவேண்டிய புகலிடத்தைத் தலையினால் நடந்து அடையமுயன்றாற் போன்றதாம்.

அவ்வாறன்றிக் கருதுதற்கரிய சைவம் முதலான அகச் சமய நெறியிலே நின்று சிறந்த சரியை, கிரியை, மிக்க யோகம், ஞானம் என்னும் இவை நான்கினையும் இயற்றின வர்கள் அடைவே காலால் நடக்கும் வேகமும், பறவைகள் சிறகாற் பறக்கும் வேகமும், காற்று விரைந்து செல்லும் வேகமும் போல் சென்று சிவானந்த முத்தியினைச் சேர்வர் (எ - று).

---

சு - வே ; 1. நின்றோர் 2. ஓண் சரிதை

## தருக்கநூல் கூறும் வாதம் முதலிய நான்கு

வாதஞ்செற் பம்விதண்டை ஏதுவென நான்காம்
வாதமொரு வன்மதத்தாற் றருக்குமுரைப் பதுவாம்
ஓதுமவன் தருக்கமதற் கெதிர்விடயம் பொருந்த
உரைப்பதுவே செற்பமென உலகறிய மொழியும்
நீதியினால் அவனுரைகொண் டவனுரையை மறுத்தல்
நிலையான பொருளுண்மை நிகழ்த்திடுதல்
விதண்டை
ஏதுபல நூலினுதா ரணமெடுத்துக் காட்டி
எதிரிமதம் மறுத்திடுத லெனுந்தருக்க நூலே. 36

(இ - ள்) தருக்க நூலுள் வருவனவற்றுள் வாதமும் செற்பமும், விதண்டையும், ஏதுவும், என்பது நான்கு வகையான தருக்கங்களாம். அவற்றுள் வாத மென்பது முற்பட்டஓர் கொள்கை காரணமாகத் தருக்கச் சொல் நிகழ்துவதாம், செற்ப மென்பது முற்படக் கூறுமவன் தருக்கத்திற்கு எதிரான செய்தியைப் பொருந்தக் கூறுவதாம். விதண்டை என்பது (சுபக்க மாகிய தன் கொள்கையைக் கூறாமல்) ஒருவன் உரைத்த சொல்லினைக் கொண்டே அவன்சொல்லினை மறுத்து உண்மைப் பொருளை நிகழச் செய்வதாம். ஏது வென்பது பிரமாணமாய்க் கொள்ளத் தக்க பல நூல்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக் காட்டி எதிரியின் கொள்கையை மறுப்பதாம் (எ - று).

## மூவகை உயிர்களின் தனு கரண புவன போகங்களும், முதல்வனுடைய உலகமும் இவை என்றல்.

தன்னிகரில் அரியயன்முன் சகலத் தோர்க்குத்
தனுகரண [1]புசிப்புலச மசுத்த மாயை
உன்னி [2]லுருத் திரராதி மும்மை யோர்க்கும்
ஒருமலமோ டிருமலமா முயிர்கட் கெல்லாம்

---

சு - வே : 1. பொசிப்புலகம் 2. உருத்திராதியாம்

மன்னுமுல குடல்கரணம் போக மெல்லாம்
[1]மாயேயம் இவையுயிர்க்கு [2]வகுத்த லோகம்
பன்னியமூ வகையுயிரும் பெற்று நோக்கும்
பராபரையே சிவலோகம் பரனுக் காமே. 37

(இ - ள்) தனக்கு ஒப்பில்லாத திருமால், நான்முகன் முதலான எல்லோர்க்கும் உடம்பு, கருவி, நுகர்பொருள், உலகம் என்னும் காரியங்களெல்லாம் அசுத்த மாயையாகிய முதற் காரணத்தினின்றும் தோன்றுவனவாம், கருதில் உருத்திரர், அணுசதாசிவர், புவனேசர் என்னும் மும்மையோர்க்கும் ஒருமலமுடைய விஞ்ஞான கலர், இருமலமுடைய பிரளயாகலர் என்னும் உயிர்கட்கும் நிலைபெற்ற உலகம், உடலம், கருவி, நுகர்பொருள் என்னும் காரியப் பொருள் களெல்லாம் மாயேயம் என்று பெயருடைய சுத்தமாயையாகிய முதற்காரணத்தினின்றுந் தோன்றுவன வாகும், மேற்கூறிய அசுத்த மாயா உதகமும், சுத்தமாயா உலகமும் மூவகை உயிர்கட்கு வகுத்த உலகமாகும்

சொல்லப்பட்ட மூவகை உயிர்களையும் தனக்குரிய உடைமையாகப் பெற்று நோக்குகின்ற பராபரை என்னும் பராசத்தியே சிவலோகமென்று கூறப்பட்டுப் பரமேசுரனுக்கு இருப்பிடமாம் (எ - று).

உருத்திர ராதி மும்மையோர்க்கும் சுத்தமாய இடமாமென்பதை

"புகழ்ச்சுத்த அணுசதா சிவர்களுருத் திரர்கள்
புவனேசர் முதலாய போதபதர்க் கெல்லாம்,
அகழ்சுத்த வீடுதனு ஆதியாகி"

என்னும் தத்துவப்பிரகாசப் (45) பாட்டால் அறிக.

சுத்தமாயை ஓங்காரம் முதலாக முப்பத்தொரு பேதமாய் விரிந்து நிற்கும். அதில் ஒரு பேதம் மாயேயம் என்பது. அம் பெயரால் சுத்தமாயையைக் கூறினார்.

---

சு - வே : 1. மாயையாம்; மாயையெனும் 2. வகுத்து

## மேற்பாட்டிற் கூறிய பரனியல்பு

அவ்வுயிர்போ லெவ்வுயிர்க்கு மறிவாகி நிறைந்தே
ஆனந்த சுசாதீதத் தப்புறத்தப் புறமாய்
இவ்வுருவ மிதுநிலய மிதுவெனுஞ்சுட் டிலதாய்
ஏகமாய் ஆதிநடு வீறகன்ற முதலாய்
எவ்வெவரெப் படிநினைந்தா ரவ்வவர்ககப் பொருளாய்
எண்ணுமன பாவகத்தால் நண்ணரிய வொளியாய்
ஒவ்வியசித் துடனசித்து மல்ல வாகி
உருவருவ முபயமகன் றுளதாகும் பதியே. 38

(இ – ள்) மேற்பாட்டிற் பரன் என்று கூறப்பட்ட பதிப் பொருள், அகர உயிர் தனிமுதலாய் நின்று எல்லா எழுத் துக்களையும் இயக்கிநின்றாற் போலத், தான் தனிமுதலாய் நின்று எல்லாவுயிர்களுடைய அறிவினையும் உணர்த்தும் அறிவாகி, எங்கும் நிறைந்து நின்று, ஆனந்த மயமாகிய இன்பநிலையைக் கடந்து அப்பாலுக்கு அப்பாலாய், இன்ன வடிவத்தையுடையது, இன்ன காலத்திலிருப்பது, இன்ன இடத்திலிருப்பது, இன்ன தன்மையது என்று சுட்டி அறியப்படாததாய், ஒருவனே தேவன் என்று அறிஞராற் கூறப்படும் ஏகமாய், ஒருவரால் தோற்றுவிக்கப்படுதலும், காக்கப்படுதலும், அழிக்கப்படுதலுமில்லாத முதற்பொரு ளாய் எவ்வெவர் எவ்வாறு கருதி வழிபட்டார்களோ அவ்வ வர்க்கு அவர் கருதிய முதற்பொருளாய் கருதுகின்ற மனத்தின் பாவனையால் அடைதற் கரிய உள்ளொளியாய், அசித்துடன் ஒன்றியிருக்கும் சித்தாகிய உயிரும், அசித்துப் பொருளாகிய பாசமும் அல்லவாய், பொருந்திய உருவம். அருவம் அருவுருவம் என்னும் மூன்று வகைப் பொருட்கும் அப்பாற்பட்டதாய் உள்ளது (எ - று).

## மேற்பாட்டில் 'எவ்வுயிர்க்கும்' என்று கூறிய உயிரியல்பு இன்ன வென்றல்

செப்பருமா ருயிர்வர்க்கம் அளப்பரிதா மென்றும்
செறிதருமா ணவவிருளால் அனாதிமறைப் புளதாய்த்
தப்பரிய இருவினையின் துய்ப்பதனுக் கிசைந்த
தனுவாதி விதர்மாயை தரவதனைப் பொருந்தி
அப்பரிசே உயர்திணை யோ டஃறிணையாய் விரிந்தே
அருநிரயஞ் சுவர்க்கநில மிசையிதமோ டகிதம்
எய்ப்புறநின் [1] றருந்தியல மருநிறைவ னருளால்
இருவினையொத் திடிவரிய பரபதமுற் றிடுமே 39

(இ-ள்) சொல்லுதற்கு அரியவாய் நிலைபெற்றுள்ள உயிரினங்கள் அளவிறந்தனவாய், எப்பொழுதும் பொருந்தியுள்ள ஆணவமலம் என்னும் இருளால் அனாதியே மறைக்கப்பட்ட மறைப்புள்ளனவாய், பிழைத்தலில்லாத நல்வினை தீவினைகளின் நுகர்ச்சிக்கு இசைந்த உடல், கருவி, உலகம் நுகர்பொருள் என்னும் நான்கினை, மாயை என்னும் முதற் காரணப் பொருள் தர, அவற்றைக் கூடி, அவ்வகையால் அவன், அவள் என்னும் உயர்திணைப் பொருளாயும், அது என்னும் அஃறிணைப் பொருளாயும் விரிந்து, விழுந்தோர் ஏறுதற் கரிய நாகம், சுவர்க்கம் நிலம் என்னும் இவ்வுலகங்களின்கண் இன்ப துன்பங்களை அறியாமை பொருந்த நின்று நுகர்ந்து, பிற பிறப்பிலே சுழன்று திரியும். அவ்வியல்புடைய அவ்வுயிர்கள் முதல்வன் திருவருளாலே தமக்கு இருவினை ஒப்பு உண்டான பொழுது அடைதற்கரிய சாயுச்சியம் என்னும் மேலான பதத்தை அடையும் (எ-று)

---

சு-வே : 1. றருந்தி யலம் வரும்

## மேற்பாட்டிற் கூறிய ஆணவம் முதலான ஐவகை மலங்கள்

ஆணவம்நற் றிரோதாயி மாயேயம் மாயை
அரியயிரு [1]வினைகன்மம் ஆம்மலமைந் தவற்றின்
ஆணவமஞ் ஞானவிருள் ; குடிலைசிவம் முதலாம்
ஐவருக்குந் [2]தனுவாகி ஐந்தொழிலு மியற்றும்
பூணுலவு கலாதியுடன் தனுமுதல்நால் வகையும்
புகல்சகலர்க் களித்துநடத் திடுமசுத்த மாயை
மாணவிரு வினைப்பயனாந் துக்கசுக கன்மம்
மலபாக முயிர்க்குதவுந் திரோதையருள் வடிவே. 40

(இ-ள்) மேற்பாட்டிற் கூறிய உயிர்களைத் தளைந்த மலங்களைக் கூறின், அவை, ஆணவம் நல்ல திரோதாயி மாயேயம் மாயை அரிய நல்வினை தீவினை வடிவாயுள்ள கன்மம் என ஐந்தாகும். அவ் வைந்துள் ஆணவம் உயிர்கட்கு அறிவின்மையைச் செய்யும் இருளாகும். மாயேயம் என்பது சுத்தமாயை என்னும் குடிலையாம். அது சிவம், சத்தி, சாதாக்கியம், மகேச்சுரம், சுத்தவித்தை என்னும் ஐவர்க்கும் உடலாகி, ஐந்து தொழில்களையும் செய்யும், மாயை என்ற அசுத்தமாயை கலைமுதலான தத்துவங்களொடு உடல் முதலான நான்கு பொருளையும் சகலர் என்னும் உயிர்க்கூட்டங்கட்குத் தந்து, அவர்களைப் பிறவியின்கண் நடத்திடும். கன்மமலம் உயிர்கட்கு இருவினைப் பயனாகிய இன்ப துன்பங்களை அளிக்கும், திரோதாயி உயிரின் அறிவை மறைத்த ஆணவமலத்தைப் பக்குவப்படுத்தி உயிர்கட்கு உதவுவதாகும். இத் திரோதாயி முதல்வனுடைய அருட்சத்தி வடிவே ஆகும் (எ-று).

---

க-வே : 1. வினை கருமம் 2. உடலாகி

## உயிர்களின் மலமும் பதியின் மலமும்

ஆணவமுன் மாயைமுடி வாம்மலமைந் தவற்றின்
ஆணவமுங் கன்மமுமா ருயிர்க்கலா மலமாம்
பூணுயிரு மாயையிருந் திரோதையிவை மூன்றும்
புனிதன்மல மாம்மலங்கள் புனிதனுக்கே னென்னில்?
மாணவிருள் மலங்கருமம் ஒழித்துயிர்கட் கின்பம்
மகிழ்ந்துதவுங் கருணையினால் வைத்ததுவா மூலகில்
பேணுமரு மருந்துபல வகைகொடரும் பிணிநோய்
பெருகுமருத் துவனகற்றுந் திறமதுபோற் குறியே 41

(இ-ள்) மேற் கூறிய மலங்கள் ஆணவம், கன்மம், சுத்தமாயை அசுத்தமாயை, திரோதை என்று இம் முறையாகவுங் கூறப்படும்.

இவற்றுள், ஆணவமுங் கன்மமு மாகிய இரண்டும் உயிர்கட்கு நீங்காத மலமாகும். பொருந்தும் சுத்த மாயையும் அசுத்தமாயையும் பெரிய திரோதான சத்தியு மாகிய மூன்றும் மலமில்லாதவனாகிய பதிக்கு உடைமை யாகிய மலங்களாம்,

நிர்மலன், விமலன் என்னும் அத் தூயோனுக்கு மேலே கூறிய மலங்கள் எற்றுக்கெனில்? மாட்சிமையுண்டாக வேண்டி. ஆணவ மலத்தினையும் கன்ம மலத்தினையுந் நீக்கி உயிர்கட்குப் பேரின்பமாகிய வீட்டினை மகிழ்ந்து உதவக் கருதிய தன் அருளாலே அவற்றிற்கு உடம்பு முதலானவற்றைத் தருதற்கும், ஆணவ மலத்தைப் பக்குவப்படுத்தற்கும் அம் மூன்றும் அப் பதிக்கு உடைமைப் பொருள்களாக வைத்தோதப்பட்டனவாகும்,

எதுபோலவெனின்? உலகத்தின்கண் தீர்த்தற்கரிதாய்ப் பற்றிய நோயினைத் தீர்க்கத் தொடங்கிய பெரிய மருத்துவன், போற்றப்படும். அருமருந்துகளைத் தன் உடைமையாகப் பெற்று, அந்த நோய்களைத் தீர்ப்பது போலவென்று கருதிக் கொள் (எ-று).

## ஒருவர்க்கு ஆணவம் மறைந்து நின்ற நிலையும், அது அகன்ற நிலையும்.

பொய்யான உடலுமிரு [1]வினைகள் தாமும்
பொருவரிய உயிருமுயிர்க குயிராய் நின்ற
மெய்யான [2]ஒருவனும்முன் தோன்றா தாலே
விரிதருமா ணவம்மறைத்து நின்ற தென்றும்
பொய்யான உடலுமிரு வினைகள் தாமும்
பொருவரிய உயிருமுயிர்க குயிராய் நின்ற
மெய்யான ஒருவனும்முன் தோன்ற லாலே
விரிதருமா ணவமகன்ற தென்றுங் காணே. 42

(இ-ள்) பொய்த்தன்மையுடைய உடம்பின் இயல்பும், அவ்வுடம்பிற்குக் காரணமான இருவினைகளின் இயல்பும், உடம்பிற்கு வேறாய் உள்ளதென்று கூறப்படும் ஒப்பற்ற உயிரின் இயல்பும், அவ்வுயிர்க்கு உயிராய் நின்று இயக்கும் உண்மைப் பொருளாகிய ஒருவன் என்கிற முதல்வன் இயல்பும் முன்னே அறிவினுள் தோன்றாததால் உயிரினது அறிவினை அப்பொழுது ஆணவமலம் மறைத்து நின்றதென்றும் மேலே கூறியவையெல்லாம் இறைவன் அருளாசிரியனாய் வந்து பக்குவமுடையவர்க்கு உணர்த்திய காலத்திலே உணர்த்தப்பட்டார் அறிவின்முன் நன்கு தோன்றுதலால், அப்பொழுது பரந்த ஆணவம் அகன்று நின்றதென்றும் நீ காண்பாயாக (எ-று).

---

க-வே ; 1. வினைகடாமும் 2. ஒருவனையும்

## ஆணவமலத்தின் கூறாயவை

நிச்சயமஞ் ஞானமன விகற்பந் தீமை
நிலையில்லாப் பொருள்விரும்பல் பொய்ம்மை கூறல்
இச்சையுடன் இகழ்வான போகந் துய்த்தல்
என்னைநிக ரில்லையென அகந்தை கூறல்
நச்சியறிந் ததைமீள மறைத்தல் துஞ்சல்
நண்ணுமுயி ரினைப்பிரியா திருத்த லென்றும்
அச்சமிகு மதிகாம வேட்கை யெல்லாம்
ஆணவத்தின் கூறெனவே அறிந்தி டாயே. 43

(இ-ள்) தேற்றமாய் அறியாமையுடன் கூடிய மனத்தின் விகாரமும், தீயனவாகிய நிலையற்ற பொருளை விரும்புதலும், பொய்ச்சொல் கூறுதலும்; இகழத்தக்க பொருள்களை விருப்பத்துடன் நுகர்தலும் என்னைப் போன்றவர் இவ்வுலகில் இல்லையென்று அகந்தை கூறலும், விரும்பி அறிந்தவற்றை மீளவும் மறந்துவிடுதலும் மடிந்திருத்தலும், பொருந்திய உயிரினங்களைக் கூடிப் பிரியாதிருத்தலும், எப்பொழுதும் அச்ச உணர்வு மிகுவதற்குக் காரணமான மிக்க காம விருப்பமும் (யோகப்) ஆகிய இவையெல்லாம் ஆணவமலத்தின் பகுதியாகும் என்பதை அறிந்திடுவாயாக (எ-று).

ஆணவ மலத்தின் குணக்குறியை

"வேறு கிளக்கின் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலையஞர் மதம்நகை
விராயெண் குணனும் ஆணவம்" (4)

என்னும் இருபா இருபதாலும்,

"எறித்திடும் பொருண்மே லிச்சை எனக்கெதி ரியாவ
ரென்கை,
வெறித்திடுங் கோபத் தோடு விகற்பநிச் சயமற் றாசை,
செறித்திடும் பொறியுட் போகஞ் சிறந்தபே ருவகை யோடு,
குறித்திடுங் குணங்க ளெல்லாங் குறுகலா ணவம தன்றே"

என்னும் பெருந்திரட்டாலும் அறிக,

சிவஞான தீப ஆசிரியர்

"விளைக்குமுயிர்க் கின்பநவ விதமும் நீங்கி" (130)

என்று ஆணவ காரியத்தை ஒன்பதாகக் கூறுவர்.

## மாயா மலத்தின் கூறும் கன்ம மலத்தின்கூறும்

குருமொழியை வழுவல்குரு நிந்தை கூறல்
குருவையெதிர் கண்டளவில் வணங்க நாணல்
மருவியசெய்ந் நன்றிபிழைத் தறம்பே ணாமை
வஞ்சமின்னா வுரைத்திடன்மா யையின்கூ றாகும்
செருமுயற்சி மனவாக்குக் காயத் செய்தல்
செருக்கிகழ்ச்சி குலாசாரத் தியற்கை மோகம்
கருவினுழை வித்திடுத லின்ப துன்பம்
காமியத்தின் கூறெனவே கருதி டாயே. 44

(இ - ள்) தனக்கு அறிவு நூல்களை உணர்த்திய ஆசானுடைய சொற்களைத் தப்பி யொழுகலும், அவனைப் பழித்துக் கூறலும், அவனை எதிர்கண்டபொழுது வணங்க நாணமடைதலும் ஒருவர் செய்த நன்றியை மறந்தொழுகலும், அறச் செயல்களைப் பாதுகாத்து ஒழுகாமையும், வஞ்சித்தலும், கொடுமொழி கூறலும் ஆகிய இவையெல்லாம் மாயை என்னும் மலத்தின் கூறாம்.

மனத்தாலும் மொழியாலும் மெய்யாலும் போர் செய்யும் முயற்சியும், செருக்குடன் பிறரை இகழ்தலும் (பரநிந்தை மேவல்) குலத்திற்கேற்ற ஒழுகலாறுகளும், மோகத்தைப் புலப்படுத்துஞ் செயலும், பிறவியின்கண் நுழையச் செய்திடுதலும் ஆகிய இவையெல்லாம் கன்ம மலத்தின் பகுதியாகும் (எ - று).

மாயா மலத்தின் குணங்களை,

அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசால சூனியம் மாச்சரி யம்பயம்
ஆயவேழ் குணனும் மாயைக் கருளினை (4)

என்னும் இருபாவிருபதாலும்,

"வெய்யசொல் வெறுப்புச் செய்தல் வியன்குரு மொழிபி
ழைத்தல்'
செய்யசெய்ந் நன்றி கோறல் தீக்குண முடைய னாதல்
பொய்யுரை கொலைதானேர்கை புகன்றுமுன் மாறு கூறல்
மையுறு குணங்க ளெல்லாம் மாயையா மலம தன்றே"

என்னும் பெருந்திரட்டாலும் அறிக.

கன்ம மலத்தின் குணங்களை

"இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனும் கழிமத் தருளினை" (4)

என்னும் இருபா விருபதாலும்

"மயக்கமோ டறிவொன் றின்மை மைதுனங் களவு
காண்டல்,
பயத்துட னுயுத்தம் பண்ணல் பாவமாந் தொழிலே செய்தல்
செயப்படு தன்கு லத்திற் செய்வன செய்யா னாதல்,
வியப்புடையக் காமியத்தின் வியன்குண மிவையா மன்றே"

என்ற பெருந்திரட்டாலும் அறிக.

## மாயையின் இருவகைச் செயல்

ஊற்றமிகுந் தனுகரண புவன போகம்
உதித்தாவி வினைநுகர ஒளியா யோங்கி
மேற்றிகழா ணவவிருளை ஒதுக்கித் தானே
மேலாகி விரிந்திடும்மா யையினேர் தான்முன்
சாற்றுமருந் தனுகரண விதங்கள் நான்கும்
தகுமுறையே ஒடுக்கியுயிர் தனையும் மூலம்
ஏற்றயிரு ளுடனொடுக்கு [1]மிதனா லேன்ற
[2]எழுத்திரண்டா யினமாயை யென்னும் பேரே. 45

(இ - ள்) பற்றுக்கோடாய் மிகுப் உடம்பும் கருவியும்.
உலகமும், நுகர்பொருளு மென்னும் நான்காகத் தோன்றி,

---

க - வே: 1. இதனா லேனை 2. எழுத்திரண்டா மின்மாயை

உயிர்கள் வினை நுகர்வதற்கு உரியனவாய், அறிவினைத் தரும் பொருளாய் ஓங்கி, அநாதியாய் உயிரினை மறைத்துத் தோன்றும் ஆணவமாகிய இருட்டினைச் சிறிது ஒதுக்கி, மாயையானது மேலாகி விரிந்திடும். அம் மாயைதானே ஒடுங்குங் காலத்தே, முன் செய்த அச் செயலுக்கு எதிராக, முன்னே விரிந்து நின்ற உடம்பு முதலாகிய நான்கினையும் தகுமுறையே ஒடுக்கி, உயிர்களையும் மூலமலத்துடன் தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளும். இக் காரணத்தால் ஒடுங்குதலை உணர்த்தும் 'மா' என்னும் எழுத்தும் தோன்றுலை உணர்த்தும் 'யா' என்னும் எழுத்தும் கூடி, மாயா (மாயா) என்னும் ஈரெழுத் தொரு மொழியாகி நின்றன.

இப் பாட்டின் கருத்தினை, 'மா என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல் ஆகலின், எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும் தன்னின்றுந் தோன்றுதற்கும் காரணமாய் நின்றது மாயை எனப்படும்'' என்னும் சிவஞான பாடிய வுரையை நோக்கி அறிக. (சி - போ - - 2)

## சுத்தமாயையின் பேதம் முப்பத்தொன்

பகர்சுத்த மாயையோங் காரமுத லாய்முப்
பத்தொருபே தாதிவிதப் பல்பேரா மவற்றின்
வகைமிக்க பரப்பிரமம் வயிந்தவம்மா யேயம்
மாமாயை [1]குண்டலினி மாயைபடங் குடிலை
தகையுற்ற பிரணவம்பே ரொளிநாதம் விந்து
தக்கசிவம் பிணுவாதி நான்குடன்நான் காகும்
நிகரற்ற வாக்காதி நிவிர்த்தாதி ஐந்து
நிகழ்சுத்த வித்தாதி ஐந்தெனநின் றிடுமே 46

(இ - ள்) சொல்லப்படும் சுத்தமாயை ஓங்காரம் முதலாக முப்பத்தொரு பேதங்களை உடைத்தாகையால் அது, அவ் வோங்காரம் முதலியவற்றிற் கமைந்த பரியாயப்

சு - வே : 1. குண்டலினி நீண்மாயை

பெயர்களுடன் பல பெயர்களை உடையதாம். அம் முப்பத் தொன்றாவன :— பரப்பிரமம், வயிந்தவம், மாயேயம், மாமாயை. குண்டலினி, மாயை, படம், குடிலை, தகுதி பொருந்திய பிரணவம், பேரொளி, நாதம், விந்து, தக்க சிவம், சுத்ததத்துவத் தனுவாதி நான்கு, சூக்குமை முதலான வாக்கு நான்கு, நிவிர்த்தி முதலான கலைகள் ஐந்து, சுத்த வித்தை முதலான ஐந்து என்பனவாம் (எ - று).

இப் பாட்டின் கருத்தினை

"திகழ்சுத்த மாயைநின் மலமான வடிவாய்ச்
சேரமு வகையான்மா அளவும்உள வாகி
நிகழ்சுத்த ஓங்கார முதன்முப்பத் தொன்று
நேராக விரிந்து"

என்று தத்துவப்பிரகாசம் என்னும் நூலில். கூறும்.

அத்துவித வெண்பா என்னும் நூலில், 'சரியாதி' என்னும் (32) பாட்டில், சரியை கிரியை யோகங்களில் நின்றோர்க்குச் சாலோகாதி பதங்களை உண்டாக்கும் வயிந்தவ மென்றும், மாயையென்றும், சிவமென்றும், விந்துவென்றும் இவைமுதன் முப்பந்தொரு பெயரினைச் சுத்தமாயை பெற்றிருக்கும் என்று கூறி, இச் சிவஞான தீபப் பாட்டினை மேற்கோளாகக் காட்டினர் அதன் உரையாசிரியராகிய நன்னூற் சிவப்பிரகாச சுவாமிகள்.

## பிராசாத யோகத்திற்குரிய கலைகள் பதினாறு

தன்மைதரு கலைநிவிர்த்தி பிரதிட்டை வித்தை
சாந்தியுடன் சாந்தியா தீதம் மீதே
நன்மைதரு [1]நிரோசாத நாதந் தானும்
நாதாந்தம் சத்திவியா பினிமே லாகும்
மின்மருவுஞ் [2]சமனையுமுன் மனையு மேலாம்
வியோமரூ பினியளந்தை யனாதை யீறாய்த்
தொன்மைமிகு [3]மனாசிருதை யீரெட் டாகத்
துலங்கு [4]பிரா சாதகலை விளம்பு மாறே.

சு-வே ; 1. நிரோதாய 2. சானையுன் மனையு 3. மனாசிரிதை
4 பிரசாத கலை

(இ-ள்) பிராசாத கலையாவன:—தன்மைதரு நிவிர்த்தி கலையும், பிரதிட்டா கலையும், வித்தியா கலையும், சாந்தி கலையும் சாந்தியாதீத கலையும், இவற்றின் மேல் நிரோசாத கலையும், நாத கலையும், நாதாந்த கலையும். சத்தி கலையும் வியாபினி கலையும், அவற்றின் மேலுள்ள ஒளி பொருந்திய சமனா கலையும் உன்மனா கலையும் மேலாகிய வியோம ரூபினி கலையும் அனந்தா கலையும், அனாத கலையும், அனாசிருதைக் கலையும் என்று முறையாக விளம்புவர். (எ-று)

நிவிர்த்திக்கு மேதா கலையும், பிரதிட்டைக்கு அர்க்கீச கலையும், வித்தைக்கு விட கலையும், சாந்திக்கு விந்து கலையும், சாந்தியாதீதத்திற்கு அர்த்த சந்திர கலையும் கூறப்படும்.

உடம்பினுள் முழங்கால் வரை நிவிர்த்தி கலைக்குரிய பிருதிவி மண்டலமாம். இதன் மேல், இடைவரை பிரதிட்டா கலைக்குரிய அப்பு மண்டலமாகும் இதன் மேல், மார்பு வரை வித்தியா கலைக் குரிய தேயு மண்டலமாகும்; இதன் மேல் புருவம் வரை சாந்திகலைக் குரிய வாயு மண்டலமாகும்; இதன்மேல், உச்சி வரை சாந்தியாதீத கலைக்குரிய ஆகாய மண்டலமாகும். பிருதிவிமண்டலம் முதலான ஐந்திலும் மேதாகலை முதல் அர்த்த சந்திர கலைவரையுள்ள ஐந்து கலைகளை அடைவே வைத்தும் உச்சிக்கு மேல் அடைவே நிரோசாத கலைமுதல் அனாசிருதை கலையீறான பதினொன்றனையும் வைத்தும தியானித்து. அப்பதினாறுகலைகட்கு மேல் பரமேசுரனை வைத்துத் தியானிப்பது பிராசாதயோக முறையாகும். இதன் இயல்பினை,

"மேதை, மேலருக் கீசன், மேல் விடகலை, விந்து,
நீதி யாகிய அருத்தசந் திரிகை, மேல் நிரோதி.
நாதம், நாதமேல், சத்திக ணான்மேல் நால்வர்
பாத மேற், பரங் கண்டுவாழ்ந் திருப்பவர் பலரால்.

என்னும் செவ்வந்திப் புராணத்தாலும்,

ஆதார சோதனை யானடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கா ணம்புந்தி
சாதா ரணங்கெட்டல் தான்சக மார்க்கமே.

என்னும் திருமந்திரத்தாலும் (1707) அறியலாம் மேதபகலை முதலான பதினாறு கலைகளும் சத்தியின் கூறு என்பதை "மேதாதி ஈரெட்டு, மாகிய மெல்லியல்" (1070) என்னும் திருமந்திரப் பாட்டால் அறிக இதனை மூலாதாரந் தொடங்கித் தியானிப்பதும் உண்டு.

## முப்பத்தாறு தத்துவங்கள்

திருமருவு பிருதிவுநீ டப்புத் தேயு
திகழ்வாயு வாகாயம் பூத மைந்தாம்
மருவுபொறி சோத்திர நற் றுவக்குச் சட்சு
வளந்திகழுஞ் சிங்குவையாக் கிராண மைந்தாம்
பொருவரிய சத்தமிகு பரிச ரூபம்
பொருந்திரசங் கந்தமெனப் புலன்க ளைந்தாம்.
கருமமலி யிந்திரியம் வாக்குப் பாதம்
கவின்பாணி பாயுருவொ டுபத்த மைந்தே. 48

(இ-ள்) தத்துவங்கள் முப்பத்தாறினைக் கூறத் தொடங்கின், செல்வம் பொருந்திய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பூதங்கள் ஐந்தாகும். செவி, உடம்பு, விழி, நா, மூக்கு என அறிகருவிகளாய்ப் பொருந்திய பொறிகள் ஐந்தாகும். இவ் வைம்பொறிகட்கு விடயமாகிய ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்பன புலன்கள் ஐந்தென்று கூறப்படும். வாய், கால்கள், கைகள் மலங்கழி உறுப்பு குறி எனத் தொழிற் கருவிகள் ஐந்தாகும் (எ-று).

## இதுவும் அது

பொற்பமரொப் பருமந்தக் கரணஞ் சித்தம்
புத்தியுட னகங்கார மன நான் காகும்
[1]விற்பரவுங் கலைகால நியதி தானும்
- வித்தையரா கம்புருடன் மாயை யேழாம்

சு-வே : 1. விற்பாயும்

தற்பரமா கியசுத்த வித்தை யீசம்
சாதாக்கி யஞ்சத்தி சிவமைந் தாகும்
முற்பொலியும் [2]மூவகையாய் விரிந்த வெல்லாம்
மொழிந்திடுவர் தத்துவங்கள் முப்பத்தாறே. 49

(இ-ள்) சித்தமும் புத்தியும் அகங்காரமும் மனமும் என்று அழகு பொருந்துகிற ஒப்பற்ற அந்தக்கரணங்கள் நான்காகும். உயிர்க்கு அறிவொளியாய்ப் பரவுகின்ற கலையும், காலமும், நியதியும் வித்தையும், அராகமும், புருடனும் பிரகிருதிமாயையும் என்று வித்தியாதத்து வங்கள் ஏழாகும். அவற்றிற்கு மேலாகிய சுத்தவித்தையும் மகேசுரமும், சாதாக்கியமும், சத்தியம், சிவமும் என்று சிவ தத்துவம் ஐந்தாகும். நிலம் முதல் மனம் ஈறாகிய இருபத்து நான்கும் ஆன்மதத்துவ மென்னும் வகையாகவும் கலை முதலான ஏழும் வித்தியாதத்துவ மென்னும் வகையாகவும், சுத்தவித்தை முதலான ஐந்தும் சிவதத்துவமென்னும் வகை யாகவும் விரிந்தனவெல்லாம் முப்பத்தாறாகு மென்று அறிஞர் கூறுவர் (எ-று).

## இதுவும் அது

பிருதிவிமுன் சித்தமுடி வாயெண் மூன்றும்
பிறங்கியநூ லாத்துமதத் துவமென் றோதும்
விரிவுகலை முதன்மாயை முடிவா யேழும்
வித்தியா தத்துவமாய் விரித்துக் கூறும்
தெரிவரிய வித்தைமுதற் சிவமீ றாகத்
திருந்துசிவ தத்துவமைந் தாகக் கூறும்
வருமடைவே யசுத்தமுடன் சுத்தா சுத்தம்
வளரொளிசேர் சுத்தமென மதித்துக் காணே. 50

(இ-ள்) நிலம் முதல் சித்தம் ஈறாக உள்ள இருபத்து நான்கு தத்துவங்களை ஆன்ம தத்துவமென்றும் அசுத்த மென்றும், விரிந்த கலை முதல் பிரகிருதிமாயை ஈறாக

2. மூவகையால் விரித்த

உள்ள ஏழு தத்துவங்களை வித்தியாதத்துவ மென்றும் சுத்தாசுத்தமென்றும். தெரிதற்கரிய சுத்தவித்தை முதல் சிவம் ஈறாக உள்ளனவற்றைச் சிவதத்துவமென்றும் சுத்த மென்றும் கருதி உணர்வாயாக (எ-று).

சிவசத்திகள் சுத்தவித்தை முதலான ஐந்தினையும் தோய்த்து நின்று பிரேரிப்பதால் சிவதத்துவம் ஐந்தும் சித்துவடிவமான சுத்த மாம். இது விஞ்ஞான கலர்க்கு உடல் முதற் கருவிகளாயிருக்கும்.

சிவதத்துவம் ஐந்தையும் உடலாகக் கொண்ட சத்திகளாலே அசுத்தமாயையிற்றோன்றிய வித்தியா தத்துவ மேழும் இயக்கப்படு வதால் இதனைச் சுத்தா சுத்தம் என்று கூறுவர்.

அசுத்தமாயையிற் றோன்றிய தத்துவ தெய்வங்களால் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் இயக்கப்படுவதால் இதனை அசுத்தம் என்று கூறுவர்.

## தொண்ணூற்றாறு தத்துவங்கள்

*(வாக்கு 4 ; ஏடணை 3 ; குணம் 9)*

சூக்குமையை சந்தியுமத் திமைநா விற்குச்
சொல்லுதவும் வைகரியு மெனநான் காகும்
வாக்குகள்விந் துவிற்றோன் றுமென்பர் நல்லோர்
வானுதவு மேடணையு மூன்ற தாகும்
போக்கரிய வத்தவே டணைநட் பாகும்
புத்திரவே டணையுலகே டணைதா னென்றே
நீக்கரிய பெயரிவற்றுக் குலகம் போற்றும்
நீடுகுண மொன்பதும்மேல் நிகழ்த்தக் கேளே. 51

(இ-ள்) வாக்குகள் சூக்குமையும், பைசந்தியும், மத்தி மையும், நாவினுக்குச் சொல்லினை உதவும் வைகரியு மென நான்காகும். அவ்வாக்குகள் சுத்தமாயையின் கூறான விந்து தத்துவத்திலிருந்து தோன்றும் என்பர் அறிஞர். ஆகாயமாகிய பூதம் தருகின்ற ஏடணையும் மூன்றாகும், விடுதற்கரிய அர்த்த (பொருள்) ஏடணையும், புத்திர

வேடணையும், உலக ஏடணையும் என்பன அவற்றிற்குப் பெயராகும். இனி உலகம் பாதுகாத்து அறிகின்ற பெரிய குணங்கள் ஒன்பதனையும் மேலே கூறக் கேட்பாயாக (எ-று)

தத்துவப் பிரகாசம் என்னும் நூல் புறக்கருவி அறுபதனைக் கூறுங்கால் விந்துவில் நான்கு வாக்கும், ஆகாயத்தில் ஏடணை மூன்றும், மூலப் பிரகிருதியில் முக்குணங்களும் தோன்றும் என்று கூறும்.

"கோதில்விந்து விற்றோன்றும் வாக்கு நாலும்
குலவுமூ லந்தோன்றும் குணங்கள் மூன்றும்,
பேதவா காயத்தி லேடணைகள் மூன்றும்" (56)

## மேற்பாட்டிற் குறித்த ஒன்பது குணம்

[1]சாத்துவிக மிராசதந்தா மதமூன் றாகும்
தருமடைவே ஒன் றிலிரண் டாகி யாறாங்
சாத்துவிகத் திராசதஞ்சாத் துவிகந் தன்னில்
தாமதமு மாமினிய ராச தத்திற்
சாத்துவிக மிராசதத்திற் றாம தந்தான்
தாமதத்தி லிராசதநீள் தாம தத்திற்
சாத்துவிக மென் றிருமூன் றாக வெல்லாம்
தரும்நிரையே ஒன்பதெனச் சாற்றி னாரே 52

(இ-ள்) சாத்துவிகம் இராசதம் தாமதம் எனக் குணங்கள் மூன்றாகும். மேலே கூறிய முறைப்படி ஒரு குணத்தில் இரண்டு குணந் தோன்றி ஆறாகும். அவை சாத்துவிகத்து இராசதமும், சாத்துவிகத்துத் தாமதமும் இராசதத்தில் சாத்துவிகமும் இராசதத்தில் தாமதமும் தாமதத்தில் இராசதமும் தாமதத்தில் சாத்துவிகமும் என்று ஆறாக, அவற்றுடன் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்றையுங் கூட்டிக் குணங்கள் ஒன்பது எனச் சொன்னார்.

---

சு-வே : 1. நான்கடியிலும் "சாத்துவிதம்"

"சாத்துவிக குணம் இராசதத்தை அடக்கிய பொழுது பிரகாசமும், அது தாமதத்தை அடக்கிய பொழுது லகுதையும்; இராசதம் சாத்துவிகத்தை அடக்கிய பொழுது உட்டம்பமும், அது தாமதத்தை அடக்கிய பொழுது சலனமும்; தாமதம் சாத்துவிகத்தை அடக்கிய பொழுது குருவும், அது இராசதத்தை அடக்கிய பொழுது வர்ணகமும் உண்டாம்" என்று சிவநெறிப் பிரகாச உரையாசிரியர் (108) கூறுவர்.

மேற் கூறிய ஆறு குணங்களைச் சிவப்பிரகாசம்

"அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா பிருதி
அடர்ச்சிமிகுங் கவுரவம் அநியமம் இவை அடைவே
நிலவியிடும்" (42) என்று கூறும்.

## இராகம் எட்டும் உயிர்ச்செயல் எட்டும்

காமமுடன் குரோதம்மிகு லோபம் மோகம்
[1]கடியமதம் மாச்சரியும் [2]இடும்பாங் காரம்
தீமையுறு மிராகமிரு நான்க தாகும்.
திருந்துமுயிர்ச் செயலுமிரு நான்க தாகும்
ஏமமுறு மிச்சையறி வியற்றல் தானும்
எண்ணிய விருப்புவெறுப் பின்ப துன்பம்
தோமருவு மயக்கமெனப் பெயரா மென்றே
சொற்றிடுவர் நற்றவநூல் துணிந்து ளோரே 53

(இ-ள்) தீமை பொருந்திய இராகங்கள் காமமும் குரோதமும், உலோபமும், மோகமும், மதமும், மாச்சரியமும் இடும்பையும், அகங்காரமும் என எட்டாகும்.

திருந்தும் உயிரின் செயல்களும் எட்டாகும். அவற்றிற்குப் பெயர் விழைவும், அறிவும், செயலும், விருப்பும், வெறுப்பும். இன்பமும், துன்பமும், மயக்கமும் என ஆகுமென்றும் நல்ல தவத்திற்குரிய நூல்களைத் துணிந்தோர் கூறுவர் (எ-று).

---

சு-வே : 1. கருது மதம். 2. கனவாங்காரம்.

இவற்றுள் குரோதம் உலோபம் மோகம் மதம் மாச்சரியம் என்னும் ஐந்தும் ஆகாயத்தின் கூறு என்பதை இந்நூல் 56 ஆம் பாட்டால் அறிக.

பிங்கல நிகண்டு இவற்றுள் ஆறனை மட்டும் உட்பகை என்ற பெயராற் கூறும். "காமங் குரோதம் மோக முலோபம். மதமாச்சரிய முட்பகை யாறென்ப" என்று கூறும். இதன் முதல் நூலாகிய திவாகர நிகண்டும் "ஆறுட்பகை காமம் வெகுளி யுலோபம், மாறு கொண் மோகம், மதமாற் சரியம்" என்று கூறும்.

## தொழிற்கருவிகளின் செயல்களும், நாடிகளும்.

மன்னிய [1]வாக் காதிகளின் விடய மாகும்
வசன [2]கம னந்தானம் விசர்க்கா னந்தம்
இன்னிலையே வசனாதி ஐந்த தாகும்
இலங்குமிடை பிங்கலைநற் சுழுனை தானும்
உன்னிய [3]சிங் குவையுருட னுடன்காந் தாரி
ஓது [4]மத்தி யோடொளிசே ரலம்புடையே யன்றிக்
கொன்னமர்சங் கினிகுகுவ னெனப்பே ராகும்
கோலமிகும் நாடிகளி ரைந்த தாமே. 54

(இ-ள்) நிலை பெற்ற வாக்கு முதலான ஐந்து தொழிற் கருவிகட்கும் அடைவே பேசுதலும், நடத்தலும், கொடுத்தலும், விடுதலும், இன்பம் அடைதலுமெனத் தொழில்கள் ஐந்தாகும்,

அழகுமிகும் நாடிகள் பத்தாகும். அவற்றிற்கு இடைகலையும், பிங்கலையும், சுழுனையும், சிங்குவையும் புருடனும். குருவும் எனப் பெயராகும் (எ—று),

தத்துவப் பிரகாசம் என்னும் நூல் புறக்கருவி அறுபதுக்கும் தோற்றம் உணர்த்துமிடத்து

---

கு-வே : 1. வாக்காதியினின். 2. கெமனம் 3. சிங்ஙவை.
4. அசுவனி, அசுவினி.

"புகலும்வாக் காதிகளில் தோன்று தொழில் ஐந்தும்" என்றும் "நிகழ்பூதந் தனிற்றோன்றும் புகழ்நாடி பத்தும்" என்றும் கூறுகின்றது. (நிகழ்பூதம்-நிலமாகிய பூதம்).

நாடி பத்துள் இடை நாடி வலதுகாற் பெருவிரலினின்று தொடங்கிச் சென்று கத்தரிக்கோல் போல மாறலாக இடது நாசியைப் பற்றி நிற்பது. பிங்கலை இடதுகாற் பெருவிரலினின்று தொடங்கிச் சென்று கத்தரிக்கோல் போல மாறலாக வலது நாசியைப் பற்றி நிற்பது. சுழுமுனை நாடி (சுஷூம்நா) மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாய் நடுநாடியாய்ச் சிரசனவும் முட்சு நிற்பது. சிங்ஙவை உண்ணாக்கிலே நின்று உணவாதிகளை விழுங்கச் செய்வது. புருடன் வலக் கண்ணளவாய் நிருபது. காந்தாரி இடக்கண்ணளவாய் நிற்பது. அத்தி வலக்காதளவாய் நிற்பது அலம்புடை இடக்காதளவாய் நிற்பது. சங்கினி குறியினளவாய் நிற்பது. குரு அபானத்தளவாய் நிற்பது.

பத்து நாடிகளே யன்றிச்சுழுனை, பிங்கலை, இடை, அலம்புடை அத்தி, சிங்ஙவை, வாருணை, பூடை, அசுவினி, வாணி, விசுவோதரை குரு, காந்தாரி, சங்கினு எனப் பதினான்கு நாடிகள் கூறலும் உண்டு. இதனை

"ஈரேழு நாடி சுழுனைபிங் கலையோ டிடையலம்புடையத்தி
சிங்வை, வாருணை பூடை யசுவினி புகழும் வாணிவிச்
வோதரை குருகாந், தாரிசங் கினியென்பன"

என்னும் குறுந்திரட்டுப் பாடலால் அறிக.

## தேவ வாயுவும் பூத வாயுவும்

பேசரிய வாயுவுமீ ரைந்த தாகும்
பிராணனுட னபானனுதா னன்வி யானன்
நேசமுறுஞ் சமானனிவை [1]யைந்து தாமும்
நீதிமரு விந் [2]தேவ வாயு வாகும்
தேசமரு நாகனுயர் கூர்மன் றானும்
திருந்துகிரி கான்றேவ தத்த னென்றே
ஓசைமிகுந் தனஞ்செயனென் னைந்து காலும்
ஓதியிடி [3]லிவைபூத வாயு வாமே. 56

சு - வே : 1. 'ஐந்து காலும்' 2. 'தேகி' 'தேச' 'தெய்வ' 3. இது

(இ-ள்) சொல்லுதற் கரிய வாயுவும் பத்தென்று கூறப் படும். அப்பத்துள் பிராணன், அபானன், உதானன் சமானன், வியானன் என்னும் இவ் வைந்தும் நீதி பொருந்திய தெய்வக் காற்றாகும்.

ஒளி பொருந்திய நாகன், உயர்ந்த கூர்மன், திருந்திய கிரிகரன், தேவதத்தன், நீண்ட ஓசையுடன் கூடிய தனஞ் சயன் என்று கூறப்படும். ஐந்து காற்றும், கூறுங்கால் அவை பூதக்காற்றாம் (எ–று).

தத்துவப் பிரகாசம் "நீதிவா யுவிற் றோன்றும் வாயுப் பத்தும்' (56) என்று கூறுகிறது. அதன் உரையாசிரியர் "பிராணவாயுவிற் றோன்றும் வாயுக்கள் பத்தும்" என்று உரை கூறுவர். பத்து வாயுக்களின் இயல்பினை இந்நூல் 19 ஆம் பாட்டால் அறிக.

## பூத காரியம் இருபத்தைந்துள் நிலம், நீர், தீயின் கூறுகள்.

தோலெலும்பு நரம்புதசை மயிரென் றைந்தும்
சொல்லரிய பிருதுவியின் கூற தாகும் ;
ஓலமிகும் அப்புவின்கூ றைந்த தாகும்
ஓடும்நீ ருடனுதிரம் மூளை மச்சை
மேலமருஞ் சுக்கிலமாம் என்று கூறும் ; 56
மேவியவா காரமும்நித் திரைகள் தாமும்
சீலமிகும் [1]பயமுடன்மை துனமுஞ் சோம்பும்
தேயுவின்கூ றென்றுலகஞ் செப்புங் காணே.

(இ - ள்) நிலம் என்னுந் தத்துவத்தின் கூறுகள் தோலும், எலும்பும், நரம்பும், தசையும், மயிரும் என்று ஐந்தாகும். ஓசை மிகும் நீர் என்னுந் தத்துவத்தின் கூறுகள் ஓடுகின்ற சிறுநீரும் இரத்தமும் மூளையும் பச்சையும், சுக்கில மும் என்று ஐந்தாகும். நெருப்பு என்னுந் தத்துவத்தின்

---

சு - வே : 1. பயமுமை துனமும்.

கூறுகள் பொருந்திய பசியும், உறக்கமும், அச்சமும், இளைஇளைப்பும் சோம்பலும் என்று ஐந்தாகும் என்று அறிஞர் உலகம் கூறும் காண்பாயாக (எ - று).

பெருந்திரட்டில், பஞ்ச விம்சதி என்னுந் தலைப்பில், வீட்டுநெறி என்னும் நூலில்,

1 என்பொடு தோல்நரம் பிறைச்சி மயிரெனப்
பொன்படு பூமி பொருந்திய கூறே.

2 மூத்திரம் சுக்கிலம் மூளை யொடுநிணம்
பேர்த்தெழு சோரியும் நீரின் கூறே.

3 பசியே சோம்பு நித்திரை மறவி
வசிதரு மைதுனம் அங்கியின் கூறே.

என்று வருவனவற்றாலும் இப்பாட்டின் பொருள் உணர்க.

## பூதகாரியம் இருபத்தைந்துள் வாயுவின் கூறும். ஆகாயத்தின் கூறும், மூன்றுமண்டலமும்

[1]ஓடல்நடந் திடலிருத்தல் கிடத்தல் தத்தல்
ஓதரிய வாயுவின்கூ றைந்த தாகும் ;
நாடரிய குரோ தமிகு லோப மோகம்
நண்ணுமத மாச்சரிய மைந்து தாமும்
நீடியவா காயத்தின் கூற தாகும் ;
நித்தியமாம் அக்கினியா தித்தன் சோமன்
சேடமரும் [2]மண்டலமூன் றாகு மென்றே 57
செப்பிடுவர் ஒப்பருநூல் தெளிந்து ளோரே.

(இ - ள்) சொல்லுதற் கரிய காற்று என்னும் பூதத்தின் கூறுகள் ஓடலும், நடத்தலும், இருத்தலும், கிடத்தலும், தத்தலும் என்று ஐந்தாம். பரந்த ஆகாய பூதத்தின் கூறுகள் நாடுதற்கரிய குரோதமும் உலோபமும் மோகமும் மதமும் மாச்சரியமும் என்று ஐந்தாம்.

---

சு - லே : 1 ஓடல்நடத்தல் இருத்தல். 2. மண்டலமு மூன்றாம்.

நிலைபேறாக உள்ள அக்னிமண்டிலமும், ஆதித்தமண்டிலமும், திங்கள் மண்டிலமும் என்று உடம்பினுள் மண்டிலங்கள் மூன்றாகும் என்று ஒப்பற்ற தத்துவ நூல்களைத் தெளிந்தோர் கூறுவர் (எ - று).

மேற் குறிப்பிட்ட வீட்டுநெறியில்

4 ஓங்கல் ஓடல் உரைத்தல் இருத்தல்
வாங்கல் என்றிவை வாயுவின் கூறே.

5 குரோதம் உலோபம் இலச்சை பயமொடு
நிரோதமின் மோகம் நீள்விசும் பாமே.

என்று சிறிது வேறுபட வருவனவற்றைக் காண்க.

மும்மண்டிலங்களில் அக்னிமண்டிலம், மூலாதாரத்திற்கு இரு விரற்கடைக்குமேல் உள்ளதென்றும் ; ஆதித்தமண்டிலம் உந்திக்கு நான்கு விரற்கடைக்குமேல் உள்ளதென்றும், திங்கள் மண்டிலம் தலையின் நடுவில் உள்ளதென்றும் தத்துவதீபிகை கூறும். ஆனால் குறுந்திரட்டு என்னும் நூல்.

"மாலோன் றனது மண்டிலந்தான் ஆஞ்ஞை விசுத்தி
அருக்கனதாம்,
மூலா தாரம் அனலனதா மொழிவர் யோக முனிவர்களே"

என்று சிறிது வேறுபடக் கூறும். (மாலோன்—திங்கள்)

## ஆதாரம் ஆறு; உடற்குறி மூன்று; உடம்பு இரண்டு, மேலே கூறியவையெல்லாங் கூட்டத் தொண்ணூற்றாறு தத்துவம் என்றல்.

சாற்றியமூ லாதாரம் சுவாதிட் டானம்
தருமணிபூ ரகமுமனா கதமும் மேலை
ஆற்றலுறு விசுத்தியுமாக் கினையும் ஆறாம்
ஆதாரம்; பெண்ணுடனாண் அலிமூன் றாகும்

போற்றுமுடற் குறியிரண்டா முடம்பு தாமும்
பூதபுரி யட்டகமாம் புகலுங் காலை
தோற்றியதத் துவமடைவே [1]மொழிந்த வெல்லாம்
தொகையாக வைத்திடுவர் தொண்ணூற் றாறே. 58

(இ - ள்) ஆதாரங்கள் சொல்லப்படும் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆக்கினை (ஆஞ்ஞை) என்று ஆறாகும். உடற்குறிகள் பெண்குறி ஆண்குறி அலிக்குறி என்று மூன்றாகும். உடம்புகள் தூல உடம்பாகிய பூத உடம்பும் சூக்கும உடம்பாகிய புரியட்டக வுடம்பென்றும் இரண்டு வகையாம். மேலே "சூக்குமை பைசந்தியும்" (50) என்னும் பாட்டிலிருந்து இப் பாட்டு வரை கூறியவற்றையெல்லாம் வாக்கு 4 ஏடணை 3, குணம் 9, இராகம் 8, உயிர்செயல் 8, வாக்காதிகளின் தொழில் 5, நாடிகள் 10, வாயு 10, உடம்பின் ஐம்பூதக் கூறு 25, மண்டிலம் 3, ஆதாரம் 6, உடற்குறி 3, உடம்பு 2 என்று அடைவாகக் கூட்டினால் தொண்ணூற்றாறாம் (எ - று).

## மேற்கூறிய முப்பத்தாறிலும் தொண்ணூற்றாறிலும் அடங்காத பல்வகைத் தத்துவம்.

பலவாகுஞ் சகலகலை புராணம் வேதம்
[2]பகிருமமர் வாசயங்கற் பாசயம்[3]பற் றாக
[4]வலமாரும் பக்குவா சயமும் மூத்தி
ராசயமும் மலாசயம் மைந்தா மென்றே
சலமாரும் வியாதியொரு மூன்ற தாகும்
தகுவாதம் பித்தஞ்சேத் துமந்தா மென்றே
மலமாமைந் தாணவநற் றிரோதை மாயை
மாமாயை [5]காமியமாய் மதித்துக் காணே. 59

சு-வே : 1. மொழிந்ததெல்லாம், 2. பகருமமர் 3 பற்றாகு 4 சிலவாகும் 5. காமியமாம்.

(இ - ள்) எல்லாக் கலைகளும், புராணங்களும் வேதங்களும் கூறும் பொருள்கள் இன்னும் பலவாகும். அவைகளைக் கூறின் சயங்கள் ஐந்து; அவற்றின் பெயர் பகிர்வாசயம், கர்ப்பாசயம், பக்குவாசயம், மூத்திராசயம், மலாசயம் என்பனவாம். அசைவினைத் தரும் நோய்களும் ஆணவம் திரோதை மாயை மாமாயை காமியம் என்று ஐந்தாகும் (எ - று).

பகிர்வாசயம்—உண்ட உணவு பகிருமிடம். கர்ப்பாசயம் சுக்கிலம் அல்லது சுரோணிதம் பிரியுமிடம். பக்குவாசயம்—உண்ட உணவு பக்குவப்படுமிடம். மூத்திராசயம்—சிறுநீர் பிரிந்து தங்குமிடம். மலாசயம்—மலம் பிரிந்து தங்குமிடம்.

## ஐந்து கோசமும், ஏழு தாதுக்களும், அருட்சத்தி வகுப்பைந்தும்.

அன்னமயம் பிராணமயம் அதனை நீங்கா
தமருமன விஞ்ஞான மயமாம் நூல்கள்
பன்னருமா னந்தமய மைந்து தாமும்
பஞ்சகோ சங்களெனப் பகர லாகும்
முன்னியதோல் தசையுதிர மெலும்பு மேதை
மூளையுடன் சுக்கிலந்தா தேழ தாகும்
மன்னுபரை திரோதாயி இச்சை ஞானம்
வருங்கிரியை அருட்சத்தி வகுப்பைந் தாமே. 60

(இ-ள்) அன்னமயமும், பிராணமயமும், மனோமயமும் விஞ்ஞானமயமும் ஆனந்தமயமும் என்னும் இவை ஐந்தும் உயிர்க்குள்ள ஐந்து கோசங்களாம். கோசம்-உறை, சட்டை. கருதப்படும். தோலும், தசையும், இரத்தமும், எலும்பும், மேதையும், மூளையும், சுக்கிலமும் என்னும் இவை பருவுடம்பிற் கமைந்த ஏழு தாதுக்களாம். நிலைபெற்ற பராசத்தியும், திரோதான சத்தியும், இச்சா சத்தியும், ஞான சத்தியும், கிரியா சத்தியும் ஆகிய இவை ஐந்தும் பதியின் தாதான்மிய சத்தியாகிய அருட்சத்தியின் கூறாம் (எ-று).

முதல்வன் எல்லா உயிர்கட்கும் ஆனந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம் என்னும் இரண்டினைச் சுத்த மாயையில் தோற்றியருளுவன், அசுத்தமாயையில் கலைமுதலான தத்துவ வடிவாகிய மனோமய கோசத்தையும் பிராண வாயுவு முதலான வற்றுடன் கூடிய பிராணமய கோசத்தையும், தோல் முதலான தாதுக்களால் ஆகிய தூலஉடம்பாகிய அன்னமய கோசத்தையும், தோற்றியருளுவன். (சிவநெறிப் பிரகாசம் 138).

ஏழு தாதுக்களை

"இரதம் உதிரம் என்பு தோற்றசை,
மூளை சுக்கிலம் எழுவகைத் தாதே"

என்று திவாகரம் கூறும்.

## ஐந்து தொழில்கள் ; தொழிலதிபர் ஐவர்
## எழுத்துக்கள் ஐந்து உபதேசம் மூன்று

சீராருந் தொழில் [1]சிருட்டி திதிசங் காரம்
திரோபாவம் அனுக்கிரகம் எனவைந் தாகும்.
ஏராருந் தொழிலதிபர் பிரமன் மாயன்
எண்ணுமரன் [2]ஈசன்சதா சிவனைந் தாகும்.
ஆராத அக்கரங் ளைந்த தாகும்
அகாரவுகா ரம்மகரம் விந்து நாதம்
பாராரு முபதேசம் மூன்ற தாகும்
பகர்சமய விசேடநிரு வாணந் [3]தாமே 61

(இ-ள்) சீர்த்தி பொருந்திய தொழில்கள் ஆக்கலும், அளித்தலும், அழித்தலும், மறைத்தலும், அருளலும் என்று ஐந்தாகும்.

அத் தொழில்களுக்குரிய எழுச்சி பொருந்திய தொழிலதிபர் நான்முகன், திருமால், அரன், மகேசுரன், சதாசிவன் என ஐவராவார்.

சு-வே. 1. திருட்டி 2. ஈசர் சதாசிவ மைந்தாகும் 3. தானே

அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் எனத் தனித்த இயல்பினையுடைய எழுத்துக்கள் ஐந்தாகும். உலகத்தில் ஆசான் மாணவனுக்கு உபதேசிப்பதான உபதேச முறைகள் சமயம், விசேடம், நிர்வாணம் என்று மூன்றாகும். (எ-று).

இறைவன் இயற்றுகின்ற படைப்பு பொது என்றும் சிறப்பென்றும் இருவகைப்படும். உலகங்களையும் உலகத்திலுள்ள பொருள்களையும் படைத்தல் பொதுவாம். ஒவ்வொரு உயிர்க்கும் உடம்பினைப் படைப்பது சிறப்பாம். படைத்த உலகம் தம்தம் விடயங்களை அடைந்து நுகரச் செய்வது காத்தலாம். படைத்த பொருளாகிய மாயையில் ஒடுக்குதல் அழித்தலாம். ஆணவ மலத்தைப் பக்குவப்படுத்தற்காக உலக போகங்களை உயிர்க்கு ஊட்டி மறைப்பதுவே திரோபாவமாம்.மலங்களை நீக்கி உயிர்க்கு முத்தியளிப்பதுவே அனுக்கிரகமாம்.

## பதம் நான்கு பதமுத்தி நான்கு
## ஞானம் நான்கு உயிர்ப்பேதம் மூன்று

சரியையொடு கிரியைமிகு யோக ஞானம்
தக்கபதம் நாலு;பத முத்தி நாலாம்
விரிவுதரு சாலோகஞ் சாமீ பங்கள்
விண்ணிகழ்சா ரூபஞ்சா யுச்சி யந்தாம்
தெரிவரிய ஞானமுநா லாகுங் கேட்டல்
சிந்தித்தல் தெளிதலுயர் நிட்டை யென்றே
பிரிவிலுயிர் விஞ்ஞான கலர்கள் நீடும்
பிரளயா கலர்சகலர் பேதம் மூன்றே. 62

(இ-ள்) சரியையும், கிரியையும். இவற்றிற்கு மேலான யோகமும். ஞானமும் என்று முதல்வனை அடைவதற்குரிய வழிகள் நான்காகும்,

மேற்கூறிய வழிகளால் அடையப்பெறும் முத்திகள் முறையே சாலோகமும், சாமீபமும், சாரூபமும், சாயுச்சியமும் என்று நான்காகும்.

ஞான நூல்களை ஆசானிடத்தே கேட்டலும், கேட்டவற்றைச் சிந்தித்தலும், சிந்தித்தவற்றைத் தெளிதலும், தெளிந்த பொருளை உட்கொண்டு நிட்டை கூடுதலுமெனத் தெரிதற்கரிய ஞானமும் நான்காகும்.

முதல்வனுடைய வியாபகத்திலிருந்து பிரிவில்லாத உயிர்களும் விஞ்ஞான கலரென்றும், பிரளயாகலரென்றும் சகலரென்றும் மூன்று பகுப்பின வாகும். (எ-று)

பதம்-பாதம், வழி, பிங்கல நிகண்டானது சரியை முதலான வற்றைச் சிவ பூஜை என்றே கூறுகின்றது.

"சரியை கிரியை யோக ஞானமென்,
றிவையொரு நான்குஞ் சிவபூசை யியல்பே"

என்பது அந் நூற்பாவாகும்.

மேலும் அந்நிகண்டு சாலோகத்தைத்தான் (சிவன்) ஆள் உலகிலிருதத லென்றும், சாமீபத்தைத் தன்பாடிருத்தலென்றும், சாரூபத்தைத்தானாம் பதம் பெறலென்றும் சாயுச்சியத்தைத் தானாகுதலென்றும் கூறும், அந்நான்கு முத்தியுள் சாயுச்சியம பெற்றவரே பிறவாதவர், ஏனையோர் பிறப்பர் என்பதைத்

"தன்னை அறிந்தவர் சாயுச்சி யத்தர்
பின்னையர் மீண்டு பிறப்போர் என்ப"

என்று அது கூறுகின்றது.

## மாயையின் காரியம் நான்கு ; காமம் மூன்று
## பிராரத்தம் மூன்று ; உலகம் மூன்று

தகைவிரவு மாயையொரு நான்க தாகும்
 தனுகரண புவனபோ கந்தா மென்றே
வகைநிறுவுங் கன்மமொரு மூன்ற தாகும்
 மன்னியசஞ் சிதம்பிரா ரத்தம் மேலைச்
சிகையுறுமா காமியமு மெனநூ லோதும்
 தெய்விகமுற் பவுதிகமான் மிகந்தா னென்றே
தொகைமருவும் பிராரத்தம் மூன்ற தாகும்
 தொல்புவியந் தரஞ்சுவர்க்க முலகு மூன்றே 63

(இ-ள்) தகுதியுடைத்தாய்த் தனது காரியப் பொருள்களிலே விரவும் சுத்தமாயையின் காரியமும் அசுத்தமாயையின் காரியமும் உடம்பு, கருவி, உலகம், நுகர்பொருள் (தனு கரண புவன போகம்) என்று நான்காகும்.

கூறுபாடாய்ப் பொருந்தியிருக்கும் கன்ம மலமானது நிலைபெற்ற சஞ்சிதம், பிராரத்தம், மேலைக்கு வித்தாகும் ஆகாமியம் என மூன்றாகும்.

அம் மூன்றுள் பிராரத்த அனுபவமானது தெய்வீகம், பவுதிகம், ஆத்மிகம் என மூன்றாயிருக்கும்,

உலகம் பழமையான நிலமும், நரகமும், சுவர்க்கமுமென மூன்றாயிருக்கும் (எ-று).

திவாகர நிகண்டு

"பூமியா காயம் சுவர்க்க மென்ப
தாமொரு மூன்று நிலமெனுந் தகைய"

என்று உலகம் மூன்றினைச் சிறிது வேறுபடக் கூறும்.

## காரண அவத்தை மூன்றும், அவற்றின் காரியமாகிய அவத்தைகள் பதினைந்தும்.

ஓங்கியகே வலஞ்சகலஞ் சுத்த மென்றே
ஓதியாகா ரணவவத்தை மூன்ற தாகும்
தாங்கரிய கேவலகா ரியமைந் தாகும்
சகலகா ரியவவத்தை தானைந் தாகும்
நீங்கரிய சுத்தகா ரியமைந் தாகும்
நிகழ்த்திடுவர் அவத்தைபதி னெட்டா மென்றே
ஆங்கடைவின் பெயர்கீழா லவத்தை மத்தி
யாலவத்தை யுடன்மேலா லவத்தை யாமே 64

(இ-ள்) உயிர்கட்கு மிக்கு வரும் அவத்தைகளில் முதன்மையாகிய அவத்தை (காரண அவத்தை) கேவலம் சகலம் சுத்தம் என மூன்றாகும்.

இனி அவற்றின் காரிய அவத்தைகள் கேவலகாரியம் ஐந்து, சகல காரியம் ஐந்து, சுத்த காரியம் ஐந்து என்று மூன்றுவகையா யிருக்கும்.

முதலவத்தை மூன்றனுடன் காரிய அவத்தை பதினைந்தையும் கூட்ட அவத்தைகள் பதினெட்டாம்.

அம் மூன்றிற்கும் முறையே கீழாலவத்தை மத்தியாலவத்தை, மேலாலவத்தை என்றும் பெயர் கூறப்படும் (எ - று).

இவற்றுட் காரண கேவலமாவது, முதல்வன் எல்லாப் பொருள்களையும் அழிக்குங் காலத்தில் உயிர்கள் மாயையாகிய முதற்காரணத்தி லொடுங்கிச் சிருட்டி காலம்வரை ஆணவமலத்தால் மறைக்கப் பெற்று ஒன்றையும் அறியாமலிருக்கும் நிலையாம். காரண சகலமாவது, உயிர்கள் படைப்புக்காலம் தொடங்கி ஒடுங்குங்காலம்வரை பிறப்பிறப்பிற்பட்டு நிற்கும் நிலை.

காரண சுத்தமாவது, உயிர்கள் இறைவன் திருவடிகளிலே இரண்டறக் கூடி நிற்கும் சாயுச்சிய நிலையாகும். இம்மூன்றின் இயல்பினை 67 ஆம் பாட்டாலும் அறிக.

### கேவல காரிய அவத்தை ஐந்தும், சகல காரிய அவத்தை ஐந்தும்.

சாக்கிரஞ்சொப் பனஞ்சுழுத்தி துரிய மான்மாத்
    தன்னிலையுண் மையையுணருந் துரியா தீதம்
ஆக்குவது கேவலகா ரியமைந் தாக
    அறைவர்;[1] சகலத்தின்கா ரியமைந்தாகும்
சாக்கிரத்தி லதீதஞ்[2] சாக் கிரத்தெஞ் சாமல்
    தகுதுரியஞ் சாக்கிரத்திற் சுழுத்தி தானும்
சாக்கிரத்திற் சொப்பனஞ்சாக் கிரத்தி னன்பாம்
    சாக்கிரமாம் என்பருட் டலைவர் தாமே. 65

---

சு - வே : 1. சகலவவத்தையின். 2. சாக்கிரத் தெஞ்சாமல்.

(இ - ள்) சாக்கிர மென்றும், சொப்பன மென்றும், சுழுத்தி யென்றும், துரிய மென்றும், உயிரின் தன்னிலை யுண்மை உணர்வதற் கேதுவான துரியாதீத மென்றும உண்டாவன கேவலத்தின் பின் நிகழ்வன வாதலில் இவற் றைக் கேவல காரிய அவத்தை ஐந்து என்று கூறுவர்.

சகலாவத்தையின் காரியமும் ஐந்தாகும். அவற்றைச் சாக்கிரத்திற் றுரியாதீதம், சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத் திற் சுழுத்தி, சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சாக் கிரம் என்று கூறுவர். திருவருண் ஞானத்தை யுடைய பெரியோர் எ - று).

கேவல காரியம் ஐந்தின் இயல்பினை இந் நூல் 69, 70, ஆம் பாட்டுகளாலும், சகல காரியம் ஐந்தின் இயல்பினை 72 ஆம் பாடலாலும் அறிக.

## சுத்தாவத்தையின் காரியமைந்து

நின்மலசாக் கிரஞ்சுத்த வித்தை யைந்தாம்
நின்மலசொப் பனத்தீசன் முதல்நா லாகும்
நின்மலமாஞ் சுழுத்தி சதாசிவம் மூன்றாகும்
நின்மலமாஞ் சத்திசிவம் துரிய மாகும்
நின்மலமாம் அதீதத்திற் சிவமொன் றாக
நிகழ்த்துவர்[2]சுத் தத்தின்கா யுயமைந் தாகும்
முன்மலிகா ரியவவத்தை மூவைந் தாகும்
முதலவத்தை [3]மூன்றுடனே மூவா றாமே 66

(இ - ள்) சுத்தாவத்தையாகிய நின்மலாவத்தையின் காரியங்கள், சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்துடன் கூடிய நின்மல சாக்கிரமும்; ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் நான்குடன்

---

சு - வே : 1. சுழுத்தி சதாக்கிய. 2. சுத்தவத்தையின்.
3. மூன்றவத்தை.

கூடிய நின்மல சொப்பனமும்; சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் மூன்றுடன் கூடிய நின்மல சுழுத்தியும்; சத்தி, சிவம் என்னும் இரண்டுடன் கூடிய நின்மல துரியமும்; சிவம் ஒன்றுடன் உள்ள நின்மல துரியாதீதமும் என்று ஐந்தாகும்.

இக் காரிய அவத்தைகள் பதினைந்தும் காரண அவத்தை மூன்றுடனே கூட அவத்தைகள் பதினெட்டாம் (எ - று).

இதனைப்

"பிறிவிலர் ஞானத் தோரும் பிறப்பற அருளா லாங்கே,
குறியொடும் அஞ்ச வத்தை கூடுவார் வீடு கூட" (225)

என்று சிவஞான சித்தியார் கூறும்.

## கேவலம் சகலம் சுத்தம் என்னும் காரண அவத்தைகளின் இயல்பு

தனுகரண புவனபோகங்கள் கூடாத்
தன்னிலையாம் மன்னிருள்கே வலம தாகும்
தனுகரண புவனபோ கங்கண் மாயை
தாமருவி வினைநுகர்தல் சகல மாகும்
இனையவிவை இருவகையும் பவவித் தாகும்
இவையுயிருக் கன்னியமென் றிவற்றை நீங்கிப்
புனிதனரு ளாலமலன் கமல பாதம்
பொருந்துமது சுத்தமெனப் புகலும் நூலே. 67

(இ - ள்) உயிரானது உடம்பு, கருவிகள், உலகம், நுகர்பொருள் என்னும் இவற்றொடு கூடப்பெறாத தன்னிலைதானே ஆணவ இருளுடன் கூடியுள்ள கேவல நிலையாகும்.

பின்னர் அவ் வுயிரானது உடம்பு, கருவி, உலகம், நுகர் பொருள் வடிவமாகிய காரிய மாயையுடன் கூடி இருவினை களை நுகரும் நிலைதானே சகல நிலை யாகும்.

இத்தகைய இவ் விருவகை நிலையும் பிறவிக்கு வித்தாகும். இவ் வவத்தைகள் இரண்டும் உயிர்க்கு வேறான அவத்தைகளே என்று இவற்றை யகன்று தூயவன் என்னும் பதியின் திருவருளால் அவன்றன் தாமரை மலர்போன்ற திருவடியைப் பொருந்துவதே சுத்தாவத்தை என்று சிவாக மங்கள் கூறும் (எ - று).

இம் மூன்றவத்தையின் இயல்பை

"கேவலனொண் சகலனோ டமல னென்னக்
கிடந்தமூ வவத்தையுளன் கிளந்த வான்மா,
மூவகையுள் விகலன்கே வலனாம் பெத்தன்
மொழிசகலன் அமலனுயர் முத்த னென்பர்" (291)

என்னும் சிவப்பிரகாச விகாசச் செய்யுளானும் அறிக.

## உயிர்கட்டு அவத்தைகளின் அனுபவத்தால் மலம் நீங்கும் என்பதும்; அம் மலத்தினைக் குரு லிங்க சங்கமம் நீக்குமென்பதும் உணர்த்துகிறது.

மன்னியகே வலசகல சுத்தம் மூன்றும்
மதித்துயிர்கட் கவதரமாய் [1] அமைத்த தென்னிங்
கென்னிலது கேவலமா ணவத்தை நீக்கும்;
இருஞ்சகலம் [2]உருவருமா யையினை நீக்கும்;
பன்னரிய சுத்தமிரு வினையை நீக்கும்
பகர்தருமிவ் மூவகையு மசத்தா மென்றே
கொன்னமரு மிறையருளா லகற்றும் மேனி
குருலிங்க சங்கமமாங் குறியி னாலே. 68

கு-வே : 1. அமைத்த தேனிங் 2, உருவுறு.

(இ - ள்) நிலைபெற்ற கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளையும் கருதி, உயிர்கட்கு மூன்று சமயமாய் இறைவன் அமைத்தது என்னையோ வெனின்? இம் மூன்றுள் கேவலநிலையுற்ற அவதரம் ஆணவத்தை நீக்கும். அது நீங்கிப் பெரிய சகலநிலையுற்ற அவதரம் உருவம் வருதற்கு ஏதுவான மாயாமலத்தை நீக்கும். சொல்லுதற்கரிய சுத்தநிலையுற்ற அவதரம் இருவினையை நீக்கும்;

உயிர்களுக்கு உரியதாகக் கூறப்படும், இம் மூவகை அவத்தைகளும் நிலைபேறுடையனவல்ல என்று உட்கொண்ட இறைவன் அவற்றைத் தன் திருவருளால் நீக்கும் என்க. எவ்வாறு நீக்குவனெனில்? குரு என்னும் வடிவு கொண்ட குறியினாலும், இலிங்கம் என்னும் வடிவு கொண்ட குறியினாலும் சங்கமம் என்னும் வடிவுகொண்ட குறியினாலும் நீக்கும் (எ-று).

## கேவல காரிய அவத்தைகளில் கருவிகள் நிற்கும் நிலை

இந்திரிய மொருபதும்மாத் திரையீ ரைந்தும்
இலங்கியவந் தக்கரணம் நான்கு தாமும்
உந்தியகா லையிரண்டு முயிருங் கூடி
உற்றறிதல் சாக்கிரம்; சொப் பனத்தி லோதும்
இந்திரிய மீரைந்து மகற்றி நின்ற
எண்மூன்று மெனுஞ்சித்தம் பிராணன் றானும்
அந்தமுறும் சுழுத்தியினிற் பிராண வாயு
அருந்துரியந் தனிற்போதல் அதீதத் தாமே. 69

(இ-ள்) அறிவுக் கருவி, தொழிற் கருவி என்னும் பத்தும், அவற்றின் செய்திகளாகிய ஒலிமுதலானவை ஐந்தும், பேசுதல் முதலாய ஐந்துமாகிய ஈரைந்து மாத்திரையும் மனம் முதலான அந்தக்கரணம் நான்கும்,

பிராணன் முதலான பத்துக் காற்றும் என்னும் இம் முப்பத்து நான்கு கருவிகளுடன் உயிரும் கூடி முப்பத்தைந் தாகி உலகப் பொருள்களை அறிந்து வரும் நிலை விழிப்பு நிலை என்னும் சாக்கிராவத்தை யாம்.

இது,

"இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சாக்கரப் பாலது வாகுமே"

என்ற திருமந்திரப் பாட்டைக் (2144) கருதியது.

மேற் கூறிய முப்பத்து நான்கில், இருவகைக் கருவி களை நீக்கி, எஞ்சிய இருபத்து நான்கு தத்துவங்களுடன் உயிருங்கூடி, இருபத்தைந்தாகி இன்ப துன்பம் நுகர்வது கனாநிலை என்னும் சொப்பனாவத்தையாம்;

அந்தக்கரணங்களுள் சித்தம் ஒன்றும், பத்துச் காற்றுள் பிராணன் ஒன்றும் ஆகிய இரண்டு கருவிகளுடன் உயிரும் கூடி மூன்றாகியுள்ள நிலைதானே சுழுத்தியாம்.

சித்தம் நீங்க பிராணவாயு ஒன்றுடன் உயிருங் கூடி, இரண்டாயுள்ள நிலைதானே துரீய நிலையாகும்.

பிராணவாயுவும் நீங்க உயிர்மட்டும் தனித்திருக்கும் நிலை துரீயாதீதமாகும் (எ-று).

இதனை,

"ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரம்,
கைகண்ட ஐயைந்திற் கண்டங் கனா என்பர்,
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையில்,
மெய்கண் டவள் உந்தி மேவல் இருவரே"

என்னும் திருமந்திரத்தால் அறிக.

'ஈரைந்து மாத்திரை' என்றது, ஞானேந்திரியங்கட்கு விடயமா யிருக்கும் சத்தப் முதலான ஐந்தும், கன்மேந்திரியங்கட்கு விடயமா யிருக்கும் வசனம் முதலான ஐந்தும் ஆகிய பத்தினை. உமாபதி சிவமும் நெஞ்சுவிடு தூதுள்

"இந்திரியம் பத்துக்கும் ஈரைந்து மாத்திரைக்கும்"

(18) என்பர். சாக்கிரத்திற்கு இடம் நுதல், சொப்பனத்திற்கு இடம் களம்; சுழுனைக்கு இடம் இருதயம்; துரியத்திற்கு இடம் நாபி. துரியாதீதத்திற்கு இடம் மூலாதாரமாகும். சிவஞான சித்தியார்

"சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னில்,
ஆக்கிய இருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று,
நீக்கிய இதயந் தன்னில் துரியத்தில் இரண்டு நாபி,
நோக்கிய துரியா தீதம் நுவலின்மூ லத்தி னொன்றே (223)

என்று கூறும்.

## சிலர், துரியாதீதநிலையில் மூலாதாரத்தில் உயிர், புருடனுடன் உளதாம் என்று கூறுவது பொருந்தா தென்பது

மூலமதிற் புருட[1]னுயி ருடனுளனா மெனவே
மொழிந்திடுவ ருயிருடனே முழுப்பான்மை நிலையான்
மேலமருஞ் சாக்கிரத்தைம் புலனுயிர்க ளருந்தில்
வித்தாகி உற்பவிக்கும் வேறறியப் படாதாம்
மாலமருந் துரியாதீ தத்திலுயிர் தானே
மருவியிடும்; புருடனுமங் குளனெனவே மதிக்கின்
'மூலமுயிர் உண்மைநிலை தன்னியற்கை' யெனவே
முதல்வனரு ணூலுணர்ந்தோர் மொழிபழுதா யிடுமே 70

---

சு-வே: 1. னுயிருட னுளவாம்

(இ-ள்) துரியாதீத அவத்தையில் மூலாதாரத்திலே உயிருடன் புருடன் (பஞ்ச கஞ்சுகனாகிய புருடதத்துவம்) உளனாம் என்றும் சிலர் கூறுவர்; எல்லாத் தத்துவக் கூறுபாடுகளுடன் நிலைபெற்று மேலே பொருந்தியிருக்கும் சாக்கிரத்திலே உயிர்கள் ஐம்புலப் பொருள்களை நுகரின், அதனால் ஆகாமிய வினை ஏற, அது பிறவிக்கு வித்தாகி நிற்ப. அதனால், உயிர் பிறப்பிறப்பிற் சுழலும்! அத்தகைய எல்லாக் கருவிகளுடனும் கூடிய சாக்கிராவத்தைக்கு ஒரு கருவியுடனும் கூடாத துரியாதீத அவத்தையே நேர் எதிரான வேறுபட்ட அவத்தையாகுமதன்றித் துரியாதீதத்திலும் உயிர், புருடனாகிய கருவியுட னிருப்பின், இத் துரியாதீதத்திற்கும் சாக்கிரத்திற்கும் வேறுபாடு அறியப் படாதாகும்.

வேறுபாடு அறியப்படாதென்று கூறுவ தென்னை? மயக்கம் பொருந்திய துரியாதீதத்தில் உயிர்மட்டும் புருட னென்னும் கருவியொன்றுடன் உளதாம்; அதுவே வேறு பாடாம் என்னின்,

அற்றன்று, துரியாதீத்திற்குரிய மூலாதாரத்தில் உயிர் உளதாம் நிலைதானே உயிர்தன் உண்மை நிலையாம் என்னுங் கருத்தால், "ஒன்றணையா மூலத்து" (சி-போ-உதா-28) என்றும். "உண்மை துரியாதீதம்" (187-சித்தியார்) என்றும். "தனி அதீதம் உண்மை உயிர்க்கென உணர்த்து மன்றே" (சிவப்பிரகாசம்-52) என்றும்,

"புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்,
அன்புசேர் கின்றனகட் டைந்தாக்கி-முன்புள்ள,
உண்மை நிலைமை ஒருகா லகலாது,
திண்மை மலத்தாற் சிறையாக்கிக்-கண்மறைத்து,
மூலவருங் கட்டினுயிர் மூடமாய் உட்கிடப்ப"

(போற்றிப் பஃறொடை 25-27) என்றும், முதல்வன் திருவருண்ஞான நூலைத் தெளிந்தோதிய மெய்கண்ட தேவ நாயனார். அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலியோர் கூறிய உண்மை மொழி பழுதாகுமே ஆகையால் அவ்வாறு கூறற்க (எ-று).

## சாக்கிரம் முதலான ஐந்தவத்தையைப் பொருந்தும் உயிர்க்கு உடலாகப் பொருந்துவனவும் மேலாலவத்தையைப் பொருந்தும் உயிர்க்கு உடலாவனவும் இவையெனல்

தூலவுடல் சாக்கிரஞ் சூக் குமவுடற்சொப் பனமாம்
சுழுத்திபிர கிருதியுடல்; துரியநிலை யதுதான்
மாலுறுமோ கினிவடிவாம் ; [1]மலிதுரியா தீதம்
மாறாத மலநிலையான் மாவியற்கை வடிவாம் :
மேலமருஞ் சுத்தவித்தை யீசர்சதா சிவமும்
மேவரிய சத்திசிவம் விதித்திடுமை வகையும்
கோசியமே லாலவத்தை பொருந்துமுயிர்க் குடலாம்
கூறியசாக கிரமாதி யதீதம்முடி வுறவே. 71

(இ-ள்) உயிர் விழிப்பு நிலையில் பருவுடம்புடன் கூடியிருக்கும் கனாநிலையில் நுண்ணுடம்புடன் கூடியிருக்கும் சுழுத்தி நிலையில் மூலப்பகுதியை உடலாகக் கொண்டிருக்கும். துரிய நிலையில் மயக்கம் பொருந்திய மோகினியை வடிவாகக் கொண்டிருக்கும். துரியங்கடந்த நிலையில் ஆணவமலத்துடன் நிலைபெற்றிருக்கும். இத் துரியங்கடந்த நியைில் உயிர் உள்ள நிலையே அதன் தன்னியற்கை வடிவாகும்.

மேலாலவத்தையைப் பொருந்தும் உயிர்க்கு, நின்மல சாக்கிரம் முதல் நின்மல துரியாதீதம் வரை ஐந்தவத்தைக்கும், சுத்தவித்தை, ஈசர், சதாசிவம், சத்தி, சிவம் என்னும் ஐந்தும் அடைவே உடலாம் (எ-று).

### சாக்கிரத்தில் ஐந்து நிலை

ஐவகையா மவத்தைகள்சாக் கிரமதனி லுளவாம்
அவைதாம்முன் னறிந்தவனைக் கண்டறியா
திருத்தன்
மையலுறு மதீதநிலை ; மோகினியைப் பொருந்தி
வாயுவியங் குதல்துரியம் [1]மானையடைந் துடனே

சு-வே : 1. எனுந்துரியா தீதம். 2. மரணை, மணை

பையநினை வொழுந்திருத்தல் சுழுத்திநிலை யதுசொப்
பனம்புரியட் டகமருவிப் பகுத்தறியா அறிவால்
ஐயமுறல் ; தூலவுட லடைந்தவனா மெனவே
அறிந்திடுதல் சாக்கிரத்திற் சாக்கிரமென் றறியே. 72

(இ-ள்) சாக்கிரத்திற்றானே ஐந்துவகை அவத்தைகள் தோன்றுவனவாகும். அவைதம்மைக் கூறின், முன் ஒருகால் அறிந்தவனைப் பின்னர்க் கண்டபொழுது அறியாதிருந்த நிலை ஆணவமல மயக்கத்துடன் கூடிய சாக்கிரத்தில் அதீத நிலையாகும். அதன்பின் மோகினியைப் பொருந்தி பிராணவாயு இயங்கத் தொடங்கிய நிலை சாக்கிரத்திற் றுரிய நிலையாகும். அதன்பின் மான் என்னும் மூலப்பிரகிருதியை அடைந்து மெல்ல நினைவு தோன்றப்பெற்ற நிலை சாக்கிரததிற் சுழுத்தியாகும், அதன்பின் நுண்ணுடம் பாகிய புரியட்டகத்தை மருவி, பகுத்தறியாத அறிவால் ஐயப்படும் நிலை சாக்கிரத்திற் சொப்பனமாம். பின்னர்த் தூல உடம்பினை அடைந்து முன்பு கண்ட அவனே இவனாம் என்று உண்மையாக அறிந்திடும் நிலை சாக்கிரத்திற் சாக்கிரமாம் (எ-று).

## உயிர் சுத்தநிலை அடைவது

இந்திரிய மீரைந்தும் வித்தை தானும்
இலங்குசுத்த வித்தையுட னிதற்கு மேலாம்
அந்தமில்தத் துவமிருபத் திரண்டு தாமும்
அராகமுமீ சுரமுமுட னவ்வியத்தன் றானும்
சிந்தையுநற் சதாசிவத்தோ டியங்கும் வாயுச்
செறிகாலங் கலைநியதி திகழுஞ் சத்தி
விந்துவுடன் பிரகிருதி சிவத்தோ டேக
விமலனருள் மேவிலுயிர் சுத்த னாமே. 73

(இ-ள்) ஆன்மதத்துவங்களுள் ஞானேந்திரியம், கன்மேந்திரியமென்னும் பத்தும், வித்தியா தத்துவத்தில் வித்தையும், இவற்றை இயக்கும் சிவதத்துவமாகிய சுத்தவித்தையுடன் ஏகும்படியும்,

அந்தமில்லாத ஆன்மதத்துவங்களுள் இருபத்திரண்டும் வித்தியா தத்துவத்தில் அராகமும் இவற்றை யியக்கும் சிவ தத்துவமாகிய மகேசுர தத்துவமுடன் ஏகும்படியும்,

ஆன்மதத்துவத்தில் சிந்தையும், வித்தியா தத்துவத்தில் அவ்வியத்தன் என்னும் புருட தத்துவமும், சிவதத்துவமாகிய சதாசிவத்தோடு ஏகும்படியும்,

இயங்கும் வாயுவும், காலம் கலை, நியதி என்னும் வித்தியா தத்துவம் மூன்றும் சிவதத்துவத்துள் சத்தி என்னும் விந்துவுடன் ஏகும்படியும்,

மூலப்பிரகிருதியாகிய மாயை, சிவதத்துவத்துள் சிவம் என்னும் நாததத்துவத்துடன் ஏகும்படியும்,

உயிரானது இறைவனுடைய திருவருட் சத்தியை மேவினால், அது சுத்தாவத்தை என்னும் தூயநிலையை அடையும் (எ-று).

'அவ்வியத்தன்' என்பது, புருடதத்துவத்திற்கொரு பெயர் என்பதை, இந்நூல் 85 ஆம் பாட்டால் அறிக.

## சிவஞானிகளின் ஐவகைநிலை இவ்வகை என்றது

பொறியினிலொன் றதற்கிசைந்த பூத மொன்று
புரிகரணம் நான்குகலா திகளேழ் ஐந்தாம்
அறிகருவி யிவற்றாலோர் விடயந் தன்னை
அறிந்திடுதல் சாக்கிரமாம்; தன்னைக் காண்டல்
நெறிதருசொப் பனம்;பரையாந் தனைக்கா ணாத
நிலவுபரம் பரைநிறைவே சுழுத்தி யாகும்
பிரிவறுஞா னானந்தம் துரிய மாகும்
பெருகுசுகா தீதநிலை அதீதம் ஆமே. 74

(இ-ள்) ஐம்பொறிகளில் ஒன்றும், அவற்றிற்குப் பொருந்திய ஐம்பூதங்களில் ஒன்றும் அந்தக்கரணம் நான்கும், கலைமுதலான வித்தியா தத்துவங்கள் ஏழும். அறிவிக்குங் கருவியாகிய சிவதத்துவமைந்தும் கூடித் தொழிற்பட்டு நிற்க, உயிர் ஒருபொருளை அறிந்து நுகரும் என்பதை நூல்கள் வாயிலாகவும் அநுபவ அறிவின் வாயிலாகவும் சாக்கிர நிலையாகும்.

பின்னர், அத் தத்துவங்களெல்லாம் தான் அல்ல என்று நீக்கி, உயிராகிய தனது உண்மையியல்பினை அறிதலே சொப்பன நிலையாகும். இதனைத்

*தன்னை யறிவது அறிவாம் அஃதன்றிப்*
*பின்னை யறிவது பேயறி வாகுமே"* (2318)

என்னுந் திருமந்திரத்தால் அறிக.

பின்னர், தத்துவங்களை இயக்கிவிடும் இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞான சத்திகட்கு முதலாகிய பராசக்தியை உணர்ந்து, கண்டு, பின் அதனையுங் காணாமல் அதன் நிறைவில் (வியாபகத்தில்) தான் அடங்கியிருக்கும் நிலையே சுழுத்தியாகும்.

பின்னர், பரையையுங் கடந்து இறைவனுடைய ஞானமயமான இன்பசத்தியைப் பெறலே துரியநிலையாகும்,

அதன்பின்னர், இவ் வின்ப சத்தியையுங் கடந்து (சுகாதீதனாய்) இவ்வின்ப சத்திக்கு முதலான சிவத்தினை அடையப் பெறுதலே துரியாதீத நிலையாகும். (எ-று)

சகலாவத்தையைக் காண்டலை,

*"அஞ்சு வகையாக ஆறாறும் நீத்ததற்பின்*
*விஞ்சிவரும் ஆணவத்தின் மேலீடு - வஞ்சமறச்*
*சாற்றிலது கேவலமாம் தான்கழித்துப் போந்தநிலை*
*சாற்றி லதுசகலந் தான்"* (23)

என்னும் பாட்டாலும், தன்னைக் காண்டலை,

"வைத்த அவதரங்க ளெல்லா முடன்வந்தும்
அத்தகைமை கண்டும் அறியாயால்-முத்தனாய்ப்
பாச அறிவும் பதியறிவு மன்றியே
ஆசறவே நின்றவன்நீ யாம்" (31)

என்னும் பாட்டாலும், பராசத்தியில் நிறைதலை,

"விண்ணிற் கதிரோன் விளங்கி விரிந்ததுபோல்
கண்ணிற் கதிரோன் கலந்ததுபோல்-நண்ணிப்
பரைநிறைவில் நீயும் பதிவையே யாகில்
உரையிறந்திட் டொன்றாவை யுற்று" (45)

என்னும் பாட்டாலும், ஞானானந்தம் பெறலை,

"பைய விருந்து பதைப்பற்ற பின்னுனக்குத்
துய்ய சுகப்பிரபை தோன்றுமே" (53)
"துன்பமற்ற விந்தச் சுகப்பிரபை தன்னையே
இன்பசத்தி யென்றறிநீ எப்போதும்" (55)

என்னும் பாடல்களாலும், சுகாதீதமாகிய சிவப்பேற்றினை,

"எல்லாங் கழன்ற இடமே சிவமென்று
சொல்லா டுவர்கழன்ற தூயோர்கள்-நல்லாய்கேள்
நின்றபடி தானே நிலையா நிலையதனில்
நின்றுவிடு நேராக நீ" (59)

என்னும் பாடலாலும் அறிக இப்பாடல்கள் துகளறு போதம்.

மேலே மூவகையாகக் கூறிய தத்துவங்களெல்லாம் இருநூற்றிருபத்தாறாம் என்றலும்; உயிர்கள் இவற்றைப் பெறலே பெத்தநிலை, இவற்றை நீங்கலே முத்திநிலை என்றலும் கூறப்படுகின்றன.

பூதமுத லாயவைத்தை [1]யீற தாகப்
பொருந்தியதத் துவமனைத்தும் பொருவி லாமல்
ஓதியிடுந் தொகையிருநூற் றிருபத் தாறாம்
உயிர்க்கிவைதாம் தனுகரண புவன போகம்
ஆதலினா லுயிரிவற்றைத் தானென் றெண்ணி
அழுந்தியிடும் [2]பெத்தநிலை யகற்று மாறு
சோதிகுரு பரனாய்வந் திவற்றை நீக்கிச்
சொல்லரிய முத்திநெறி நல்குந் தானே. 75

---

சு - வே : 1. ஈதீதாகப், 2. பத்த நிலை.

(இ - ள்) பூதம் 5, பொறி 5, புலன் 5, கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4, வித்தியா தத்துவம் 7, சிவ தத்துவம் 5, வாக்கு 4, ஏடணை 3, குணம் 3, இராகம் 8, உயிர்ச்செயல் 8, வாக்காதிகளின் தொழில் 5, நாடிகள் 10, வாயு 10, ஐம்பூதக் கூறு 25, மண்டிலம் 3, ஆதாரம் 6, உடற் குறி 3, உடம்பு 2, சயம் 5, நோய் 3, மலம் 5, கோசம் 5, தாது 7, அருட்சத்திப் பகுப்பு 5, முதல்வன் தொழில் 5, தொழிலதிபர் 5, அக்கரம் 5, உபதேசம் 3, பதம் 4, பதமுத்தி 4, ஞானம் 4, உயிர்வர்க்கம் 3, மாயா காரியம் 5, கன்மம் 3, பிராரத்தம் 3, உலகம் 3, அவத்தை 18 என்று மேலே பூதம் முதலாக அவத்தை ஈறாகக் கூறப்பட்ட பொருள்களெல்லாம் இருநூற்றிருபத்தாறாகும்.

இவ் விருநூற்றிருபத்தாறும் உயிர்கட்குத் தனுகரண புவன போகமா யிருத்தலால், உயிர்கள் இப் பொருள் களைத்தான் என்று எண்ணி, இவற்றில் அழுந்தியுள்ள நிலை பெத்த நிலை (பந்தம் உற்ற நிலை) ஆகும். ஒளிவடிவாகிய இறைவன் இவற்றை நீக்கும்படி அருண்ஞான ஆசானாய் வந்து நீக்கிக் கூறுதற்கரிய முத்திநெறியை உயிர்கட்கு நல்கும் (எ - று.)

**மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களும் உயிர்க்கு வேறான சடப்பொருள்களே என்பதை ஆராயத் தொடங்கி, முதற்கண் ஐம்பூத இயல்பும், அறிவுக் கருவியில் செவியின் இயல்பும் கூறுவது.**

*மாயாபோ கத்தடைவே சிக்கனவு புவியாம்;*
*மருவிரதம் நெகிழ்ச்சிபுனல்; வளர்தீச்சுட் டொன்றல்;*
*நேயாருந் [1]தொழில்சலித்துத் திரட்டுதல்கால்; அண்டம்*
*நிறைபொருளிற் றோய்வறவே நிறுத்துதல்; வான்*
*குணமாம்*

---

சு - வே : 1. தொழிலவற்றை, தொழிலதனை.

சாயாது சோத்திரத்துக் கிடங்கொடுத்தல் செவிக்குத்
தகுகுணம்விண் ணிடை நின்று சத்தமறி வதுவாம்
ஓயாத சோத்திரத்துக் குறுங்கன்மி வாக்காம்
உயர்வசனம் வாக்கினுக்கு விடயமென வுணரே. 76

(இ - ள்) மாயா போகப் பொருள்களைக் கூறத் தொடங்கின் முன் கூறிய அடைவே, நிலதத்துவம் இறுக்கமாகிய (கடினமாகிய) குணம் உடையது. நீர் இரசமும் நெகிழ்ச்சியும் உடையது. நெருப்பு சுட்டுச் சேர்ப்பிக்குங் குணமுடையது. காற்று சலித்துத் திரட்டுங் குணமுடையது. ஆகாயம் தன்னிடத்தில் அடைந்திருக்கும் பொருள்களில்தான் தோய்வற நிறைந்து நின்று அவற்றைத் தன்பால் நிறுத்திக்கொள்ளும் குணமுடையது.

வானத்தின் குணம் கெடாது செவிக்கு இடம் கொடுப்பதாம். செவி என்னும் அறிவுப் பொறியின் பண்பு ஆகாயத்தினிடமாக நின்று ஓசையை அறிவதாம். அச் செவிக்குப் பொருந்திய தொழிற் கருவி வாக்காகும்; ஆகாயத்தினிடமாக நின்று உரையாடுவதே அவ் வாக்கின் செய்தியாகும் (எ - று).

'சிக்கனவு' என்னுஞ் சொல் இறுக்கம், கடினம் என்னும் பொருட்டு.

## துவக்கும் பாதமும்; சக்கும் பாணியும்.

காற்றினுக்குக் குணந்துவக்குக் கிடங்கொடுத்தல்;
துவக்கின்
கருதுகுணங் காலிடமாய்ப் பரிசமறிந் திடலாம்;
ஏற்றதுவக் குக்கினிய [1] கருமியது பாதம்;
இயங்குகம னம்பாத [2]விடயமதே யாகும்.

---

சு - வே : 1. கருமி பாதம். 2. விடைய மாகும்.

ஆற்றுமழற் குணஞ்சக்குக் கிடங்கொடுத்தல்; சக்குக்
கானகுணந் தீயிடைநின் றுருவநயந் தறிதல்;
மாற்றருநேத் திரந்தனக்குக் [1]கருமியது பாணி;
மற்றதற்கு விடயமிட[2]லேற்ற லாமே.

(இ - ள்) காற்றினுக் கியல்பு ஊற்றிந்திரியத்திற்கு (துவக்கு) இடமா யிருத்தலாம். அவ்வூற்றிந்திரியத்தின் குணம். காற்றினிடமாக நின்று ஊற்றுணர்ச்சியை அறிந்து கொள்ளுதலாம். அவ் வூற்றிந்திரியத்திற்குப் பொருந்திய தொழிற்கருவி (பாதம்) கால்களாம். அக் கால்களும் காற்றினிடமாக நின்று நடத்தல் முதலான தொழில்களைச் செய்யும்.

நெருப்பென்னும் பூதத்திற்கு இயல்பு, கண் என்னும் அறிவுப் பொறிக்கு இடமாயிருத்தலாம். கண் என்னும் அறிவுப் பொறியின் பண்பு நெருப்பு என்னும் பூதத்தினிடமாக நின்று, உருவப் பொருள்களை விரும்பி அறிவதாம். அக் கண் என்னும் அறிவுப் பொறிக்குப் பொருந்திய தொழிற் கருவி (பாணி) கைகளாம், அவற்றிற்குச் செய்தியாயிருப்பவை இடுதல், ஏற்றல் முதலியன வாகும் (எ-று).

## சிங்குவையும் பாயுருவும்; மூக்கும் உபத்தமும்.

சலத்தினுக்குக் குணஞ் [3]சிங்நு வைக்கிடந்தான்
கொடுத்தல்
தா லுவுக்குக் குணம்நீரில் நின்றிரத மறிதல்
நலத்தகுதா லுவின்[4]கன்மி பாயுருவா மதற்கு
நண்ணரிய [5]மலமதனைக் கழிப்பதுவாம் விடயம்
நிலத்தினுக்குக் குணம்நாசிக் கிடங்கொடுத்தன் மூக்கின்
நிகழ்குணம்மண் ணிடமாக நின்றுமணம் அறிதல்
வலித்திடுமாக் கிராணத்துக் குறுங்[6]கன்மி யுபத்தம்
மனமிகுமா னந்தமதற் [7]கெதிர்விடய மெனுமே. 78

---

க - வே : 1. கருமி பாணி. 2. ஏற்றலவை யாமே. 3. சிங்குவைக். 4. கருமி. 5. மலவிசர்க்கம் 6 கருமி. 7. உயர் விடைய

(இ - ள்) நீர் என்னும் பூதத்தின் இயல்பு நா என்னும் அறிவுப் பொறிக்கு இடமாயிருத்தலாம். அந் நாவின் பண்பு, நீர் என்னும் பூதத்தினிடமாக நின்று சுவையை (இரசத்தை) அறிந்து வருதலாம் இந் நாவிற்குப் பொருந்திய தொழிற் கருவி (பாயுரு) மலங்கழிகருவியாம். அதற்குச் செய்தி நீர் என்னும் தத்துவத்தை ஆதாரமாகப் பெற்று இயங்கி மலத்தைக் கழிப்பதுவாம்.

நிலம் என்னும் பூதத்தின் இயல்பு மூக்கு (ஆக்கிராணம்) என்னும் அறிவுப்பொறிக்கு இடமாயிருத்தலாம். அம் மூக்கின் பண்பு நிலம் என்னும் பூதத்தினிடமாக நின்று நாற்றத்தை (சந்தத்தை) அறிதலாகும். இம் மூக்கிற்குப் பொருந்திய தொழிற் கருவி (உபத்தம்) நீர்கழி கருவியாம் இதற்குச் செய்தி நிலமென்னுந் தத்துவத்தை ஆதாரமாகப் பெற்றியங்கி இன்பத்தை விளைவிப்பதாம் (எ – று).

### ஐந்து பூதங்களின் பத்துச் செய்தியைக் (தச காரியம்) கூறத் தொடங்கி, முன்னே நிலதத்துவத்திற்குக் கூறுதல்.

தரையுரத்துத் தரித்திடுத லுருவமருஞ் சொரூபம்
சதுட்கோணங் கிடத்தல்சுபா வஞ்சிறப்பு
விசேடம்
நிரைதரித்த வானளவும் வியாத்தியா பகந்தான்
நீடியயோ சனைநூறு கோடியென விரிந்தே
உரைபரித்த நவமணியை வகைலோக நிறமாய்
உடலினுமை வகையாகி விரிதலுயர் குணர்தான்
வரைவகற்றும் பொறைநிறம்பொன் னிவையறிதல்
காட்சி
மற்றிதைவிட் டகன்றிடுதல் சத்தியென மதியே. 79

(இ–ள்) நிலம் என்னும் பூதத்திற்கு உருவம் முதலிய தசகாரியங்களைக் கூறின், நிலத்திற்கு உரத்துத் தாங்கும் வடிவே உருவமாகும், அதன் சொரூபம் நாற்கோண மரம் சுபாவமாவது கிடத்தலாம். விசேடமாவது கல், மண், நவமணி முதலிய பல வடிவங்களா யிருத்தலாம் வியாத்தி

யாவது ஆகாய தத்துவ அளவாம், வியாபகமாவது நூறு கோடி யோசனை அளவும் விரிந்து நவமணி பொன் முதலிய ஐந்து உலோகங்கள் என்னும் இவற்றின் நிற மாகியும் உடம்பிலே எலும்பு, தோல் நரம்பு இறைச்சி மயிர் என்னும் ஐவகையாகி விரிதலாம். குணமாவது செறிந்து நின்று தாங்குதலாம், அதன் நிறம் பொன்மை யாகும மேலே கூறியவற்றை நன்கு ஆராய்ந்து அறிதலே காட்சியாகும். நிலமாகிய தத்துவம் உயிராகிய யான் அன்று; அது எனக்கு வேறுபட்டதே என்று தெரிந்து அதன்கண் பற்றுவிடுதலே சுத்தியாகும் (எ-று).

தசகாரியங்களை, தத்துவப் பிரகாச உரையில் வரும்;

"மேவுருவ சொரூபசுபா வம்விசே டவியாத்தி
தாவுவியா பகங்குணமே வன்னந்தான் - ஓவும்
தெரிசனஞ் சுத்தியெனச் சேர்பவை பத்தும்
அருள்பசுபா சங்கட்கு மாம்"

என்னும் வெண்பாவால் அறிக,

## நீர் என்னுந் தத்துவத்தின் பத்துச்செயல்

அறலுருவங்குளிர்ந்துபதஞ் செயல்சொருபம்
பிறைபோல்
ஆதல்சுபா வம்விழுதல் நொய்மையதன் விசேடம்
விறன்மருவும் புமானளவும் வியாத்திவியா பகந்தான்
மேதினியிற் பதின்மடங்கு யோசனையாய்
விரிந்தே
திறலெழுவா ரியும் [1]பிறச லங்களுமாய் உடலில்
செறிதருகா ரியமைந்தாய்த் திகழ்வதுவாம்
வெண்மை
நிறமதுகட் டுண்டல்குண மிவையறிதல் காட்சி
நீரசத்தென் றகன்றிடுதல் சுத்தியென நிறுத்தே, 80

(இ-ள்) நீர் என்னும் பூதத்திற்குக் குளிர்ந்து நெகிழ் வாயிருத்தல் உருவமாகும். பிறைபோன்ற வடிவமே சொரூபமாகும். சுபாவம் கீழ்நோக்கி விழுதலாகும்,

---

கூவே : 1. பிரளயங்களுமாய்,

விசேடம் இலேசாயிருப்பது வியாத்தி பிரகிருதி யளவாகும் வியாபகம் நிலமென்னுந் தத்துவத்தின் அளவைக் காட்டிலும் பத்துமடங்கு யோசனை அளவாய் விரிந்து ஏழுகடல் நீரும் பிற நீர் நிலைகளின் நீருமாய், உடம்பிற் பொருந்தியுள்ள சிறுநீர், வெண்ணீர், மூளை, நிணம், சோரி என்னும் ஐந்து காரியமாய், விளங்குவதாம். நிறம் வெண்மையாகும், குணம் சிறை செய்யப்படுதலாகும், மேற் கூறிய அதன் இயல்புகளைத் தெளிவாய் அறிதலே காட்சியாகும். இத்தகைய நீராகிய பூதம் பொய்ப்பொருளென்றறிந்து அதனிற் பற்றுவிடுதலே சுத்தியாகும் (எ-று)

## தீயென்னுந் தத்துவத்தின் பத்துச் செயல்

எரியுருவஞ் சுட்டொன்றல் திரிகோணஞ் சொரூபம்
எழுதல்சுபா வமபெருமை விசேடமிதன் வியாத்தி
விரியுமோ கினியளவும் வியாபகமைந் தழலாய்
மிகுபதினா யிரங்கோடி யோசனையாய் விரிந்தே
பரிவுறுகா யத்தினுமை வகையாதல் குணந்தான்
பந்தமொளி விளக்கெனநின் றனாதிபதஞ்
செயலாம்
அரியநிறஞ் செய்மையிதை [1]அறிதல்தரி சனந்தான்
அங்கிசடம் [2]என்றறிதல் சுத்தியென அறியே. 81

(இ-ள்) நெருப்பு என்னும் பூதத்திற்குச் சுட்டு ஒன்றுவித்திலே உருவமாகும், முக்கோண வடிவமே அதன் சொரூபமாகும். மேல்நோக்கி எழுதல் சுபாவமாம், விசேடம் பெருமையாகும், இதன் வியாத்தி மோகினி (அசுத்தமாயை) என்னுந் தத்துவத்தின் அளவாகும். **வியாபகம்** உதராக்கினி, பூதாக்கினி, விந்துவாக்கினி, காட்டாக்கினி, படிகாக்கினி என்னும் ஐந்து தழலாய், மிகசு பதினாயிரங் கோடி யோசனையளவும் விரிந்து, உடம்பினுள்ளும் பசி, சோம்பல், நித்திரை, மறவி, இணைவிழைச்சு என்னும் ஐந்துவகையா யிருத்தலாம்,

சு-வே ; 1. அறிதல் தரிசனமாம். 2. என்றுணர்தல்.

குணமாவது பந்தம், ஒளி, விளக்கு முதலியனவாய் நின்று, பொருள்களைத் தொன்று தொட்டு பக்குவஞ் செய்து வருதலாம். நிறம் சிவப்பாகும். மேற் கூறிய அப் பூதத்தின் உருவம் முதலானவற்றைத் தெளிவாய் அறிதலே காட்சியாகும் இத்தகைய வேறுபாட்டினையுடைய நெருப்பு சடப்பொருளே என்றறிந்து அதனிற் பற்றுவிடுதலே சுத்தியாகும். (எ-று)

## வளியென்னும் பூதத்தின் பத்துச் செயல்

வளிக்குருவஞ் சலித்துமிகத் திரட்டலறு கோணம்
வளர்சொருபந் தெரியாமல் நிற்றலதன் விசேடம்
திளைத்தல்சுபாவம் [1]நிறைதல் அதற்கினிய வியாத்தி
[2]திகழ்சதா சிவமளவும் வியாபகஞ்செப்
பிடுங்கால்
[3]விளக்கருநூ றாயிரயோ சனைகோடி விரிந்தே
[4]மேவுதச வாயுவுமாய் மெய்யினுமை வகையாம்
அளப்பரிய நிறங்கருமை குணம்பிரித்த விதனை
[5]அறிதல்தரி சனஞ்சுத்தி யதனையகன் றிடலே.82

(இ-ள்) காற்று என்னும் பூதத்திற்கு உருவஞ் சலித்துத் திரட்டுதலாம். அதன் சொரூபம் அறுகோணமாகும். விசேடம் ஏனைய மூன்று பூதங்களைப் போலல்லாமல் விழிக்குத் தெரியாமலிருப்பதாகும். சுபாவம் எல்லாப் பொருளிலும் திளைத்து நிறைந்திருப்பதாகும். அதற்கு வியாத்தி சதாசிவ தத்துவத்தின் அளவாம். வியாபகத்தைக் கூறுங் கால் நூறாயிரங்கோடி யோசனையளவும் விரிந்து பிராணன் முதலிய பத்துக் காற்றாய் உடம்பினும் ஓடல் நடத்தல், இருத்தல், கிடத்தல், தத்தல் என்னும் ஐங்கூறாய் இருத்தலாம். அதன்நிறம் கருப்பாகும், குணம் பிரித்தலாம். மேற்கூறிய இப் பூதத்தின் செயல்களைத் தெளிவாய்த் தெரிதலே காட்சியாகும். இது சடம் என்று கருதிப்பற்று விடலே சுத்தியாகும் (எ-று)

---

சு-வே : 1. நிறைத்தல், 2. திகழ் சதா, 3. விளற் கரு
4. மேவு தெச. 5. அறிதல் தெரிசனம்.

## ஆகாயம் என்னும் பூதத்தின் பத்துச் செயல்

விண்ணுருவம் நிரந்தரமாய் இடங்கொடுத்தல்
சொரூபம்
விருத்தமசை யாதுநிற்றல் சுபாவ[1]மிதன்
விசேடம்
நுண்மைவியாத் தியுஞ்சத்தி தத்துவத்தி னளவாம்
நுவலும்வியா பகங்காலிற் [2]பதின்மடங்காய்
விரிந்தே
மண்முதற்பூ தங்களெல்லா [3]மடக்கியே தன்னுண்
மருவுமுட லினுமைந்து வகையாதல் குணந்தான்
எண்ணரிய குடாகாசம் மடாகாசம் தூமம்
இதன்நிறங்கண் டிடல்காட்சி [4]சுத்தியிதை
விடலே 83

(இ-ள்) ஆகாயம் என்னும் பூதத்திற்கு உருவம் எல்லாப் பொருட்கும் நிரந்தரமாக இடந் தருதலாம். அதன் சொரூபம் வட்டமாகும். அசையாமல் நிற்றலே சுபாவ மாகும். இதன் விசேடம் நான்கு பூதங்களைக் காட்டிலும் நுண்மையா யிருத்தலாம். இதன் வியாத்தி சத்தி தத்துவத்தின் அளவாகும். இதன் வியாபகம் காற்றின் அளவைக் காட்டிலும் பத்து மடங்காய் விரிந்து, நிலம் முதலான பூதங்களை யெல்லாம் தன்னுள் அடக்கி உடம்பினுள் குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஐங்கூறா யிருத்தலாம். இதன் குணந்தான் எண்ணற்ற குடத்தினுள் ஆகாயமும் எல்லா விடங்களிலும் மடுத்துள்ள ஆகாயமுமாக இருத்தலாம், இதன் நிறம் புகை நிறமாம். மேற் கூறியவற்றைத் தெளிய அறிதலே காட்சி யாகும், இவ் வாகாயமும் சடப் பொருளென் றறிந்து விடுதலே சுத்தியாகும் (எ-று)

---

சு-வே ; 1. அதன் விசேடம் 2. பதின் மடங்கா. 3. அடக்கித் தன்னுண், 4. சுத்தியிதன் விடலே.

## அந்தக்கரணங்களின் தொழிலும், வித்தியா தத்துவங்களின் தொழிலும்.

பற்றிடுதல் நிச்சயித்த லெழுந்திருத்த லழுந்தல்
பகர்வரிய மனம்புத்தி யாங்காரஞ் சித்தம்;
உற்றதொரு விடயத்தைச் சத்தாதி யதனை
[1]ஒருபுலனைக் கழற்றியொரு புலனிலுற வைத்தன்
மற்றதனிற் [2]பலன்றருதல் புதுமையினைச் செய்தல்
வரைந்ததுவாய் நிறுத்தல்தொழிற் [3]போதமறி
வுறுதன்
[4]முற்றியபே ராசையெலாம் நான்புசித்தே னென்றல்
முழுதுமயக் கிடலடைவே [5]கலாதியென மொழியே. 84

(இ-ள்) உட்கருவிகளுள் மனத்தின் றொழில் ஐம்பொறிகளுடன் கூடிப் பொருள்களைப் பற்றுதலும், புத்தியின் றொழில் மனம்பற்றியதை நிச்சயித்தலும், அகங்காரத்தின் றொழில் புத்தி நிச்சயித்த பொருள்மேல் ஒருப்பட்டு நானென்று எழுதலும், சித்தத்தின்தொழில் அகங்காரம் எழுந்தபொருளிற் சென்று அழுந்துதலும் ஆகிய இவை அவற்றின் தொழிலென்பர்.

அன்றியும், பொருந்திய சத்தாதியான ஒரு விடயத்தின்கண் ஒரு புலன்றிவைக் கழற்றி மற்றொரு புலன்றிவை வைத்தலும் அவ் வந்தக்கரணங்களின் தொழிலாம்.

இதன்பின், அடைவே வித்தியா தத்துவங்களின் இயல்பினைக் கூறின், காலத்தின் றொழில். நிகழ்கால மாயிருந்து சத்தாதி விடயங்களாகிய பலனைத் தருதலும், எதிர்காலமாயிருந்து புதுமையினைச் செய்தலுமாம். நியதியின் றொழில் வினையை இவ்வளவென்று நிச்சயம்பண்ணி நிறுத்துதலாம். கலையின் றொழில் உயிரை மூடியுள்ள ஆணவத்தைச் சிறிது நீககி, அதற்குத் தொழிலாற்றலை எழுப்புதலாம், வித்தையின் றொழில் உயிரை மூடியுள்ள

---

கு - வே : 1 ஒரு பலனைக் கழற்றல். 2. பலனருந்தல்
3. பேதமறிவுறுதல் 4 முற்றியபே ணசையெல்லாம். 5. கலாதி யென.

ஆணவத்தைச் சிறிது நீக்கி, அதன் அறிவாற்றலை எழுப்புதலாம். அராகத்தின் தொழில் உயிரைத் தளைந்துள்ள ஆணவமலத்தைச் சிறிது நீக்கி அதன் இச்சையாற்றலை எழுப்புதலாம். புருட தத்துவத்தின் தொழில் இச்சையாற்றலால் இச்சிக்கப்பட்டு எழுந்த பொருளையெல்லாம், நான் நுகர்ந்தேன், என நிற்பதாம். மாயையின் தொழில் உலகப் பொருள்களில் முற்றிலும் மயங்கிக் கிடக்கச் செய்வதாம் (எ - று).

'உற்றதொரு விடயத்தை சத்தாதி யதனை ஒருபுலனைக் கழற்றி ஒரு புலனில் உற வைத்தல்' என்பதற்கு 'உற்றதொரு விடயத்தினைச் சத்தாதியாகிய தன்மாத்திரையினை ஒரு புலனிலிருந்து கழற்றி மற்றொரு புலனிடத்தே வைத்தல்' என்றும் பொருள் கூறிக்கொள்க. 'முற்றிய பேராசை யெலாம்' என்றதனால் அராகதத்துவத்தின் தொழில் வருவிக்கப்பட்டது.

## புருடதத்துவத்தின் பெயர்

புகலருமூ லப்பகுதி [1]பிரகிருதி பூமான்
[2]புலனுகர்கா லத்துதயன் பொதுநிலையன்
அதீதன்
சகலவியா பிருதிகரன் பசுஞான முதல்வன்
சடத்துவனவ் வியத்த[3]னுயிரியமானன் சகலன்
அகலரிய சித்தசித்து இருவினைவித் துலவா
ஆங்கார விருத்திகரன் ஆன்மாவென் றினமும்
மிகல்புருட தத்துத்துக் குரியபெயர் பலவென்
றியம்புவர்க ளருங்கலைகள் நிரம்ப வுணர்ந் தவரே.

(இ - ள்) அருங்கலைகளாகிய ஆன்ம வித்தையை மிகவும் கற்ற அறிஞர் வித்தியா தத்துவம் ஏழனுள் ஒன்றாகிய புருட தத்துவத்திற்கு மூலப்பகுதி, பிரகிருதி, பூமான், புலன் நுகருங் காலத்தில் உதிப்பவன், பொது நிலையன், அதீதன், சகலவியாபிருதிகரன், பசுஞான முதல்வன், சடத்துவன்,

---

க - வே : 1. பிரகிருதி புமானைம். 2. புலனுகருங் காலுதயன் 3. உயரியமானன்.

## அந்தக்கரணங்களின் தொழிலும், வித்தியா தத்துவங்களின் தொழிலும்.

பற்றிடுதல் நிச்சயித்த லெழுந்திருத்த லழுந்தல்
பகர்வரிய மனம்புத்தி யாங்காரஞ் சித்தம்;
உற்றதொரு விடயத்தைச் சத்தாதி யதனை
[1]ஒருபுலனைக் கழற்றியொரு புலனிலுற வைத்தன்
மற்றதனிற் [2]பலன்றருதல் புதுமையினைச் செய்தல்
வரைந்ததுவாய் நிறுத்தல்தொழிற் [3]போதமறி
வுறுதன்
[4]முற்றியபே ராசையெலாம் நான்புசித்தே னென்றல்
முழுதுமயக் கிடலடைவே [5]கலாதியென மொழியே. 84

(இ - ள்) உட்கருவிகளுள் மனத்தின் றொழில் ஐம்பொறிகளுடன் கூடிப் பொருள்களைப் பற்றுதலும், புத்தியின் றொழில் மனம்பற்றியதை நிச்சயித்தலும், அகங்காரத்தின் றொழில் புத்தி நிச்சயித்த பொருள்மேல் ஒருப்பட்டு நானென்று எழுதலும், சித்தத்தின்தொழில் அகங்காரம் எழுந்தபொருளிற் சென்று அழுந்துதலும் ஆகிய இவை அவற்றின் தொழிலென்பர்.

அன்றியும், பொருந்திய சத்தாதியான ஒரு விடயத்தின்கண் ஒரு புலன்றிவைக் கழற்றி மற்றொரு புலன்றிவை வைத்தலும் அவ் வந்தக்கரணங்களின் தொழிலாம்.

இதன்பின், அடைவே வித்தியா தத்துவங்களின் இயல்பினைக் கூறின், காலத்தின் றொழில், நிகழ்கால மாயிருந்து சத்தாதி விடயங்களாகிய பலனைத் தருதலும், எதிர்காலமாயிருந்து புதுமையினைச் செய்தலுமாம். நியதியின் றொழில் வினையை இவ்வளவென்று நிச்சயம்பண்ணி நிறுத்துதலாம். கலையின் றொழில் உயிரை மூடியுள்ள ஆணவத்தைச் சிறிது நீக்கி, அதற்குத் தொழிலாற்றலை எழுப்புதலாம், வித்தையின் றொழில் உயிரை மூடியுள்ள

---

சு — வே : 1. ஒரு பலனைக் கழற்றல். 2. பலனருந்தல் 3. பேதமறிவுறுதல் 4 முற்றியபே ணசையெல்லாம். 5. கலாதி யென.

ஆணவத்தைச் சிறிது நீக்கி, அதன் அறிவாற்றலை எழுப்புதலாம். அராகத்தின் தொழில் உயிரைத் தளைந்துள்ள ஆணவமலத்தைச் சிறிது நீக்கி அதன் இச்சையாற்றலை எழுப்புதலாம். புருடதத்துவத்தின் தொழில் இச்சையாற்றலால் இச்சிக்கப்பட்டு எழுந்த பொருளையெல்லாம், நான் நுகர்ந்தேன், என நிற்பதாம். மாயையின் தொழில் உலகப் பொருள்களில் முற்றிலும் மயங்கிக் கிடக்கச் செய்வதாம் (எ - று).

'உற்றதொரு விடயத்தை சத்தாதி யதனை ஒருபுலனைக் கழற்றி ஒரு புலனில் உற வைத்தல்' என்பதற்கு 'உற்றதொரு விடயத்தினைச் சத்தாதியாகிய தன்மாத்திரையினை ஒரு புலனிலிருந்து கழற்றி மற்றொரு புலனிடத்தே வைத்தல்' என்றும் பொருள் கூறிக்கொள்க 'முற்றிய பேராசை யெலாம்' என்றதனால் அராகதத்துவத்தின் தொழில் வருவிக்கப்பட்டது.

## புருடதத்துவத்தின் பெயர்

புகலருமூ லப்பகுதி [1]பிரகிருதி பூமான்
[2]புலனுகர்கா லத்துதயன் பொதுநிலையன் அதீதன்
சகலவியா பிருதிகரன் பசுஞான முதல்வன்
சடத்துவனவ் வியத்த[3]னுயி ரியமானன் சகலன்
அகலரிய சித்தசித்து இருவினைவித் துலவா
ஆங்கார விருத்திகரன் ஆன்மாவென் றினமும்
மிகல்புருட தத்துத்துக் குரியபெயர் பலவென்
றியம்புவர்க ளருங்கலைகள் நிரம்பவுணர்ந் தவரே.

(இ - ள்) அருங்கலைகளாகிய ஆன்ம வித்தையை மிகவும் கற்ற அறிஞர் வித்தியாதத்துவம்ஏழனுள் ஒன்றாகிய புருடதத்துவத்திற்கு மூலப்பகுதி, பிரகிருதி, பூமான், புலன் நுகருங் காலத்தில் உதிப்பவன், பொது நிலையன், அதீதன், சகலவியாபிருதிகரன், பசுஞான முதல்வன், சடத்துவன்,

---

சு - வே : 1. பிரகிருதி புமானைம். 2. புலனுகருங் காலுதயன் 3. உயரியமானன்.

அவ்வியத்தன், உயிர், இயமானன், சகலன், சித்தசித்து, இருவினைவித்து, ஆங்காரவிருத்திகரன், ஆன்மா என்று இன்னமும் பலபெயர்களை வைத்து வழங்குவர் (எ - று).

## சிவதத்துவங்களின் செயலும், எல்லாம் இறைவன் செயலென்றறிந்து தற்போதமற்ற செயலை மேற்கொள்ளுதலும்.

*சத்தமுதல் விடயத்தைப் பகுத்தறிதல் வித்தை*
*தக்கதொழிற் படுத்திடுத லீசர்தொழில் ஞானம்*
*ஒத்ததுசா தாக்கியமாம் சத்திநசை யுறவே*
*உரிசிப்பித் திடுதல் சிவம் தற்செயல்பண் ணுவதாம்*
*தத்துவம்நா லொன்பதுவுஞ் சடமெனவிட் டகன்றே*
*தானறிவா காமலறி யாமையுமா காமல்[1]*
*அத்தனுணர்த் திடவுணரு மறிவுயிரென் றருளால்*
*அறிந்தெவையு மிறைசெயலென் றுன்செயல்விட்*
*டகலே.* 86

(இ - ள்) இயக்குவதாகிய சிவதத்துவம் ஐந்தனுள் சுத்தவித்தை என்பது, ஒலி முதலான விடயங்களை உயிர் பகுத்தறியுமாறு வித்தியாதத்துவம் முதலானவற்றை இயக்கிவிடுங் கருவியாகும். தொழிற்படுத்த உதவுவது மகேசமென்னுந் தத்துவமாம். அறிவுந் தொழிலும் ஒத்தியங்கச் செய்வது சாதாக்கிய தத்துவ மாகும். விருப்பம் உண்டாகும்படி உலகப்பொருள்களில் சுவையுண்டாக்குவது சத்திதத்துவ மாகும். நான்கிற்கும் தலைமையாயிருந்து அச் செயல்களைச் செய்விப்பது சிவதத்துவ மாகும்.

மேற் கூறிய தத்துவங்கள் முப்பத்தாறினையும் உருவம், சொரூபம் முதலியனவாகப் பகுத்துணர்ந்து அவற்றைச் சடமென அறிந்து, அவற்றின்மேற் பற்றுச் செய்வதை விட்டுத், தான் பேரறிவுப் பொருளாகிய பதிப்பொரு

. . . . . . . . . . . .

சு - வே : 1. அறியாமலுமாகாமல்.

ளாகாமலும், அறியாமை (சடம்) யையுடைய பாசப்பொரு ளாகாமலும், பேரறிவுப் பொருளாகிய சிவம் அறிவித்திட அறிந்துவரும் சிற்றறிவுப் பொருளே உயிராகிய நாமென்று திருவருண் ஞானத்தால் அறிந்து, "எல்லாம் இறைவன் செயலால் நிகழ்வனவாம் என்று தெளிந்து உன்செயலாலே நிகழும் என்று எண்ணும் எண்ணத்தினை விட்டொழி வாயாக" (எ - று).

உயிராகிய தான் பேரறிவுப் பொருளாகாமல் என்பதற்கு எடுத்துக் காட்டு.

"நீசிவமாய் யாவுமுன் வசம தாகில்
    நித்திரையில் வைத்தபொருள் கவர்ந்தவனை யறியாய்
நேசமற வருமகித மகற்ற மாட்டாய்
    நெறிபொறிகள் நிற்கையிலே ஒருவன் கையில்
ஆசில்மணி யாழியைநீ கொடுத்தயர்ந்து வருந்தி
    அவ்வாழி வாங்கினவற் கண்டுநினைத் தலினால்
ஆசைவந்து கேட்டலால் நீசிவனன் றாகும்
    ஆதலால் உனையறிவித் திடும் அருளை அறியே" (273)

என்னும் தத்துவப் பிரகாசப் பாட்டால் அறிக.

## பதியே எல்லாவற்றையும் இயக்கும் என்பது

சிவஞ்சித்த வித்தைபுமான் வித்தையினை யடைவே
    செலுத்திபிடு [1]மவையிரண்டை ஞானசத்தி
                                        செலுத்தும்
தவமிக்க சத்திசதா சிவமிரண்டு மடைவே
    தருகாலம் கலைநியதி புருடனைநின் றியற்றும்
நவமுற்றவ் விரண்டையுநற் கிரியைசெலுத் திடுமால்
    நாடுமகேசுரன்நீடு [2]மராகமியற் றிடுமால்
பவமற்ற மகேசனையிச் சாசத்தி செலுத்தும்
    பரையிவற்றைச் செலுத்துமிறை பரையையிற்
                                        றிடுமே. 87

சு - வே : 1. அவையிரண்டும். 2. இராகம்.

(இ - ள்) சிவதத்துவம் பிரகிருதி மாயையை நடத்தும்; சுத்தவித்தை வித்தியாதத்துவத்தை இயக்கும். சிவம் சுத்தவித்தை என்னும் இரண்டினையும் ஞானசத்தி செலுத்தும். (புமான் - மூலப்பிரகிருதி).

சத்திதத்தும் சதாசிவதத்துவம் என்னும் இரண்டும் முறையே காலம் கலை நியதிபுருடன் என்பவற்றை இயக்கும் சத்தி சதாசிவம் என்னும் இரண்டையும் முதல்வனுடைய கிரியாசத்தி செலுத்தும்.

மகேசுரன் என்னுந் தத்துவம் அராகத்தை இயக்கும் அம் மகேசுர தத்துவத்தை இச்சாசத்தி செலுத்தும்

ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி என்னும் மூன்று சத்திகளையும் பதியின் தாதான்மிய சத்தியாகிய பராசத்தி செலுத்தும்.

முதல்வன் பராசத்தியைச் செலுத்தும் ஆதலின், எல்லாம் இறைசெயலென்று கருதி. உன் செயல் என்று கருதுவதை அகன்றொழுகுவாயாக (எ-று)

## மேல் 51 ஆம் பாட்டிற் கூறிய நான்கு வாக்குகளின் இயல்பு கூறுதல்.

உள்ளொளியாய் [1]நாதவொலி யாகி நிற்றல்
உன்னரிய சூக்குமைபை சந்தி தானும்
எள்ளரிய குறிப்பினின் [2]மந் திரந்தி யானம்
இலங்கியமத் திமையுரையா துரைத்தல்நெஞ்சால்
விள்ளரிய வைகரிதான் பிறருங் கேட்க
விளம்புமொலி யக்கரமிவ் வடைவே மேவித்
[3]தெள்ளியவை கரிமுதலாய் வாக்கு நான்கிற்
றிகழ்த்திடுமென் றிறையருணூல் புகன்ற தாமே.

---

சு - வே : 1. நாதவொளி. 2. மந்திரத் தியானம்.
3. தெள்ளுவைகரிமுதலாய்.

(இ-ள்) மேலே "சூக்குமைபை சந்தியுமத் திமைநாவிற்குச் சொல்லுதவும் வைகரியு மெனநான்காகும் வாக்குகள் விந்துவிற் றோன்றும்" (51) என்ற நான்கு வாக்குகளில், உள்ளொளி என்னும் பரசரீரத்தி னுள்ளதாய் நாதமாத்திரையாகி நிற்பது சூக்குமை வாக்காகும். எழுத்துக்களைத் தனக்குள் குறிக்கொண் டிருப்பது பைசந்தி என்னும் வாக்காகும். மந்திரம் தியானம் என்று இரண்டாய் விளங்கும் மத்திமை யானது வாயினால் பிறர் கேட்கக் கூறப்பெறாமல் நெஞ்சால் உரைக்கப்படுவதாம். தனக்கேயன்றிப் பிறர்க்குங் கேட்குட்படி வெவ்வேறெழுத தொலியாய் விளர்பப்படுவது வைகரியாகும். எழுத்துக்சுளெல்லாம் இம் முறைப்படி மேவித், தெளிந்த வைகரியாதியாக ஆகி இவற்றால் உயிர்கட்குப் பொருளுணர்வைத் திகழ்த்தும் என்று சிவாகமங்கள் கூறும் (எ-று)

## பதியின் படைப்புத் தொழில்

*(சுத்த மாயையின் தோற்றம்)*

பரனருளாற் குடிலையினில் நாதம் விந்து
 பரவியசா தாக்கியமீ சுரம்நீள் வித்தை
வருமுறையே சிவஞ்சத்தி சதாசி வந்தான்
 மகேசனுருத் திரனிவற்றின் மருவித் தோன்றும்
விரவியவாக் கக்கரங்கள் மந்தி ரங்கள்
 வேதாதி கலைகள்பதம் புவன மெல்லாம்
திரமருவு நிவிர்த்தாதி கலைக டானும்
 செப்பரிய விந்துவினுற் பவமா மன்றே. 89

(இ-ள்) "உளதாகும் பதியே" (38) என்று முன் கூறிய பரமேச்சுரன் திருவருட் சத்தியால் குடிலை என்னும் தூய மாயையில் ஞான சத்தி வடிவேயான நாத தத்துவமும், கிரியா சத்தி வடிவே யான விந்து தத்துவமும் ஞான சத்தியும் கிரியாசத்தியும் சமமாய்ப் பொருந்திய சாதாக்கிய தத்துவமும், கிரியாசத்தி மிகுந்து ஞானங் குறைந்த மகேச்சுரமும், ஞானம் மிகுந்து கிரியை குறைந்து

சுத்தவித்தையும் தோன்றும். (இவ் வைந்திற்கும் சிவ தத்துவம் என்று பெயர்) இவ் வைந்து தத்துவங்களில் சிவம், சத்தி, சதாசிவன், மகேசன், உருத்திரன் என்பவர் பொருந்தித் தோன்றுவர்.

சூக்குமை முதலிய நான்கு வாக்குகளும், அகரம் முதலான எழுத்துக்களும், சிவ முதலான மந்திரங்களும் வேதம் முதலான கலைகளும், பதங்களும், புவனங்களும், நிவிர்த்தி முதலிய கலைகளும், மேற் கூறிய விந்து தத்துவத்தில் தோன்றுவனவாகும். (எ-று).

## அசுத்த மாயையின் தோற்றம்

[1]அனந்தனரு ளாலசுத்த மாயை தன்னில்
அரியகலை காலங்கள் நியதி தோன்றும்
[2]நினைந்தகலை யினின்வித்தை [3]யராகந் தோன்றும்
நிகழ்புருடன் புலனுகருங் காலந் தோன்றும்
முனைந்தகலை யினின்மான்முக் குணம தாகும்
மூக்குணமும் ஒத்தநிலை சித்த மாகும்
இனந்தருமுக் குணத்தினிலொன் றுயரிற் புத்தி
ஏராரும் புத்தியினாங் கார மாமே. 90

(இ-ள்) அனந்ததேவ நாயனார் அருட்சத்தி கலக்கலால் அசுத்தமாயையாகிய முதற்காரணத்திலிருந்து அரிய கலையும், காலமும், நியதியும் தோன்றும். பின்னர் கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றும், அப்பொழுது உயிர் மேலே கூறிய ஐந்து தத்துவங்களுடன் கூடிப், புருடன் என்று பெயர் கூறப்படுப் புலன்களை நுகரத் தொடங்கும் நிலை உண்டாம். அந் நிலைக்குப் புருட தத்துவம் என்று பெயராகும், முன்னே

சு-வே : 1. அனந்த ரருளால் 2. நினைந்த கலையிதனின்
3. இராகந்

கூறிய கலையிலிருந்து முக்குணவடிவான பிரகிருதி மாயை தோன்றும். (கலை, காலம், நியதி வித்தை, அராகம், புருடன், பிரகிருதி, மாயை என்னும் ஏழும் வித்தியாதத்துவமெனப்படும்.)

அம் முக்குணங்களும் ஏற்றக் குறைதலின்றி ஒத்து விளங்கியநிலை சித்த மென்னுந் தத்துவமாம். அம் முக்குணங்களும் ஏறியும் குறைந்தும் நின்றநிலை புத்தி தத்துவமாகும். அப் புத்தியிலிருந்து ஆங்காரம் தோன்றும். (எ-று)

பிரகிருதி மாயையினைச் சீகண்ட உருத்திரர் சக்தி கலக்க சித்தமாகிய குணதத்துவந் தோன்றும் என்றும் கூறுவ துண்டு.

## இதுவும் அது

ஆங்காரம் மூன்றாய்முக் குணங்கள் கூடும்
[1]அவற்றின்பேர் தைசதவை கரிபூ தாதி
நீங்காத சாத்திகதை சதத்திற் றோன்றும்
நிகழ்மனமும் புத்தியிந் திரிய மைந்தும்
பாங்கான ராசதவை காரி தன்னிற்
[2]பகர்கரும வாக்காதி யைந்துந் தோன்றும்
தீங்காருந் தாமதபூ தாதி தன்னிற்
றிகழ்ந்திடுஞ்சத் தாதியினிற் நிகழும் பூதம் 90

(இ-ள்) மேலே கூறிய ஆங்கார தத்துவம் முக்குணங்களுடன் கூடி மூன்றாய் விளங்கும். சத்துவ ஆங்காரத்திற்குத் தைசத மென்றும், இராசத ஆங்காரத்திற்கு வைகாரிக மென்றும், தாமத ஆங்காரத்திற்குப் பூதாதிக மென்றும் பெயராகும்.

அவற்றுள் சாத்துவிக வடிவான தைசத ஆங்காரத்தினின்றும் மனமும், அறிவுக் கருவி (ஞானேந்திரியம்) ஐந்தும் தோன்றும். இராசத வடிவான வைகாரிக ஆங்காரத்தினின்றும் வாக்கு முதலான தொழிற் கருவி (கன்மேந்திரியப்) ஐந்துந் தோன்றும். தீமை பொருந்திய

கூ-வே: 1. அதனாமம் 2. பகரவரும்

தாமத வடிவான பூதாதியாங்காரத்தினின்றும், சத்தம் முதலான தன்மாத்திரை ஐந்துந் தோன்றும். சத்ததன்-மாத்திரை முதலானவற்றிலிருந்து தூல பூதம் ஐந்துந் தோன்றும், (எ-று).

## இதுவும் அதுவும், ஒடுக்கமும்.

சத்ததில் [1] வெளிதோன்றும் பரிசந் தன்னிற்
சமீரணனுற் பவமாகும் உருவந் தன்னில்
ஒத்தொளிரு மங்கி [2]யிர தத்திற் றோன்றும்
உதகமிருங் கந்தத்தி லுதிக்கும் பூமி
வைத்தகுண மொன்றினுக்கொன் றதிக [3]மாகும்
[4]மலரயன்முன் னைவரதி தெய்வ மாகும்
தத்துவங்கள் சிவமாதி புவியீ றாகத்
தருமுறையே ஒடுக்குமெனச் சாற்றும் நூலே. 92

(இ-ள்) "சத்தாதியினிற் றிகழும் பூதம்" என்று மேற்கூறியதை விளக்கிக் கூறின், நுண் பூதமாகிய சத்த தன்மாத்திரையிலிருந்து தூல பூதமாகிய ஆகாயந் தோன்றும்; பரிச தன்மாத்திரையிலிருந்து காற்று என்னுந் தூல பூதந் தோன்றும்; உருவ தன்மாத்திரையிலிருந்து நெருப்பென்னுந் தூல பூதந் தோன்றும்; இரச தன்மாத்திரையிலிருந்து நீர் என்னுந் தூல பூதம் உண்டாம்; கந்ததன் மாத்திரையிலிருந்து நிலம் என்னும் தூல பூதம் வரும்.

மேலே கூறிய ஆகாயம் முதலான ஐந்து தூல பூதங்களில் சத்தம் முதலான குணங்கள் ஒன்றினுக்கொன்று அதிகமாகும்.

நிலம் முதலான ஐம்பூதங்கட்கும் நிரனிறையாய் நான்முகனும் திருமாலும் உருத்திரனும் மகேசனும் சதாசிவம் அதிதெய்வங்களாகும்.

---

அ - வே : 1. வெளியுதிக்கும். 2. இரசத்திற் 3. மாக 4. மாலயன்முன்

"பரனருளால்" (89) என்னும் பாட்டிலிருந்து கூறப்பட்ட சிவதத்துவமுதல் நிலதத்துவ மீறான முப்பத்தாறு தத்துவங்களை முறைப்படி அனந்தவேத நாயனாரும், முதல்வனும் அசுத்தமாயையிலும் சுத்தமாயையிலும் ஒடுக்குவர் எனச் சிவாகமங்கள் கூறும் (எ - று).

## புறக்கருவி அறுபதும் முப்பத்தாறில் அடங்கும் என்றல்

ஓதுபுறக் கருவியறு பதுமா றாறில்
ஒடுங்குமுறை யைப்பூதத் தையைந் தாகும்
பூதபரி ணாமமுறு நாடி பத்தும்
புடவியினில் ஐயிருகால் பொருந்துங் காலில்
நீதுவச னாதிகள்வாக் காதி யைந்தில்
நிலவிய[1]விந் துவில்நாலு வாக்கு மேவும்
கோதுறுமூ வேடணையா காயம் மேவும்
குணமூன்றும் புமான்றனையே கூடுங் காணே. 93

(இ - ள்) ஐம்பூதங்களின்காரிய மாகிய இருபத்தைந்தும், நாடிகள் பத்தும், காற்று பத்தும், வசனாதி ஐந்தும், வாக்கு நான்கும், ஏடணை மூன்றும், குணம் மூன்றும் ஆகிய புறக்கருவி அறுபதும் முப்பத்தாறு தத்துவங்களில் ஒடுங்கும் முறையைக் கூறின், பூத காரியம் இருபத்தைந்தும் ஐம்பூதத்துனுள் அடங்கும். பூதக் கலப்பால் உண்டாகிய நாடிகள் பத்தும் நிலதத்துவத்தில் அடங்கும். பிராணன் முதலிய பத்துக் காற்றும் வாயு பூதத்தி லடங்கும். வசனாதியைந்தும் வாக்காதி தொழிற்கருவியில் அடங்கும். சூக்குமை முதலான நான்கு வாக்கும் விந்து தத்துவத்தில் அடங்கும். ஏடணை மூன்றும் ஆகாயத்தில் அடங்கும். மூன்று குணமும் மூலப்பிரகிருதியில் அடங்கு என்று அறிவாயாக (எ - று).

---

உ - வே: 1. விந்துவினில் நால்வாக்கு மேவும்,

## சூக்கும உடம்பாகிய புரியட்டகத்துள் ஏனைய தத்துவங்களெல்லாம் அடங்கும் என்றல்.

[1]போற்றிசத் தாதியுங் கரண மூன்றும்
பொருந்துபுரி யட்டகமாஞ் [2]சூக்கு மத்தே
ஏற்றமிகுந் தத்துவங்கள் முப்பத் தாறும்
இசைந்தடங்கும்; புவியாதி சோத்தி ராதி
[3]சாற்றியவாக் காதிவச னாதி யெல்லாம்
சத்தாதி தமிலடங்கும்; சித்தந் தானும்
ஆற்றலுறுங் கலாதிசிவ கருவி யெல்லாம்
அடங்கியிடும் மனம்புத்தி யாங்கா ரத்தே. 94

(இ - ள்) போற்றி உரைப்படும் சத்தம் முதலிய தன்மாத்திரை ஐந்தும், மனம் புத்தி ஆங்காரமென்னும் கரணம் மூன்றும், பொருந்தி புரியட்டகமென்று கூறப்படும் சூக்கும் உடம்பில், உயர்வு பொருந்திய முப்பத்தாறு தத்துவங்களும் பொருந்தி அடங்கு மென்க. எவ்வாறடங்கு மெனில்? நிலம் முதலான தூல பூதங்கள் ஐந்தும், செவி முதலான அறிவுக்கருவிகள் ஐந்தும், வாக்கு முதலான தொழிற்கருவிகள் ஐந்தும், வசனம் முதலான அவற்றின் தொழில் ஐந்தும், ஆகிய இருபதும் சத்தம் முதலான தன் மாத்திரையில் அடங்கும்; சித்தமும், கலைமுதலான வித்தியா தத்துவங்களேழும், சிவதத்துவமைந்தும் ஆகிய பதின் மூன்றும் மனம், புத்தி, ஆங்காரத்தே அடங்கும் (எ - று.)

புரியட்டகம் சூக்கும தேகமும் பரதேகமு மென்று இரு வகைத்து. அவற்றுள், தன்மாத்திரை ஐந்தும் அந்தக்கரணம் மூன்று மாகிய எட்டானுமாயது சூக்குமதேகம், இது காலோத்தரத் திற்கண்டது என்பர் சிவஞான முனிவர். (சி. போ-பாடியம்-2-2)

---

க - வே : 1 போற்றியிடுஞ் சத்தாதி கரணம் மூன்றும்.
2. சூக்கமற்றே 3. சாற்றரிய

## முப்பத்தாறு தத்துவங்களை மூன்றாகவும் இருபத்தாறாகவும் இயம்பலாம் என்றல்.

மூலமுதல் எண்மூன்றும் மாயை என்றும்
முயங்குகலா திகளேழும் புருட னென்றும்
கோலுசிவ முதலைந்து மீச னென்றும்
கூறுவர்மான் மோகினிநீள் விந்து வென்றும்
ஏலமரும் மாயையிரு பத்து நாலோ
டிகல்புருட னுடனிருபத் தைந்தா மென்றும்
மேலமரு மீசனுட னிருபத் தாறாய்
[1]விதிப்பர்பர சிவத்தொடிரு பத்தேழா மென்றே.

(இ - ள்) நிலம் முதலான இருபத்துநான்கு ஆன்ம தத்துவத்தினை மாயை என்றும், கலை முதலான ஏழு வித்தியா தத்துவத்தினைப் புருடனென்றும், நாதம் முதலான ஐந்து சிவதத்துவத்தினை ஈசன் என்றும் கூறுவர். இம் மூன்றினையும் அடைவே மான், மோகினி, விந்துவென்றும் கூறுவர்.

மேல், மாயை என்று கூறிய இருபத்துநான்குடன் கலாதிகள் ஏழும் கூடி ஒன்றான புருடனைச் சேர்க்க இருபத்தைந்தாம். இவ் விருபத்தைந்துடன் சிவம் முதல் ஐந்துங் கூடிய ஈசனைச் சேர்க்க, இருபத்தாறாம். இவ் விருபத்தாறுடன் தத்துவாதீதனான பரசிவத்தைச் சேர்க்க இருபத்தேழாம் என்று அறிஞர் கூறுவர் (எ - று).

'கூறுவர்' என்னுஞ் சொல்லினை மூன்றிடத்தும் கூட்டுக.

## வேதாந்த நிலையுடையோர் கூறுவது.

பூதமவை ஐந்தடைவே ஒன்றினின்நான் காகப்
பொருந்திருப துடன்[2] முதலைந் தையைந்தாம்
புகலின்
ஓதியவான் நாலாகும் அதிலொருகூ றனிலன்
உறில்மனமாம் ஒருகூறங் கெரிமருவிற் புந்தி

---

சு - வே : 1. விதிப்சர்சிவத் தோடிருபத் தேழா மென்றே.
2. முதலை யைந்தாம் புகலின்.

நீதியிலங் கொருகூறு சலமருவிற் சித்தம்
நின்றதொரு கூறுபிரு திவியுறிலாங் காரம்
ஆதிமுதல் வானமிய மானனின்வ் வடைவே
அனிலனுமை வகையாகு மதுபகரக் கேளே. 96

(இ - ள்) பூதங்கள் ஆகாயம் முதலாக ஐந்தாகும், அவை முறையே இரண்டாகப் பிரிந்து நிற்க, அவ் விரண்டில் இரண்டாங் கூறு நான்காகப் பிரிந்ததனால் உண்டான நான்கு அரைக்காற் கூறுகளும் ஏனைய நான்கு பூதத்துடன் பொருந்திய இருபதுடனே ஒவ்வொரு பூதத்தின் முதற்கூறு ஐந்தும் சேர இருபத்தைந்து தத்துவங்களாகும். அவ் விருபத்தைந்தினை விளங்கக் கூறின், சொல்லப்பட்ட வானின் இரண்டாங் கூறு நான்காகும். அவ் வான்கூறில் ஒன்று காற்றுடன் ஒன்றில் மனம் உண்டாம்; ஒரு கூறு நெருப்புடன் பொருந்தில் புத்தி தோன்றும்; ஒரு கூறு நீருடன்பொருந்தில் சித்தம் உண்டாம்; ஒரு கூறு மண் ணுடன் சேரில் ஆங்காரந் தோன்றும்; முதற் கூறாகிய வானமே இயமானனாம்.

இம் முறைப்படியே காற்று என்னும் பூதமும் ஐவகை யாகும். அதனைக் கூறக் கேட்பாயாக (எ-று).

## இதுவும் அது

காலுமொரு நான்கதனி லொருகூறு வானிற்
கலக்கில்து சமானனொரு கூறழலி லுதானன்
கோலுமுத கத்தொருகூ றபானனெனப் புகலும்
குலவுமொரு கூறவனி உறிலதுவே பிராணன்
சாலுமுதல் வாயுவியா னன்திறத்தி னாகும்.
தழலுமொரு நால்வகையா [1]மொருகூறம் பரத்தின்
மேலுறிலங் கதுசெவியாங் காலொருகூ றுடலாம்
விரிதிரைநீ குறிலொருகூ றதுதாலு வெனுமே

கூ-வே : 1. ஒருகூறம் பரந்தான்.

(இ-ள்) காற்றின் ஒருபகுதி நான்கு கூறாகி, அவற்றுள் ஒரு கூறு ஆகாயத்திற் கலக்கில் அது சமான வாயுவாம். ஒருகூறு நீரிற்கலக்கில் அபான வாயுவாம். ஒருகூறு மண்ணிற் கலக்கில் பிராண வாயுவாம். முதற்பகுதியான காற்று வியானன் முதலான கூறுபாடுடையனவாகும்,

நெருப்பும் இருபகுதியாய் ஒரு கூறு நான்கு பகுதியாகிட அவற்றுள் ஒரு கூறு ஆகாயத்திற் சேரில் அது செவியென்னும் அறிவுக் கருவியாம். ஒரு கூறு காற்றுடன் கலக்கில் அது உடல் (துவக்கு) என்னும் அறிகருவியாம். ஒரு கூறு நீருடன் ஒன்றில் நாக்கு என்னும் அறிகருவியாம். (எ-று).

## இதுவும் அது

எனுமொருகூ [1]றவெனியினி லாக்ராண மாகும
எரிமுதனேத் திரமாகும் [2]நீருப் நான்காம்
உனிலொருகூ றண்டமுறிற் சத்த மாகும்
ஒருகூறு வளிமருவிற் பரிச பாகும்
துனியொருகூ றெரிமருவி லுருவ மாகும்
தொடர்ந்தொருகூ றவனியுறிற் பரிசமாகும்
தனிநிலைநீ [3]ரிரதமெனப் புகல லாகும்.
தரணியின்நால் வகையதுவுஞ் சாற்றக் கேளே

(இ-ள்) நெருப்பில் ஒரு கூறு நிலத்திற் கலக்க உண்டாயது மூக்கு (ஆகிராணம்) என்னும் அறிகருவியாகும். நெருப்பின் முதற் கூறாகிய பாதியே விழி (சட்க) என்னும் அறிகருவியாகும்.

நீரும் இருபகுதியாய் இரண்டாங் கூறு நான்காக, அவற்றுள் ஒரு கூறு ஆகாயத்தொடு கலக்கில் ஒலி (சத்தம்) உண்டாகும், ஒரு கூறு காற்றுடன் கலக்கில் ஊறு (பரிசம்) உண்டாம். ஒரு கூறு நெருப்புடல் பொருந்திய உருவந்

---

கு-வே : 1. றவனியுறல் 2. நீர்நான்காகும் 3. இரசமெனப்

தோன்றும். ஒரு கூறு மண்ணுடன் சேரில் மணம் (கந்தம்) உண்டாம். நீரின் முதற்பாதி யாகிய தனிநிலையே இரத மாகும். (ரசம்) எனப் புகலலாகும். இனி நிலத்தின் நால் வகையினையுஞ் சொல்லக் கேட்பாயாக (எ-று).

## இதுவும் அது

[1]சாற்றிலொரு கூறுவிசும் புறில்வாக் காகும்,
சமீரணனி லொருகூறு பா தமாகும்
ஏற்றெரி யினிலொருகூ றடையிற் பாணி
இரும்புனலி லொருகூறு [2]பாயு ராகும்
மாற்றியமண் முதனிலையே உபத்த மாகும்
மறைந்தடைவே தத்துவங்க ளையைந் தாமுற்
போற்றியபூ தங்களும்நாற் [3]கரணந் தம்மைப்
[4]பொருந்தியற் றிடுநிலையும் புகலக் கேளே. 99

(இ-ள்: நிலதத்துவமும் இருபகுதி யாகி, இரண்டாங் கூறு நான்காக, அவற்றுள் ஒரு கூறு விசும்பாகிய பூதத் துடன் கலகில் வாக்கு என்னும் தொழிற்கருவி தோன்றும் ஒரு கூறு நெருப்புடன் பொருந்தில் பாணி கைகளின் உயிர்க் கூறு என்னுங் கருவி தோன்றும். ஒரு கூறு நீ ரென்னும் பூதத்துடன் கலக்கில் பாயுரு வாகும். நிலத்தின் முதற்பாதியே உபத்தமென்னுந் தொழிற்கருவியாகும்.

இவ்வாறு ஒரு பூதத்தின் கூறு மற்றொரு பூதத்தினுடன் கலந்தும். ஒவ்வொரு பூதத்தின் கூறு தனித்து நின்றும் மனம் முதலான இருபத்தைந்து தத்து வங்கள் உண்டாயின.

இனி முன் போற்றிக் கூறிய பூதங்களும் நான்கு கரணங்களைப் பொருந்தி நின்று அவற்றைச் செயற் படுத்தும் நிலையினையும் சொல்லக் கேட்பாயாக (எ—று).

---

சு–வே : 1. சாற்றுமொரு 2. பாயுருவ தாகும் 3. கரணந் தன்னை 4. பொருந்தியிடு மிதனிலையும்.

## வேதாந்த நிலையுடையோர் கூற்றினைச், சிவாகம னசவசித்தாந்த நிலையோர் கொள்ளார் என்பது

வாயுவிட மாகமனஞ் சஞ்சலமாய் நினையும்
வன்னியிட மாய்ப்புந்தி பண்ணிடும்நிச் சயங்கள்
ஆயுநீ ரிடஞ்சித்தஞ் [1]சலித்துக்கொண் டிழியும்
ஆங்கார மணணிட மா யபிமானம் புரியும்
நேயமுட னையைந்தா ந் தத்துவமைம் பூத
நெறியெனவே வேதாந்த நிலையுடையோர் மொழிவர்
தூயசிவா கமசைவ சித்தாந்த நிலையோர்
சொல்லாரிப் பொருளதனைக் கொள்ளாரென் றுணரே. 100

(இ-ள்) சூக்குமமாகிய வாயு பூதத்தின் ஒரு கூறு ஆகாய பூதத்தினிடம் சேர்ந்து உண்டானதே மனம் ஆகையால், அது வாயுவைப் போல விடயங்களிற் சென்று, சஞ்சலமாய் (அசையும் இயல்புள்ளதாய்) நினைத்தலைச் செய்யும். சூக்குமமாகிய தேயு பூதத்தின் ஒரு கூறு ஆகாய பூதத்தினிடம் சேர்ந்துண்டானதே புத்தியாகையால், அது தேயுவைப் போலப் பொருள்களை விளக்கி நிச்சயம் பண்ணும் சூக்குமமாகிய அப்பு பூதத்தின் ஒரு கூறு ஆகாயத்தினிடஞ் சேர்ந்துண்டானதே சித்தமாகையால், அது அப்புவினைப் போலப் பொருள்களைச் சலித்துப் பற்றி யிழுக்கும். சூக்குமமாகிய பிருதிவு பூதத்தின் ஒருகூறு ஆகாய பூதத்தினிடஞ் சேர்ந்துண்டானதே ஆங்காரமாகையால் அது பிருதிவியைப் போற் கடினமாய் நின்று நான் என்று அபிமானிக்கும்.

இவ்வாறு இருபத்தைந்து தத்துவங்களும் ஐம்பூதங்கள் கலந்து உண்டான (பஞ்சீகரண) நெறியால் தோன்றும் என்று வேதாந்த நிலையுடையோர் கூறுவர்.

---

சு-வே : 1. சலித்துக் கொண்டழியும்

ஆனால், தூய **சிவாகம** நெறியிற் செல்லும் **சைவ சித்தாந்த** நிலையினையுடையோர் மேற் கூறிய இருபத்தைந்து தத்துவங்களின் தோற்றத்தை இவ்வாறு கூறார். அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார் என்று உணர்வாயாக (எ-று)

## சிவாகம சைவ சித்தாந்த நிலையோர் மும்முதற் பொருள்களைக் கூறி, அம் மூன்றினையும் அநாதி என்பார் என்பது

*அனைத்துலகும் [1]மூவகையா மவனவளோ டதுவாம்*
*அளவிலுள வாயுலவி அழிந்திடலா லிவற்றைத்*
*தனக்குமுத னடுவீறி லானெவையுங் கடந்த*
*தலைவனியற் றிடவேண்டுந்; [2]தாணுவுள தாக*
*மனத்தவனை நினைத்தரிய சித்திமுத்தி பெறலான்*
*மருவுபசு வர்க்கமுள; மலமூன்றும் உளவாம்*
*உனற்கரிய துக்கசுகம் அஞ்ஞானம் மயக்கம்*
*[3]உயிருறலான்; மும்முதலு மநாதியென வுணரே*

இவ் எல்லா உலகங்களும் அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் இவ்வாறு பகுத்து மூவகையாய் வழங்கப்படுவதாகி, முறைப்படி தோன்றி, நின்று, அழிந்து முத்தொழிலுடைமையால், இப் பெரிய மூன்று தொழில்களை, ஒருவரால் ஆக்கப்படுதலும் காக்கப் படுதலும் ஒடுக்கப்படுதலும் இல்லாதவனும் எல்லாப் பொருள்களையுங் கடந்தவனும் ஆகிய ஒப்பற்ற பெருந் தலைவன் நிமித்த காரணனாய் நின்று இயற்றிடவேண்டும். அத்தகைய தலைவனாகிய தாணு உளதாக அளவைகளால் நிச்சயிக்கப்படவே. அத்தகைய தலைவனை மனத்தாலே

---

சு - வே : 1. எழுவகையாம், எழுவகையாய், 'மூவகையாம்' என்பது, சரஸ்வதி மகால் சுவடி பாடம்.
2. தாணு வுணவாகும்; தாணுவுளவாக.
3. உயிருறுகால் அம் முதலும்.

நினைத்து, அரிய சித்தியினையும், முத்தியினையும் பெற்று வருதலால், அப்பேற்றினைப் பெறும் உயிர்க்கூட்டம் உள வாதலும் அளவைகளால் துணியப்படுகின்றது. அவ்வுயிர்க்கூட்டம் துன்பயின்பப் பயனையும் அறியாமையினையும் மயக்கத்தினையும் பெற்றுவருதலால் அம் மூன்றிற்கும் ஏதுவான கன்மமலமும், மாயா ஆணவ மலமும் உளவாதலும் அளவைகளால் துணியப்படுகின்றது. மேலே நிச்சயிக்கப்பட்ட பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களும் ஒரு பொருளிலே இருந்து ஒரு காலத்திலே தோன்றியவையல்ல; தனித்தனியான அநாதிப் பொருள்களாம் (எ - று).

இப்பாட்டின் கருத்தினை,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி"

என்னும் திருமந்திரப் பாடலால் (115) அறிக.

## முதல்வன் வடிவாகிய பஞ்சப்மரம மந்திரத்தில் அடங்கியுள்ள முப்பத்தெட்டு கலாசத்திகளால் அம் முதல்வன் இவ் வுலகை விதித்து, வகுத்து, அடக்கும் என்பதை உணர்த்தத் தொடங்கி, முன்னர் அச் சத்திகளைக் கூறுதல்.

அண்ணல்திரு முகமைந்தாம் ஈசானம் புருடம்
அகோரமரும் [1]வாமஞ்சத் தியோசாத மென்ன
நண்ணியிடு மீசான கலையைந்தாம் புருடன்
நயந்தகலை யொருநான்காம் நாலிரண்டா மகோரம்
திண்ணமிகும் வாமகலை யொருபதுடன் மூன்றாம்
திகழ்சத்தி யோசாதத் தெண்கலையாந் தெரிந்தே
எண்ணமருங் கலைமுப்பத் தெட்டாமென் றிறைநூல்
இயம்பியிடு [2]மிந்நாமம் விளம்புமுறை கேளே.

---

க - வே : 1, வாமமுடன் சத்தியமென் றறிக. 2. இதனாமம்.

(இ - ள்) அண்ணல் என்னும் சதாசிவ மூர்த்தியின் திருமுகங்கள் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம என்று ஐந்தாகும். அவ் வைந்து முகங்களுள் ஈசானத்திற்குரிய கலை ஐந்தாகும் தத்புருட கலை நான்காகும்.

அகோரகலை எட்டாகும்; வாமதேவகலை பதின்மூன்றாகும் சத்தியோசாதகலை எட்டாகும்; இவ் வைந்தற்கும் உரிய கலைகள் முப்பத்தெட்டாகும் என்று சிவாகமங்கள் கூறும். இம் முப்பத்தெட்டுக் கலைகளின் பெயர்களைக் கேட்பாயாக (எ - று).

## இதுவும் அது

சத்தியதெண் கலைநாமஞ் சாற்றிடுவ மடைவே
    தகுஞ்சத்தி இருத்தியுடன் [1]தியதியையிந் திரையும்
நித்தியமே தாவினிய காந்தியுடன் [2]சுவதை
    நிகழ்திருதி யெனவெட்டாம்; நிரைநிரையே
ஒத்தவலப் பான்முதலாய் அகங்கால்க விரண்டும்
    உரைத்தகங் கையிரண்டாக் கிராணமுட னுச்சி
வித்தகமாம் வாகுவிரண் டிவையிருநான் கடைவே
    வியாபரிக்கு மெனமுதல்வன் நூலுரைக்கு
        நெறியே. 103

(இ - ள்) பஞ்சப் பிரம்ம மந்திரங்களுள் சத்தியோசாத மந்திரத்திற் குரிய எட்டுக் கலைகளின் பெயரைக் கூறின், சித்தி, இருத்தி, தியுதி, இந்திரை அல்லது இலக்குமி, நித்தியமாகிய மேதா, இனிய காந்தி, சுவதை, திருதி என எட்டாகும். இவை சதாசிவ மூர்த்தியின் வடிவத்தில் அடைவே வலப்பக்கம் முதலாக உள்ளங்கால் இரண்டு, உள்ளங்கை இரண்டு, மூக்கு, உச்சி, தோள், இரண்டு என்னும் எட்டு இடங்களிலே வியாபரித் திருக்கும் என்று சிவாகமம் கூறும் (எ - று).

---

க - வே: 1. துவிதியும் துத்தியை. 2. சுவத்தி.

சத்தியோசாத மந்திரத்தை நியசிக்க வேண்டிய முறையினை; சத்தியோசாதம் பிரபத்யாமி என்று சித்தி கலையை வலக்காலிலும், சத்யோசாதாயவை நம: என்று இருத்தி கலாசத்தியை இடக் காலிலும், பவேநம: என்று தியுதி சத்தியை வலக்கையிலும், அபவேநம: என்று இலக்குமியை இடக்கையிலும், அநாதிபவே நம. என்று மேதா சத்தியை மூக்கின் நுனியிலும், பஜஸ்வமாம் நம: என்று காந்தி சத்தியை சிரத்திலும், பவ நம: என்று ஸ்வதா சத்தியை வலத்தோளிலும், உத்பவாய நம: என்று திருதி சத்தியை இடத்தோளிலும் நியசிக்க என்று (அர்ச்சனை விதிப்படலம்) காமிகாகமம் கூறுகின்றது.

## இதுவும் அது

வாமகலை பதின்மூன்றாம் [1]அந்நாமம் புகலில்
[2]வளரிரசா கூரிரட்சா மகிழிரதி பாலி
[3]காமினிசா மினிகிரியா புத்தி காரி
கருதரிய தாத்திரியும் பிராமியுமோ கினியும்
ஏமமுறு பவாவெனவு [4]மாமிவற்றின் தானம்
இசைந்தனபா யுருலிங்க மிருகுறங்கீர் முழந்தாள்
சேமமுறுங் கணைக்கால்கள் இரண்டுபத மிரண்டும்
திருந்துகடி தடம்பக்க மிரண்டிடமும் திகழும்.

(இ - ள்) வாமதேவ மந்திரத்திற் குரிய கலைகள் பதின் மூன்றாகும். அவற்றின் பெயர்களைக் கூறின், இரசா, இரட்சா இரதி, பாலி, காமினி, சாமினி, கிரியை, புத்தி, காரி, தாத்திரி, பிராமி மோகினி, பவா என்பனவாம். இவற்றை நியசிப்பதற்கு குரிய இடம் பாயுருவும், இலிங் கமும், இரண்டு தொடையும், இரண்டு முழந்தாளும், இரண்டு கணைக்காலும், இரண்டு பாதமும், கடிதடமும், பக்கம் இரண்டும் என்னும் பதின்மூன் றிடங்களாம் (எ-று).

வாமதேவ மத்திரத்தை நியசிக்க வேண்டிய முறையினை. வாமதேவாய நம: என்று ரஜா சத்தியை குஹ்யத்திலும், ஜ்யேஷ்டாய நம: என்று ரட்சா சத்தியை இலிங்கத்திலும். ருத்ராய

சு - வே: 1. அதனாமம். 2 வளரிரசா கூரிரக்கா மாவிரதி பாலி. 3. காமயமு யமினிகிரி யாபுத்தி காரி. 4 ஆமிதற்குத்.

நம: என்று ரதி சத்தியை வலத்துடையிலும், காலாய நம: நம என்று பால்யா சத்தியை இடது துடையிலும், கலநம: என்று காமா சத்தியை வலது முழங்காலிலும், விகரணாய நம: என்று சம்யமீ சத்தியை இடது முழங்காலிலும், பல நம: என்று கிரியா சத்தியை வலது கணைக்காலிலும், விகரணாய நம: என்று புத்தி சத்தியை இடது கணைக்காலிலும், பல நம: என்று கார்ய சத்தியை வலது இடுப்பு முட்டியிலும், பிரமதாய நம: என்று தாத்ரி சத்தியை இடது இடுப்பு முட்டியிலும், ஓம் நம: என்று பிராம்மணீ சத்தியை இடுப்பிலும் (கடிதடம்), ஸர்வபூத தமனாய நம: என்று கூறிக் கொண்டு, மனோ நம: என்று மோகினி சத்தியை வலப்பக்கத்திலும் உந்மநாய நம: என்று பவசத்தியை இடப்பாரிசத்திலும், நியசிக்க வேண்டுமென்று காமிகாகமம் கூறுகின்றது.

## இதுவும் அது

சாற்றியிடு மகோரகலை [1] எட்டவற்றின் பெயர்கள்
தமர்மோகஞ் சயைநிட்டை [2]தகுமிருந்து மாயை
[3]போற்றபயை சரையெட்டா [4]மிவைக்குத் தானம்
பொருந்திதயங் களமிருதோ ளுந்திமடி புறம்மார்
பேற்றவிட மெனப்புகல்வர் புருடகலை யொருநான்
கெழில்நிவிர்த்தி பிரதிட்டையுடன் வித்தையிருஞ் சாந்தி
ஆற்றியதற் புருடாதி யானனநான் ககலா
தமருமுதல் அறைந்தகலை அனைத்துமியற் றிடுமே.

(இ-ள்) சொல்லப்படும் அகோர மந்திரத்திற்குரிய கலைகள் எட்டாகும். அவற்றின் பெயர்கள் தமம், மோகம், சயை, நிட்டை, தக்ஷ மிருத்யு, மாயை, போற்றப்படும் அபயை, சரை என்பனவாகும்.

மேற் கூறப்பட்ட கலைகளை வைத்து நியசிக்கும் இடங்களாவன:— பொருந்திய நெஞ்சம் கண்டமும், இரண்டு தோளும், உந்தியும், வயிறும், முதுகும், மார்பும் என்கிற எட்டு உறுப்புக்களும் ஏற்றவையாகும்.

---

க-வே: 1. எட்டாகு மதன்மேர் 2. தகும்பையுண் மிருத்தும். 3. போற்றுபயை, 4 இதற்குத்தானம்.

தத்புருட மந்திரத்திற்குரிய கலைகள் நான்காகும். அவற்றின் பெயர் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்பனவாகும். அவை முறையே மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு, இத் திசைகளி லுள்ள முகங்களில் நீங்காது அமரும் என்க. முன் சொன்ன கலைகள் அனைத்தினையும் இவை இயற்றிடும் (எ-று)

அகோர மந்திரத்தை நியசிக்க வேண்டிய முறை, அகோரேப்யோ நம: என்று இருதயத்தில் தமை என்னும் சத்தியையும், அதகோரேப்யோ நம: என்று மோகசத்தியைக் கண்டத்திலும், கோர நம: என்று ரட்சா சத்தியை வலத் தோளிலும், கோரதரேப்யோ நம: என்று நிஷ்டா சத்தியை இடத்தோளிலும், சர்வதஸ் சர்வநம: என்று மிருத்யுவை நாபியிலும், சர்வேப்யோ நம: என்று மாயையை வயிற்றிலும், நமஸ்த்தே ருத்ர நம: என்று அபயா சத்தியை பிருஷ்டத்திலும், ரூபேப்யோ நம: என்று ஜரா சத்தியை மார்பிலும் நியசிக்கவும் என்று காமிகம் கூறும்.

தத்புருஷ மந்திரத்தை நியசிக்கும் முறை. தத்புருஷாய வித்மஹே என்று சாந்தி கலையை கிழக்கு முகத்திலும், மகா தேவாய தீமஹி என்று வித்யா கலையைத் தட்சிண முகத்திலும், தந்நோருத்ர: என்று பிரதிஷ்டா சத்தியை வடக்கு முகத்திலும், பிரசோதயாத் என்று நிவிர்த்தி கலையை மேற்குமுகத்திலும் நியசிக்க வேண்டும் என்று காமிகம் கூறும்.

## இதுவும் அது

106 அரியதிற லீசானத் தைங்கலையா [1]மவைப்பேர்
அச்சசியங் கதையோடிட் டாயை [2]மரீ சியியும்
[3]மரியசவா லினிமுகமைந் தினுமகலா வியாத்தப்
மருவியிடுந் தொகைமுப்பந் தெண்கலையாஞ் சத்தி
விரவியபாஞ் சப்பிரமத் தினிலடங்கி யுலகம்
விதித்துவகுத் தடக்கியிடும் மேன்மையினால் விளங்குந்
திரமருவுஞ் சகம்பஞ்சப் பிரமமய மெனவே
தெளிந்தவரே [4]தம்போதக் களங்கமகன் றவரே.

---

க-வே: 1. அதன் பேர் 2. சுலாவினியும் 3 மரீசியெனயிலை முகமைந் 4. நம் போதக்

(இ-ள்) அருமையும் ஆற்றலும் வாய்ந்த ஈசான மந்திரத்திற் குரிய கலைகள் ஐந்தாம். அவற்றின் பெயர் அழகிய சசி அங்கதை, இட்டாயை, மரீசி, சுவாலினி என்பனவாகும், இவை சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங் களிலும் நீங்காமல் அடங்கியிருக்கும்.

சத்தியோசாதம் முதலான பஞ்சப்பிரம மந்திரத்திற் பொருந்தியிருக்கும் கலாசத்திகள் முப்பத்தெட்டினை மேற் கூறிய முறையில் அறிந்து கொள்க. இச்சத்திகள் சதாசிவ மூர்த்தியின் வடிவான பஞ்சப்பிரம மத்திரத்தினில் அடங்கி உலகத்தை உண்டாக்கியும் காத்தும், ஒடுக்கியும் வருகின்ற மேன்மையினாலே. இவ்வுலகம் பஞ்சப்பிரம மயம் என்று தெளிந்த அறிவினரே தற்போதமாகிய குற்றத்தினின்றும் நீங்கியவராவார் (எ-று)

ஈசான மந்திரத்தை நியசிக்க வேண்டிய முறையினை, ஈசான சர்வ வித்யானாம் என்று சசிநீ கலையை மேல் நோக்கிய மஸ்தகத்திலும், ஈஸ்வர சர்வ பூதானாம் என்று அங்கதா கலையை கிழக்கு மஸ்தகத்திலும், பிரம்மாதிபதி பிரம்மணோதிபதி பிரம்மா என்று இஷ்டாகலையை தட்சிண மஸ்தகத்திலும், சிவோமே அஸ்து என்று மரீசி கலையை உத்தரமஸ்தகத்திலும், சதாசிவோம் என்று ஜ்வாலினி கலையை மேற்கு மஸ்தகத்திலும் நியசிக்க என்று காமிகாகமம் கூறும்.

## நிலம் முதலான தத்துவங்கள் வியாபித்திருக்கும் அளவு

107 புடவிவிசும் பளவுதகம் புமான ளவாம் வன்னி
புகலருமோ கினியளவாம் பொருவருகால் மருவும்
அடலுறுசா தாக்கியத் தம்பரம்நாத மளவாம்
ஆங்காரங் கிரியையரும் புத்தியுயர் ஞானம்
திடமருவும் மனமிச்சா சத்தியள வாகும்
திகழ்சித்தந் திரோதான மளவாகு முள்ளம்
விடலரிய பரையளவும் [1]வியாத்தமுறு மெனவே
விளம்புவர்கள் உலகியல்பை யகன்றநெறி யினரே.

சு-வே : 1. வியாப்தம்

(இ-ள்) நிலம் என்னும் தத்துவம் ஆகாயமென்னுந் தத்துவம்வரை வியாத்தியாகும். நெருப்பென்னுந் தத்துவம் அசுத்தமாயைவரை வியாத்தியாகும், காற்றென்னுந் தத்துவம் சாதாக்கிய தத்துவம்வரை வியாத்தியாகும். ஆகாயமென்னுந் தத்துவம் நாத தத்துவம்வரை வியாத்தியாகும், அகங்காரமென்னுந் தத்துவம் கிரியா சத்திவரை வியாத்தியாகும். புத்திதத்துவம் ஞானசத்திவரை வியாத்தியாம். மனம் என்னுந் தத்துவம் இச்சா சத்திவரை வியாத்தியாகும். சித்ததத்துவம் திரோதான சத்திவரை வியாத்தியாகும். உள்ளம் பராசத்திவரை வியாத்தி யாகுமென்று உலகியல்பினை யகன்ற சிவஞானிகள் கூறுவர். (எ-று).

ஐந்து பூதங்களின் வியாத்தியை இந் நூல் 79 80, 81, 82, 83 என்னும் எண்ணுள்ள பாடல்களாலும் அறிக. அந்தக் கரணங்களுக்கு வியாத்தி, மான் (ஆன்மதத்துவம்) அளவுமென்று தத்துவப் பிரகாசம் (254) கூறுகின்றது. இக் கருத்து இந் நூலுடன் மாறுபடுகிறது. ஆராயத் தக்கது.

## ஐம்பூதத்துள் கருவிகள் முப்பத்தாறும் அமரும் முறை

108 அவனிதனிற் பிரமாண்ட மடங்கும்து
அப்புவினிற் புமானெனுமுன் றடங்குமது பிரதிட்டை
துவமருவுங் கலாதிகளேழ் அங்கியினுற் றமருஞ்
சொல்லில்து வித்தைசுத்த வித்தைமுதன் மூன்றும்
துவமருவு முலவையினி வடங்குமது சாந்தி
சத்திசிவம் விசும்பிலுறு மதுசாந்தியா தீதம்
[1]நவையுறுமைம் பூதத்திற் கருவிகளா றாறும்
நயந்தமரு மெனமொழிவ ருயர்ந்தபெருந் தவரே.

---

கு-பே : 1. நவையறுமைம்

(இ-ள்) நிலதத்துவத்தில் நான்முகன் அண்டம் அடங்கும். நிலதத்துவமும் நான்முகன் அண்டமும் நிவிர்த்தி கலையாகும். நீர் (அப்பு) என்னுந் தத்துவத்தில் பிரகிருதி மாயையும் ஆன்மதத்துவம். இருபத்து மூன்றுள் நிலம் நீங்கலான இருபத்துமூன்றும் அடங்கும். நீரும் பிரகிருதி மாயை முதலானவைகளும் பிரதிட்டாகலையாகும். நெருப்பென்னுந் தத்துவத்தில் (தேயு) கலைமுதலான வித்தியா தத்துவம் ஏழும் பொருந்தி அமரும். நெருப்பும் வித்தியா தத்துவமும் வித்தியாகலையாகும். காற்றென்னுந் தத்துவத்தில் (வாயு) சுத்தவித்தை, மகேசுரம், சாதாக்கியம் என்னும் சிவதத்துவம் மூன்றும், அடங்கும். காற்றும் இத் தத்துவங்களும் சாந்திகலையாகும். ஆகாயதத்துவத்தில் சத்தி தத்துவம் சிவதத்துவ மென்னும் இரண்டு சிவதத்துவங்கள் அடங்கும். ஆகாயமும் இத் தத்துவமிரண்டும் சாந்தியாதீ கலையாகும். இவ்வாறு ஐம்பூதத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் பொருந்தும் என உயர்ந்த பெருந்தவர் மொழிகுவர் (எ-று).

## இறைவன் செயல் திருவிளையாடலே என்பது

தக்கபரை கலைசாந்தி யாதீ தத்தாற்
சதாசிவதற் றொழிலினையுந் திரோதை சாந்தி
மிக்ககலை யாலீசன் றொழில்க டானும்
விளங்குருள்சே ரிச்சைகலை வித்தை [1]தம்மாற்
றொக்கவுருத் திரன்றொழிலும் ஞான சத்தி
துலங்குகலை [2]ப்ரதிட்டையின்மால் றொழிலு
மேனை
அக்கணமே கிரியைகலை நிவிர்த்தி [3]தம்மால்
அயன்றொழிலும் நடத்தலிறையாட லாமே. 109

க - வே : 1. தன்னால். 2. பிரதிட்டையின். 3. தன்னால்

(இ - ள்) பதியாகிய இறைவன், தக்க பராசத்தியா லும் சாந்தியாதீத கலையாலும் சதாசிவ மூர்த்தியின் நல்ல தொழிலாகிய அனுக்கிரகத்தையும், திரோதான சத்தியா லும் சாந்திகலையாலும் மகேசுரனுடைய தொழிலாகிய மறைத்தலையும், இச்சாசத்தியாலும் வித்தியாகலையாலும் உருத்திரனுடைய தொழிலாகிய அழித்தற்றொழிலினையும் ஞானசத்தியாலும் பிரதிட்டாகலையாலும் திருமால் தொழிலாகிய காத்தற் றொழிலினையும், கிரியாசத்தி யாலும் நிவிர்த்தி கலையாலும் நான்முகன் தொழிலாகிய படைத்தற்றொழிலையும் நடத்துதல் நடனத்தலைவனாகிய அவன் திருவிளையாடலாகும் (எ - று).

## இறைவன் அத்துவாக்களின் வழியாக உயிர்கட்கு வினைப்போகம் ஊட்டும்முறை.

உன்னரிய பரன்கிரியை நிவிர்த்திகலை யதனில்
உயர்தருமந் திரமிரண்டால் புரமொருநூற்
றெட்டால்
[1]வன்னமுடி வெழுத்தொன்றால் வரும்பதநா லேழான்
[2]மலரவன்முன் னிலையாக மதித்துயிர்கட் [3]கிதமாய்
மன்னுபுவி தத்துவத்தி னிடமாக மருவி
வருநாசி உபத்தமதால் வருங்கருமப் பயனை
அந்நிலையே அருத்தியபின் முன்போல் ஏன்ற
அருவினையை நிவிர்த்தியினில் அடைத்திடுமென்
றுணரே. 110

(இ - ள்) நினைத்தற்கரிய பரமேசுரன் கிரியாசத்தியி னால் நிவிர்த்திகலையி னிடமாக, சத்தியோசாதம் இரு தயம் என்னும் மந்திரம் இரண்டினால், பத்திரகாளி புவனம் முதல் வீரபத்திர புவனம் ஈறான நூற்றெட்டு புவனத்தால், க்ஷ என்னும் எழுத்தொன்றால், மகாதேவ பதம் முதலாக நமோ நம: என்னும் பதம் ஈறாகிய இருபத்தெட்டுப்

---

க - வே : 1. வன்னமுடி யெழுத்தொன்றால்.
2. மலரயன். மாலயன். 3. கினிதாய்.

பதங்களால், நான்முகனை முதன்மையாக வைத்து, உயிர்கட்கு நன்மை விளையவேண்டி, நிலமாகிய தத்துவத்தினிடமாக மருவி, மூக்கு என்னும் அறிவுக்கருவியால், குறி (உபத்தம்) என்னும் தொழிற்கருவியால் உண்டாகும் வினைப்பயனை முறைப்படி நுகரச் செய்தபின், மிகுந்ததாய்ப் பொருந்திய வினையைமுன் போல அந் நிவிர்த்தி கலையிலேயே வைப்பன் என்று உணர் (எ - று).

## இதுவும் அது

ஞானகலை [1]பிரதிட்டையினின் மந்திரங்க ளிரண்டால்
நாடியதத் துவமிருபத் தொருமூன்றா னயந்த
ஈனமிலெண் மூவெழுத்தாற் பததெழுமூன் றதனால்
எண்ணேழு புரமதனால் எழிலரிமுன் னிலையால்
ஏனையுயிர் கட்குதக மிடமாக விளங்கும்
இந்திரியஞ் சிங்குவைபா யுருவதனா லேய்ந்த
மானவினைப் பயனுகர்வித் தவ்வழியா லடைந்த
வல்வினையின் பயன்முன்போல் வைத்திடுமக்
கலையில். 111

(இ - ள்) உன்னரிய பரன் (110) தனது ஞானசத்தி தோற்றுவிக்கும் பிரதிட்டாகலையி னிடமாக வாமதேவம்; சிரம் என்னும் இரண்டு மந்திரங்களால், அப்பு தத்துவம், முதலாகச் சித்ததத்துவம் ஈறான இருபத்துமூன்று தத்துவங்களால், குறைவில்லாத ளகாரம் முதல் (சங்கார முறையில்) டகாரம் ஈறான எழுத்து இருபத்து மூன்றால், மகேசுர் என்னும் பதம் முதலாகச் (சங்கார முறையில்) அருபின் அருபின் என்னும் பதம் ஈறான இருபத்தொரு பதங்களால், அமரேச புவனம் முதல் சிறீகண்ட புவனம் ஈறான ஐம்பத்தாறு புவனங்களால், அழகிய திருமாலை முன்னிலையாக வைத்து உயிர்கட்கு நன்மை விளையவேண்டி, நீர் என்னுந் தத்துவத்தினிடமாக நாக்கு என்னும் அறிவுக்கருவியால், பாயுரு என்னும் தொழிற்கருவியால் உண்டாகும்

---

சு - வே : 1. பிதிட்டையினில்.

பெரியவினைப் பயனை நுகர்வித்து, அவ் வழியால் அடைந்து எஞ்சிய வினைப்பயனை முன்போல் அப் பிரதிட்டாகலையில் வைப்பன் (எ - று).

## இதுவும் அது

இச்சைகலை வித்தையினி லுருத்திரன்முன் னிலையால்
இசை தருமந் திரமிரண்டாற் பதநா லைந்தான்
மெச்சியதத் துவமேழால் வன்ன மேழால்
மிகுபுரம்மூ வொன்பதனால் விதித்தான் மாவுக் (கு)
அச்சமிலக் கினிவழித்தா நேத்திரங்கை யெனவே
அமர்தருமிந் திரியமதால் அடைந்தவினைப்
பயனை
நிச்சயமா யருந்தியபின் ஏன்றவினை யனைத்தும்
நிகழ்தரு வித்தையின் முன்போ லடைவுறவைத்
திடுமே. 112

(இ - ள்) உன்னரிய பரன் (110) தனது இச்சா சத்தி உதவும் வித்தியாகலையி னிடமாக, உருத்திரனை முன்னிலையாக வைத்து, அகோரம் சிகை என்னும் மந்திரம் இரண்டினால், வியாபின் வியாபின் என்னும் பதம் முதலாகச் சங்கார முறையில் தியான ஹாராய என்னும் பதம் ஈறாகிய இருபது பதங்களால், கலை முதலான வித்தியா தத்துவங்கள் ஏழால், ஞகாரம் முதல் சங்கார முறையில் கவ்வருக்கத்தின் நான்காமெழுத் தீறாக வுள்ள ஏழு எழுத்துக்களால், வாமபுவனம் முதல் அங்குட்ட மாத்ர புவனம் ஈறாகிய இருபத்தேழு புவனங்களால் உயிர்கட்கு விதிக்கவேண்டி, நெருப்பு என்னுந் தத்துவத்தினிடமாகக். கண்ணென்னும் அறிவுக் கருவியால், கையென்னுந் தொழிற் கருவியால் உண்டாகிய இருவினைப் பயனை உயிர்கட்கு நுகர்வித்த பின்னர், மிகுதியாய்ப் பொருந்திய எல்லா வினைகளையும் அந்த வித்தியா கலையி னிடமாகவே முன் போல முறைமையுற வைத்திடுவன் (எ - று).

## இதுவும் அது

ஆதிகலை சாந்தியினின் மகேசுரன்முன் னிலையால்
அருடருமந் திரமிரண்டால் பதம்பதினொன்
றதனால்
ஓதியதத் துவம்மூன்றால் வன்னம் மூன்றால்
உயர்புவனம் பதினெட்டால் உயிர்கட் கன்பால்
வாதமிட மாந்துவக்குப் பாதந் [1]தம்மால்
மருவுமிரு வினைப்பயனை அருத்தி முன்போல்
ஏதமுடன் ஏன்றவினைப் [2]பயனி யாவும்
இருத்திடுவன் சாந்தியிலென் றிசைக்கும் நூலே.

(இ - ள்) உன்னரிய பரன், (110) தனது ஆதிசத்தி யுதவும் சாந்திகலையினிடமாக, மகேசுரனை முன்னிலை யாகவைத்து, தத்புருடம் கவசம் என்னும் இரண்டு மந்திரத் தால், நித்திய யோகினே முதல் சங்கார முறையில் வியோம வியாபினே ஈறாகிய பதம் பதினொன்றால், சுத்தவித்தை மகேசுரம் சாதாக்கிய மென்னும் சிவதத்துவம் மூன்றால், கவ்வருக்கத்தில் நான்காவ தொழிந்த எழுத்து மூன்றால், வாமை புவனமுதல் சதாசிவ புவனம் ஈறாகிய பதினெட்டு புவனங்களால், உயிர்களிடத்து வைத்த அன்பினாலே, காற்று என்னும் தத்துவத்தினிடமாக, மெய் (துவக்கு) என்னும் அறிவுக்கருவியால், கால்கள் என்னுந் தொழிற் கருவியால், பொருந்திய வினைப்பயனை உயிர்கட்கு நுகர் வித்து முன்போலவே மிகுதியாய்ப் பொருந்திய வினைகளை யெல்லாம் அச் சாந்திகலையினிடமாகவே வைத்திடுவன் (எ - று).

## இதுவு மது

பரையுதவு [3]மதீதகலை தனிலன் பாகப்
பகர்தருமந் திரமூன்றாற் [4]பதமொன் றாலும்
உரைதருதத் துவமிரண்டால் எழுத்தீ ரெட்டால்
ஓங்குபுரம் பதினைந்தால் உயிர்கட் கென்றும்

---

க - வே : 1. தன்னால். 2. பயன்க ளியாவும்.
3. அதீதகலை தனிலின். 4. பதமூன்றாலும்.

திரம்ருவுஞ் சதாசிவமுன் னிலையால் வானிற்
செறிந்தசெவி வாக்கதனாற் சேருங் கன்மம்
விரைவினுட னருத்தியபின் முன்போ லேன்ற
வினையையவடத் திடுமிறையக் கலையி லன்றே.

(இ - ள்) உன்னரிய பரன் (100) ஆகிய இறைவன், தனது பராசத்தி உதவும் சாந்தியாதீத கலையினிடமாக, ஈசானம் நேத்திரம் அத்திரம் என்னும் மந்திரம் மூன்றால், ஓம் என்னும் பதம் ஒன்றால், சத்தி சிவம் என்னும் சில தத்துவம் இரண்டனால், அகரம் முதலாகிய உயிரெழுத்து பதினாறால், நிவிர்த்தி புவனம் முதல் அநாசிருத புவனம் ஈறான பதினைந்து புவனங்களால், சதாசிவ மூர்த்தியை முன்னிலையாக வைத்து, ஆகாய தத்துவத்தினிடமாகச் செவி என்னும் அறிகருவியால், வாக்கு என்னும் தொழிற் கருவியால் உயிர்கட்கு வரும் வினைகளை நுகரச் செய்த பின், முன்போல, மிகுந்து பொருந்திய வினைகளை அச் சாந்தியாதீத கலையில் வைப்பன் (எ-று)

## மறைகளெல்லாம் முதல்வனை அத்துவாவடிவன் என்று கூறுதலால், அவ் வடிவினைக் கூறுகின்றது

அத்துவா வடிவாமெம் மிறைமுடிதான் கலைகள்
ஐந்தாகுஞ் [1]சாந்திமுத லானனநான் குரமாம்
வித்தைமுதன் மூன்றிரண்டாம் [2]பிரதிட்டாதி யுந்தி
வியன்பாதம் நிவிர்த்தியதாம் மிளிர்துவக்கக்
கரங்கள்
வைத்தபுவ னங்கண்மயிர் மந்திரங்கள் நெய்த்தோர்
வளந்திகழும் பதங்களருந் தசையாகும் மதித்த
தத்துவங்கள் சுக்கிலமோ டத்திநிண மூளை
சத்திகடாம் நேத்திரமூ வைந்தாமித் தகையே.

---

பா-வே: 1. அதீதகலை தனிவின் 2. பதமூன்றாலும்

(இ-ள்) எம் இறைவனுக்கு ஆறு அத்துவாக்களும் உடம்பாகும். எவ்வாறென்னில்? கலை என்னும் அத்துவாவில் சாந்தீயாதீதம் முதலான ஐந்துகலைகளும் அவனுடைய முடியாகும். சாந்திமுதலான நான்கு கலைகளும் ஆகும். வித்தியாகலை முதலான மூன்றுகலைகளும் மார்பு ஆகும், பிரதிட்டை முதலான இரண்டுகலைகளும் உந்தியாகும்; நிவிர்த்திகலை யொன்றும் பெரிய திருவடியாம். வர்ணாத்துவா வாகிய எழுத்துக்கள் (துவக்கு) தோலாகும் புவனாத்துவாக்களெல்லாம் மயிராகும்; மந்திராத்துவாக்கள் குருதியாகும். பதாத்துவாக்கள் தசையாகும் ; தத்துவாத்துவாக்கள் சுக்கிலமும் எலும்பும் நிணமும் மூளையுமாகும் ; அத்துவாக்கட்கு முதலான சத்திகள் பதினைந்தும் விழியாகும் (எ-று)

'அத்துவா மூர்த்தியாக' என்னும் சிவஞானசித்தியார் பாடல் உரையில் மறைஞயான சம்பந்தர் "சாந்தியாதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தை மார்பு, பிரதிட்டை குய்யம், நிவிர்த்தி முழந்தாளும் பாதமும் ஆக இப்படிப் பஞ்சகலைகளும் அங்கமாகவும்; புவனங்கள் உரோமமும் வன்னங்கள் தோலும் மந்திரங்கள் சோரியும் பதங்கள் நரம்பும் தத்துவங்கள் என்பும் மச்சையாகவும் இப்படி ஆறு அத்துவாவும் சதாசிவருக்குத் திருமேனி ஆனபடி யறிக" என்று சிறிது வேறுபடக் கூறுவர்.

சதாசிவ மூர்த்திக்கு ஐந்து முகமும், ஒவ்வொரு முகத்தில் மூன்று கண்ணாக ஐம்மூன்று பதினைந்து விழியும் இருத்தலை, "அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள" (1736) என்னுந் திருமந்திரத்தால் அறிக.

## முதல்வனுக்கு விழி தனது சத்தி என்பதை விளக்கிக் கூறுகிறது

அரியபதி பரன்றனது சத்தி கண்ணாய்
அனைத்தினையு மியற்கையினி எறியும் மேன்மை
தெரியமொழி குள்ளொளியாய் யாவுங் காண்பாய்
திரோதைகரு மணியாக இச்சா ஞானக்

கிரியையதற் குள்ளொளியாய் யாவுங் காண்பாய்
கிளர்மாயை கண்ணாகக் காண்பன் என்னிற்
பரிவுறுமா யையின்கண்ணைக் காண்ப தெல்லாம்
பசுவருக்க மெனப்புகல்வர் பதியின் றாமே. 116

(இ-ள்) வாக்கிற்கும் மனத்திற்கும் உணர்தற்கரிய பதியாகிய பரமேசுரன், தனது சத்தியினையே விழியாகக் கொண்டு எல்லாப் பொருள்களையும் இயல்பாக அறிந்து வரும் மேன்மையினைத் தெரியக் கூறுவோம்: எவ்வாறெனில், தனது சத்திகளில் பராசத்தியே விழியாகவும் திரோதையே கருமணியாகவும், இச்சா ஞானக் கிரியை என்னும் மூன்று சத்திகளே அவ் விழிக்கு உள்ளொளியாகவும் கொண்டு யாவையுங் காண்பன்.

இவ்வாறு கூறாமல் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என்னும் மூன்றினையும் மூன்றுவிழியாகக் கொண்டு முதல்வன் எல்லாப்பொருள்களையுங் காண்பான் என்று கூறின், மாயையினைக் கண்ணாகக்கொண்டு காண்பவையெல்லாம் பசு என்னும் உயிர்வருக்கமாகுமே யன்றிப் பதியாகாதென்று அறிஞர் கூறுவர் (எ-று)

## உட்கரணத்தில் நிலைபெறும் இலிங்கமே புறத்திலே பூசித்தற்குரிய இட்டலிங்கமாயிற்று என்றல்

அருத்திமிகும் ஓங்காரம் பீட மாகும்
[1]அகாரம்நடுக் கண்டமதாம் அதற்கு மீதே
திருத்தமிகும் மேற்பீடம் உகார மாகும்
செறியுமதற் குள்வட்டம் மகார மாகும்
விருத்தமுறும் இலிங்கநிலை விந்து வாகும்
விளங்குசிவ லிங்கமுயர் நாத மாகும்
[2]கருத்தமருட் கரணநிலை இலிங்கத் தானே
கன்மமிகும் புறப்பூசை இலிங்க மாமே. 117

---

க-வே 1. அகாரமே நடுக்கண்டம் 2. கருத்தமருங் கரணநிலை

(இ-ள்) ஓங்காரம், அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் ஆறும் கருதுதல் பொருந்திய மனம் முதலான அந்தக்கரணங்களில் நிலைபெற்று, அவற்றை விடயங்களிற் செல்லாமல் ஒடுக்கியும், விடயங்களிற் செல்லும்படிச் செலுத்தியும் வருகின்ற இலிங்கமாகும். அவ் விலிங்கந்தானே, பல்வகைக் கிரியைக்குரிய புறப்பூசைக் குரிய இலிங்கமாக வடிவுகொண்ட தென்க,

அந்த உட்கரண இலிங்கம் எவ்வாறுள்ளதெனின்? ஓங்காரமே அடிப்பீடமாகும்; அகாரம் நடுக்கண்டமாகும்; அந் நடுக்கண்டத்தின் மேலே உள்ள மேற்பீடம் உகாரமாகும்; அம் மேற்பீடத்தின் உள் வட்டம் மகாரமாகும்; இலிங்கம் நிலைபெறும் குழியான வட்டயிடமே விந்துவாகும்; அவ்விந்து நிலையில் விளங்கும் சிவலிங்கமே நாதமாகும் (எ-று).

இப் பாட்டின் கருத்தினை,

"இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரம்
இலிங்கநற் கண்டம் நிறையும்அ காரம்
இலிங்கத்துள் வட்டம் நிறைவிந்து நாதமே" (1752)
"விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
விந்துவ தேபீடம் நாதம் இலிங்கமாம்" (1757)

என்னும் திருமந்திரப் பாடல்களால் அறிக

## ஞான லிங்கம்

நற்பரமாங் கிரியையடிப் பீடமாகும்
நண்ணரிய நடுக்கண்டம் ஞானமாகும்.
சொற்பரவும் மேற்பீடம் இச்சா சத்தி
சொல்லிலதன் உள்வட்டந் திரோதை யாகும்
விற்பரவும் விந்துநிலை பரைய தாகும்
[2]வீறுபர சிவமதுவே இலிங்கமாகும்
அற்புதமாம் அகம்புறமொன் றாய நேயத்
தழுந்துவர்கள் சிவபூசை பொருந்தி னோரே. 118

---

சு-வே : 1. சொல்லிலதன் வட்டந் 2. வீறுபரை சிவமதுவே விளங்குசிவ லிங்கமுயர் நாதமாகும்.

(இ-ள்) இறைவனுக்குச் சத்தியே திருமேனி யாதலின் அவ்விறைவன் கொண்ட இலிங்க வடிவத்திற்கு நல்ல மேலான கிரியாசத்தியே அடிபீட்டமாகும். ஞான சத்தியே அதன் நடுக் கண்டமாகும். இச்சா சத்தியே அந் நடுக் கண்டத்தின் மேலே உள்ள பீடமாகும். திரோதான சத்தியே அம் மேற்பீடத்திலுள்ள உள்வட்டமாகும். ஒளி பரவும் விந்து என்னும் இலிங்கநிலையே (இலிங்கம் நிலை பெறும் இடமே) பராசத்தியாகும். சத்தனாகிய பரசிவமே அவ் விலிங்கம் நிலையில் நிலைபெறும் இலிங்கமாகும். இத்தகைய இலிங்க வடிவத்தையுடைய சிவத்தைப் பூசிப் போர் அற்புதமாகிய, அகமும், புறமும், ஒன்றான, நேயத்திலே அழுந்துபவ ராகிய ஞானிகள் ஆவார் (எ-று).

இப் பாட்டின் கருத்தினை,

"சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதா னென்றுஞ் சமைந்துரு வாகுமே" (1772)

என்னுந் திருமந்திரப் பாட்டால் அறிக.

## அனைத்துலகும் இலிங்கமயம் என்றல்

அனுக்கிரகஞ் [1]சதாசிவன்றான் நாதத்தால் உளத்தில்
அருமறைப்புச் சிந்தையினில் விந்துவினால் [2]மகேசன்
துணித்தமனத் [3]துருத்திரன்றான் மகாரத்தா லழிக்கும்
துழாய்முடியோன் புத்தியினின் றுகாரத்தா லளிக்கும்
பனிப்பதுமன் அகாரத்தா லாங்காரம் பொருந்திப்
படைத்திடுவன் ஓங்காரப் படிவமுமா மதனால்
அனைத்துலகு மிலிங்கமய மாமெவையு மிதுவே
ஆக்கியளித் தழித்துமறைத் தனுக்கிரகஞ் செயுமே.

---

சு - வே : 1. சதாசிவர். 2. மகேசர். 3. உருத்திரர்தாம்.

(இ - ள்) நாதமும், விந்துவும், மகாரவும், உகாரமும், அகாரமும் ஆகிய ஐந்தெழுத்தும் (சமஷ்டி) கூடிநின்ற நிலையே ஓங்காரம் ஆகையால், அவ் வோங்காரத்தின் உறுப்பாகிய (வியஷ்டி) உள்ளத்திற் றங்கிய நாதத்தால் சதாசிவமூர்த்தி அநுக்கிரகஞ் செய்யும்; சிந்தையிற் றங்கிய விந்துவால் மகேசுரன் மறைப்பினைச் செய்யும்; மனத்திற் றங்கிய மகாரத்தால் உருத்திரன் அழித்தலைச் செய்யும் புத்தியினிற் றங்கிய உகாரத்தால் திருமால் காத்தலைச் செய்யும்: ஆங்காரத்திற் றங்கிய அகாரத்தால் நான்முகன் படைத்தலைச் செய்யும் மேலே கூறியவாறு (117) ஓங்கார வடிவாயிருக்கின்ற பிரமமாகிய இலிங்கத்தினாலே அனைத்துலகும் ஐந்தொழிற்படும். அதனால் எல்லாவுலகும் இலிங்க மயமாம் என்று அறிக (எ-று)

இப் பாட்டின் கருத்தினை,

"இலிங்கம தாவ தியாரும் அறியார்
இலிங்கம தாவ தெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவ தெண்ணென் கலையும்
இலிங்கம் தாக எடுத்த துலகே"

என்னும் (1712) திருமந்திரப் பாட்டால் அறிக.

"பெரிதுயர் தருபர சத்தி பீடிகை
தெரிதர வருபர சிவமி லிங்கமவ்
அரிதுணர் வுறுசிவ சத்தி யாகிய
ஒருதனி இலிங்கமே உலகம் யாவுமே"

என்னும் சித்தாந்த சிகாமணி (இலிங்கமான்-5)ப் பாட்டானும் அறிக.

## இலிங்க வடிவாகி, அனைத்துலகினையும் ஐந்தொழிற்படுத்தும் நாதம் முதலான ஐந்துமே, திருவைந் தெழுத்தென்றல்

நாதத்திற் சிகாரவெழுத் திசைந்து தோன்றும்
நண்ணரிய விந்துவினில் வகாரந் தோன்றும்
தீதற்ற யகாரம் அகா ரத்தினிய நகாரந் தோன்றும்
திகழுமுகா ரத்தினிய நகாரந் தோன்றும்

போதுற்ற மகாரம்மகா ரத்தின் பாலாம்
பொருந்தியவஞ் செழுத்தையுந் [1]தம் போதம் நீக்கிக்
கோதற்ற திருவருளாற் சிவமுன் னாகக்
கொண்டாரே முத்திநெறி கண்டார் தாமே. 120

(இ-ள்) நாத வொலியில் சிவ எழுத்தாகிய சிகார எழுத்துப் பொருந்தித் தோன்றும், பொருந்துதற் கரிய விந்து வொலியில் திருவருட்சத்தி யெழுத்தாகிய வகார எழுத்துத் தோன்றும். அகார வொலியில் குற்றமற்ற சீவ வெழுத்தாகிய யகார எழுத்துத் தோன்றும். விளங்கும் உகார வொலியில் திரோதை யெழுத்தாகிய நகாரம் தோன்றும். மகார வொலியில் மல எழுத்தாகிய மகாரம் தோன்றும்.

இவ்வாறு பொருந்திய சிகாரம் முதலான திருவைந் தெழுத்தினைத் தம்போதப் பற்று என்கின்ற உயிரின் முனைப் பறிவை நீக்கிக், குற்றமற்ற திருவருண் ஞான மாகிய பரபோ தத்தாற் சிவம் முன்னாகும்படிக் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடப்பெற்றவரே வீட்டு நெறியைத் தலைப்பட்டவராவார் (எ - று).

**உயிர் பெத்தத்தில் நகார, மகார யகாரங்களையே செபியாமற் செபித்தற் போல், முத்தியில் அதற்கு மாறாய்ச் சிகார, வகார, யகாரமாய் நிற்கும் என்ற நிலையறிந்து, செபிப்பவரே பிறவிநோய் மாற்றுவார் என்றல்.**

இறையருளோ டுயிராதி மலமெனுமஞ் செழுத்தில்
இறைகேடு மலமருட்கே டாமினிதாந் திரோதை
“ [1]செறிதருபெத் தத்திலுயிர் நமயநிலை பொருந்திச்
செபியாமற் செபிப்பதுபோற்” றிகழ்தருமுத் தியினும்

சு - வே ; 1. நம்போதம். 2. செறிதருபே தத்திலுயிர்

நிறையிருளி னொழிவுசிவந் திரோதையொழி வருளாய்
நின்றநிலை கண்டுமுதற் றன்னிலைவிட் டகன்றே
பிறிவரிய சிவமுதலாய் [1]நடுநிலையி லழுந்தும்
பெற்றியரே உற்பவநோய் பற்றறுநற் றவரே.

(இ - ள்) இறையெழுத்து சிகாரம்: அருளெழுத்து வகாரம்; உயிரெழுத்து யகாரம்; ஆதிசத்தியாகிய திரோதையெழுத்து நகாரம்; மலவெழுத்து மகாரம் என்று கூறப்படும் திருவைந்தெழுத்துள், இறைவனை உணரமுடியாமல் அறியாமையைச் செய்து கெடுப்பது ஆணவமல எழுத்தாகும்; திருவருளை உணர முடியாமற் கெடுப்பது திரோதான எழுத்தாகும்; உயிரானது பொருந்தியுள்ள பெத்தநிலையில் சிவத்தையும் திருவருளையும் உணரப்பெறாமல், திரோதையாகிய நகர எழுத்தின் நிலையும், மலமாகிய மகர எழுத்தின் நிலையும், அவ் விரண்டுடன் கூடிய உயிராகிய யகர எழுத்தின் நிலையும் பொருந்தி நிற்க, 'நமய' என்று அம்மூன்றெழுத்தினைச் செபியாமற் செபித்திருப்பது போல,

விளக்கமுறும் முத்திநிலையிலும் ஆணவமல ஒழிவினைச் செய்யும் திருவருளாய் நின்ற நிலையினையும் உணர்ந்து, உயிர் தான் ஒரு முதலென்று கருதுகிற தற்போத நிலையினையும் விட்டு நீங்கிப், பிரிதலில்லாத சிவவெழுத்தே முதலாய் நிற்ப, உயிராகிய தன்மைக் குறிக்கும் எழுத்து நடுவிலும் திருவருளெழுத்து ஈற்றிலும் நிற்கச், செபிக்கும் பெற்றியரே பிறவி நோய்ப் பற்றறும் நற்றவர் ஆவார் (எ - று),

இப் பாட்டின் கருத்தினை,

"சிவனரு ளாய சிவன் திரு நாமஞ்
சிவன்அருள் ஆன்மாத் திரோதம் மலமாம்
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே" (2711)

என்னும் பாட்டாலும்,

---

க-வே : 1. நடுநிலையிற் பொருந்தும்.

"சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாகி
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே" (2718)

என்னும் பாட்டாலும் அறிக. இவை திருமந்திரம்.

## திருவைந் தெழுத்தின் பெருமை

அஞ்செழுத்தே மும்முதலு மாகுமென விறைநூல்
[1]அறையுமதிற் றிரோதையரு ளரியசிவம் பதியாம்
விஞ்சுமுயிர்த் தொகைபசுவாம் பாசவிருண் மலமாம்
வித்தாகும் பெத்தமுத்தி யிரண்டினுக்கு மிதுவே
வஞ்சமுற்று பவசுகடலி [2]லெடுத்துயிர்கட் கருளான்
மதிப்பரிய சிவானுபவ மளிப்பதுவு மிதுவே
அஞ்செழுத்தே ஐந்தொழிலு மெந்தைபிரான் நடமும்
ஆதலினா லிதனுண்மை ஓதரிதென் றுணரே. 122

(இ-ள்) இறைவன் நூலாகிய சிவாகமம் திருவைந்தெழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றும் ஓரெழுத்தொரு மொழியாக நின்று பதி, பசு, பாசம் என்னும் மூன்று முதற் பொருள்களையும் உணர்த்தி, அப் பொருள்களாகவும் ஆகும், என்று கூறும், அவற்றுள் நகாரம், வகாரம், சிகாரம், என்னும் எழுத்துக்களால் உணர்த்தப்படும், திரோதை, திருவருள், சிவம் என்னும் மூன்றும் பதியுள் அடங்கும், மகாரத்தால் உணர்த்தப்படும், மலம் பாசத்துள் அடங்கும்; யகாரத்தால் உணர்த்தப்படும், உயிர்க்கூட்டம் பசுவுள் அடங்கும், இவ்வாறடங்கலின் இத் திருவைக்தெழுத்தே உயிர்கட்குப்பெத்தநிலை, முத்திநிலை என்னும் இரண்டும் தோன்றுவதற்கு வித்தாகும். வஞ்சகம் பொருந்திய பிறவியாகிய கடலிலிருந்து எடுத்து உயிர்கட்குத் திருவருண் ஞானத்தால் கருதுதற்கரிய சிவானுபவம் அளிப்பதுவும் இத் திருவைந்தெழுத்தேயாம். இவ் வைந்

சு-வே : 1. அறையுமதே 2 எடுத்துயிருக் கருளான்

தெழுத்தே முதல்வன் இயற்றுகின்ற ஐந்து தொழிலும் அவன் நடிக்கும் நடிப்பும் ஆதலினால் அதனுடைய பெருண்மை நம்மால் கூறுதற்கு அரிதென்று உணர்க (எ-று) திருவைந்தெழுத்தின் பெருமையை

*"மந்திரங்க ளனைத்தினுக்கும் ஐந்தெழுத்தே மூல*
*மந்திரமா மெழுகோடி மந்திரத்தைந் தெழுத்து*
*மந்திரமிக் குயர்ந்ததய னரிமுதல்வா னவருள்*
*மதிமுடியோன் போலவன் றனக்கிணையுண் டாயின்,*
*மந்திரமைந் தெழுத்துநிகர் நின்றதுள தாமம்*
*மந்திரங்க ளெவற்றினுக்குங் காரணமைந் தெழுத்து,*
*மப்திரமில் வுலகினுக்குச் சிவனெனவைந் தெழுத்து*
*மந்திரமே யாதலினான் மதித்துரைப்பரறிஞர்"* (167)

என்னும் சிவப்பிரகாச விகாசப் பாட்டா லறிக.

இப்பாட்டு

**அகளமாகிய முதல்வன், அகரம் முதலான காரண ஐந்தெழுத்தால் (அருவுருவடிவாகிய) இலிங்கத் திருமேனி கொண்டும், சிகரம் முதலான காரிய ஐந்தெழுத்தால் உருவத் திருமேனி கொண்டும் நடிப்பன் என்றும் கூறுகிறது**

*அகரவுக ரம் மகரம் விந்து நாதம்*
*ஆகியவக் கரமைந்து மிலிங்க மாகும்*
*பகருமிதன் மிசைசிகரந் துடிய தாகும்*
*பரிவினுடன் வீசிவகை வகர மாகும்*
*யகரமிகு மபயகர மாக நீடும்*
*எரிநகர மாகமும் லகனின் பாதம்*
*மகர நிலை யாகமணி மன்றி னூடே*
*வான்கருணை வடிவாகி நடஞ்செய் வானே.* 123

(இ-ள்) அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் என்னும் காரண எழுத்துக்கள் ஐந்தும் இறைவனுடைய அருவுருவத் திருமேனியாகிய இலிங்கமாம் என்பது முன்னே கூறப்பட்டது. இக் காரண எழுத்துக்களிலிருந்து தோன்றிய

---

க-வே: 1. மகரமே 2. இலிங்மாக.

சிகரம் முதலான எழுத்துக்கள் அவ் விறைவனுடைய உருவடிவாக விளங்குவதுமன்றி உறுப்பாகவும் விளங்க நடிப்பன் என்க. எவ்வாறெனின்? நாதத்தின் காரிய எழுத்தாகிய சிகரம் துடியாய் விளங்கவும் விந்துவின் காரிய எழுத்தாகிய வகாரம் வீசிய கையாய் விளங்கவும், அகரத்தின் காரிய எழுத்தாகிய யகாரம் அபயக் கையாய் விளங்கவும், உகரத்தின் காரிய எழுத்தாகிய நகாரம் கையில் ஏந்திய எரியாக விளங்கவும், மகரத்தின் காரிய எழுத்தாகிய மகாரம் முயலகனை மிதித்த பாதமாக விளங்கவும் மணிமன்றில் அருள் வடிவாகி நடிப்பன் (எ-று)

'இலிங்கமாக' என்று பாடங்கொண்டு இறைவனுக்குத் திருமேனியாக என்றும் உரை கொள்க.

இப் பாட்டின் கருத்தினை,

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
அருவும் அபயம் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே"

என்னும் திருமந்திரப் பாடலால் (2798) அறிக.

## முதல்வன் பொதுக் கூத்து

ஊன்றுதம ருகக்கரத்தா லுலகுயிர்கட் கின்பம்
உறுவிக்கு மதுகிருட்டி உகந்தபய கரத்தால்
தோன்றுயிரு வினைதுலையொப் பாக்குமது திதியாம்,
சோதியழற் றிருக்கரத்தாற் சுழல்கரண மறுத்தே
ஏன்றபவ மறுப்பதுசங் காரம்வலப் பதத்தால்
இன்பதுன்பத்தழுத்தல்திரோ பவமெடுத்த பதத்தால்
ஆன்றிருள்கே வலசகலத் தெடுத்தருளான் முத்தி
அளிப்பதனுக் கிரகமிவை அரன்பொதுநா டகமே

சு-வே : 1. ஊன்றுபத மலமகற்றி 2. சோதிமுக தரிசனத்தாற்

(இ-ள்) நிலைபெறும் தமருகம் ஏந்திய கையினால் உலகத்திலுள்ள உயிர்கட்கு இன்பம் உண்டாக்க வேண்டி உடம்பாதிகளைத் தோற்றுவது படைப்புத் தொழிலாகும்; விரும்பி அபயக் குறி காட்டிய கையினால் இருவினைகளை ஏறாமலும் குறையாமலும் துலாக்கோல் போல் அளந்து கொடுத்து அனுபவிக்கச் செய்வது திதித் தொழிலாகும். ஒளிதங்கிய அழல் ஏந்திய கையினால் பொறிவழிச் சுழலும் கரணங்களை அறுத்து எடுத்த பிறவியை அறுப்பது அழித்தற் றொழிலாகும். வலக்காலால் உயிர்களை இன்ப துன்பத் தழுத்திவிடல் மறைத்தற் றொழிலாகும். தூக்கிய திருவடியால் இருள் தங்கிய கேவலாவத்தையிலிருந்தும், சகலாவத் தையிலிருத்தும் பக்குவமுள்ள உயிர்களை எடுத்து அருளால் முத்தியளித்தல் அனுக்கிரகமாகும். இவை அறிவிலாதவர்க்கும் அறிவுடையார்கட்கும் இறைவன் இயற்றும் பொது நாடகம் ஆகும், (எ-று)

இப்பாட்டின் கருத்தினை,

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந்தி ரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரக மென்னே"

என்னும் திருமந்திரம் பாட்டால் (2799) கஅறி.

இப்பாட்டு

**திருவைந்தெழுத்துள் சிகாரமே முதல்வன் நடிப்பு; வகாரமே அருளாகிய நடிக்கும் மன்றம் யகாரமே அதனைக்கண்டு சிவபோகத்தழுந்தும் உயிர் ; நகாரமே உலகம் தோன்றாமல் மறைக்கும் திரோதை ; மகாரமே உயிர்க்குப் பேரின்பச் சுவையை ஊட்டும் ஆணவமலம் என்பது,**

பரந்தசிவா னந்தநடஞ் சிகார மாகும்
பராபரையே சிதம்பரமாம் அதுவ காரம்
அரந்தையறச் சிவயோக மருந்து மாவி
யகாரமதாம் ஞாதுருஞா னங்கள் ஞேயம்

தெரிந்துபகுத் தறியுமறி வழித்தொன் றாக்கும்
திரோதான மூலகமறைத் திடுந காரம்
விரிந்தமல சத்தியழிந் தின்பந் தன்னை
மேன்மேலும் விளைக்குமது மகார மாமே. 125

(இ-ள்) பரவிய சிவன் ஆனந்தமாய் நடிக்கும் திருக்கோலமே சிகார எழுத்தாகும், பராசத்தியே அவ் விறைவன் நடிக்கும் வகாரமே சிதம்பரமாம் பிறவித் துன்பம நீங்குமாறு அந் நடிப்பினைத் திருவருளாற் கண்டு சிவபோகத்தை நுகர்வது உயிராகும். அவ் வுயிரே பகார எழுத்தாம்; உயிர் சிவபோகத்தை அருந்தும் பொழுது காண்பான், காட்சி, காணப்படும் பொருள் என்று வெவ்வேறாய்த் தெரிந்து பிரித்தறியும் அறிவினை அழித்து ஞேயமாகிய காட்சிப்பொருள் ஒன்றை ஆக்கி, உலகம் தோன்றாமல் மறைப்பது திரோதான சத்தியாகும். அச் சத்தியே நகாரமாகும். பல்வகையாய் விரிந்து நிற்கும் மலசத்திகள் அழிந்து நிற்கப் பேரின்பத்தை மேன்மேலும் உயிர்க்கு விளைவிப்பது ஆணவமாகும். அவ்வாணவமே மகார எழுத்தாம் (எ-று),

## நெஞ்சைத் தாமரையில் முதல்வன் நடித்து நிற்கும் இயல்பு.

இதயமல ரெட்டிதழெண் திக்க தாகும்
இனன்திசைமுன் பத்திமிகுந் தாகுங் கோபம்
துதிதருமின் சொல்லினிய வாய்மை நீடுந்
துயில்கெமன [1]மருந்துமைம் புலன்கள் துய்க்கும்
விதிமுறையே [2]கறங்கெனநின் றுயிர்க ளாட
விண்டமலர்ப் புண்டரிக புரத்து ஞானப்
பொதுவினிலங் குமையுடனெம் பிறவி நீங்கப்
புலியரவந் தொழப்பாதம் புரிவன் நாதன். 126

க-வே ; 1. சத்தியழித்து 1. அருந்தவமைம் புலன்கள் துய்க்கும் 2. களங்கென நின்.

(இ-ள்) நெஞ்சத் தாமரை எட்டிதழ்களை உடையது; அவ் விதழ்கள் எட்டும் இந்திரன், அக்னி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்னும் எண்மர்க்கும் உள்ள திசைகளை நோக்கி யிருக்கும்; அன்பும் தாகமும் கோபமும் இன்சொல்லும் வாய்மையும் துயிலும் இயக்கமும் என்னும் இவை முதலானவற்றைக்கொண்டு, நுகரத்தக்க ஐம்புலன்களை அனுபவிக்கும் ஊழின்முறையே, கறங்கினைப் போலச் சுழன்று நின்று உயிர்களெல்லாம் ஆடும்படி, மேலே கூறிய விண்ட மலர்ப் புண்டரிகபுரத்தில் ஞானப்பொதுவினில், உமாதேவியுடன் புலிக்கால் முனி வரும் தொழ, எம் பிறவி நீங்குமாறு இறைவன் பரத நாட்டியம் செய்வன் (எ-று).

இப் பாட்டின் கருத்தினை,

"ஒருங்கிய பூவுமொ ரெட்டித ழாகும்
மருங்கிய மாயா புரியாத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உயர்ந்தே"

என்னும் பாட்டாலும், (2528)

"உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன்நல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்
துதித்தெண் டிசையும் நிறைந்துநின் றாரே"

என்னும் பாட்டாலும் (2527) அறிக. இவை திருமந்திரம். 'இனன் திசை முன்' என்பதற்கு சூரியன் திசையாகிய கிழக்காதியாக என்று கொள்க.

## பெரும்பற்றப் புலியூரைப் பிரியாது வாழ்வோர் இன்னாரென்பது,

விரும்புற்ற தவம்விரதம் சீல மெல்லாம்
[1]மேல்வினையென் றறிந்தெவையும் விமலன்
கூத்தென் (று)
இரும்புற்ற மனமழலின் மெழுகா யென்றும்
யான்செய்தேன் பிறர்செய்தா ரெனுங்கோ ளீக்கி

பா-வே : 1. மேல்வினையென்

அரும்புற்றங் கென்னதியா னென்னும் பாசத்
தவாமருவும் புறப்பற்றோ டகப்பற் றான
பெரும்பற்றை யகன்யருளைப் பெறுவோர் ஞானப்
பெரும்பற்றப் புலியூரைப் பிரியார் தாமே. 127

(இ-ள்) விரும்புதலுற்ற தவவொழுக்கமும், விரதமும் நல்லொழுக்கமுமாகிய இவையெல்லாம் மேலைப் பிறவியிற் செய்த நல்வினைகளின் விளைவென் றறிந்து, எந் நிகழ்ச்சியும் கூத்தாட்டும் விமலனது கூத்தென்று உணர்ந்து இரும்பினைப்போ லிருந்துவந்த மனம் அழலிற்பட்ட மெழுகினைப் போல் உருக, எப்பொழுதும் யான் செய் தேன் பிறர்செய்தார் என்று உயிர்கள்மேல் வைத்துக் கருதும் மாறுபாட்டினை நீக்கித், தோன்றுதலுற்று, என்னுடையதென்றும் யான் என்றும் கருத்தும் பாசப் பொருள்களில் ஆசை பொருந்துகிற புறப்பற்று அகப் பற்றான பெரியபற்றினை விட்டு, இறைவன் திருவருளைச் சார்ந்தொழுகுவோர் யாரோ அவர் இறைவன் நடித் திருக்கும் ஞானமயமான பெரும்பற்றப் புலியூரினைப் பிரியாதவ ராவார் (எ-று).

## முத்தியினும் மும்முதலும் அழியாதாகையால் மும்முதலும் அனாதி யாகுமென்றல்.

முத்தியினு மும்முதலு மழியா தென்றே
மொழிந்திடுமா கமமதனை மொழியக் கேணீ
நித்தியமாம் பரபோகந் துய்ப்ப தான்மா
நீடுபர போகமுயிர்க் [1]களிப்போ னீசன்
சுத்தமல மின்பமிகு விளைக்கு மாற்றாற்
சொல்லரிய மும்முதலு மனாதி யாகும்
வைத்தமலம் முத்தியின்பம் விளையா தென்னின்
மற்றதுதான் நின்றநிலை வகுப்பக் கேளே. 128

---

[1] க-வே : களிப்பான்

(இ-ள்) பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் உயிர்முத்தியடையுங் காலத்தினும் அழிதலைப் பெறாதென்று சிவாகமங்கள் கூறும் அக் கூற்றின் கருத்தை விளக்கமாக மொழியக் கேட்பாயாக அழிவற்ற மேலான சிவபோகத்தை நுகர்வது உயிராகும்; மிக்க பரபோகத்தை உயிர்க்கு அளிப்பவன் பதிப்பொருளாகிய இறைவன் ஆவான், உயிர் சிவபோகத்தை நுகரும்பொழுது சத்தி கெட்டுத்தான் கெடாது நிற்கும் ஆணவமலம் அப் பேரின்பத்தை மிகவும் விளைவித்தலால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் என்றும் உள்ளவாம் (அநாதியாம்).

உயிர் சிவபோகத்தை நுகருங்கால் அதற்கு ஆணவ மலத்தால் முத்தியின்பம் விளையாதென்று, நீ கூறுவாயானால், அவ் வாணவம் நின்ற நிலையினை வகுத்துக் கூறக் கேட்பா யாக (எ-று).

இப்பாட்டின் கருத்தினை,

> "பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றாய்
> கதியிடத்து மூன்றினையுங் காட்டு" (49)
> "முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
> சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு - மெத்தவே
> இன்பங்கொ டுத்தலிறை யித்தைவிளை வித்தல்மலம்
> அன்புடனே கண்டுகொள் ளப்பா"

என்னும் உண்மை விளக்கப் பாடலால் அறிக.

## முத்தியினும் ஆணவமலம் உண்டென்பதை வலியுறுத்திகூறுதல்

ஆதிதிரோ தானத்தாற் [1]பெத்தந் தன்னில்
ஆணவந்தான் மாயாபோ கத்தி வின்பம்
போதமுற விளைத்துயிர்கட் குலகந் தோன்றப்
புனிதனருள் தோன்றாமன் மறைக்கு மாபோல்

---

சு-வே: 1. பெற்றந் தன்னில்

சோதியருண் முத்தியினுஞ் சத்தி மாந்திச்
சுகானந்தம் விளைத்துயிர்கட் குயிரா யீசன்
பேதமற நின்றுணர்த்து முண்மை தோன்றப்
பிரபஞ்சந் தோன்றாமன் மறைக்குங் காணே, 129

(இ-ள்) உயிர் பந்தமுற் றிருக்கும் நிலையில் (பெத்தத்தில்) ஆணவமலமானது ஆதிசத்தி என்னும் திரோதான சத்தியால் இயக்கப்பட்டு உயிர்கட்கு மாயா போகத்திலே இன்ப வுணர்ச்சி உண்டாகும் படி விருப்பத்தை விளைவித்து உலகப்பொருள்களை தோன்றச் செய்து முதல்வனும் திருவருளும் தோற்ற முறாமல் மறைத்தலைப் போலவே,

ஒளிமயமான அருள்சேர் முத்தியினும் அருட்சத்தியான் விழுங்கப்பட்டு, (அருட்சத்தியான் இயக்கப்பட்டு) உயிர்கட்குச் சுகானந்தத்தை விளையச் செய்து, இறைவன் உயிர்க்குயிராய் அத்துவிதமாய் நின்றுணர்த்தும் உண்மையைத் தோன்றச் செய்து உலகம் தோன்றாமல் மறைக்கும் என்று உணர்வாயாக (எ-று).

## இதுவும் அது

[1]தரைமுதலாய் நாதாந்த மீற தாகச்
சாருமலஞ் செம்பிலுறு களிம்பே போலக்
கருவியகன் றணுக்கடமைக் காணிற் செம்பு
காளிதமற் றாடகமாந் தன்மைத் தாகும்
விரவுபசு மலமொளிமுன் னிருளின் மாந்தி
விளைக்குமுயிர்க் கின்பநவ விதமும் நீங்கி
[2]அரிகுளிகை தனிலடங்கு மதுபோ லண்ணல்
அடியிணையின் ஆணவம்விட் டகன்று போமே.

(இ-ள்) செம்பிலே களிம்பு உற்றாற்போல உயிரின்கண் தரைமுதல் நாதாந்தம் முடிவாக உள்ள மலமெல்லாம் சார்ந்திருக்கும்.

---

சு – வே : 1 தரைமுதலா. 2. அருங்குளிகை

உயிரானது தரைமுதல் நாதம் ஈறான தத்துவங்களை யெல்லாம் ஆராய்ந்து தானல்ல என்று கண்டு நீங்கி, உயிராகிய தன்னையும் உயிர்க்குயிராகிய முதல்வனையும் திருவருள் ஞானத்தாற் கண்ட பொழுது, மேலே கூறிய செம்பு இரசவாதியால் களிம்பு நீங்கப்பெற்றுப் பொன்னான தன்மை போல, உயிர் அமலநிலை அடையும்.

அப்பொழுது, ஆணவமலம் என்னிலைமை அடையு மெனின்? அஃது ஒளிமுன் இருள் உற்ற நிலையை யடைந்து, சிவபோகத்தை நுகரும் உயிர்க்கு இன்பத்தை விளைவிக்கும் பொன்னானது தன்றன்மை தோன்றப் பெறாமல் இரச குளிகையில் அடங்கினாற் போல அவ் வாணவமும் அஞ்ஞான மன விகற்பம் முதலான (43) ஒன்பதுவகைச் செய்தியெல்லாம் நீங்கப்பெற்று இறைவன் திருவடியில் தன்றன்மை விளங்காமல் அடங்கிநிற்கும் (எ - று). அரி - பொன்.

## இலிங்கமும் குருவும் சங்கமமும் முதல்வனுடைய மனம் வாக்குக் காயம் என்றல்.

ஏத்திரிய இலிங்ககுரு சங்க மந்தாம்
ஏகபரன் மனவாக்கு காய மாகும்
வாய்த்தமனம் சிவலிங்க மாகும் மூல
மலமகற்றும்; குருவருள்சேர் வாக்கு மாயை
தீர்த்தருளும்; சங்கமமாம் மேனி தன்னால்
தீராத இருவினையின் கன்மம் நீக்கும்
ஆர்த்தமலம் மூன்றகற்றுங் குறியீ தாகும்
அல்லதுமற் றொன்றாலு மகன்றி டாதே. 131

(இ - ள்) புகழ்தற் கரிய இலிங்க வடிவமும், குருவடிவமும் தொண்டர் வடிவமும் ஆகிய மூன்றும் ஒன்றாகிய முதல்வனுக்கு அமைந்த மனமும் சொல்லும் உடம்பும் ஆகும். இம் மூன்றுள் முதல்வனுடைய மனமாயிருப்பது

---

சு - வே : 1. குருலிங்க சங்கமந் தான்.

சிவலிங்கமாம்; அது ஆணவமலத்தைப் போக்கும். முதல்வனுடைய சொல்லாயிருப்பது ஆசானாகும்; அது மாயாமலத்தைப் போக்கும்; முதல்வனுடைய திருமேனியாருப்பது சங்கமமாகும்; அது தீராத இருவினையாகிய கன்மமலத்தை நீக்குவதாம். மேலே கூறிய இலிங்கம் முதலான மூன்றும் மும்மலங்களை அகற்றும் குறியாகும். இவைற்றாலன்றி வேறு எவற்றாலும் உயிர்களுடைய மும்மலம் நீங்காவாம் (எ - று)

இப் பாட்டின் கருத்தினை

"குறிதரு இலிங்க நீடு
சங்கமங் குருவென் றேகன்
பிறிவதென் னென்னின் மும்மைப்
பெருகிருண் மலமுங் கன்மத்
துறுவினை யிரண்டும் மாயை
யுருவமும் அகற்றித் தானாய்
அறிவுரு உயிர்கட் கின்ப
மளித்திடு நிலைமை யாமே"

என்னும் வீராகமமப் பாடலால் (90) அறிக.

## முதல்வன் குருலிங்க சங்கமமாய் நின்றே அருள் புரிவான்; வேறு பொருளாய் நின்று அருள் செய்யான் என்பது.

வாரியும்நா ரமுமொன்று மிரண்டு மன்றாம்
வாரிதிநீ ராகாநீர் வாரி யாகா
நீரதனால் வாரியினை அறியு மாற்றால்
நீரினையே வாரியென நிகழ்த்த லாகும்
[1]வாரியில்நீர் நிலையாகில் பயன்கொள் வாம்மற்
றதுபோல வுயிர்க்குயிராய் மன்னி யாங்கே
ஆரியனும் குருவிலிங்க வேட மாய்நின்
றருள்புரிவன் வேறாய்நின் றருள்செய் யானே. 132

(இ - ள்) நீர்நிலையாகிய வாரியும், அதன்கண் உள்ள நீரும் ஒருபொருளும் அன்றாம்; இரண்டு பொருளும்

சு - வே : 1. "வாரியும்நீ ரிலையாகிற் பயனகொ டாவாம்
மற்றது போல்"

அன்றாம். ஏன் எனில், நீர்நிலைநீர் ஆகாது; நீரும் நீர் நிலை ஆகாது; நீரினைக்கொண்டு நீர்நிலையை அறிதலால். நீரினையே வாரியென நிகழ்த்தலு மாகும்.நீர்நிலையில் நீர், நிலை பெற்றிருப்பின் எல்லோரும் பயன் பெறுவர்; அது போல, உயிர்க்குயிராய்ப் பொருந்தியிருக்கிற நீர்நிலை போன்ற முதல்வனும், குரு இங்லிக சங்கம மாகிய நீராய் நின்று உயிர்கட்கு அருள்செய்வன்; வேறு பொருளாய் நின்று அருள்புரியான் ஆதலால், பாசநீக்கம் பெற விரும்பு வோர்அம் மூன்றுவடிவத்தினையும் வழிபட் டுய்க (எ-று). வேடம் என்றது சங்கமத்தை.

## உயிர்களிடத்தே அத்துவிதமா யிருக்கும் இறைவனும், குரு இலிங்க சங்கமத்தோ டியைந்து நின்றே, உயிர்கட்கு அருள்புரிவான் என்றல்.

சூரியனா லனலுமிழுங் காந்தத் தன்னாற்
சுடவரிதாம் [1]வேறாகிற் சூழும் பஞ்சைச்
சீருலவு கலுழனினாற் றீர்ப்போன் றன்னாற்
றீராது விடமதுவும் வேறா மாகில்
ஓரிலவை வேறறவே றாகி நின்ற
வுண்மைபோல், அனனியமா மொருமை யாகும்
நேரியனும் குருவிலிங்க வேட மாகி
நின்றுயிர்கட் கருள்புரியும் நிலைமை தானே. 133

(இ - ள்) சூழ்ந்த பஞ்சினை. சூரியனுடைய வெயிலும் சூரியகாந்தக் கல்லும் ஒன்று சேர்ந்த பொழுதே நெருப்பினை உண்டாக்கிச் சுடுதற்கு வல்லனவாம், ஒன்றாகக் கூடாமல் வேறாகில் அவற்றால் அது சுடப்படுதல் இல்லையாம்.

மந்திரவுருவமைந்த கருடனும் கருடமந்திரத்தைச் செபித்து விடத்தினைத் தீர்ப்போனும் ஒன்று சேர்ந்த பொழுதே அழிழ்தத்தை உண்டாக்கி விடத்தினைத் தீர்க்க

க - வே : 1. வேறாகிச்

வல்லனவாம்; ஒன்றாகக் கூடாமல் வேறாகில் அக் கருடனாலும் விடந்தீர்ப்போனாலும் விடம் தீராதாம்.

இவற்றை ஆராய்ந்தால், சூரியனுடைய வெயிலும் சூரியகாந்தக் கல்லும், கருடவடிவமும் அவ் வடிவைத் தியானித்துவிடம் தீர்ப்பவனும் வேறற வேறாகிநின்று, முறையே பஞ்சினைச் சுடுவது போல, விடத்தினைத் தீர்ப்பது போல, உயிர்களிடத்தே அத்துவிதமாயிருக்கும் முதல்வனும் குருலிங்க சங்கமத்தோ டியைந்து நின்று உயிர்கட்கு அருள்புரியும் நிலைமையாம் (எ – று).

### பல்வகை நிலையில் உயிர்க்கு வழங்கப்பெறும் பதினான்கு பெயர்களை மூன்று பாட்டாற் கூறுகின்றார்.

தேகமுறு மிந்திரிய [1]வியாத்த [2]மான்மாச்
 சீவனிரு வினைநுகரிற் பசுவா மென்பர்
[3]போகமுறு மவத்தைமரு விடுங்காற் [4]றீர்கை
 பொருந்தியுட லினையானென் றபிமா னிக்கில்
ஆகுமயற் சகலனிவை யனைத்தும் நீங்கி
 அடைதருமா ணவத்திற்கே வலனாந் தன்னை
மோகமறக் கண்டளவே சுத்தன் நானே
 முதல்வனெனில் வயிந்துவனாய் மொழியும் பேரே.

(இ - ள்) ஆன்மா உடம்பிலுள்ள இந்திரியங்களுடன் கலந்து நிற்கும் நிலையில் சீவனென்றும், அது இருவினைப் பயனை நுகர்ந்து நிற்கும் நிலையில் பசுவென்றும், இன்ப துன்ப நுகர்ச்சிக்கு ஏதுவான சாக்கிரம் முதலான அவத்தைகளைப் பொருந்திடுங் காலத்தில் ஒன்றனைப் பொருந்தி, உடம்பினையே நானென்று அபிமானித்தொழுகும் பொழுதிலே சகலனென்றும், மேலே சொன்ன இவற்றையெல்லாம் அகன்று ஆணவமலம் ஒன்றுடன்மட்டும் அவ்

சு - வே : 1. வியாப்தம். 2. ஆன்மச். 3. போகமறு.
4. றீர்க்கை, றீக்கை.

வான்மா விளங்கிய காலத்தே கேவலனென்றும், தன்னை மயக்கமறக் கண்டபொழுது சுத்தனென்றும், நானே முதல் வனெனக் கருதிய பொழுது வயிந்துவனென்றும் பெயர் பெறும் (எ - று).

## இதுவும் அது

பேராத சுதந்தர நீக் கதீதந் தன்னிற்
பேணுதிரோ தான்மாவாம் ஞானந் தன்னை
நேராகக் கண்டளவே ஞான வானம்
நிறைஞானந் தனிற்பொருந்தி லறிவென் றாகும்
சீராரும் பூரணமா ஞானந் தன்னிற்
றிகழுமகம் புறமெனுஞ்சுட் டகற்றி யாங்கே
ஏராரும் அருள்வடிவாய் நின்ற போதில்
இசைந்தபரா பரனெனவே யெண்ண லாமே. 135

(இ-ள்) நானே முதல்வன் என்னும் பேராத சுதந்திரத்தை நீக்கிய காலத்தில் உயிர் திரோதான்மா என்று பெயர் பெறும். திருவருண் ஞானத்தைத் தரிசித்த பொழுது அதற்கு ஞானவான் என்று பெயராகும். அந்த ஞானத்துடன் அது கூடிய பொழுது அதற்கு அறிவு (ஞானம்) என்று பெயராகும். சிறப்புப் பொருந்திய வியாபக ஞானத்திற் பொருந்தித் தனக்கு இயல்பாக எழும் அகம் புறம் என்கின்ற சுட்டறிவை அகற்றி எழுச்சி பொருந்திய அருள்வடிவாய் நின்ற பொழுதில் உயிர்க்குப் பராபரன் என்று பெயராகும் (எ-று).

## இதுவும் அது

எண்ணில்சுக சொருபதெரி சனனாம் போதில்
எய்து [1]சொரூ பத்தினனாம் பரமா னந்தம்
நண்ணியது தனுவாகிற் பரமா னந்தி
நாடுமதிற் கூடுதல்நீங் கிடுத லின்றி

சு-வே : 1. சொருபக்கினனாம்

அண்ணியதா டலையுறழச் சுபாவ மாகும்
ஆனந்த மேலீட்டிற் சிவனா மென்றே
பண்ணுமுயிர்க் கவதரப்போ ரீரே ழாகப்
பகர்வரருட் கவதரப்பேர் பகரக் கேளே. 136

(இ-ள்) ஆன்மா அளவற்ற சுக சொரூபத்தைத் தரிசித்த காலத்திலே சுகசொரூபத்தினன் என்ற பெயரைப் பெறும். அச் சுகசொரூப தரிசனத்தின்பின் பரமானந்தத்தைப் பொருந்தி அதுவே தனக்கு உடலாகிப் பரமானந்தி என்ற பெயரைப் பெறும். நாடப்படும் அப் பரமானந்தத்தில் புணர்தலும் பிரிதலுமின்றித் தான் தலை என்னும் இரண்டு சொல்லும் சேர்ந்து 'தாடலை' என்றாயினாற் போல ஒன்றி விளங்கும் நிலையில் அதற்குச் சுபாவன் என்று பெயராகும். அப் பரமானந்தத்திற்கு அதீதமான அதற்குச் சிவன் என்று பெயராகும். இவ்வாறு உயிர்க்கு அவதரப்பேர் பதினான்காகும். இனித் திருவருட்கு வழங்கப்படும் அவதரப் பெயர்களையும் சொல்லக் கேட்பாயாக (எ-று).

## பல்வகை நிலையில் (அவதரத்தில்) அருட்கு எய்தும் பெயர்

பகருயிர்கே வலமருவி லருளி னாமம்
பரவுபிர கிருதியெனும் பண்பிற் றாகும்
தகவுயிருக் குணர்த்துசக லத்து மாயா
சத்தியரு [1]ளிருவகையாஞ் சார்வு நீங்கி
இகவருமே லாலவத்தை யுணரி லான்மா
எய்துசிவ தத்துவமாம் அருளி னாமம்
அகமருவு முடலைவெறும் பொய்யென் றாவி
அறிந்தகலி லருணாமங் கடாட்ச மாமே. 137

சு-வே : 1. இருவகையாம் பற்று நீங்க.

(இ-ள்) சொல்லப்பட்ட உயிர், ஆணவமலத்துடன் கூடிய கேவலாவத்தையினைப் பொருந்திய காலத்திலே அவ்வுயிரிடத்தே மறைந்திருக்கும் திருவருளுக்குப் பரவப் படும். பிரகிருதி என்று பெயராகும். கேவலத்தில் அறியாமலிருந்து உயிர்க்கு அறிவுவரச் செய்யும் சகலாவத்தையில் அதற்கு மாயாசத்தி என்று பெயராகும். யான் எனதென்னும் இரு வகைப் பற்றினை நீங்கி நின் மலாவத்தையாகிய மேலாலவத்தையை (சுத்தாவத்தையை) உயிர் அடையில் அப் பொழுது அருளின் பெயர் சிவதத்துவ மாகும், இவை மூன்றும் உயிர் கேவல சகல சுத்தங்களை அடைந்த பொழுதிலே அருளுக்கு வழங்கும் பெயர்களாம். இம் மூன்று மன்றி, உயிர் நான் என்கின்ற பற்றாகப் பொருந்தியிருக்கும் மெய்யினை (உடலை) வெறும்பொய் யென்று தெளிவாக அறிந்து பற்றுவிட்ட பொழுது அதற்கு உதவியாயிருந்த அருளின் பெயர் கடாட்சம் ஆகும்.

## இவுதும் அது

ஆமுயிர்தன் னியல்பையுணர்ந் தருளைக் காணா
அவதரத்தி லருள்நாமந் திரோதை யாமி
ஏமலரு ளுணரிலரு ளறிவா மென்பர்
எய்துசை தன்யனரு ளுருவ மாகில்
நாமமருள் தனக்கினிய கருணை யாகும்
நாடியசீ வன்சிவனை நணுகும் போதில்
தோமிலிரும் பெயரருட்கா னந்த மாகச்
சொற்றிடுவ ரருட்கருணூல் துணிந்து ளோரே,

(இ-ள்) உயிர் தன்னியல்பினை மட்டும் உணர்ந்து தன்னை உணர்த்தும் திருவருளைக் காணத காலத்திலே அருளுக்குப் பெயர் திரோதை யாகும். உயிர் தனக்குப் பாதுகாவலாகிய அருளை உணரில் அப்பொழுது அருளின் பெயர் அறிவாகும் என்பர். சைதன்யன் என்னும் உயிர் அருளே வடிவமாய் விளங்கில் அக் காலத்தே அருளின்

பெயர் கருணை என்பதாகும், திருவருளின் துணைகொண்டு நாடிய உயிர் சிவனை அறிந்து அடையும் பொழுதிலே அருட்குப் பெயர் ஆனந்தம் என்று சிவாகம நூலைத் தெளிந்தவர் கூறுவர் (எ-று).

## திருவருட் சத்தியின் இயல்பும், உயிர் திருவருட் சத்தியின் துணையின்றி முதல்வனை அடையாதென்பதும்

பரன்பிரம சாரிபரை கன்னி யாகும்
பரம்பரனைச் சத்தியனு பவியா தென்றும்
வரமபிலனுக் கணையிறையோ டாக்கி நேயம்
மன்னுமுயிர்ப் பாங்கியென நீங்குஞ் சத்தி
குரம்பையிலைம் புலனுயிர்க [1]ளருந்து மாறு
கூட்டிடுமைம் பொறிபுனலின் பயன்கொ ளளாம்
அரும்பொறிமை யொழிந்துயிரைம் புலனைக் [2]கூடா
அத்தனையச் சத்தியொழிந் தடைந்தி டாவே 139

(இ-ள்) பரன் என்னும் முதல்வன் தன்னியல்பில் நிற்கும் பிரமசாரி யாவான். பரை என்னுஞ் சத்தியும் தன்னியல்பில் நிற்கும் கன்னிகை யாவாள். எப் பொழுதும் அம் முதல்வனுடைய சத்தி பரம்பரனாகிய முதல்வனை அனுபவப் பொருளாகக் கொண்டு நுகர்ந்து இன்பமடைவ தில்லை. அங்ஙனமாயின் அச் சத்தியின் செயல்தான் யாதெனவினவின்? எண்ணிக்கையற்ற ஆணவமல சம்பந்த முடைய உயிர்களைப் பக்குவ காலத்தே முதல்வனோடு கூட்டித் 'தலைவியைத் தலைவனுடன் கூட்டிய உயிர்த் தோழி அகல்வது போலத்'தான் அகன்று நிற்கும். எவ்வா றெனின்? உடம்பினிடமாக ஐம்பொறிகள் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலப்பொருளை உயிர் அருந்துமாறு கூட்டுவிக்கும். அப் பொறிகள் புலனாகிய

---

கு-வே : 1. அருந்துமாறும் 2. கூடா தத்தன்மைச் சத்தியொழிந் தடைந் திடாவே,

பயனைக் கொள்ளாவாகும். ஆனால் அரிய பொறிகளை ஒழிந்து உயிர் ஐம்புலப் பொருள்களைக் கூடி நுகர்வதில்லை அதுபோல, உயிர் திருவருட்சத்தியின் துணையின்றி முதல்வனை அடையாதாகும் (எ-று).

இறைவனுடைய சத்தி கன்னித்தன்மை யுடையாள் என்பதைக்.

"கன்னியுங் கன்னி அழிந்திலள்" (1118)

என்னும் திருமந்திரப் பாட்டால் அறிக.

## ஐங்கோசமுங் கழன்றதே ஆன்மா என்றது

உடலையுயி ரெனமதித்த லன்னமய மாகும்
உயிர்சீவ னெனமதிக்கிற் பிராணமய மாகும்
நடலைமன முயிரென்றன் மனோமயமாம் புந்தி
நாடுமுயி ரெனிலது [1]விஞ் ஞானமய மாகும்
அடன்மருவு மதீதமுயி ரெனமதிக்கு மதுவே
ஆனந்த மயகோச மைந்தினையும் பொருந்தி
விடலரிதாய் யாப்புண்டங் ககம்புறமா யவற்றின்
வேறாய்நின் றறிவதுவே ஆன்மாவென் றுணரே. 140

(இ - ள்) தூல உடம்பினை உயிரென்று கருதின், அது உயிரன்று; அன்னமய கோசமாகும். பிராண வாயுவை உயிரென்று கருதின், அதுவும் உயிரன்று; அது பிராணமய கோசமாகும். துன்பத்தினைத் தரும் மனத்தினை உயிரென்று கருதின், அதுவும் உயிரன்று; அது மனோமய கோச மாகும் புத்தியினை நாடப்படும் உயிரென்று கருதின், அதுவும் உயிரன்று; அது விஞ்ஞானமய கோச மாகும். புத்திக்கும் அப்பாற்பட்ட பொருளே உயிரெனின், அதுவும் உயிரன்று; அது ஆனந்தமய கோச மாகும். அங்ஙனமாயின் உயிர்தான் எதுவெனில்? அன்னமய கோசம் முதலிய ஐந்தனையும் தனக்கொரு உறையாகப் பொருந்தி, இவற்றிலிருந்து நீங்காததாய்ப் பிணிப்புண்டு, இவற்றிற்கு அக

---

[1] க - வே : விஞ்ஞானமய கோசம்.

ழுமாய்ப் புறமுமாகி ஐங்கோசத்தின் வேறாய் நின்று அறிந்து வரும் பொருளே ஆன்மா என்று உணர்க (எ — று).

## கருதலளவையால் உடம்பினுள் உயிர் உளதென்று துணிதல்

போக்குவர வுறுமுடலி லறிவனுள னெனவே
புகறல்பிர திக்கினையா; மிதற்கேது பகரில்
ஊக்கியமெய் யறிவிலையால்; திட்டாந்தங் கடம்போல்
உபநயமக் கடமொருவன் கொடுபோகிற் போகும்
தாக்கறவில் லாதிருக்கு மதுபோலில் வுடலந்
தான்போக்கு வரவுசெயா தாகும்; நிகமனந்தான்
ஆகையினை நடத்திடுவா னவ்வுளிவ் வைந்தும்
அன்னுவய வெதிரேகி யனுமான மெனுமே. 141

(இ - ள்) போதலும், வருதலும் முதலான வினையுடன் கூடிய உடம்பின்கண், அவ் வினைக்குக் காரணமாய் உயிர் என்னும் அறிவனொருவன் உளன் என்று தன்பொருட்டனுமானத்தாற் றுணிந்து கூறுவது, பிறர்பொருட்டனுமானத்தின்கண் கூறப்படும் ஐவகை உறுப்புகளுள் பிரதிக்கினை என்னும் உறுப்பாகும். இப் பிரதிக்கினைக்கு ஏது என்னும் உறுப்பினைக் கூறில், போதல் வருதல் முதலிய வினைகளை அறிந்து செய்தற்கு உடம்பினுக்கு அறிவில்லாத காரணத்தால் என்பதாம். இதற்குத் திட்டாந்தமென்னும் உறுப்பினைக் கூறின், கடங் (குடம்) கொண்டானுக்கன்றிக் கடத்திற்கு அறிவில்லாமை போல என்பதாம். உபநயம் என்னும் உறுப்பினைக் கூறின், திட்டாந்தமாய்க் கூறிய கடம் உணர்வுடைய ஒருவன் எடுத்துச் சென்றாற் செல்லும்; இல்லையேல் ஓரிடத்திலிருக்கும்; அதுபோல, இவ் வுடலமும் உணர்வுடைப் பொருளொன்று உள்ளிருந்து இயக்கினால் இயங்கும்; இல்லையேல், தானாகப் போதல் வருதலைச் செய்யாமல் ஓரிடத்திற் கிடக்கும் என்பதாம். நிகமனம்

என்னும் உறுப்பாவது, இவ்வுடம்பினை நடத்துபவன் யாரோ எனின், அவன் ஆன்மா என்பவனாவான் என்பதாம். இவ் வைந்துறுப்புடன் கூடிய இவ் வனுமானம் அன்னுவய வியதிரேகி அனுமானம் என்று கூறப்படும் (எ - று).

அந்நுவய வெதிரேகி அனுமானமானது பிரதிக்கினை, ஏது திட்டாந்தம், உபநயம், நிகமனம் என்னும் ஐந்துறுப்புடன் கூடியிருக்கும். இது அந்நுவயமாகவும் வெதிரேகி யாகவும் (உடம்பாடாகவும், எதிர்மறையாகவும்) கொள்ளப்படுதலின் இப் பெயர் பெற்றதென்க.

இப் பாட்டின் கருத்தினை,

"தோற்பாவைக் கூத்தும் கூத்தும் தொல்லை
மரப்பாவை யியக்க முஞ்சீர்த்,

தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்,

பார்ப்பாய வேடங் காட்டி
யாடுவோர் பரிசு போலும்,

ஆர்ப்பாய காயந் தன்னை
ஆன்மாநின் றாட்டு மாறே" (214)

என்னும் சிவஞான சித்திச் சுபக்கத்தால் அறிக.

பொறி புலன் முதலான தத்துவாதீதன் உயிர் என்பதையும், பொறிபுலன் முதலான தத்துவங்களில் வேறுபட்டது உயிர் என்னும் உண்மையை உணர்த்துவது திருவருளறிவே என்பதையும் இப் பாட்டு கூறுகிறது.

பொறிபுலன்கள் நானல்லேன் மனாதிகள் நானல்லேன்
புகலரிய கலாதிகளும் நானல்லேன் பொறியால்
அறிகருவி நானல்லேன் இவைசடமென் றிவற்றை
அறிந்ததில்வே றாய்நின்ற [1]அறிவுயிரென் றறிக.

---

சு - வே : 1. அறிவான்மா வாகும்.

நெறிதருதத் துவஞ்சடமாம் நாமலவென் றிவற்றை
நீயறிந்து நீங்குதற்கு நின்னுயிருக் குயிராய்ப்
பிறிவறநின் றுணர்த்தியிடு மொளியருளா முலகிற்
பிறங்குவிழிக் கொளியுதவு மிருங்கதிரொப்
பெனவே. 142

(இ-ள்) நான் ஐம்பொறிகளும் ஐம்புலனும் அல்லேன்: நான் மனம் முதலான அந்தக்கரணங்களும் அல்லேன்; சொல்லுதற் கரிய கலைமுதலான வித்தியா தத்துவங்களும் நான் அல்லேன்; ஐம்பொறியால் பொருள்களை அறிவதற்குக் கருவியா யிருக்கும் சிவதத்துவங்களும் நான் அலலேன்; மேலே கூறிய பொறிமுதலானவை யெல்லாம் சடப்பொருளாகும் என்று இவற்றை அறிந்து, அச் சடப்பொருளில் வேறாய் நின்ற அறிவுப் பொருளே (சித்துப் பொருளே) உயிராகிய நீ என்று அறிக.

முறைமையாகத் தரப்பட்ட பொறிபுலன்முதலிய ஆன்மதத்துவங்களும் வித்தியாதத்துவங்களும் சிவதத்துவங்களுமாகிய இவையெல்லாம் சடப் பொருளேயாகும். நாம் அச் சடப்பொருளல்ல என்று, இவைகளை ஐயந்திரிபற அனுபவத்தாலறிந்து, அவற்றில் பற்றுச் செய்யாமல் நீ நீங்குதற்கு, நின என்கிற உயிர்க்கு உயிராய்ப் பிரிதலறநின்றுணர்த்தியிடும் ஒளியே திருவருட் சத்தியாகும்; அத் திருவருட் சத்தியானது "உலகின்கண் விளங்கும் விழிக்கு ஒளியினை உதவுகின்ற ஞாயிற்றின் பொதுவொளிபோல" அறியத் தொடங்கும் உயிர்கட்கு அறிவித்தலைச் செய்யும் பொது அறிவாகும் (எ-று).

பொறிமுதலான தத்துவமெல்லாம் உயிரல்ல என்று அறிந்து நீங்கும் நிலைக்குத் தத்துவாதீதம் என்று பெயர்,

இதனை,

"மண்முதலாம் நாதாந்த மாய்வந்த தத்துவத்தின்
உண்மையறிந் தெல்லாம் ஒழிந்தாயே-எண்ணிலிவை
தத்துவா தீதமெனச் சாற்றுங்காண் சைவமறை
அத்துவா யெல்லா மற" (20)

என்னும் துகளறு போதத்தால் அறிக.

பிறிவறநின் றுணர்த்தியிடும் ஒளி அருளாம் என்னும் கருத்தினை,

"தத்துவ மானவற்றின் றன்மைக ளுணருங் காலை
உய்த்துணர்ந் திடவுதிப்ப தொளிவளர் ஞானமாகும்"

(73) என்னும் சிவப்பிரகாசத்தால் அறிக.

## பதியறிவில் உயிரறிவு அடங்கி யிருத்தல்

பொன்னதனை யடக்கியிடுங் குளிகை போலும்
பொருவில்விழி ஒளியடங்கு மிரவி போலும்
உன்னுமிரும் பினையடக்குங் காந்தம் போலும்
உயிரையடக் கிடுமூல மலமே போலும்
வன்னிதனை யடக்கிடுமிந் தனமே போலும்
மருவுதுரும் படக்கிடுமுப் பளமே போலும்
அன்னபழு மரமடக்கும் வித்தே போலும்
அரனருளி லடங்குமுயி ரறிவு தானே. 143

(இ - ள்) பொன்னினைத் தனக்குள் வேற்றுமையற அடக்கிக்கொள்ளும் இரச குளிகை போலவும், விழி ஒளியைத் தனக்குள் வேற்றுமையற அடக்கிக் கொள்ளும் ஞாயிற்றின் ஒளி போலவும், இரும்பினைத் தனக்குள் அடக்கிக்கொள்ளும் காந்தம் உயிரினைத் தனக்குள் அடக்கியிருக்கும் ஆணவமலத்தினைப் போலவும், நெருப்பினைத் தனக்குள் அடக்கியுள்ள விறகினைப் போலவும், துரும்பினைத் தனக்குள் அடக்கியிருக்கும் உப்பளமே போலவும், ஆலமரத்தைத் தனக்குள் அடக்கியிருக்கும் ஆலவித்தினைப் போலவும் பொது அறிவு என்னும் இறைவன் திருவருளறிவில் உயிரறிவு அடங்கியிருந்து அது இயக்க இது இயங்கி அறியும் (எ - று).

இப் பாட்டின் கருத்தினை

"இரும்பை யடக்குங் காந்தமுட
னிசைபொன் னடக்குங் குளிகையுமே,
அரும்புப் படக்கும் பரலசமு
மதனை யடக்கு மாழ்நீரும்,

துரும்பை யடக்கு மவ்வுப்பும்
சுடரை யடக்குங் கதிரொளியும்,
இருங்க ணடக்குங் கிரணமும்போல்
இறையுள் ளடக்கும் உயிரறிவே" (308)

என்னும் தத்துவப்பிரகாசம் பாட்டால் அறிக.

## பரமானந்த நிலை

உகைத்தாடுங் கயிறகன்ற ஊசல் போலும்
[1]உலவாத திரிவொழிந்த சுறங்கே போலும்
[2]விகைத்தாடும் விசையறுபம் பரமே போலும்
[3]விளங்கொலிசேர் தாழ்ந்தமணி நாவே போலும்
செகத்தாய சித்திரத்தின் நிலையே போலும்
சிவபோகத் தடங்கியுயிர் செயலொன் றின்றி
அகத்தாய [4]தம்போதப் பற்று நீங்கி
அசைவறநிற் பதுபரமா னந்த மாமே. 144

(இ-ள்) உயிா, சிவபோகத்திலே அடங்கி, ஒரு செயலு மின்றி, ஆன்ம போதமாகிய தற்போதப் பற்றினை நீங்கி, 'நின்றபடி தானே நிலையா நிலையதனில் நின்றுவிடு நேராக நீ'' (துகளறு. 59) என்ற அசைவற நிற்கும் நிலையில் நிற்பதுவே பரமானந்தநிலை ஆகும்.

உயிர் சிவபோகத் தடங்கித் தற்போதமற்றுச் செயலற் றிருத்தற்குக் கூறப்படும் உவமை எவையெனின்? எழும்பி ஆடுவதற்கு ஏதுவான கயிறு அகன்ற ஊசலின் செயலறவு போலும் ஒழியாமல் சுழன்றுகொண்டிருக்கும் சுழற்சி யற்ற சுழற்காற்றாடியினைப் போலும் தணித்து ஆடுகிற பம்பரம் விசையற்ற நின்றாற் போலும். சுற்றிலும் சென்று புடைத்து விளங்க ஒலிக்கின்ற தாழ்ந்த மணிநாக்கு ஒலியாது நின்றது போலும். உலகத்திலே எழுதி ஆக்கப் பட்ட ஓவியம் அசையாது நிற்றல் போலும் (எ—று)

---

சு-வே : 1. உலவாது 2. மிகைத்தாடும் 3. விளங்கொளிசேர் 4. நம்போதப்.

இப் பாடற் கருத்தினை,

"கயிறற்ற வூசல் போலுங் கதிர்மணி யிருத்தல் போலும்,
செயலற்ற பாசம் போலும் சித்திரத் துருவம் போலும்,
வியலுற்ற பம்ப ரத்தின் விசையறல் போலு மாகும்,
செயலற்ற கறங்கு போலு மடங்கிடச் சிவமுதிக்கும்"

என்னும் (309) தத்துவப் பிரகாசத்தால் அறிக.

உயிர் இருவினை வயப்பட்டுச் சுவர்க்கம், நரகம், புவி என்னு மிடங்களிற் புக்குச் சுழன்று கொண்டே யிருத்தற்குத் திருமூலர் கறங் கோலை முதலியவற்றை உவமை கூறியுள்ளார். அதனைக் கீழ் வரும் பாட்டால் அறிக.

"கறங்கோலை கொள்ளிவட் டங்கட் விற்றிரை
நிறஞ்சேர் ததிமத்தின் மலத்தே நின்றங் (கு)
அறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந் (து)
இறங்கா வுயிரரு ளாலிவை நீங்குமே" (2313)

## தம்போதப் பற்று நீங்கித் திருவருள் வசமாய் ஒழுகும் ஞானிகள் செய்யும் நற்செயல் தீச்செயலெல்லாம் இறைபணியே என்றல்

எண்டருமெய்ஞ் ஞானிகடாம் நன்மை தீமை
இயற்றினுமப் பலன்நுகரார் இவர்தம் மேனி
கண்டுதொழு வாரிகழ்வார் தம்பா லெய்தும்
கருமுகிலின் செலல்போலக் கருதா ரொன்றும்.
பண்டிகலும் வினையுடலிற் பலிப்பி னாலே
பகர்காலந் திசைகளருந் தவங்கள் சீலம்
கொண்டதியா னஞ்செபங்கள் பூசை யாவும்
குறித்திடினும் ஒழித்திடினும் அவர்க்கமலன்
பணியே. 145

(இ-ள்) முதல்வனுடைய திருவருளறிவில் உயிரறிவு அடங்கி இயங்குவதை உணர்ந்து தற்போதப் பற்று நீங்கித் திருவருள் வழியே ஒழுகும் எண்ணத்தக்க மெய்ஞ்ஞானிகள் தாம் நல்வினை தீவினைகளைச் செய்திடினும், அவற்றால் விளையும் இன்ப துன்பமாகிய பயனை அடைந்து அனுபவிக்கப்பெற்றார். அவர் செய்த அவ் வினைப்பயன் எவ்வாறு கழியுமெனின்? இவர் தம் திருமேனியைக் கண்டு தொழுவார் பக்கல் நல்வினையும், இகழ்வார்பக்கல் தீவினையும் எய்துமென்க. இஞ் ஞானிகள் தாம் 'நன்றில மென்றும் தீநில மென்றும் வரையாது பெய்யும் மாரிபோல இன்னார் தம்மைத் தொழுதா ரென்றும், இன்னார், தம்மை இகழ்ந்தா ரென்றும் சிறிதும் கருதாது, எல்லார் மாட்டும் அருளை செய்து ஒழுகுவர். பழைய பிறவிகளிற் செய்யப்பட்டு இப் பிறப்பின் அனுபவமாய் வந்த மாறுபட்ட நுகர்வினை (பிராரத்தவினை) உடலளவிற் பயன் தருதலால், காலம் இடங்களைக் கருதித் தவம், ஒழுக்கம், தியானம், செபம் பூசை முதலானவற்றைச் சுட்டிச் செய்தாலும், செய்யாது விடினும் இவ் விரண்டும் அவர்க்கு இறைபணியாக்வே இருககும் (எ-று).

இப் பாட்டின் கருத்தை,

"இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லாம்
இதமகித மிவனுக்குச் செய்தார்பா லியையும்" (304)

என்னுஞ் சித்தியார் சுபக்கப் பாட்டால் அறிக.

## திருவள்ருவசமா யொழுகும் ஞானி செய்யும் பாதகமும் இறைபணியே என்றல்

கண்ணொளியை இரவியொளி கவர்ந்துகொண்டே
யுலகிற்
காண்பன வெலாங்கணுக்குக் காட்டியிடு மது
போல்
அண்ணலுமங் களப்பரிய உயிர்க்குயிராய் நிறைந்தே
அருவினையின் பயனளவி னருத்துவனென்
றுணர்ந்தே

உண்ணிலவும் அருள்வசமா மொருமைநிலை
யுடையோர்
உயர்சிவமே கண்டிருப்பர் உலகநெறி உணரரா
எண்ணரிய பாதகங்கள் புரிந்தவல நெறியே
இயற்றிடினு மவையனைத்து மிறைபணியா
யிடுமே. 146

(இ-ள்) ஞாயிற்றின் ஒளி கண்ணொளியைத் தன்பால் கவர்ந்து கொண்டே உலகின்கண் காணும் பொருள்களெல்லாவற்றையும் கண்ணிற்குக் காட்டி நிற்கும். அதனைப் போல முதல்வனும் எண்ணரிய உயிர்களுக்கெல்லாம் உயிராய் நிறைந்துநின்று, ஒவ்வொரு உயிரும் செய்த வினையளவில் அதற்குரியபயனை அவற்றிற்கு அருத்துவான் என்னும் உண்மையை உணர்ந்து, தம்முள் விளங்கும் திருவருள் வசமாகும் ஒருமைநிலையை (அவனிவனாய் நின்ற முறை ஏகனாகி) உடைய மெய்ஞ்ஞானிகள் உயர்ந்த சிவ மென்னும் செம்பொருளையே கண்டிருப்பர். அவர் உலக நெறியைச் சிறிதும் உணரார். திருவருள் வசமா யொழுகும் இவர், கணக்கற்ற பாதகங்களைப் புரிந்து அவல நெறியைச் செய்தாலும், அவ் வனைத்தும் இறை பணியாகியே நிற்கும் (எ-று).

## உலகனைத்தும் சிவமயம் எனக் கண்டவரே பசுத்தன்மையிலிருந்தும் பாசப் பிணிப்பிலிருந்தும் நீங்கியவ ராவார் என்றல்

பண்ணாதி யைந்தினுக்கு மயன்முதலோர் சிவமூர்த்தம்
மனமாதி யைத்தினுக்கும் மகராதி சிவமூர்த்தம்
பண்ணாருங் கலாதிகட்கு நாதாதி சிவமூர்த்தம்
பரனருளே யெவற்றினையும் பரிந்துநடத்
திடுமதனால்
எண்ணாருஞ் சராசரங்க ளரனுருவா மெவ்விடத்தும்
இறையருளை யன்றியுயிர்க் கறிவுதியா திலகுநுதற்
கண்ணாளன் றிருமேனி யாமுலக மனைத்துமெனக்
கண்டாரே பசுபாசம் விண்டாரென் றிடுநூலே.

(இ-ள்) மண் நீர் நெருப்பு வளி ஆகாயம் என்னும் ஐம்பூதங்கட்கும் முறையே நான்முகன், திருமால், அரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவரும் அதிதெய்வங்களாம். மனம், அகங்காரம், புத்தி, சித்தம் உள்ளம் என்னும் ஐந்து கரணங்கட்கும் முறையே மகாரம், அகாரம் உகாரம், விந்து நாதம் என்பவை அதிதெய்வங்களாம், கலை, காலம், நியதி, வித்தை அராகம், புருடன், மாயை என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழிற்கும் நாதம் முதலிய சிவதத்துவங்களே அதிதெய்வமாகும். இறைவனுடைய திருவருள் தானே சிவ தத்துவங்கள், மகாரம் முதலியவை, நான்முகன் முதலானவர் ஆகிய எல்லாப்பொருள்களையும் பரிவுகொண்டு நடத்துவிக்கும் அக் காரணத்தால் இயங்கியற்றிணை வடிவாயும் நிலையியற்றிணை வடிவாயுமுள்ள இவ்வுலகம் முதல்வன் வடிவாகும்; எப்பொழுதும் இறைவனுடைய திருவருளை யன்றி அவ் விறைவனுடைய திருமேனியாம் உலகமனைத்திலும் உயிர்கட்கு அறிவு தோன்றப்பெறா தென்று பிண்டவரே பசுத்தன்மையி லிருந்துப் பாசப் பிணிப் லிருந்தும் நீங்கியவராவார் என்று சிவாகமம் கூறும் (எ - று).

அந்தக்கரணங்கள் ஐந்தினை மகாராதிகள் செலுத்து மென்பதை

"மன்னு மகாரம் மனஞ்செலுத்தும் புத்திமினை
உன்னும் உகாரம் உபகரிக்கும் - முன்னாகும்
ஆங்காரந் தன்னை அகாரஞ் செலுத்தியிடும்
நீங்காத சித்தம்விந்து நேர்"

என்னும் (14) துகளறுபோதத்தால் அறிக.

## திருவருள் வசமாய் ஒழுகுவார் பெறும்பேறு

படைக்கலங்கள் [1]கொலைத்தொழில்கள் பலசெய்
தாலும்
பாவவிதம் படைக்கலத்தை மேவி டாவாம்
படைக்கலங்கைக் கொண்டவன்பால் நின்றாற் போலப்
பரனருளின் வசமாகிப் பணிசெய் வோர்கள்

---

க - வே : 1 கொடைத் தொழில்கள்.

துடைத்திடுவர் மலத்தினையெத் தொழில்செய்
தாலும்
துக்கசுகப் பவக்கடலிற் றோயார் என்றும்
அடைக்கலமாய் ஆண்டசிவன் பாத நீழல்
அடைந்திடுவர் [1]எப்பதமும் பொருந்தி டாரே.

(இ-ள்) வாள் முதலான படைக்கலங்கள் பல கொலைத் தொழில்களைச் செய்தாலும் அதனாற்றோன்றிய தீவினை வகைகள் அப் படைக்கலங்களை மேவிடாவாம். அத் தீவினைகள் படைக்கலங்களைக் கைக்கொண்டவர் பாலே சென்று நிற்பதாம். அதுபோல, முதல்வனுடைய திருவருளின் வசமாகி, இறைபணியில் நிற்போர் பாசத்தினைப் போக்குவர். அவர் எத்தொழிலைச் செய்திடினும இன்ப துன்ப வடிவாகிய பிறவிக் கடலிற் படியார். எந்தப்பத முத்தியினையும் பொருந்திடார். எப்பொழுதும் அடைக்கலமாய் ஆண்ட சிவபெருமானுடைய திருவடி நீழலாகிய பரமுத்தியினையே அடைவர் (எ - று).

## தற்போதத்தால் இன்ப துன்பம் நுகர்வாரைக் கண்டு இரங்கிக் கூறியது

சித்தமுறும் நினைவுரைகள் தொழில்பொய் வாய்மை
தீமைநலம் விருப்புவெறுப் பின்ப துன்பம்
வைத்தபுசிப் பிகழ்ச்சிபுகழ் தருமந் தானம்
மடிமுயற்சி பேறிழவு மற்று மெல்லாம்
அத்தனறிந் தளவிலவ ரவர்க்கு நாளும்
அருங்கனவு நனவினுநின் றளிப்ப தோரார்
தத்தமறி வால்நுகருங் கருத்த ராகித்
தடுமாறி உளமெலிந்து [2]தளர்வா ரந்தோ. 149

(இ-ள்) சிந்தித்தலுறும் எண்ணமும் அதன்வழி இயங்கும் சொற்களும் செயல்களும் பொய்யும் மெய்யும் தீமையும் சொற்களும் விருப்பும் வெறுப்பும், இன்பமும் துன்பமும், பழியும் புகழ்வும் அறமும் கொடையும் சோம்

சு - வே : 1. எப் முபவம். 2. தளர்வ ரந்தோ.

பலும் முயற்சியும் பெறுதலும் இழத்தலும் முதலாகிய எல்லாவற்றையும் சர்வஞ்ஞனாகிய முதல்வன் உணர்ந்து எண்ணற்ற உயிர்கட்கு நாள்தோறும் கனவிலும் நனவிலும் நின்று அளித்தலைக் கருதாராய், மக்களெல்லாம் தம் முடைய தம்முடைய அறிவினால் பலவகை இன்பங்களை விரும்பி அவற்றை நுகருங் கருத்தினையுடையவராகித் தாம் விரும்பியபடி ஒன்றுங் கிட்டாத பொழுது உள்ளந் தடுமாறி மெலிந்து அந்தோ தளர்ச்சியடைபவர்; என்னே இவர்தம் தற்போத அறிவு இழிந்தபடி ! (எ-று)

## இன்ப துன்பப் பயனைத் தற்போதத்தினால் நுகராது முதல்வன் திருவருள்வசமாய் நுகரில் அதுவே இறைபணியா மென்பது.

உடலிலிரு வினையுதவு மிதமகிப் பயனால்
உளவாகு மின்பதுன்ப முணவொழியா துயிர்க்கு
நடலைமரு ளறிவினுடன் நாமருந்தி லதுவே
நமன்றூத ரருத்துவதாம் நணுகிடுமேல் வினையும்
சடமுடலம் வினைநுகரா தறிந்துயிர்தா னருந்தா
தனைவனவ னவனதுவாம் நிலைமையினா லுயிர்கட்(கு)
இடமுடனின் றருத்துவனென் றுணர்ந்தருளா லருந்தில்
இறைபணியா மெதிர்வினையு மெரிசேர்வித்

(இ-ள்) நல்வினை தீவினை தருகின்ற நற்பயனாலும் தீப்பயனாலும் உடம்பின்கண் உளவாகின்ற இன்பமும், துன்பமும் உயிர்க்கு நுகர நுகர ஒழியாமல், மேன்மேலும் வந்துக்கொண்டேயிருக்கும். துன்பத்தைத் தரும் ஆணவமல அறிவால் (மருள் அறிவால்) நாம் அவ் வின்ப துன்பங்களை அருந்தினால், அதுதானே, இயமனுடைய தூதுவர் இயம னுடைய உலகத்திற்குக் கொண்டு சென்று, அங்குள்ள இன்ப துன்ப நுகர்ச்சியை அருத்துவதற் கேதுவாம். மருளறிவால் நுகர்ந்தால் மேற்பிறபிற்குக் காரணமான ஆகாமிய வினையும் நண்ணும்.

அவ்வாறு நுகராமல், உடம்போ அறிவில்லாத் (சடப்) பொருளாகும். அக் காரணத்தால் அது நல்வினை தீவினைகளை அறிந்து இன்ப துன்பப் பயனை நுகராது. உடம்பிலுள்ள உயிர்தானும் சிற்றறிவும் மறதியும் உடையதாகையால் அவ்வினையை அறிந்து இன்ப துன்பப் பயன்களை நுகராது. இவ்விரண்டும் நீங்கவே, பதியாகிய இறைவன் அவன் அவள் அது என்று வழங்கப்பெறும் உலகமெல்லாம் கலந்து விளங்கும் நிலைமையினால், அவ்வவ் வுயிர்கள் நுகர வேண்டிய வினையை அறிந்து அருத்துவான் என்று உணர்ந்து பதியின் திருவருள்வசமாயொழுகி, இன்ப துன்பங்களை நுகர்ந்தால், அது இறைபணியாகும். இவ்வாறு நுகர்பவர்கட்கு எதிர் வினையாகிய ஆகாமியமும் 'எரிசேர் வித்துப் போல' பிறவிக்கு ஏதுவாகாமற் கெட்டொழியும் (எ-று).

இப் பாட்டின் கருத்தினைத்

"தொல்லையில் வருதல் போலத்
தோன்றிரு வினைய துண்டேல்,
அல்லொளி புரையும் ஞானத்
தழலுற அழிந்து போமே" (89)

என்னும் சிவப்பிரகாசப் பாட்டால் அறிக.

## உண்மை நிட்டை

குலவுமினன் வரவரவே விரிந்த நீழல்
குறைந்துகுறைந் துள்ளொடுங்கு மாறு போல
உலைவிலரு ளொளிபிரகா சித்த வாறே
உயிர்ப்போத மலமகலு மொளியோ டேயும்
தலைவனுட னொன்றாகா விரண்டு மாகாத்
தக்கநிலை அருக்கனெதிர் தயங்கு மீனும்
நிலவொளியும் ஏகமிரண் டாகா வாபோல்
நில்லாமல் நின்றிடுதல் நிட்டை யாமே. 151

(இ-ள்) விளங்குர் ஞாயிறு உதித்து மேலே வரலா, ஒருவனுடைய நீண்ட நிழல் குறைந்து பின்னர் தனக்குள் ஒடுங்கி இரண்டற நிற்றல் போல, கேடற்ற திருவருள் ஒளி ஒருவர்க்கு விளங்கிய (உதித்த) வாறே தற்போதமாகிய உயிரறிவும், அவ் வறிவு முனைத்துத் தோன்றுவதற் கேது வாகிய ஆணவ மலமும் குறைந்து குறைந்து, அவ்வொளி யுடன் ஒன்றாகப் பொருந்தும்.

தற்போதமும் மலமும் இவ்வாறாக, ஞாயிற்றின்முன் நாண்மீனுர், ஞாயிற்றின்முன் நிலவொளியும் ஒன்றென்றும் இரண்டென்றும் கருத முடியாத நிலையில் நிற்றல் போல, உயிரானது பதிப்பொருளுடன் ஒன்றாகாத இரண்டு மாகாத அத்துவித நிலையில், நில்லாமல் நிற்றலே (இயல் பாய் நிற்றல்) சகச நிட்டை என்னும் உண்மை நிட்டை யாகும் (எ-று).

'நிஷ்டா' என்னும் வடசொல் நிட்டை எனத் திரிந்தது. அமர கோசம் "நிஷ்டா நிஷ்பத்தி நாசாந்தா" நிஷ்டா ஸ்திரிலிங்கம் இது நிஷ்பத்தி — காரியம் ஆதலுக்கும், நாச — காணாதிருத்தலுக்கும் அந்தா:— நாசமடைதலுக்கும் பெயர் என்று (3-197) கூறுகின்றது. இம் மூன்று பொருளில், உயிர் இறைவனோடு ஒன்றித் தன்னைக் காணாதிருத்தல் என்னும் பொருளில் நிட்டை என்னுஞ் சொல் வந்துள்ளது.

இச் சகச நிட்டையின் இயல்பினை,

"சகசநன் னிட்டை இயல்புதம் முயற்சி
சற்றொன்று மின்றியே அருளால்
சகமதும் போக மதுவுந்தம் முடலும்
தகுகர ணமுமெவை யவையாய்,
அகமதி லுதித்த ததுமறை யாமல்
அகன்றது பின்னுதி யாமல்
அகமுரை காய வருத்தமே யின்றி
அமர்ந்துநின் றிடும்நின்ற நிலையே" (56)

"சகசநிட் டையது லபித்திடுங் காலைத்
தம்முயற் சியதொன்று மின்றிச்
சகசம தாகித் தன்னுள மதனிற்
றானின்றிங் கிடைவிடா தூறும்

சுகவரு ளமுத மதனையே அருந்தித்
தொல்வடி வதுமெள்ளனக் கரைந்து.
சுகவருள் வடிவாய்ச் சுட்டெலாம் அருளாய்த்
தோன்றநின் றிடும்நின்ற படியே" (62)

என்னும் சுத்த சாதகப் பாட்டால் அறிக.

## மெய்ஞ்ஞான தேசிகரைப் பெற்று அவன் அருளுபதேசம் பெற்றவரே மெய்ஞ்ஞான உண்மை நிலையவ ராவார் என்பது

[1]சாத்திரம்புத் தகம்பூசை [2]சமயமதந் தருக்கம்
தந்திரமந் திரயோகந் தவவிரதஞ் சீலம்
ஏத்தரிய பாவனையெண் சித்திகளை முதலாம்
எப்பயனும் முத்திவிலக் கெனவொருசொல்
லதனால்
தீர்த்தவன்மெய்த் தேசிகனாம் அவனருளா லகலாச்
சித்தமல மறுத்துலகிற் றிமைநன்மை செயினும்
வாய்த்தகதி ரவன்செயல்போ லிசைந்திசையா
தொழுகும்
வண்மையரே மெய்ஞ்ஞான உண்மைநிலை
யவரே. 152

(இ-ள்) சாத்திரமும், புத்தகமும், பூசையும், சமயமும், கொள்கையும், தருக்கநூலுணர்வும், செய்கை நூலுணர்வும் மந்திரங்களிற் பயில்வும், யோகப் பயிற்சியும், தவச் செயலும், விரதங்களை மேற்கொள்ளலும், ஒழுக்கமும் ஆதாரங்களிற் றெய்வங்களைப் பாவனை செய்து தியானித்தலும், அணிமா முதலான எட்டுச் சித்திகளும் இவை முதலான எல்லாப் பயன்களும் வீடாகிய பேரின்பப் பயனை அடைவதற்குத் தடையாகும் என முடிந்த முடிபாகிய ஒரு சொல்லால் நீக்கியருளியவன் யாரோ, அவனே, உண்மையான ஞானாசிரியனாம். அவ்வாறு சிறந்த அவனுடைய திருவருளால் நீங்காத சித்த அழுக்கைய்

---

சு-வே : 1. சாத்திரம் போதகம் 2. சமயகுல குணஞ்சீர்

போக்கிக்கொண்டு உலகின்கண் ஒருவர் தீமையைச் செய்யினும் மற்றொருவர் நன்மையைச் செயினும் வெறுப்பு விருப்புக்களுடன் இசையாது நடக்கும் நல்ல தன்மை உடையவரே. உண்மை நிலையாகிய ஞானநிலையினை உடையவர் (எ-று).

பேரின்பம் பொருளாகிய ஞேயப் பொருளைப் (சிவமாகிய பொருளைப்) பெற்றவர்க்கு மந்திரம் முதலியன வேண்டுவதில்லை என்பதை,

"மந்திரந் தியானமே வணக்கம் பூசனை
தந்திர மிவையிலை சாற்றுங் காலிவண்
நிந்தையி லொருதனி ஞேய மெய்தலாற்
பந்தமோ டறிதாய் படுவ தில்லையே"

என்னும் பாட்டால் அறிக இது தேவிகாலோத்திரச் சூத்திரப் பொருளைக் கருதியது. சதமணிமாலை (88)

இப் பாட்டு அவிரோத வுந்தியார் 59 ஆம் பாட்டிற்கு மேற்கோள்.

## காசியும் திருவாரூரும் திருவம்பலமும் இவையெனல்

கருவிகள் நா லொன்பதுவும் வேற தாகக்
கண்டகன்ற அதீதநிலை காசி யாகும்
மருவுமுயிர் தனையறிவென் றறிந்து யாமே
மன்னனென நின்றநிலை ஆரு ராகும்
கருவிசட மென்றுயிர்கள் தம்மைக் [2]காணக்
கண்ணிரவி யெனவுயிர்க்குக் [2]காட்டாய் நின்ற
அருளையுணர்ந் தியாவுமரன் செயலா முண்மை
அத்துவித நடந்தொழலம் பலம தாகே 153

(இ-ள்) தத்துவங்கள் முப்பத்தாறும் உயிராகிய தமக்கு வேறாக உள்ளன வென்று உய்த்துணர்ந்து கண்டு அவற்றில் பற்றுச் செய்தலகன்ற தத்துவாதீத நிலையைப் பெறலே காசியை அடைந்ததாகும்.

---

சு-வே : 1. காணிற், காணா 2. காட்டா.

தத்துவங்களுள் பொருந்தியிருக்கும் உயிர், தத்துவங் களைப் போலச் சடப்பொருளன்று; அது சித்துப் பொரு ளாகிய அறிவுப் பொருளே அவ் வுயிராகிய யாம் மன்ன வன்றன் மகனே என்று தன்னுண்மையை அறிந்துநின்ற நிலையே திருவாரூரை அடைந்ததாம்.

உயிர்கள், கருவிகளையெல்லாம் சடப்பொருளென்று காணவும் தம்மை அவற்றில் வேறாக் காணவும் "கண் காண்பதற்கு ஞாயிற்றின் ஒளி உதவுவது போல' அவ் வுயிர்கள் உணர்வதற்கு உணர்த்தும் அறிவொளியாய் நின்ற திருவருளை அறிந்து, உலகில் நிகழும் எல்லாச் செயலும் முதல்வன் நடிப்பாகிய செயலாம் என்று உண்மை உணர்ந்து, அவ் விறைவன் உயிராகிய தம்முள் அத்துவிதமாய் நடிக்கும் நடனத்தைக் கண்டு தொழுதலே திருவம்பலத்தைக் கண்டு தொழுதலாம் (எ-று).

## பாச ஞானங்களிலும் பதிஞானமாகிய சிவஞானமே சிறந்ததென்றல்

இருவகையாம் மாயையிலுண் டான ஞானம்
எவ்வளவுண் டவ்வளவும் பாச ஞானம்
மருவியதற் போதத்தாற் சித்தி முத்தி
மதித்தழுந்து நிட்டைபசு ஞான மாகும்
பரவுமிவை அஞ்ஞானம் பாச ஞானம்
பசுஞானஞ் சுதந்திரகீ னந்தா னென்றே
இருவகைஞா னமு [1]நீங்க அருளால் ஆவி
ஈசனடி கூடலிறை ஞான மாமே. 154

(இ-ள்) சுத்தமாயை அசுத்தமாயை என்னும் இருவகை மாயையினால் உண்டான அறிவு எவ்வளவோ அவ்வளவும் பாசஞானமாகும். பொருந்திய உயிரறிவு என்னும் தற் போதம் ஒன்றினாலே. பலவகைச் சித்திகளையும் முத்தி யினையும் கருதியுணர்ந்து அவற்றிலே அழுந்தி, அவற்றைப் பெற்றிருக்கும் நிட்டை பசுஞான மாகும். பரப்புடைய இவ்

க-வே : 1. நீங்கி

விரண்டில் சுத்தமாயா காரியமான வாக்குகள், அசுத்த மாயா காரியமான கலாதிஞானங்கள் என்னும் பாசத்தால் தோன்றிய ஞானமெல்லாம் மாயாகாரியங்களை அறியுமே யன்றி, மிக நுண்ணியனான முதல்வனை அறியும் ஆற்ற வில்லாத அஞ்ஞானமே யாகும். பசுஞானமோ வெனில், இந்திரியங்கள் கூடினாலன்றித் தானாக அறியும் ஆற்றலில் லாத (சுதந்தரக் குறைவாகிய) ஞானமாகும், குறைபாடு டைய இருவகை ஞானமும் நீங்க, முதல்வனுடைய திருவரு ளால் உயிர் இறைவன் திருவடியைக் கூடுதல் உண்டாம்; அதற்கு ஏதுவானது பதிஞானமாகிய சிவஞானமாகும் (எ-று).

இங்கே நிட்டை என்பது நிஷ்யத்தி என்னும் பொருளில் வந்துள்ளது. (151 ஆம் பாட்டின் உரையைப் பார்க்க)

பாசஞான பசுஞானங்களால் முதல்வனை அறியவொண்ணா தென்பனை.

'அண்ணலைச் சென்றனு காப்பசு பாசமே (1436) என்னுந் திருமந்திரத்தால் அறிக.

நால்வகை வாக்குகளும், அகக்கருவி புறக்கருவிகளாகிய அறி கருவிகளும் இருவகை மாயையாகிய பாசத்தின் கூறாதலின், அப் பாசத்தால் விளையும் அறிவாலும், அவ் வறியுங் கருவிகளைப் பற்றி அறியும் (ஆணவமலத்தால் மறைக்கப் பெற்ற ஆன்மவறி வென்னும்) பசுத்துவ ஞானத்தாலும் முதல்வனை அறிதல் ஒண்ணாது என்னும் பொருளில்.

"பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும்
ஈசனை உணர வொண்ணாது"

என்று கூறும் (65) சிவப்பிரகாசம்.

## உயிர்க்கு ஐந்து மலங்கள் எப்பொழுது நட்டமாகும் (கெடும்) என்பது

எண்ணியமுற் புசிப்பகலா மாயா போகத்
திதமகிதம் அறுகையினால் திரோதாயி நட்டம்
நண்ணுமிரு வினைதுலையொப் பாத லாலே
நாடியமா மாயையுமைந் தொழிலும் நட்டம்
பண்ணுமவ னவளதுவாம் முன்னிலைச்சுட் டொழியிற்
பற்றாகுங் கன்மமலம் நட்ட மாகும்
திண்ணமிகும் வடிவகல [1]மாயைநட்ட மாகும்
சிவபோகம் விளைந்திடவிட் டகன்றிடுமா
ணவமே. 155

(இ-ள்) கருதப்பட்ட முன்னை வினைககுரிய நுகர்ச்சி நீங்காத மாயா போகமாகிய இவ் வுலகத்தின்கண், இன்பம் தரும் பொருள்களை விரும்புதலும், துன்பந்தரும் பொருள் களை வெறுத்தலு மென்னும் இவ் விரண்டும் நீங்குதலால், உலகபோகத்திலே அழுத்தும் திரோதாயி என்னும் சத்தி செயற்படாது நீங்கும். பொருந்திய இருவினைகளும் துலாக்கோல் போலச் சமமாதலாலே சுத்தமாயையும் படைப்பாதி ஐந்தொழிலும் நீங்கும் முன்னுறு பொருளை அவன் அவள் அது என்று சுட்டியுணரும் சுட்டுணர்வு ஒழியில் பற்றிற்கு ஏதுவான கன்மமலம் கெடும். மாயையின் கூறுடின நாமரூபக் கிரியைகள் (பெயர் உருவம் தொழில்) என்னும் வடிவு நீங்க மாயாமலம் கெடும். சிவபோகம் விளைந் திடில் ஆணவ மலம் செயற்படா தொழியும் (எ-று).

அவன் அவள் அது என்னும் முன்னிலைச் சுட்டால் இன்ப துன்பங்கள் தோன்றும் என்பதை.

"தோன்றுமேல் யான்பிறர் தோன்றும் சகாதிகள்,
தோன்றாமல் நில்" (75)

என்னும் அவிரோதவுந்தியார்ப் பாட்டால் அறிக.

---

ச-வே : 1 "மாயைநட்ட மாகும்" என்றில்லமால் 'மாயை நட்டம்' என்றும் பாடம்

## ஞானிக்கு ஐந்து சத்திகளின் செயல் எப்பொழுது நீங்கும் என்பது

[1]கூட்டரவு மொழிகையினாற் கிரியையவிழ்ந் தகலும்
குலவுதெரி சனமகல அனுபோகம் வினையின்
நாட்டரிய ஞானசத்தி வேற்றுமையா யகலும்
நவையாரும் பெறுதியொழிந் திடுதலினா
லிலையும்
சேட்டிதமாம் இச்சையுமங் கப்பரிசே யகலும்
லிலையும்
சிவம்பிரகா சிக்கையினால் திரோதாயி யகலும்
நீட்டியதற் போதமறச் சிவானுபவத் தழுந்தின்
நித்தியமாம் பராசத்தி விட்டகலுங் காணே. 156

(இ-ள்) உலக மக்களுடன் உலகப் பொருளுடன் கூடுதல் நீங்கினால், முதல்வனுடைய கிரியாசத்தி தொழிலிற் பிணிக்கின்ற செயல் அவிழ்ந்து நீங்கும். உலகப்பொருள் களை ஐம்பொறிகளால் காண்டல் அகலும்படிச் சிவானு பவம் விளைந்தால், உலகப்பொருள்களை அறிதலிற் பிணிக்கின்றஞான சத்தியின் செயல் வேறுபட்டு நீங்கும். குற்றம் நிறைந்த உலகப்பொருள்களை விரும்பிப்பெறு கின்ற பெறுதி நீங்கினால் எவ்வுயிரையும் இச்சையிலே இயக்குகிற இச்சாசத்தியின் செயல் நீங்கும். உலகம் தோன்றப் பெறாமல், சிவம் பிரகாசித்தலால் உலகபோகங் களில் அழுத்துகிற திரோதாயி சத்தியின் செயல் நீங்கும். உயிர் அறிவாகிய பெரிய தற்போதம் அற்றே போகும்படிச் சிவானுபவத்திலே அழுந்தின் அழிவற்ற திருவருட்சத்தியும் விட்டு நீங்கும் என்று காண்பாயாக (எ-று).

---

க-வே : 1. கூட்டரவு மொழிகையினால்

## ஞானிக்கு எப்பொழுது தத்துவப்பிணிப்பு நீங்கும் என்பது

உடலுயிரன் றென்றகலிற் பூதமுடனவற்றின்
உடனாய காரியமை யைந்துடனே யுலகும்
இடமிகுபல் லுருவனைத்தும் நாடிகளு மகலும்
இருந்துபொறி யறவிடயம் பொருந்தாமலகலும்
கொடியகர ணங்களறக் கலாதிகள்விட் டகலும்
குணமறவே சுத்தவித்தை முதன்மூன்று மகலும்
அடன்மருவும் வளியகல விந்தகலு மகலா
ஆணவம்நீங் கிடநாத மகன்றிடுமென் றுணரே.

(இ-ள்) இவ் வுடல் நாம் என்னும் உயிரன்று என்று உணர்ந்து, அதனிற் பற்றுவிட்டால், உடம்பிற்கு முதலாகிய ஐம்பூதங்களும், அவற்றின் காரியமாகிய தோலெலும்பு முதலிய (54, 57) இருபத்தைந்தி புறக்கருவிகளுடனே உலகமும், பலவகை வடிவங்களும், நிலதத்துவத்தில் தோன்றும் நாடிகள் பத்தும் நீங்கும். மெய் முதலான ஐம்பொறிகள் பொருள்களைப் பற்றாமல் செயலற்றால் உலகவிடயங்கள் முற்றிலும் பொருந்தாமல் நீங்கும், அந்தக்கரணங்கள் செயலற்றால் அவற்றை இயக்கும் கலைமுதலான வித்தியா தத்துவங்கள் நீங்கும். முக்குணங்கள் அற்றால், அவற்றை இயக்கும் சுத்தவித்தை ஈசுரம், சாதாக்கியம் என்னும் மூன்று சிவதத்துவங்களும் நீங்கும். வலிமை பொருந்திய உதான வாயு நீங்கவே அதனையியக்கி நால்வகை வாக்கினை உதவும் விந்துதத்துவம் நீங்கும், நீங்காத ஆணவமல சத்தி கெட்டபொழுது அதனையியக்கும் நாததத்துவமும் நீங்கும் என்று உணர்வாய் (எ-று).

## பூதகஞ்சுகம் முதலான ஐந்து கஞ்சுகங்க ளகன்றோர் சுத்த பர சுகாதீத முத்தர் எனப்படுவார் என்பது

புவிமுதலைந் தும்பூத கஞ்சுகமாம் அதன்மேல்
பொறியொருப தொருபதுமாத் திரைமனமுன்
னைந்தும்
கவலையுறும் பிரகிருதி கஞ்சுகமென் றோதும்
கலைமுதலைந் தும்புருட கஞ்சுகமாங் கருதிற்

சிவமுதலைந் தறிகருவி வயிந்துவகஞ் சுகமாந்
திருந்துபரை முதற்சத்தி கஞ்சுகமாந் தெரிந்தே
[1]துவமுடனார்ப் புறுபஞ்ச கஞ்சுகங்க ளகன்றோர்
சுத்தபர சுகாதீத முத்தரெனும் நூலே. 158

(இ-ள்) நிலம் முதலான ஐம்பூதங்களும் உயிர்க்குப் பூத கஞ்சுகமாகும். (கஞ்சுகம்-சட்டை, உறை) கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய பொறிகள் பத்தும், சத்தாதி வசனாதியான மாத்திரைகள் பத்தும், மனம் முதல் உள்ளம் ஈறான அந்தக் கரணங்கள் ஐந்தும் ஆகிய இவ் விருபத்தைந்தும் பூதகஞ்சுகத்தினைக் காட்டிலும் நுண்ணிய பிரகிருதி கஞ்சுகமாகும். கலை, வித்தை, அராகம், காலம் நியதி என்னும் ஐந்தும் பிரகிருதிகஞ்சுகத்தினைக் காட்டிலும் நுண்ணிய புருடகஞ்சுகமாகும். சிவதத்துவம் முதலான ஐந்து அறிகருவிகளும் புருட கஞ்சுகத்தினைக் காட்டிலும் நுண்ணிய வயிந்துவ கஞ்சுகத்தினைக் காட்டி லும் நுண்ணிய சத்திகஞ்சுக மாகும். உயிரை அசையாத படி கட்டுகின்ற பஞ்சகஞ்சுகங்களை ஆராய்ந்து அகன்றவர் யாரோ அவரைத் தூய, மேலான, இன்ப நிலையைக் கடந்த முத்தர் என்று சிவாகமம் கூறும் (எ-று).

## ஞானத்தின் நான்கு நெறி

ஞானத்து ஞானமகம் புறமென் னாமல்
ஞானானந் தாதீதத் தழுந்த லாகும்
ஞானத்து யோகமிறை ஞானந் தானே
நாடுமிட மெங்குநிறை வென்று காண்டல்
ஞானத்துக் கிரியையுயர் பஞ்ச சுத்தி
நயந்தமல னடியகலா திறைஞ்ச லாகும்
ஞானத்துச் சரிதைகுரு லிங்க வேடம்
நாதனெனத் தொழுதுபணி மேவ லாமே. 159

---

சு-வே: 1. துவமுட னாற்புறு.

(இ-ள்) "சரியையொடு கிரியைமிகு யோக ஞானம் தக்கபதம் நாலு" (62) என்று மேற்கூறிய நான்கு பாதங்களில் ஈற்றிற் கூறிய ஞானம், ஞானத்து ஞானம் முதலியவாய் நான்கா யிருக்கும். அவற்றில் ஞானத்துள் ஞானமாவது, முதல்வன் அகத்தில்மட்டும் உள்ளான் அல்லது புறத்தில்மட்டும் உள்ளான் என்று கருதாமல், அகம்புறமாகிய எங்கும் உள்ளான் என்று திருவருண் ஞானத்தாலே அறிந்து, அந்தத் திருவருண்ஞான ஆனந்தத்திற்கு அதீத நிலையில் அழுந்துதலாகும். ஞானத்துள் யோகம் என்பது இறைஞானம் என்னும் திருவருண் ஞானந்தானே (எல்லாப் பொருள்களையும் அடக்கிக் கொண்டுள்ளது) பார்க்கு மிடமெங்கும் நிறைந்துள்ளது என்று அதன் நிறைவை (வியாபகத்தைக் கண்டிருத்தலாம். ஞானத்துள் கிரியை என்பது உயர்ந்த ஐவகைச் சுத்தி செய்து (இவைனை 160 ஆம் பாட்டிற் காண்க) இறைவன் திருவடியை அகலாமல் வணங்குதலாகும். ஞானத்துச் சரியை என்பது, உருவம் தாங்கி வந்துள்ள ஆசானையும், இலிங்கத்தையும், திருவேடம் அணிந்த அடியவரையும் சிவனென்றே கருதித் தொழுது அம் மூவரின் பணியை மேவுதலாம் (எ-று).

இப் பாட்டின் கருத்தினைச் சிவப்பிரகாசம் 95, 96, 97, 98 என்னும் எண்ணுள்ள பாடலால் அறிக.

### மேற்பாட்டில் ஞானத்துக் கிரியையிற் கூறிய ஐந்து சுத்திகள்

புவிமுதல்நா லொன்பதுவுஞ் சடமா மென்றல்
பூதசுத்தி உயிரருளைப் [1]பொருந்தல் தானே
அவமகலும் உயிர்ச்சுத்தி எல்லா மிந்த
அருளெனவே காண்டதிர வியநீள் சுத்தி
சிவமுதலாய் மாறிமலந் திரோதை நீங்கித்
திருவருளா லுயிரானைச் சேர்ந்தொன் றாகிப்
பவமறன்மந் திரசுத்தி யிலிங்க சுத்தி
[2]பரன்நிறைவுட் புகுதல்பஞ்ச சுத்தி

க-வே : 1. பொருந்தத் தானே, 2. பரை நிறையுள் ; பரை நிறைவுள்.

(இ-ள்) மேற் பாட்டிலே ஞானத்துக் கிரியையிற் கூறிய ஐந்து சுத்திகளாவன:— ஞானியானவன் நிலம் முதலான முப்பத்தாறு தத்துவங்களையும் சடம் என்று ஞானத்தாற் காண்பதுவே (தரிசிப்பது) பூதசத்தி என்கின்ற இடசத்தியாகும். உயிர் தற்போதம் விட்டுத் தனது போதத்திற்கு முதலாகிய சிவபோதமென்னும் திருவருள் வசமாகப் பொருந்தி யொழுகுதலே உயிர்ச் சுத்தி (ஆன்ம சுத்தி) யாகும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் திருவருள் வியாபகத்திலுள் அடங்கி இயங்கும் என்பதை அறிதலே திரவிய சுத்தியாகும். நகாரத்தை முதலாகவுள்ள திருவைந்தெழுத் தென்னும் மந்திரத்தைச் சிகாரம் முதலிலே நிற்கும்படி மாறி, மல எழுத்தாகிய மகாரத்தையும் திரோதை எழுத்தாகிய நகாரத்தையும் நீக்கி, திருவருள் எழுத்தாகிய வகாரத்தால் உயிரைக் குறிக்கும் எழுத்தாகிய யகாரம், சிவ எழுத்தாகிய சிகாரத்தைச் சேர்ந்து ஒன்றாகிப் பிறப்பறும்படி அமைத்துச் செபிப்பதுவே மந்திரசுத்தியாகும். முதல்வனுடைய வியாபகத்தில் தானும் தனக்குத் துணை புரியும் திருவருள் முதலியனவும் அடங்கியிருத்தலை அறிதலே இலிங்க சுத்தியாகும் (எ-று).

இறைவனுடைய வியாபகத்திலே சிவசத்தியும், ஆன்மாவும், ஆன்ம சிற்சத்தியும், ஆணவமலமும், மாயாமலமும், கன்மமலமும் ஒன்றற்கொன்று வியாபக வியாப்பியமாய் நிற்குமென்க.

இதனை,

*அமலைக்கு வியாபகனே அரன்; அவற்கு வியாப்பியமே;*
*விமலை; வியா பகிஉயிர்கட்; குயிரவட்கு வியாப்பியமே;*
*சமலைக்கு வியாபகமே; சமலையுயிர் வியாப்பியமே.*
*சமலைசக வியாபகியே; சகம்சமலை வியாப்பியமே.*

என்னும் சிவதருமோத்தரச் செய்யுளால் அறிக.

## இறைவன் அருட்சத்தி பதிதல்
(சத்தி நிபாதம்)

திருந்தியசத் திநிபாதம் [1]நால்வகையாம் மந்தம்
திகழ்மந்த தரந்தீவ்ரம் தீவிர நற் றரமே
[2]பரிந்திவற்றிற் குறுமுவமை [3]இருங்கதலித் தண்டு
பச்சைவிற குலர்விறகு கரியிலெரி பற்றல்
புரிந்திவர்பக் குவம்பொருளுண் டெனவதற்குப்
பொருந்தல்
[4]புளியந்தோ டும்பழமும் [5]போலுடற்பற் றறுகை
அரந்தையுல கினைமுழுதுந் துறந்துபொருள் தேடல்
அருட்குரவ னடியிணைசேர்ந் தவன்பணிசெய்
திடவே. 161

(இ-ள்) இறைவனுடைய திருவருட் சத்தி பதித லென்னும் திருத்தமுற்ற சத்திநிபாதம் மந்தமென்றும், மந்ததரமென்றும், தீவிர மென்னும் தீவிரதர மென்றும் நான்கு வகை ஆகும். இவற்றினுக்கு அடைவே உவமை கூறினால் வாழைத் தண்டிலும், பச்சை விறகிலும், உலர்ந்த விறகிலும், கரியிலும் நெருப்புப் பற்றுதல் போன்றதாம் இந் நான்கு சத்திநிபாதத்தைப் பெற்ற இவர்தம் செய்கை யாவன:— முறையே, பதியாகிய மெய்ப்பொருள் உண்டெனப் புரிந்து அதனை அடைவதற்குப் பொருந்தலும் புளியினது பழமும் அதன் ஓடும் போல உடலிடத்தே பற்றற்று நிற்றலும், துன்பத்தினைத்தரும் உலகினை முற்றிலும் துறந்து உண்மைப் பொருளை ஆராய்தலும் அருண்ஞானத்தை யுடைய ஆசிரியர் அடியிணை சார்ந்து உண்மைப் பொருளைத் தலைப்பட்டு அவன் பணி செய்தலும் ஆகும் (எ-று).

---

சு-வே : 1. "நால்வகையா மதுதான், திகழ்மந்த மந்ததரம் தீவிரதீ விரதரம்" 2. பரிந்திதனுக் 3. இருங்கதலிக் குற்றி. 4. புளியந்தோலும் பழமும். 5. போலுட்பற் றறுகை.

சத்தி+நிபாதம் என்று பிரித்து, இறைவனுடைய அருட்சத்தி பதிதல் என்று பொருள் கூறுவர். தீமையைத் தரும் ஆணவசத்தியின் செயல் மீட்சியில், அவ்வாணவத்தை யியக்கும் திரோதான சத்தியின் அகற்சியில், முதல்வன் உலகிற்கு உறவாயிருக்கும் சிவஞானக் கிரியா சத்தியை உயிரிடத்தே பதியவைப்பன். அச் சத்திநிபாதப் பேற்றிலே உண்டாகும் நிலையை

"பிண்டமெனு மவன்றனக்குச் சத்தி பாதப்
பேற்றிலுயி ருயிரல்பொருள் விவேகந் தோன்றும்
தண்டலிலில் விவேகபுத்தி பிண்ட ஞானந்
தானதனை யுளன்பிண்ட ஞானி யென்று
கொண்டறிக் கொருவனிடைச் சத்தி யாதக்
குறியுரைப்பின் முத்திவிருப் புடல் வெறுப்பும்
மண்டுசிவ பத்தரிடை பத்தி மிக்க
மரபியம்பு மாகமத்தின் சிரத்தை மன்னோ"

என்னும் (310) சிவப்பிரகாச விகாசம் கூறும்.

## சிவஞானிக்கு உவமை

பாலனுட னுன்மத்தன் பசாசன் றன்னைப்
பவமகன்ற சிவஞானிக் குவமை கூறும்
பாலகன்மே லுணவொன்றைத் தேடா தானும்
பகருமய லுன்மத்தன் நன்மை தீமைச்
சீலமகன் றிடலானும் நன்மை [1]தீமைச்
செயலலகைச் செயலாகுஞ் செய்தி யானும்
பாலனையும் பித்தனையுஞ் சுடுந்தீத் தொட்டால்
[2]பசாசனைந் திடவுமெரி பற்றி டாவே. 162

(இ-ள்) பிறவிப் பிணிப்பு நீங்கிய சிவஞானிக்குக் குழந்தையினையும் உன்மத்தனையும் பேயால பிடியுண்டவனையும் உலகம் உவமை கூறும் இம் மூவரிடத்தும் கருதிப் ஒப்புமை என்னை எனின்? குழந்தை உணவுண்டதன் பின்னர் அடுத்த வேளை உணவினைக் கருதித் தேடா

சு-வே : 1. தின்மை 2. பசாசனைந் திடினும்

திருத்தலானும், சொல்லப்படும் மயக்கந் தங்கிய உன்மத்தன் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்பனவற்றை அகன்று ஒழுகுதலானும், பேயாற் பிடியுண்டவன் செய்யுஞ் செயல், தன்செயலொழிந்து பேய்ச்செயலாகுஞ் செய்தியானும் இவ் வியல்பு வாய்ந்த சிவஞானிக்கு இம்மூவரும் உவமை யாகக் கருதி ஓதப்பட்டனர் என்க.

மேலே உவமை கூறப்பட்ட மூவருள் குழந்தையும் உன் மத்தனும் நெருப்பினைத் தீண்டுவாராயின் அது அவரைச் சுடுவதாகும். ஆனால், பேயாற் பிடியுண்டவன் நெருப் பினை அளைந்தாலும் அப்பேயின் ஆற்றலால் அந்நெருப்பு அவனைச் சுடுவதில்லை. அதுபோலச் சிவஞானியும் தன் செயலற்றுத்தான் அற்று இறைவன் செயல்வழி யொழுகு வதால் அவன் உலகத்திற் படிந்தாலும் அது அவனைத் தாக்கி வருந்துவதில்லை (எ-று).

## ஞானியின் பூசையும் ஞானியின் சாலோகாதி பதங்களும்

ஒப்பிலுயிர்க் குயிராய்நிற் பதுஞான பூசை
உயிர்க்குளொளி நோக்குமது வேயோக பூசை
செப்பரிய ஆவாக னாதியுறப் பூசை
செயலறநின் றிடுநேயஞ் சிவபூசை யாகும்
தப்பரிய மெய்ஞ்ஞானந் திகழ்ந்தறிவை நாடல்
சாலோகஞ் சாமிபந் தற்பரைதா னாதல்
வைப்புறுசா ரூபமுயர் ஆனந்த போகம்
மருவுசுகா தீதஞ்சா யுச்சியமாய் மதியே. 163

(இ-ள்) உயிர்க்கு உயிராய் நிற்கும் ஒப்பற்ற முதல்வ னுடன் அத்துவிதமாய் நிற்கும் நிலையே அம் முதல் வனுக்குச் செய்யும் ஞான பூசை யாகும். உயிர்க்குள் ஒளியாயிருந்து தனது அறிவினை (ஆன்ம சிற் சத்தியை) இயக்கிவிடும் திருவருட்சத்தியை நோக்கியிருப்பதுவே நிராதாரயோகமாகிய பெரிய யோக பூசை யாகும். எங்கும்

வியாபியாகிய இறைவனை ஒரு வடிவத்திலே ஆவாகனம் (அழைத்தல்) முதலியன செய்து வழிபடுதல் புறப்பூசை யாகும். உலகச் செயலிற் பற்றற சிவமாகிய ஞேயப் பொருளில் நிலைத்து நிற்பதுவே சிவம் ஒன்றையே கருதிச் செய்யும் சிவபூசையாகும்.

ஞானிக்குச் சாலோகம் முதலிய நான்காவன:- தப்புதல் இல்லாத மெய்ப்பொருள் அறிவு திகழ்ந்து திருவருட் சத்தியை நாடுதலே சாலோக மாகும். அந்தத் திருவருட் சத்தியாக ஆதலே சாமீப மாகும். முதல்வனுடைய இன்ப சத்தியாக ஆதலே சாரூப மாகும். அவ்வின்ப சத்திக்கு அதீதமாய்ச் சிவத்தைப் பெறுதலே சாயுச்சிய மாகும் (எ-று).

இப் பாட்டின் கருத்தினை

உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவாக னம்புறப் பூசை
செயற்கடை நேசஞ் சிவபூசை யாமே.

என்னும் (1444) திருமந்திரத்தால் அறிக.

மேற்பாட்டிற் கூறிய செப்பரிய ஆவாகனாதி புறப்பூசையைக் கூறக் கருதி, அதற்கு இன்றியமை யாமல் வேண்டப்படும் ஆவினையும் அதனிற்றோன்றிய பொருள்களையுங் கூறுகின்றார்.

பொற்பமரும் பாற்கடலி னுற்பவமாஞ் சுரபி
புகலிலதன் கோமயத்திற் கூவிளந்தா னுளவாம்
அற்புதமாந் திருமகளவ் வில்வமதிற் பொருந்தும்
அகிலாரம் பளிதமதன் அளையதனி லுளவாம்
கற்பமருஞ் [1]சுரர்க்கமுதம் நவநீதத் துதிக்கும்
கதிருடனே செந்நெலதன் பாலதனிற் றோன்றும்
சொற்பயில்ருங் குலியம்மரை உற்பலம்நீ ரதனிற்
றோன்றியிடும் ரோசனையு [2]மதனுதரத் துதிக்கும்

பா-வே: 1. சுர ரமுதம். 2. அதன் வயிற்றுள்.

(இ-ள்) அழகு பொருந்திய திருப்பாற் கடலிற் காமதேனு தோன்றிற்று. அதன் கோமயத்திலிருந்து வில்வம் தோன்றிற்று அவ் வில்வத்தில் எப்பொழுதும் அற்புதமான திருமகள் பொருந்தி வாழும். அக்காமதேனுவின் தயிரில் அகிலும், ஆரமும், கருப்பூரமும் தோன்றும். அதன்வெண்ணெயில் தேவர் அருந்தும் அமிழ்தம் தோன்றும். அதன் நீரில் (கோசலத்தில்) குங்குலியமும், தாமரையும், நீலோற்பலமும் தோன்றும். அதன் வயிற்றிலிருந்து கோரோசனையும் தோன்றும் (எ-று).

சாந்தலிங்க சுவாமிகள் செய்தருளிய கொலைமறுத்தல் என்னும் நூலில் 'பிழைவுறுத்தல்' (7) என்ற பாட்டில் பஞ்சகவ்யம் முதலானவற்றைத் தரும் நின்மலதேகி என்பதற்கு "பொற்பமரும்" என்ற இப்பாட்டினை மேற்கோள் காட்டினர் அதன் உரையாசிரியராகிய சிதம்பர சுவாமிகள்

## புறப்பூசைக்குப் பயன்படும் எட்டுப்பொருள்களும் அவற்றாற் பூசித்தவழி உண்டாகும் பயனும்

வாசநறும் புனல்சாந்தம் [1]கந்தம் ஆடை
[2]மருவலர்கள் நாகம்மருக் கதைய தாகும் ;
நேசமரு மலர்செல்வம் ; பாவம் நீங்கும்
[3]நிறைதூபம் : அவமிருத்து நாசந் தீபம் ;
தேகலவும் அமுதுலகம் புரப்ப தாகும்
[4]சித்திகளெட் டுத்தமதா னந்தான் நல்கும்
ஆசிலருட் பரமனிரு பாதம் போற்றும்
அடியவர்தம் அட்டவிதார்ச் சனையி தாமே. 165

(இ-ள்) மணத்துடன் கூடிய நல்ல நீரும், சந்தனமும், மணம் அமைந்த தூபமும் (புகையும்) உடையும், மணத்துடன் கூடிய மலர்களும், வெற்றிலையும், மணப்பொருள்

---

சு-வே : 1. கந்தமாயு 2 மருவலர்கணசமருச் சுமை தாகும்
மருவலர்கணாசமருச் சுதய தாகும்
3. நிறைதாப மாயிருத்து 4. சித்திகளெட்டுந்

களும், அக்கதையும் ஆகிய இவ்வெட்டுப் பொருள்களும் இறைவனைப் பூசித்தற் குரிய பொருள்களாகும்.

அவ் வெட்டுள், மணப்பொருள்கள் அணிந்து மலர் களாற் பூசிக்கின் செல்வம் உண்டாகும். தூயம் காட்டலாற் பாலம் நீங்கும், தீபங் காட்டலாற் அவமிருத்து (தீய சாவு) நீங்கும். தூய நிவேதனப் பொருள்களை நிவேதித்தலால் உலகத்தைப் புரத்தல் உண்டாகும். உயர்ந்த பொருள் களைச் சிவார்ப்பணமாகத் தொண்டர் ஆசான் என்பவர் கட்கும், திருக்கோயில்கட்கும், மேலே வாசநறும் புனல் முதலாகக் கூறிய பொருள்களெல்லாம், தொண்டர்கள் பரமேசுரனுடைய திருவடியைப் போற்றுதற் குரிய எட்டு அர்ச்சனைப் பொருள்களாகும் (எ-று).

இப் பாட்டின் கருத்தினைக்

" கெந்தமட் சதைபூ வாரம் கிளர்துகில் லேப னந்தான்
சந்தமா ரமுத டைக்காய்த் தாமிவை யெட்டோ டேத்தி"

(அத்துவித வெண்பா உரை) என்னும் பாட்டாலும்,

"சலஞ்சாந்தீ கரஞ்சைவா கந்தமா யுஷ்ய வர்த்தனம்
அட்சதம் சத்ருநா சாய புஷ்பமைஸ் வர்ய மேவசா
தூபம் தஹரி பாபநி தீபம் மிருத்யுநாசனீ
நைவேத்யம் லபதே ராஜ்யம் தாம்பூலம் சர்வசித்திதம்"

என்னும் வடமொழிச் சுலோகத்தாலும் அறியலாம்

## சிவபூசையின் பலன்

ஒருதிவசம் பசாசர்பத மிருதினநீ ளரக்கர்
ஒரு மூன்று நாளியக்கர் கந்தருவர் தினநான்
இருமகவா னைந்தினம் மூலிருநா ளிரவோன்
எழுதிவசம் பிரசையர்கோ ணொண்கணணெண்
டிவசம்

[1]பருதியர்கள் நவதிவசம் ஒன்பதுநாண் முதலாப்
பரனுலக மடைந்தடைவே பலனெவையும்
நுகர்வார்
பொருவிலரன் கழலிணையை மூடர்வழுத் திடினும்
புண்ணியபூ சாபலத்தை எண்ணிரிதென் றுணரே

(இ-ள்) ஒருவன் தன் வாழ்நாளில் ஒரே ஒரு நாள் மட்டும் சிவனை வழிபாடு செய்யப்பெறின, அப் பூசாபலத்தால் பதினெண் கணத்தவருள் பசாச கணத்தவ ராவார் இருநாள் வழிபடின் அரக்கர் கணத்தவ ராவார். மூன்று நாள் வழிபடின் இயக்கர் கணத்தவ ராவார். நான்குநாள் வழிபடின் கந்தருவ கணத்தவ ராவார் ஐந்துநாள் வழிபடின் இந்திரன் பதங் கிட்டும். ஆறுநாள் வழிபடின் திங்கள் பதங் கிட்டும். ஏழுநாள் வழிபடின் வியாழனுடைய பதங் கிட்டும். எட்டு நாள் வழிபடின் அட்டவசுக்களுடைய பதங் கிட்டும் ஒன்பதுநாள் வழிபடின் கதிரவர்பதங் கிட்டும். பத்துநாளும் அதற்கு மேலும் வழிபடின் பரமேசுரனுடைய உலகம் அடைந்து முறைப்படி துய்க்கவேண்டியர பயன் எவையும் துய்ப்பர். சிவபெருமானுடைய திருவடியை அறிவில்லாதவர் பூசித்தாலும் அச் சிவபுண்ணியப்பேறு எண்ணுதற்கு அரிதாம் (எ-று).

## ஆசானாற் கொடுக்கப்பெற்ற இட்டலிங்கத்தினை உடம்பிலே அணிதலால் வருந் தூய்மை

புரிதருதத் துவகாய சுத்தி தானும்
பொருவிலிரு மூவகையா மத்து வாவின்
மருவுதிரி விதகரும சுத்தி தானும்
மனமுறுமாத் துமசுத்தி யெல்லாம் உண்டாம்
திருமருவு சிவலிங்ககந் தரித்த வாறே
சிவனுருவ மாஞ்சீவன் முத்த னாகும்
[1]அரியபசு மரத்தறைந்த ஆணி தானும்
அனலிலுறு காட்டமுமொன் றாகு மாபோல். 167

---

சு-வே : 1. பருதிகரன்
2. அரியபசு மரத்தகலா வாணி தானும்.
அரியபசு மரத்தகலா தாணி தானும்.

(இ-ள்) எல்லாச் செல்வமும் பொருந்தும் சிவலிங்கத்தை இட்டலிங்கம் என்னும் பெயரால் தூல உடம்பிலும், பிராணலிங்கம் என்னும் பெயரால் சூக்கும உடம்பிலும், பாவலிங்கம் என்னும் பெயரால் காரண உடம்பிலும் ஒருவன் அணிந்துகொண்டவாறே தத்துவ சம்பந்தமான தூல, சூக்கும, காரணம் என்னும் உடம்புகளின் தூய்மை உண்டாம். மந்திரம், பதம், எழுத்து, புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு அத்துவாக்களிற் பொருந்திய மூன்று விதமான வினைத்தூய்மையும் உண்டாகும். மனம் முதலான அந்தக்கரணங்களுடன் கூடியியங்கும் ஆன்மாவின் தூய்மையும் உண்டாகும். சிவலிங்க தாரணமுடைய அவன் சிவன் வடிவமுடைய சீவன் முத்தனாவான். எவ்வாறெனின்? பச்சை மரத்தில் அறையப்பட்ட ஆணி அம்மரமுந் தானும் ஒன்றாதல் போலவும், நெருப்பிலிட்ட விறகு அந் நெருப்புந் தானும் ஒன்றாதல் போலவு மென்க (எ-று).

சில சமயத்தவர் பிரமமாகிய பரசிவமும் சீவனும் பேதமுடையவையே என்பர். சிலர் அபேதமுடையனவயே என்பர் சிலர் பேதாபேதம் உடையவையே என்பர். ஆனால் வேதாகம நெறியைப் பின்பற்றிச் செல்வதும் சித்தாந்த சைவம் என்னும் பெயரினையுடையது மாகிய வீரசைவ சித்தாந்தமானது, ''பரசிவம் உபகரிப்பதாயும் சீவன் உபகாரத்தைப்பெறுவதாயு மமைந்து, பேதம் அபேதம் பேதாபேதம் என்னும் மூன்று சம்பந்தமும் அமைந்த அத்துவித சம்பந்தம் உடையவையே அவ் விரண்டும்'' என்னும் கொள்கையினையுடையதாகும் அக் கொள்கைக்குப் பொருந்த ஆசானாலே வழிபாடு செய்துவரும்படி அளிக்கப் பெற்ற சிவலிங்கத்தைப் பேதமாக வைத்துப், பேதமாக வழிபாடு செய்யாமல், அத்துவிதமாக உடம்பில் தாரணம் செய்து கொண்டு, அத்துவிதமாக வழிபாடு செய்து வருதலே வீரசைவசமய மரபாகும். கொள்கையினையும் அத்துவிதமாக வகுத்துக் கொண்டு, வழிபாட்டினையும் அத்துவிதமாகச் செய்து வருவதால் இவ் வீரசைவத்திற்கு அத்துவித சைவம் என்றொரு பெயரும்உண்டு. இக் கருத்தினை.

"பேதம் அபேதம் அல்லாப் பேதாபே தம்மெனவே
ஓதுகின்ற நீதி உவர்ப்புற்றுத்—தீதிலருள்
அத்துவித சைவம் அரனெனக்கண் டார்சிவனோ (டு)
அத்துவிதம் நீங்கா தவர்" (9)

"ஆசூசம் என்னும் அவ்வுடல் நீங்கவென்றும்
ஆசூசம் இல்லா அரனுடான—நேசமுடன்
சம்பந்தங்கொண்டுவிடாத் தன்மையது சைவமலாச்
சம்பந்தம் பேதசம்பந் தம்" (10)

என்னும் அத்துவித வெண்பாவினையும், "இத் தூலதேகம் பிரகிருதி வழித்தாகிய பஞ்சபூத பரிணாம சுக்கில சுரோணித மூலசத்த தாது மயமாகிக் கன்ம ஏதுவாய் ஆகாரம் நித்திரை பயம் மைதுனாதிகளுடன் கூடி அசுத்தமாய், நரை திரை மூப்புக்களுடனே அவலமாய்ப் பிறந்திறந்து வருகையால், ஆன்மாவும் இவ் வுடலுடனே இரண்டறக் கலந்து தேகான்மாவா யிருக்கையால் இத் தூலவுடற் குணம் அறும்படியாகத் தூல வுடலில், எக்காலமும் நின்மலமாகிய பரமசிவ சொரூப சகள மூர்த்திக்கு ஆதாரமாகிய இஷ்டலிங்கத்துடனே, அன்பினால் சிரசு முதலிய தானங்களில் விட்டு நீங்காமல் தரித்து வழிபடுந் தன்மையதே சைவம் சிவத்துடனே, சம்பந்தமாதலெனும் சைவமாகும். இப்படியன்றி, விட்டு நீங்கியிருக்கும் சம்பந்தமெல்லாம் பேத சம்பந்தமே" என்று கூறும் (10 ஆம் பாட்டு) மேற்படி பாட்டின் உரையினையும் நோக்கி அறிக.

## சிவாகமம் வீரசைவத்தை ஏனைய சைவத்தைக் காட்டிலும் சிறப்பித்துச் சொல்லும் என்றல்

சொல்லியசந் தானநெறி விதங்க டாமும்
சொக்கனா ராணையின்கூ ளுறவு தானும்
பல்வகையாம் பாவகஞ்செய் பூசை தானும்
பத்தர்களை வைத்தடைவே பணிதல் தானும்
அல்லமருங் களத்திறைநூல் சொல்லா திந்நேர்
ஆதலினால் அன்னியசை வந்தான் என்பர்
எல்லையகம் புறமெனுஞ்சுட் டகன்ற நேயம்
ஏகலிங்க நிட்டைசிவ பூசை யாமே. 168

(இ-ள்) சிலரால் சொல்லப்பட்ட ஆசிரிய சந்தானங்களில் கூறப்பட்டுவரும் வீட்டு நெறியின் வகைகளையும் அவர்தாம் "சொக்கனார்மேல் ஆணையிட்டு அறைகிறேன்" என்று கூறியுள்ள உறுதிமொழிப் பொருள்களையும், அவர்தாம் சிவமாகிய ஒன்றினையே வழிபடாமல் பல தெய்வங்

களை வைத்து அவற்றிற்குப் பலவகைப் பாவனைகளைச் செய்து பூசித்துவரும் பூசைகளையும், அவர்கள் தாம் சிவலிங்க தாரணமில்லாத பத்தர்களை வைத்து மகேசுர பூசை என்று முறைப்படி செய்து பணிந்துவருதலையும் நீலமணிமிடற்றனாகிய பரமேசுரன் அருளிச்செய்த சிவாகமமானது அத்துவித சைவமென்னும் வீரசைவ நெறியை மேற்கொண்டு திருமருவு சிவலிங்க தாரணம் செய்துகொண்டு சிவம் ஒன்றையே பூசித்துவரும் செயலுக்கு ஒப்பாகக் கூறாது ஆகையினால் மேலே கூறிய அவர்கள் நெறியை யெல்லாம் பேதமாக இறைவனை வழிபடுகின்ற அன்னிய சைவநெறி யென்றே அறிஞர் கூறுவர். சிவபூசை என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது எதுவெனில்? அகத்திலே உள்ளது புறத்திலே யுள்ளது என்று சுட்டியறிகின்ற சுட்டறிவினை அகன்ற ஞேயமாகிய ஒன்றாகிய இலிங்கத்தினை வழிபட்டு நிட்டை கூடலே யாகும் (எ-று).

சிவாகமம் பிறசைவநெறிக்குச் சமமாக வீரசைவ நெறியைக் கூறாமல் உயர்த்திக் கூறும் என்பதை 'ஓ சண்முக! சிவசம்பந்தமான தரிசனம் (சமயம்) சாமானிய சைவம், மிசிரசைவம, சுத்த சைவம், வீரசைவமென நான்காம்'' என்றும் ''ஓ தேவீ! சமஸ்த சைவங்களில் வீரசைவமே அதி யுத்தம மானது. அந்த வீரசைவன் செய்யும் சிவ பூஜை எளிதானது. பூஜாதிகளின் கிரியையும் எளிதானது ஓ மகாதேவீ! வீரசைவமானது அற்பக் கிரியையினாலே வெகுபலன் தருவது. இவ் வீரசைவமல்லாமல் எஞ்சிய சமஸ்த சைவங்களும் வெகு கிரியைகளுள்ளனவாயும் அற்பபலன் தருவனவாயு மிருக்கும்'' என்றும் கூறும் வாதுளாகம வசனங்களை நோக்கி யறிக.

## சிவலிங்க தாரணமுடைய தொண்டர் செய்வன வெல்லாம் சிவாசார விசிட்டம் என்பது

விரிந்தநதி நீரதனிற் சவுச மாதி
விளம்புமுடற் சுத்திபொலாம் முடித்திட்டாலும்
விரிந்தநதி நீரசுத்த மனைத்தும் நீக்கி
மேலாகி நின்மலமாய் விளங்கு மாப்போல்

திருந்துசிவ லீலையினாற் சங்க மந்தான்
செய்தவெலாம் சிவாசார விசிட்ட மாகும்
பரிந்தொருகும் போதகத்தி லாசூ சம்போல்
பலித்திடுமன் னியசைவர்க் கசுத்தா சுத்தர். 169

(இ-ள்) "அகன்ற யாற்று நீரின்கண் கால்கழுவுதல குளித்தல் முதலானவற்றைச் செய்தாலும் அந் நீர், பரப்புடைய தாகையால் தன்னிடம் வந்தடைந்த அழுக்குகள் அனைத்தையும் நீக்கி மேன்மை யுடையதாகி அழுக்கற்றதாகி விளங்குதல் போல" திருமருவு சிவலிங்க தாரணத்தை யுடைய, (167) அகம் புறமென்னுஞ் சுட்டகன்ற நேயமாகிய ஏகலிங்க நிட்டையை யுடைய சங்கமந்தான், திருந்திய சிவனுடைய திருவருள் விளையாட்டினாற் செய்தொழுகும் சுத்தம் அசுத்தமாகிய எல்லாச் செயல்களும் சிவாசார முடையனவாய் மேலானவையாய் விளங்கும்.

"ஒரு குடத்து நீரின்கண் கால்கழுவுதல் முதலானவற்றைச் செய்யின், அந் நீர் பரப்பில்லாத சிறிது நீராகையால், மேன்மை யிழந்து அழுக்குடைய தானாற் போல" சிவன் வேறு தான் வேறாகக் கருதி வழிபாட்டுமுறை முதலானவற்றைச் செய்தொழுகும் அன்னிய சைவர்க்கு அசுத்தவினை செய்யின் அசுத்த மாகவும் சுத்தவினை செய்யின் சுத்த மாகவுமே பலிக்கும் (எ-று).

அன்னிய சைவ ரியல்பினையும் வீரசைவ ரியல்பினையும்
" அன்னிய சைவர் தம்பாற் றீக்கைகொண் டயன்மா லாதி,
மன்னிய சகலத் தோரை வணங்குவோர் மதம்புகாமல்,
உன்னருஞ் ஏகலிங்க நிட்டையி னுறுதி காட்டித்,
தன்னிக ரிலாத வின்பந் தருவதும் வீர சைவம்" (16)

" ஓதரும் பிராண லிங்கம் உயிர்க்குயி ரென்றோ ராமல்,
மேதகும் இலிங்கத் திற்கும் தனக்கும்வே றாகக் கொண்டே
கோதுறும் மனத்தி னாலே குறித்தருச் சனையே செய்யும்,
சூதகர்க் குணரொ ணாத சூழ்ச்சமும் வீர சைவம" (24)

என்னும் வீராகமச் செய்யுளால் உணர்க

## மேலான ஆசானுடைய திருநோக்கம் பட்டவாறே. சீடனுயை பந்தத்திற்குக் காரணமான குலாசார மயக்க மெல்லாம் கெடும் என்றல்

*இந்தனங்கள் பலபலபே ருடைய வாகும்*
*எரிதழலி னிடையிடவே எல்லாஞ் சேர*
*வெந்துவிற கினின்நாமம் நாச மாகி*
*வெண்ணீறென் றொருபெயராய் விளங்குமா போல்*
*பந்தமுறுங் குலாசார மயக்க மெல்லாம்*
*பரமகுருத் திருநோக்கம் பார்த்த வாறே 170*
*வெந்தழியும் ஒருபுழுவேட் டுவனா மாபோல்*
*விமலனுரு வாயெவர்க்கும் மேலா மென்றே.*

(இ-ள்) "விறகுகள் பற்பல பெயருடைய வாயிருக்கும் அவற்றை எரிகின்ற நெருப்பின்கண் இடவே அவ் வேறு பாடுகளையுடைய அவ்விறகுகளெல்லாம் ஒருசேர வெந்து, அவற்றின் பல பெயர்களெல்லாம் காணாணமற் போக, வெண்ணீறு என்று கூறப்படும். ஒரு பெயருடையவாய் விளங்குமாறு போல' பாசப் பிணிப்புடைய பலவகைக் குலமும், அவற்றிற்குரிய ஒழுக்கங்களுமாகிய அவற்றிற் கலந்தொழுகும் உலக நடையெல்லாம் மேலான ஞானாசிரியன் திருநோக்காற் பார்த்தவுடனேயே கெட்டொழியும், "முற்கூற்றிலே புழுவாயிருந்த ஒன்று பின்னர்க் குளவியாயினாற் போல" பாசபந்த முடைய (பசு) உருவம் நீங்கப் பாசபந்த மில்லாத (விமலன்) உருவாய் அவன் எவர்க்கும் மேலாய் விளங்குவான்" (எ-று).

## இன்னார்க்கு ஆகுச மில்லை என்பது

*திருந்தியசுற் பகலாத மட நல் லார்க்கும்*
*சிவலிங்க தாரணையாஞ் செம்மை யோர்க்கும்*
*அருந்தவமா கியபிரம சாரி யோர்க்கும்*
*அருமறையி னந்தமுணர்ந் தங்கி மூன்றும்*

பொருந்துமுப சாதகர்க்கும் உலக வாழ்வு
பொய்யெனவே மெய்யுணர்ந்த பொலிவி
னோர்க்கும்
இருந்தலமேல் ஆசூசம் இல்லை யாகும்
இரவியெதிர் இருளணுகா இயல்பி னாமே. 171

(இ-ள்) நன்னெறியான கற்பு நெறியினின்றும் நீங்கா தொழுகும் பெண்களுக்கும், சிவமாகிய இலிங்கம் ஒன்றனையே அகமும் புறமும் அணிந்திருக்கும் செம்மை நெறி ஒழுகுவோர்க்கும், அரிய தவநிலையாகிய பிரம சாரிய நிலையில் உள்ளவர்க்கும், வேத முடிவாகிய உப நிஷதங்களை உணர்ந்து அக்னி மூன்றினை வளர்க்கும் இரு பிறப்பாளருக்கும் (அந்தணருக்கும்), உலக வாழ்வினைப் பொய்யென்று கருதி மெய்ப்பொருளை உணர்ந்து ஞானப் பொலிவினையுடைய ஞானிகட்கும் இந்த நிலவுலகின்கண் வாழ்ந்திருந்தும் அவர்கட்கு ஆசூசம என்னும் தீட்டு இல்லையாகும் "ஞாயிற்றின்முன் இருள் அணுகாதவாறு போல" மேலே கூறிய இவர்தம்முன் ஆசூசங்கள் அணுகாவாம் (எ-று)

இப் பாட்டின் கருத்தினை,

"ஆசூச மில்லை அருநிய மத்தருக்
காசூச மில்லை அரனைசர்ச் சிப்பவர்க்
காசூக மில்லையாம் அங்கி வளர்ப்போருக்
காசூச மில்லை அருமறை ஞானிக்கே"

என்னும் (2552) திருமந்திரப் பாட்டாலறிக.

சிவலிங்க தாரணையாஞ் செம்மையோர்க்கு ஆசூசம் இல்லை என்பதனை,

"அங்கந் திருக்கோயி லாக்கி அமலலிங்கம்
அங்கருளாற் றாயித் ததற்பின்பும்-பொங்கியதீச்
சூதகவங் கம்போலச் சூதகஞ்சுட்டு ம்புந்திப்
பாதகரும் யேதமெனப் பார்" (55)

என்னும் அத்துவித வெண்பாவினை நோக்கி அறிக.

## வீடு அடையும் நெறி மூன்று என்பது

முத்திநெறி மூன்றுடல்போ டாவுடல்கொண் டேகா
முத்தியைமிங் கேபெறுத லுத்தமயாம் மூத்தி
மத்தியமா முடலுடன்போய்ப் பெற்றிடுதல் கனிட்டம்
மண்ணுறுடல் விட்டருளை நண்ணுவதாம்; அவத்தை
ஒத்துறிலுற் பவமுளவாம வாவறுதல் துறவிங்
குண்டாகின் முத்திபெறும் உவமையிதற் குலகில்
சித்தமுறுங் கவுணியர்கோன் நாவரைய னூரன்
சேரலன்மெய்ப் பொருளேனாதி நாதன் முதற்றெளியே. 172

(இ-ள்) சீவன்முத்து ராயினார் வீட்டினை அடையும் நெறி தலை, இடை, கடையென மூன்றாகும். பாசத்தழுந்திய ஏனைய மக்களைப்போல் உடம்பினைப் பிணமாகும்படி இங்கே இட்டுச் செல்லாமலும், தங்கள் உடம்பினைச் சிவலோகத்திற்கு உடன்கொண்டு செல்லாமலும் தன் உடம்பு கற்பூரம் போற் கரைந்துவிடச், சென்று ஒன்றாமல், இருந்தயிடத்திற்றானே சிவ பூரணத்திற் கலந்துவிடுவது தலை (உத்தமம்) ஆகும். இதற்கு எடுத்துக் காட்டுத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரையரும் ஆவார். இவ்வாறன்றி; உடலுடன் சிவலோகத்திற்குச் சென்று அங்கே வீட்டினைப் பெறுவது இடை (மத்தியம்) ஆகும். இதற்கு எடுத்துக்காட்டு நம்பியாரூரரும் சேரமான்பெருமாள் நாயனாருமாவர். இவ்வாறுமன்றி இம் மண்ணுலகிற்றானே உடம்பினை விட்டு இறைவன் திருவருளிற் கலப்பது கடை (கனிஷ்டம்) ஆகும். இதற்கு எடுத்துக்காட்டு மெய்ப்பொருள் நாயனார். ஏனாதிநாத நாயனார் முதலியோராவார். உயிர் நீங்கும் பொழுது இறப்புத் துன்பம் (மரணவத்தை) மிகவும் பொருந்தியுற்றுச் சீவன்முத்தராயிருக்கும் சிவநினைவு குலைந்தால் அவர்கட்கு மீளவும் பிறவி உண்டாகும் (எ-று).

இறப்புத் துன்பத்தினை,

‘ வந்திடு மரணத் துன்பம் வகுத்துரை செய்யப் போமோ,
உந்திமே லையும் பித்தும் உணர்வொடு பொறிக லங்கி,
நந்திடா இருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே,
இந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே”

என்னும் மெய்ஞ்ஞான விளக்கபாட்டால் அறிக.

## இறைவன் திருவருளறிவால் மெய்ப்பொருளை உணரக் கருதாமல், தம் சிற்றறிவால் மெய்ப்பொருளை ஆராயத் தொடங்கும் ஏனையசமயவாதிகளின் இழிவினைக் கூறுகின்றது.

அலமனருண் ஞானமுயிர்க் குயிராய் நின்ற
அனைத்தினையு மியற்றிடுமற் புதமோ ராமல்
தமுதறிவா லலகிறந்த சமய பேதத்
தர்க்கமொடுத் தரவாதஞ் சாதிப் போர்க்கும்
சிமயவரை தரையுயர்விண் கெடுத்துத் தேடுஞ்
சிதடருக்குந் தினகரனைப் பகலிற் றேடுந்
திமிரமட வருக்குமுயி ரிலையென் றோதுந்
தீமையர்க்கு மொப்புலகிற் செப்பொ ணாதே.

(இ-ள்) அநாதியே மலப்பிணிப்பில்லாத தூயவனாகிய முதல்வனின் சத்தியாகிய திருவருண்ஞானம், எல்லாவுயிர்க்கும் உயிராய் நின்று அவையனைத்தினையும் உணரும்படி உணர்த்திவரும் வியத்தகு செயலை ஓர்ந்து உணர்ந்து அதன் துணைகொண்டு உண்மைப் பொருளை ஆராயத் தொடங்காமல், பாசப்பிணிப்பினையுடைய தம் சிற்றறிவு ஒன்றினையே துணையாகக் கொண்டு எண்ணற்ற சமய வேறுபாடுகளைத் தோற்றுவித்து, அதனை நிறைநாட்டு தற்குத் தருக்கித்து வினாவெழுப்பிக்கொண்டு, அதற்கு விடையினைக் கூறித் தங்கொள் கையினை நிலை நாட்ட முயல்பவர்க்கும் உச்சியினையுடைய மலையினையும் தாம் வாழும் நிலத்தினையும் எங்கும் நிறைந்துள்ள உயர்ந்த ஆகாயத்தினையும் இழந்து தேடுகின்ற அறிவில்லாதவனுக்கும் பகற்காலத்திலே ஞாயிற்றினைக் காணோம் என்று தேடுகின்ற குருடருக்கும் தம் உடம்பிலே உயிர் என்கின்ற

ஒன்று இல்லை. இவ்வுலகிற்கெல்லாம் உயிராயிருக்கின்ற முதல்வனுமில்லை என்று கூறும் தீமை நிறைந்தவர்க்கும் ஒப்பான பொருளைத் தேடினால், உயர்திணைப் பொருளிலும் அஃறிணைப் பொருளிலும் ஒப்புச் சொல்லுதற் இல்லையாம் (எ-று).

திருக்குறளாசிரியரும்,

" மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்" (1071)

என்று கூறுதல் காண்க.

## ஆட்டுவிக்கும் முதல்வனுடைய அடியிணையை அணைந்தோர் தன்மை

கருமுகில் நிகரன குழன்மட வரலியர்
களபமென் நகிலிணை கலவாரே
மருமல ரயனுட னரிமக பதிமிக
மகிழ்பதம் மணமுற மதியாரே
ஒருவித விருவினை விதிமதி விபரித
முறுபிற வியிநெறி யுழலாரே
அருமறை முடிவினில் நடமுடை யவனிணை
அடிதொழும் அடியவர் அடியாரே. 174

(இ-ள்) அரிய மறையின் முடிவாகிய நாதாந்தப் பெருவெளியில் ஆடும் ஆடல்வல்லானுடைய இணையடிகளைத் தொழும் அடியவரும், அவர்தம் அடியவருமாகிய திருத்தொண்டாரனவர், இம்மையில், கரிய முகில்போலுங் கூந்தலையுடைய மடந்தையர்தம் கலவைச் சாந்தணிந்த மெல்லிய நகிலிணையைக் கூடப் பெறார்; எதனாலெனின்? சீவன்முத்தராகையால், மறுமையில், பிரமன் பதம் திருமால் பதம், தேவேந்திர பதம் என்னும் தேவர் பதங்களையும் ஒரு பொருளாகக் கருதி அடையப்பெறார்; நீக்கத்தக்க இருவினையாகிய ஊழினையே கருதியொழுகும் மாறுபாடு பொருந்திய பல்வகைப் பிறப்பு நெறிக்கண்ணும் சென்று உழலார்; எதனாலெனின்? உயர்ந்த திருவருளிற் கூடியவராகையால் (எ-று).

சிவஞான தீபம் முற்றும்

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலயத்துள்ள M-587: D-750 என்னுமுள்ள ஓலைச் சுவடியின் கடைசியில் சித்திலிங்கேசன் வணக்கமாக நான்கு பாடல்கள் உள்ளன. அவை வருமாறு. :—

## சித்திலிங்கேசன் வணக்கம்

சித்திலிங் கேசா வுனதுபூ ரணத்திற்
சித்தெனு மளவிலா வொளியில்
தொத்திடு பஞ்ச சாதாக்கியக் கடலிற்
றேன்றிடுந் திரையந்தத் திரையில்
ஒத்திடு நிழல்போ லாணவந் தொடர்ந்தே
உலைந்தனன் உலைந்ததும் மலத்தைப்
பத்தியா லீன மாக்கின துனது
பதாம்புயங் கண்டதன் பயனே. 1

(இ-ள்) சித்திலிங் கேசனே! உன்னுடைய வியாபகத்துள், சிற்சத்தி என்னும் அளவில்லாத ஒளியிலே, சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் கருமசாதாக்கிய மென்னும் ஐந்து சாதாக்கிய மென்னுங் கடலிலே தோன்றுகின்ற அபின்னா சத்தி பின்னா சத்தி என்னும் அலைன்கண் நிழலைப்போல ஆணவமலம் உயிராகிய என்னைத் தொடர்ந்தது; அதனால்யான் பிறப்பு இறப்பு, துன்பம், சகலம் கேவலம் என்னும் இவற்றினையுற்று வருந்தினேன்; இவ்வாறு உலையச் செய்ததாகிய அந்த ஆணவமலத்தினைப் பத்தி என்னும் எனது சத்தியினாலே குறையச் செய்தது உனது திருவடித் தாமரையைக் கண்டு வணங்கியதாற் பெற்ற பயனாகும் (எ-று).

'ஒத்திடும் நிழல்போல்' என்றது, ஆணவம் நீரின்கண் காணப்படும் நிழல்போல் உள்ளது என்று கருத்து. "ஆணவந்தான் அம்பு நிழற் போலென் றறி" என்று கூறும் (26) துகளறு போதம்.

அப்பய னறிய வேறொரு பயனும்
அறிந்திடே னறிவதற் கேது
மெய்ப்படு முனது நின்மல விச்சை
விளைத்தஞ்சு கிருத்திய மென்னுஞ்
செப்பிடு வித்தை விதித்தனைப் பந்தாய்த்
திரிந்தனன் செப்பினிற் பந்து
தப்பின போதுன் திருவடி யடைந்தேன்
தாணுவே சித்திலிங் கேசா. 2

(இ-ள்) தாணுவா யுள்ளவனே! சித்திலிங்கேசனே! உன் பதாம்புயங் கண்டலாகிய அப் பயனை யான் அறிந்து கொண்ட அளவிலே, இவ் வுலகத்தின்கண் வேறொரு பயனையும் அறிந்திட்ட னாயினேன்; உன் பதாம்புயங் காண்டலாகிய அதனையே யான் அறிவதற்கு ஏதுவாயிருந் தவை, நின் நின்மல வித்தை என்னும் சிவாகமமாகிய அபர ஞானமும், அதனாற் றோன்றிய பரஞானமாகிய திருவருண் ஞானமும் யாகும், அந் நின்மல வித்தையின் கண்ணும் படைத்தல் முதலான ஐந்து காரியம் என்னும் செப்பிடு வித்தையினையும் நீ விதித்தாய்! நானும் அவ் வித்தையில் அகப்பட்ட பந்தினைப்போல மறைந்து இங்கு மங்குமாய்த் திரிந்தேன். அச் செப்பிடு வித்தையில் அகப் படாமல் யான் தப்பிய காலத்திலே உன் திருவடியை அடையப் பெற்றேன் (எ-று).

பதியெனவொன் றுளதுபதி பசுபாச மெனுமப்
பகர்ந்தசிவ மருளாள்மா வெனவுமரு ளுடனே
மதியிலுத யம்பொருந்து ஞாதுருஞா னம்ஞேய
வகையெனவுந் தத்தொமசி வகையென்ப
தெனவும்
புதுமையுள்ள தெய்வீக யாகமங்கள் புகன்றிடும்
கழனபலவாம் ஞாதுருஞா னத்தையன்றிப் புகலா
யிதமகித மகன்றிவர்க ளெல்லா மொன்றா
யியம்புவர்க ளிவையாற் கிதுவேறா யிடுமே. 3

குறிப்பு: இப்பாட்டின் பின் இரண்டடிகள் பிழைபட்டுள்ளன. அதனால் பொருளெழுத முடியவில்லை.

கரைபெறா நின்ற வயிந்துவப் பிணக்கம்
கலக்கினை யதுவுமல் லாமல்
தரைமுதல் நாதாந் தத்து... மலத்தின்
சங்கையு மறுத்தனை யினிமேல்
இருவுறா நின்ற கிரிகைஞா னத்தோ
டிச்சையுந் திரோதையு மகற்றி
அரியசித் தின்மே லாக்கியுன் பாத
மளித்தனை சித்திலிங் கேசா. 4

(இ-ள்) சித்திலிங்கேசனே! எல்லை பெறாமல் நின்ற விந்துதத்துவத்தின் மாறுபாட்டினை நீ கலக்கினை அதுவுமன்றியே, நிலம் முதல் நாததத்துவம் ஈறான, அசுத்தமாயை சுத்தமாயை என்னும் மாயாமலத்தின் காரணமாகத் தோன்றும் எண்ணங்களையெல்லாம் அகற்றினை. இதற்குமேல், பெரிதாகப் பொருந்தி நிற்கும் கிரியாசத்தியின் பிணிப்பு ஞானசத்தியின் பிணிப்பு இச்சாசத்தியின் பிணிப்பு ஆணவ மலத்தைச் செயற்படுத்தும் திரோதான சத்தியின் பிணிப்பு என்னும் இவைகளையெல்லாம் அகலச் செய்து, அரிய சிற்சத்திக்கு மேலாக ஆக்கி உனது திருவடிப் பேற்றினை அடையும் அருள்புரிந்தாய் (எ-று).

விந்துதத்துவத்தின் பிணக்கமாவது, விந்துவின் காரியங்களாகிய நால்வகை வாக்கு, எழுத்து, பதம், மந்திரம், வேதம் முதலான கலைகளாம். இதனை,

"சூக்குமைபை சந்தியுமத் திமையு நாவிற்
சொல்லுதவும் வைகரியு மெனநான் காகும்,
வாக்குகள்விந் துவிற்றோன்று மென்பர்
நல்லோர்"

என்னும் (51) சிவஞான தீபப் பாட்டால் அறிக.

# சிவஞான தீபச் செய்யுள்
# முதற் குறிப்பு அகரவரிசை


| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| அகரவுக | 122 | இருவகையாம் | 154 |
| அகாரமுல | 21 | இறையருளோ | 119 |
| அஞ்செழுத்தே | 121 | | |
| அண்ணல் திரு | 101 | உகைத்தாடுங் | 143 |
| அத்துவா | 113 | உடலிலிரு | 194 |
| அமலனருண் | 176 | உடலுயிரன் | 158 |
| அரியதிற | 105 | உடலையுயி | 138 |
| அரியபதி | 114 | உருவமுடன் | 26 |
| அரியீரைந் | 78 | உள்ளொளியாய் | 88 |
| அருத்திமிகும் | 115 | உன்னரிய | 109 |
| அருந்தவர்கள் | 11 | | |
| அவ்வுயிர்போ | 36 | ஊற்றமிகுந் | 43 |
| அவனிதனி | 107 | ஊன்றுதம | 123 |
| அறலுருவங் | 80 | | |
| அன்னமயம் | 58 | எண்டருமெய்ஞ் | 41 |
| அனந்தனரு | 90 | எண்ணியமுற் | 156 |
| அனுக்கிரகஞ் | 117 | எண்ணில்சுக | 129 |
| அனைத்துலகும் | 100 | எரியுருவஞ் | 81 |
| ஆங்காரம் | 91 | எவ்வுயிரும் | 10 |
| ஆணவம் நற் | 38 | எனுமொருகூ | 97 |
| ஆணவமுன் | 39 | ஏத்தரிய | 130 |
| ஆதாரம் | 24 | | |
| ஆதிகலை | 112 | ஐவகையா | 71 |
| ஆதிதிரோ | 128 | | |
| ஆருயிர்தன் | 136 | ஒப்பிலுயிர் | 164 |
| ஆரணநூ | 31 | ஒருகரத்தை | 13 |
| இச்சைகலை | 111 | ஒருதிவசம் | 167 |
| இட்டமிகு | 16 | ஓங்கியகே | 62 |
| இதயமதிற் | 17 | ஓடல்நடந் | 55 |
| இதயமல | 125 | ஓதுபுறக் | 93 |
| இந்தனங்கள் | 172 | | |
| இந்திரநீ | 19 | கண்ணொளியை | 145 |
| இந்திரிய | 67 | கரிமுகவற் | 20 |
| இந்திரியமீ | 72 | கருணைமிகும் | 6 |

| | பக்க எண் |
|---|---|
| கருமுகில் | 177 |
| கருவிகள் | 153 |
| காமமுடன் | 51 |
| காலுமெயரு | 96 |
| காற்றினுக்குக் | 77 |
| குருமொழியை | 42 |
| குலவுமினன் | 150 |
| கூட்டரவு | 157 |
| கொலையாதி | 9 |
| சத்தத்தில் | 92 |
| சத்தமுதல் | 86 |
| சத்தமுறு | |
| சத்தியத்தெண் | 102 |
| சதுரயுக | 30 |
| சரியையொடு | 60 |
| சலத்தினுக்குக் | 78 |
| சாக்கிரஞ்சொப் | 63 |
| சாத்திரம் | 152 |
| சாத்துவிக | 50 |
| சாற்றியமு | 56 |
| சாற்றியிடு | 104 |
| சாற்றிலொரு | 98 |
| சித்தமுறும் | 148 |
| சிவஞ்சுத்த | 87 |
| சிவனுடைய | 5 |
| சீராரக் | 2 |
| சீராருந் | 50 |
| சூக்குமமை | 40 |
| சூரியனு | 132 |
| செப்பருமா | 37 |
| சொல்லியசந் | 170 |
| ஞானகலை | 110 |
| ஞானத்து | 159 |
| தக்கபரை | 108 |
| தகைவிரவு | 61 |
| தரைமுதலாய் | 129 |
| தரையுரத்துத் | 79 |
| தற்பரனுக் | 3 |
| தன்மைதரு | 45 |
| தன்னறிவாம் | 33 |
| தன்னிகரில் | 35 |
| தனுகரண | 65 |
| திருந்தியகற் | 173 |
| திருந்தியசத் | 162 |
| திருமருவு | 47 |
| திருமறைமா | 4 |
| தூலவுடல் | 71 |
| தேகமுறு | 133 |
| தோலெலும்பு | 54 |
| நயந்துசமா | 20 |
| நற்பரமாங் | 116 |
| நாதத்திற் | 118 |
| நிச்சயமஞ் | 41 |
| நிரைந்தமன | 14 |
| நிலையுறுதி | 11 |
| நின்மலசாக் | 6 |
| பகர்சுத்த | 44 |
| பகருயிர்சே | 135 |
| படைக்கலங்கள் | 147 |
| பரந்தசிவா | 127 |
| பரனருளாற் | 89 |
| பரன்பிரம | 137 |
| பரையுதவு | 112 |
| பலவாகுஞ் | 57 |
| பற்றிடுதல் | 84 |
| பாசவிரு | 7 |
| பாலனுட | 163 |
| பிரமரரி | 25 |
| பிருதிவிமுன் | 48 |
| புகலருமு | 85 |
| புடவிவிசும் | 106 |

| | பக்க எண் |
|---|---|
| புரிதருதந் | 168 |
| புவிமுதலைந் | 158 |
| புவிமுதல் | 160 |
| பூதமமை | 95 |
| பூதமுத | 75 |
| பூவுலகின் | 4 |
| பேசரிய | 53 |
| பேராத | 134 |
| பொய்யான | 40 |
| பொருளுடலா | 8 |
| பொற்பமரும் | |
| பொற்பமரொப் | 47 |
| பொறிபுலன்கள் | 140 |
| பொறியினிலொன் | 73 |
| பொன்னதனை | 142 |
| போக்குவர | 139 |
| போற்றிடுசத் | 94 |
| மண்ணறலை | 15 |
| மண்ணுதி | 146 |
| மதியிரவி | 16 |
| மன்னியகே | 66 |
| மன்னியவாக் | 52 |

| | பக்க எண் |
|---|---|
| மாயாபோ | 76 |
| முத்திநெறி | 175 |
| முத்தியினு | 127 |
| முருந்துநகை | 27 |
| மூலமதிற் | 69 |
| மூலமதின் | 122 |
| மூலமுதல் | 95 |
| வருடையெருச் | 29 |
| வளிக்குருவஞ் | 82 |
| வாசநறும் | 166 |
| வாதஞ்செற் | 34 |
| வாமகலை | 103 |
| வாயுவிட | 99 |
| வாரியும் | 131 |
| விண்ணுருவம் | 83 |
| விரிந்தநதி | 171 |
| விரும்புற்ற | 526 |
| விரைமருவுங் | 1 |
| விழிகளிலா | 32 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*10—2—90*

**மு. சதாசிவம்**, எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

## சிவஞான தீபத்திலுள்ள் சமயக் குறியீட்டுச் சொற்களும் சமய நுண்பொருள்களும்.


பாட்டெண்

அக்கரங்கள் ஐந்து 61
அக்கரம் முதலான கலைகள் 2
அகச் சமயத்தே நின்று சரியை முதலியவற்றில் ஒழுகினோர் பெறும் பேறு 35
அகர உகர மகரச் சிறப்பு 23
அகர உகர மகர விந்து நாதமே இலிங்கம் 123
அகோர கலை எட்டு 102, 105
அங்கியில் அடக்குவது 108
அசபை 23
அசுத்த தத்துவம்
அசுத்தமாயை சகலர்க்குத் தனு கரணம் புசிப்பு உலகமாதல் 37
அஞ்செழுத்தின் பொருள் 121
அஞ்செழுத்தே ஐந்தொழிலும் எந்தைபிரான் நடமும் 122
அஞ்செழுத்தே சிவானுபவம் அளிப்பது 122, 125
அஞ்செழுத்தே பதி பசு பாசம் என்னும் முப்பொருளாதல் 122
அஞ்செழுத்தையும் தம் பேபதம் நீக்கித் திருவருட் போதத்தால் சிவம் முன்னாகக் கொள்ளல் முத்தி நெறி 120
அண்டம் (ஆகாயம்) நிறை பொருளிற் றோய்வறவே நிறுத்துதல் 76
அண்ணல் உயிர்க்குயிராய் நிறைந்து அவ்வுயிர்களின் வினைப் பயனளவில் அருத்துவன் 146
அண்ணல் திருமுகம் ஐந்து 102
அத்த வேடணை 51
(அதம) சீடர் இரவி மதி உலகடைவர் 9
அந்தக்கரணம் நான்கு 49

| | பாட்டெண் |
|---|---|
| அப்புவில் அடங்குவது | 108 |
| அப்புவின் கூறு ஐந்து | 56 |
| அரன் அருளில் உயிர் அறிவு அடங்கும் | 143 |
| அரன் பொது நாடகம் | 124 |
| அருட் குருவாய்ப் பரமன் வருதல் | 8 |
| அருக்கனெதிர் தயங்கு மீனும் நிலவொளியும் ஏகம் இரண்டாகாவா போல் | 151 |
| அருட் சத்தி வகுப் பைந்து | 60 |
| அருணிலவுங் குடிலை வடிவாக மேவிப் பிரளயாகலருக்குப் பாசம் அகற்றல் | 7 |
| அருவம் நான்கு | 27 |
| (அருவுருவ மாகிய) உபய கூட்டமே இலிங்க சதாசிவம் | 27 |
| அருள் ஒளி பிரகாசித்தவாறே உயிர்ப்போத மலமகலும் ஒளியோடு ஏயும் | 151 |
| அருள் நூல் | 138 |
| அருள் வசமாம் ஒருமைநிலை உடையோர் சிவமே கண்டிருப்பர்; உலக நெறி உணரார்; அவர் பராபரன் புரிந்திடினும் அவை யனைத்தும் இறைபணி யாயிடும் | 140 |
| அருள் வடிவாய் நின்ற பொழுது ஆன்மா பராபரன் | 135 |
| அருளால் அருந்தில் இறைபணியாம் | 165 |
| அருளால் அறிந்து எவையும் இறைசெயலென்று உன் செயல் விட்டு அகல் | 86 |
| அருளை உணர்ந்து யாவும் அரன் செயலாகும் என்னும் உண்மையை அறிதலே அம்பல தரிசனம் | 153 |
| அவத்தை பதினெட்டு | 64, 66 |
| அவத்தை மருவிடுங்கால் ஆன்மா சகலன் | 134 |
| அவனியில் அடங்குவது | 108 |
| அழற் குணம் சக்குக் கிடங் கொடுத்தல் | 77 |
| அறிவை நாடுதல் சாலோகம் | 163 |
| அறுவகையாம் அவுத்திராதி | 7 |
| அன்ன மயம் | 140 |

பாட்டெண்


அன்னிய சைவம் 168
அன்னுவய வெதிரேகி அனுமானம் 141
அனந்த தேவர் அருளால் அசுத்த மாயையில்
கலை முதலியன தோன்றல் 90
அனுபோகம் விளையின் ஞானசத்தி நீங்குதல் 156
அனைத்துலகும் இலிங்க மயமாம் என்றல் 119

ஆக்கிராணத்துக்குரிய கன்மேந்திரியம் உபத்தம் 78
ஆகாயக் கலப்பால் மனம் புத்தி சித்தம் ஆங்காரம்
இயமானன் என்னும் ஐந்தும் தோன்றுதல் 96
ஆகாயத்தின் கூறு ஐந்து 57
ஆகாயம் முதலான பூதங்களின் குணம் ஒன்றினுக்
கொன்று அதிகமாதல் 92
ஆங்காரம் மண்ணிடமாய் நின்று அபிமானம் புரிதல் 100
ஆங்காரம் மண்ணிடமாய் நின்று சலித்துக்கொண்
டிழிதல் ஆங்காரம் மூன்று 171
ஆசூசம் இன்னார்க்கு இல்லை என்றல் 171
ஆணவம் அகன்றதென்று காணல் 42
ஆணவம் ஒளிமுன் இருள் போல அண்ணல்
அடியிணையில் அகலுதல் 130
ஆணவம் நட்டமாதல் 155
ஆணவம் நீங்க நாதம் அகலும் 157
ஆணவம் பெத்தத்தில் புனிதன் அருள் தோன்றாமல்
மறைக்கும்; அது முத்தியில் உலகம் தோன்றாமல்
மறைக்கும் 129
ஆணவம் மறைத்து நின்றதென்று அறிதல் 42
ஆணவத்தின் கூறானவை 43
ஆணவத்துடன் கூடிய நிலையில் ஆன்மா கேவலன் 134
ஆத்தும தத்துவம் 50
ஆதாரம் 25
ஆதாரம் ஆறு 58
ஆதாரமாகி வருமாயை உரு

பாட்டென்

ஆரியனும் குருலிங்க சங்கமமுமன்று, அவற்றின் வேறுமன்று 132
ஆலநீழல் அறமுறைத்த பெருந்தகை 4
ஆலம் வித்து ஆலமரத்தைத் தனக்குள் அடக்குதல் போல் 143
ஆவாகனாதி புறப்பூசை 163
ஆனந்த போகம் சாரூபம் 163
ஆனந்த மயம் 140

இச்சா சத்தி செலுத்துதல் 87
இதமான வாழ்வு இதுவெனல் 10
இதய மலரில் இறைவன் நடிப்பது 126
இந்தனம் வன்னியை அடக்குதல் போல் 143
இந்திரியங்களில் ஆன்மா கலந்து நிற்கும் நிலையில் சீவன் எனப் பெயர் பெறுதல் 134
இந்திரியம் முதலியன ஏக, உயிர் அருளுடன் மேவில் சுத்தநிலை அடைதல் 73
இரசதன்மாத்திரையிலிருந்து நீர்தோன்றல் 92
இரவியொளி கண்ணொளியைக் கவர்ந்துகொண்டே காண்பனவற்றைக் கண்ணிற்குக் காட்டுதல்போல் 146
இரவி விழி 2
இராகம் எட்டு 53
இராமனும் பரசுராமனும் பொருத கதை 30
இருவிழியளவில் அணியப்படும் புண்டரத்தால் பவம் நீங்கும் 13
இருவினை நுகரும் பொழுது ஆன்மா பசுவெனப் பெயர் பெறுதல் 134
இலிங்க சுதளி 160
இலிங்கமும் குருவும் சங்கமமும் மலம்மூன்றினை அகற்றுங்குறி 131
இறை ஞானம் 154
இறை பணி 150

இறைவன் அஞ்செழுத் துருவாய் நடித்தல் 123
இறைவன் ஆடல் 109
இறைவன் ஐந்தொழிலை படர்க்கை முன்னிலை
தன்மையாற் செய்தல் 30
இறைவனுக்கு அத்துவா வடிவு 115
இறைவனுக்கு மாயை கண்ணன்று 116
இறைவனை அருச்சிக்கும் எட்டுவகைப் பொருளும்
அவற்றால் அருச்சிக்கின் உண்டாம் பயனும் 165
இறைவனைப் பூசிப்பதால் உண்டாம் பயன் 166
இறைவன் இச்சாசத்தியால் வித்தியாகலையில்
உருத்திரன் தொழிலைச் செய்தல் 109
இறைவன் குருலிங்க சங்கமம் என்னும் குறியினால்
கேவலம் முதலான மூவகையை நீக்கல் 68
இறைவன் கிரியாசத்தியால் நிவிர்த்திகலையால்
அயன் தொழில் செய்தல் 109
இறைவன் ஞான சத்தியால் பிரதிட்டையால் திருமால்
தொழிலைச் செய்தல் 109
இறைவன் திரோதையால் சாந்தியால் மகேசன்
தெழிலைச் செய்தல் 109
இறைவன் பரையால் சாந்தியாதீதத்தால்
சதாசிவத்தின் தொழிலைச் செய்தல் 109
இறைவன் வருடை முதலான பல பொருளில் விளங்கி
அருள் செய்வன் என்றல் 31
இனன் உதித்து மேலே வரவர ஒருவர் நிழல்
குறைந்துவந்து உள்ளொடுங்குதல் போல 151
ஈசனுடன் இருபத்தாறு 95
ஈசன கலை ஐந்து 102, 106
ஈசானம் முதலிய கலைகள் முப்பத்தெட்டு 102
உட்கரணத்தில் நிலைபெறும் இலிங்கமே
புறப்பூசை இலிங்கம் என்றல் 117
உடம்பில் இளமை நலம் முதலியன தோன்றி
ஒடுங்குதல் 17

பாட்டெண்

உடம்பில் மண் முதலான தத்துவங்கள்
நெகிழ்ந்தால் உண்டாம் வேறுபாடு 16
உடம்பு இரண்டு 58
உடம்பைப் பொய் யென்று உயிர் அகன்றபொழுது
அருளின் பெயர் கடாட்சம் 137
'உடல் உயிரன்று' என்றுணர்ந்த பொழுது
பூதமும், அவற்றின் காரியமும், உலகும்,
உருவமும்,பத்து நாடியும் அகலும் 157
உடலில் உயிர் உண்டு என்பதை அனுமானத்தால்
அறிதல் உடற்குறி மூன்று 58
உத்தமச் சீடர் மெய்ம் முத்தி சேர்வர் 9
உததியில் கூடும் உதகம் ஒன்றாதல் போல 6
உததியின் நீரை மேகம் எடுத்து உவரகற்றி அமுதாக்கி
உலகம் போற்ற வைத்தாலும் அது நில்லாதோடிக்
கடல்புக்கு உவராதல் போல 8
உப்பளம் துரும்பினை அடக்குதல் போல 143
உபத்தத்தின் விடயம் ஆனந்தம் 78
உபதேசம் மூன்று 61
உபநயம் 141
உமாதேவியார் அளகம் அவிழ்த்து முடிக்குங்காலம்
ஒரு கோடி, திருமால் இறக்குங்காலம் 32
உயிர் அருளே உருவமாயிருந்தபொழுது அருட்பெயர்
கருணை 138
உயிர் இந்திரியம் முதலியன ஏக அருளுடன் மேவில்
சுத்த நிலை அடைதல் 73
உயிர் உடம்பைப் பொய்யென்று அகன்றபொழுது
அருளின் பெயர் கடாட்சம் 137
உயிர்க்கு அகலா மலம் 41
உயிர்களை இரக்கமின்றிக் கொன்றருந்துபவரை
இயமதூதர் தண்டிப்பார் என்றல் 11
உயிர்க்கு இறையருளை யன்றி அறிவு உதியாதாகையால்
உலகனைத்தும் இறைவன் திருமேனி எனக்

பாட்டெண்

கண்டவரேபசு பாசம் விண்டார் 147
உயிர்க்குயிராய் நிற்றல் ஞான பூசை 163
உயிர்க்குளொளி நோக்கல் யோக பூசை 163
உயிர் கேவலாவத்தையில் உற்றபொழுது அருளின்
பெயர் பிரகிருதி 137
உயிர்ச் சுத்தி 160
உயிர் செயல் எட்டு 53
உயிர் தன்னியல்பை யுணர்ந்து அருளைக்
காணாத அவதரத்தில் அருளின் பெயர் திரோதை
உயிர் தனக்கு ஏமமாகிய அருளை உணர்ந்தபொழுது
அருட்பெயர் அறிவு 138
உயிர்கள் துக்கத்தையும் சுகத்தையும் அஞ்
ஞானத்தையும்மயக்கத்தையும் அடைதலால்
இவற்றிற்கேதுவான கன்மம் ஆணவம் மாயை
எனும் மும்மலங்களும் உள 101
உயிர்ப் பேதம் மூன்று 62
உயிர் பொறியும் புலனும் மனாதியும் கலாதியும்
சிவதத்துவமும் அன்று ; அது இவை நீங்கிய
அறிவுப் பொருள் 142
உயிர் மேலாலவத்தை உற்ற பொழுது அருளின்
பெயர் சிவதத்துவம் 137
உயிர் வர்க்கம் அளப்பரிது ; ஆணவத்தால் அனாதி
மறைப் புள்ளது ; இருவினைக்குத் தக்க
தனுவாதியை மாயை அதனைப் பொருந்தி
இருதிணையாய் விரிந்து நிரயத்திலும் சுவர்க்
கத்திலும் நிலத்திலும் இன்பதுன்பம் நுகர்ந்து
இரு வினை யொப்பில் இறையருளால் பரபதம்
உற்றிடும் 39
உயிராகிய தன்னை அறிவென் றறிந்த நிலையே
ஆரூர் 153
உயிரும் உடலும் ஈசன் கோயில் 11
உயிருக்கு உணர்த்தும் சகலத்திலே அருளின் பெயர்

பாட்டெண்


| | |
|---|---|
| மாயா சத்தி | 137 |
| உருவதன்மாத்திரையிலிருந்து தீ தோன்றல் | 92 |
| உருவம் நான்கு | 27 |
| உரை | 4 |
| உலகம் மூன்று | 63 |
| உலக மக்களின் கூட்டரவு (கூடுதல்) நீங்கின் கிரியை நீங்கும் | 156 |
| உலகில் முதல்வனை நினைத்துச் சித்தியும் முத்தியும் பெற்றுவரும் பொருளுமிருத்தலால் அத்தகைய பசுவர்க்கமும் உள்ளன | 101 |
| உலகேடணை | 51 |
| உலவையில் அடங்குவது | 108 |
| ஊரன் (நம்பியாரூரன்) | 172 |
| எதிர்வினை (ஆகாமியம்) எரிசேர் வித்தாதற்குக் காரணம் எல்லாவற்றையும் அத்தன் அறிந்து அளிப்பதை ஓராதவர் தத்தம் அறிவால் நுகருங் கருத்தராகித் தடுமாறி உள மெலிந்து தளர்வார் | 149 |
| எல்லாவுலகும் முத்தொழிற்படலால் அவற்றிற்கு முதல்வன் வேண்டும் என்றல் | 101 |
| எரிமண்டலம் | 24 |
| எவ்வுயிரும் பராபரன் சந்நிதி எனல் | 11 |
| எழு நரகு | 11 |
| ஏகலிங்க நிட்டை | 168 |
| ஏகன் | 27 |
| ஏடணை மூன்று | 51 |
| ஏது | 36, 141 |
| ஏனாதிநாதன் | 172 |
| ஐங்கோசத்தின் வேறானது ஆன்மா | 140 |
| ஐந்து சத்தியும் அகலுதல் | 156 |
| ஐம்பூதங்களின் கலப்பால் இருபத்தைந்து தத்துவமாதல் | 96 |

பாட்டெண்


ஐம்பூதங்களின் தெய்வம் 92

ஐம்பூதத்தில் கருவிகள் ஆறாறும் பொருந்துவது 108

ஐம்பொறிகளானவை உயிர் ஐம்புலனை அறியுமாறு கூட்டும் ஆனால், அவை புலனின் பயன் கொள்ளா. அது போல அருட்சத்தியானது உயிர் முதல்வனை அறிந்து கூடுமாறு கூட்டும் ; தான் முதல்வனை அனுபவியாது 139

ஒப்பரிய அறங்கள் இது எனல் 10

ஓங்காரத்தில் ஐந்தெழுத்துத் தோன்றல் 120

கதிர் மண்டலம் 24

கந்த தன்மாத்திரையி லிருந்து நிலம் தோன்றல் 92

கமலமலர் விரிஞ்சன் 1

கரணங்கள் அறக் கலாதிகள் நீங்கும் 144

கயிறகன்ற ஊசல் 157

கருணை மிகும் பரஞான வடிவு 7

கருமுகிலின் செயல் போல 145

கருமேந்திரியம் ஐந்து 48

கலாதிகள் ஏழும் புருடன் 95

கலாதி தத்துவங்களின் தொழில் 84

கலை முதலான ஏழினையும் இயக்கும் சிவ மூர்த்தம் 147

கலை முதலைந்தும் புருட கஞ்சுகம் 158

கவுணியர் கோன் 157

கற்பம் முதலாதியான திரு நீறு 13

கறங்கு சுழலுத லொழிதல் 144

கன்மம் மூன்று 63

கன்ம மலம் நட்ட மாதல் 153

காகம் மேருச் சாரில் பொன்னிற மாதல் போல 6

காந்தம் இரும்பினை அடக்குதல் 143

காமியத்தின் கூறானவை 44

காரண அவத்தை மூன்று 64

கால் சலித்துத் திரட்டுதல் 76

காற்றின் குணம் துவக்குக் கிடங்கொடுத்தல் 77

பாட்டெண்

காற்றின் கலப்பால் சமானன் முதலிய ஐந்தும்
 தோன்றல் 97
கிரியாசத்தி செலுத்துதல் 87
கீழாலவத்தை 64
குணம் அறச் சுத்தவித்தைமுதன் மூன்றும் அகலும் 157
குணம் ஒன்பது 51
குணம் மூன்றும் புமானைக் கூடும் 93
கும்போதகத்தில் ஆகாசம் போல்வது அன்னிய
சைவர் இயல்பு 169
குருபரன் 4
குற்றமிலா நற்றவம் இது வெனல் 10
குறைந்த புண்டரமாக அணியின் ஆயுள் குன்றும் 13
கேவலம் 64, 66
கேவலம் ஆணவத்தை நீக்கும் 68
கேவல காரியம் ஐந்து
கொடும்பாவம் 12
சக்கு-சக்ஷீ 77
சக்குவிற்குப் பொருந்திய குணம் தீயிடை நின்று
 உருவம் அறிதல் 77
சகம் பஞ்சப் பிரமமயம் என்று தெளிந்தவரே
 தம் போதக் களங்கம் அகன்றவர் 106
சகல காரிய அவத்தை ஐந்து 64, 65
சகலம் 64, 67
சகலம் மாயையினை நீக்கும் 68
சத்த தன்மாத்திரையிலிருந்து 29
சத்தாதியும் கரணம் மூன்றும் பொருந்திய
 புரியட்டகமே சூக்கும உடம்பு 94
சத்தி 2
சத்திநிபாதம் நால்வகை 161
சத்தியும் சிவமுமே இங்கும் 118
சத்தியோசாத கலை எட்டு 102, 103
சதுர் முகனின் ஒருநாள் இரண்டாயிரம் சதுர்யுகம் 32

பாட்டெண்


சயம் ஐந்து 59
சராசரங்கள் அரன் உரு 147
சலத்திலுக்குக் குணம் சிங்நுவைக்கு இடம் தரல் 78
சாக்கிரத்தில் ஐந்தவத்தை 72
சாக்கிரத்தில் முப்பத்து நான்கு கருவி 69
சாக்கிரத்திற்குத் தூலவுடல் 71
சாத்துவிகம் முதலியன ஒன்றில் இரண்டாகி ஆறாதல் 52

சித்தம் நீரிடமாக நின்று சலித்துக் கொண்டிருத்தல் 100
சிமயவரையையும் தரையினையும் விண்ணினையும் இழந்து தேடும் சிதடர் செயல் 173
சிவஞான தீபம் 5
சிவஞானிக்கு உவமையும் அப் பொருள்களின் தன்மையும் 162
சிவதத்துவம் 50
சிவதத்துவம் ஐந்து 49
சிவதத்துவம் ஐந்தின் தொழில் 86
சிவம் 2
சிவம் சத்தி முதலிய தத்துவம் 2
சிவம் பிரகாசித்த பொழுதே திரோதாயி நீங்கும் 156
சிவம் முதல் ஐவரும் நான்கு வாக்கினைச் செலுத்த அகரம் முதலிய எழுத்துக்கள் தோன்றும். அவ்வெழுத்துக்களால் வேதம் முதலியன தோன்றும் என்றல் 33
சிவம் முதலான ஐந்து வயிந்துவ கஞ்சுகம் 158
சிவம் முதலிய தத்துவங்கள் தோன்றிய முறையே ஒடுங்குதல் 92
சிவம் முதலைந்தும் ஈசன் 95
சிவலிங்கத்தைத் தரித்தலால் சீவன் முத்தனாவான் 167
சிவனுடைய மாமரம் 6
சிவனருள் நூல் 12

பாட்டெண்

சிவாகமங்கள் சிவலிங்கத்தை அணியும் அத்துவித சைவரைச் சிறப்பித்தல்போலப் பேத சைவரைச் சிறப்பித் தோதாது 168
சிற்பரை 3

சீராருந் தொழில் ஐந்து 61
சீவன் சிவனை அணுகும் போதில் அருட்பெயர் ஆனந்தம் 138

சுக சொரூபத்தைக் கண்டபொழுது ஆன்மா சொரூபத்தினல் 136
சுகாதீதநிலை துரியாதீதம் 74
சுகாதீதம் சாயுச்சியம் 163
சுத்த காரிய அவத்தை ஐந்து 64, 66
சுத்தம் இருவினையை நீக்கும் 68
சுத்தமாயையின் முப்பத்தொரு பேதம் 46
சுத்தமாயையும் ஐந்தொழிலும் நட்டமாதல் 155
சுத்தாசுத்த தத்துவம் 50
சுரபி பாற்கடலில் உற்பவம் 164
சுரபியின் பஞ்சகவ்யத்திலிந்து தோன்றியன 164
சுழுத்திக்குப் பிரகிருதி உடலி 71
சுழுத்தியில் இரண்டு கருவி 69

சூரியனும் சூரியகாந்தக்கல்லும் சேர்ந்தபொழுதே பஞ்சினைச் சுடுதல் போல 133

செயலறநின்றிடும் நேயம் சிவபூசை 163
செவிக்குக குணம் விண்ணிடை நின்று சத்த மறிவது 76
செற்பம் 36

சேரலன் 172

சைவ சித்தாந்திகள் வேதாந்த நிலையுடையோர் கூறும் ஐம்பூத நெறியான இருபத்தைந்து தத்துவங்களைக் கொள்ளார் 100

பாட்டெண்

சொப்பனத்தில் இருபத்துநான்கு கருவி 69
சொப்பனத்திற்குச் சூக்கும வுடல் 71

சோதி குருபரனாய் வந்து பெத்தநிலையை நீக்கல் 76

ஞானச் செய்கை 4
ஞான சத்தி செலுத்துதல் 87
ஞானத்தில் பொருந்திய பொழுது ஆன்மா அறிவு 135
ஞானத்துக் கிரியை 159
ஞானத்துக் கிரியையில் பஞ்ச சுத்தி 160
ஞானத்துச் சரியை 159
ஞானத்து ஞானம 158
ஞானத்து யோகம் 159
ஞானத்தைக் கண்டபொழுது ஆன்மா ஞானவான் 135
ஞானம் நாலு 62
ஞானானந்தம் துரியம் 74

தத்துவங்களைச் சடம் என்று அறிந்து நீங்குவதற்கு
உதவுவது திருவருள் 142
தத்துவம் இருநூற்றிருபத்தாறு 75
தத்துவம் தொண்ணூற்றாறு 58
தத்துவாதீதநிலை காசி 153
தத்புருடகலை நான்கு 102, 105
தம்போதப் பற்று 1, 144
தலைவனுடன் (பதியுடன்) உயிர் ஒன்றாகா
இரண்டுமாகா நிலை 151
தவநெறி 12
தவ மருவும் அறிவுடையோர் அவை
தழலின் கலப்பால் செவி, உடல், நா, மூக்கு, விழி
என்னும் அறிவுக்கருவி தோன்றல் 98
தற்பரன் 3
தற்பரையாதல் சாமீபம் 163

பாட்டெண்

தற்போதர் அறச் சிவானுபவத் தழுந்தின் பராசத்தி
நீங்கும் 156
தன்னைக் காண்டல் சொப்பனம் 74
தன்னை மயக்கமறக் கண்டபொழுது ஆன்மா சுத்தன் 134
தாது ஏழு 60
தாலுவிற் குரிய கன்மேந்திரியம் பாயுரு 78
தாலுவுக்குக் குணம் நீரில் நின்று இரதம் அறிதல் 78
தாழ்ந்த மணி நாக்கு 144

திட்டாந்தம் 141
திரவிய சுத்தி 160
திருநீற்றை அவனி, சலம், எரி, கால், அண்டங்களின்
வடிவுபோல் மெய்ம் முழுதும் பூசுதல் 12
திருமாலுக்கு ஒரு நாள் ஒரு கோடி பிரமர்
அழியுங்காலம் 32
திருவருண் ஞானத்தால் உணரப்பெறாமல் தமதறிவால்
உணர்வோர்தம் சமயக்கூற்று சிறந்ததன்று எனல் 173
திருவருள் 3
தினகரனைப் பகலிற் றேடும் குருடர் 173

தீ என்னும் தத்துவத்தின் தசகாரியம் 81
தீச் சுட்டொன்றல் 76
தீர்க்க புண்டரத்தால் தவம் நீங்கும் என்பது 13
தீவகம் 7

துரியத்திற்குக் கருவி ஒன்று 69
துரியத்திற்கு மோகினி உடல் 61
துரியாதீதத்திற் கருவிகளின்றி உயிர் தனித்திருத்தல் 69
துரியாதீதத்திற்கு ஆணவமலம் உடல் 71
துவக்கின் குணம் கால் இடமாய்ப் பரிசம் அறிதல் 77
துவக்குக்குப் பொருந்திய கன்மேந்திரியம் பாதம் 77

தேயுவின் கூறு ஐந்து 56
தேவ வாயு 55

பாட்டெண்

தைசதம் 91
தைசத்தில் மனமும் ஞானேந்திரியமும் தோன்றல் 91

தொழிலதிபர் ஐந்து (ஐவர்) 61

தோத்திரம் - சுரோத்திரம் 76
தோத்திரத்திற்குப் பொருந்திய கன்மேந்திரியம் வாக்கு 76

நஞ்சினைத் தீர்ப்போனுர் கலுழவடிவமும் ஒன்றுபட்ட
பொழுதே நஞ்சினைப் போக்குதல் போல் 133
நதி நீரில் சவுசமும் உடற் சுத்தியும் செய்தாலும் அந் நீர்
தூய்மை கெடாதது போன்றது ஏகலிங்க
நிட்டையினையுடையோர் இயல்பு 169
நதிபதியிற் றிருவின் கேள்வன் 1
நம் போதம் (பாடபேதம்) 1
நறைமை அலரும் போல் 2

நாடிகள் பத்து 54
நாடி பத்தும் நிலதத்துவத்தில் ஒடுங்கும் 93
நால்வகைச் சத்திநிபாதத்திற்கு உவமையும் பக்குவமும் 161
நாவரையன் 172
நான் எனக் கருதும் சுதந்திர நீக்கமாகிய அதீதத்தில்
ஆன்மா திரோதன் 135
நான்கு வாக்கின் இயல்பு 88
நான்கு வாக்கு விந்துவில் ஒடுங்கும் 93
நானே முதல்வன் எனக் கருதிய பொது ஆன்மா
வயிந்துவன் 134

நிகமனம் 141
நிட்டை நிலை 151
நிராதாரம் 25
நிலத்தினுக்குக் குணம் நாசிக்கு இடத்தால் 79
நிலத்தின் கலப்பால் வாக்கு, பாதம், பாணி, பாயுரு
உபத்தம் என்பவை தோன்றல் 99

பாட்டெண்

| | |
|---|---|
| நிலம் முதலிய தத்துவங்களின் எல்லை | 107 |
| நிலமென்னுந் தத்துவத்தின் தசகாரியம் | 79 |
| நின்மல சாக்கிரம் | 66 |
| நின்மல சொப்பனம் | 66 |
| நின்மல துரியம் | 66 |
| நின்மல துரியாதீதம் | 4 |
| நினைவு | |
| நீர் என்னுந் தத்துவத்தின் தசகாரியம் | 80 |
| நீரின் கலப்பால் ஒலி ஊறு, உருவம், மணம், சுவை என்பன தோன்றல் | 12 |
| நீலம் புலையர் தெருவிற் பொல்லாக் குப்பிக் குழியிற் பூத்தது போல்வது | 98 |
| நெல்லின் கண் தவிடு, முளை உமி போன்றன திரிமலம் | 4 |
| நேத்திரத்திற்குரிய கன்மேந்திரியம் பாணி | 77 |
| பசு ஞானம் | 154 |
| பசு ஞானம் சுதந்தர வீனம் | 154 |
| பசு வருக்கத்திற்கு மாயையே கண் | 116 |
| பஞ்ச கஞ்சுகம் | 158 |
| பஞ்கோசம் | 60 |
| படைக்கலம் கொலைத்தொழில் செய்தாலும் அதனால் விளையும் பாவம் அதனைச்சாராது. அதனை உடையானைச் சாருதல் போல | 148 |
| பத்துக் காற்றும் வளி தத்துவத்தில் ஒடுங்கும் | 93 |
| பதம் நாலு | 62 |
| பதமுத்தி நாலு | 62 |
| பதி அவ்வுயிர் போல் எவ்வுயிர்க்கும் அறிவாகி நிறைந்தது | 38 |
| பதி ஆனந்த சுகாதீதத் தப்புறத் தப்புறம் | 38 |
| பதி உருவம் அருவம் உபயம் அகன்றது | 38 |
| பதி உருவம் நிலையும் சுட்டில்லாதது | 38 |

பாட்டெண்

பதி எவ்வெவர் எப்படி நினைந்தார் அவ்வர்க்கு அப் பொருளாயிருப்பது 38

பதி ஏகம் 38
பதி சித்துடன் அசித்தும் அல்லாதது 38
பதி மன பாவகத்தால் நண்ணரிய ஒளி 38

பதியாகிய பரமன் தன் சத்தியினையே கண்ணாகக் கொண்டு அனைத்தினையும் காண்பன் 116

பம்பரம் விசையறுதல் 144
பராபர நிறைவு சுழுத்தி 74
பரம சிவத்தொடு இருபத்தேழு 95
பரம சிவன் உத்தமன் 23

பரம குருவின் திருநோக்கம் பெற்றவாறே சீடனின் குலாசார மயககமெல்லாம் தீர்தல் 170

பரமன் அருட்குருவாய் வரினும் உயிர்கள் உலகத்தையே விரும்பல் 8

பரமானந்தம் இத்தகைய தெனல் 144

பரமானந்தத்தில் தாடலைபோல் ஒன்றிய நிலையில் ஆன்மா சுபாவன் 136
பரமானந்த மேலீட்டில் ஆன்மா சிவன் 136
பரமானந்தி

பரன் அருளே சுத்தமாயையில் சிவம் முதலிய தத்துவம் தோன்றல் 89

பரன் அருளே எவற்றினையும் நடத்திடும் 147
பரன் சிங்ஙுலையாலும் பரயுருவாலும் ஏய்ந்த வினைப் பயனை
உயிர்கட்கு நுகர்வித்தபின் எஞ்சியவற்றைப் பிரதிட்டாகலையில் வைத்தல் 111
பரன் செவியாலும் வாக்காலும் சேரும் கன்மத்தை உயிர்கட்கு அருத்தியபின் எஞ்சியவற்றைச் சாந்தியாதீத கலையில் வைத்தல் 114

பாட்டெண்

பரன் துவக்காலும் பாதத்தாலும் மருவும் இருவினை பயனை உயிர்கட்கு அருத்தியபின் எஞ்சியவற்றைச் சாந்திகலையி னிடமாக வைத்தல் 113
பரன் நாசியாலும் உபத்தத்தாலும் உயிர்கட்கு வரும் கருமப் பயனை அருத்தியபின் எஞ்சியவற்றை நிவிர்த்தி கலையில் வைத்தல் 110
பரன் நேத்திரத்தாலும் கையாலும் அடைந்த வினைப் பயனை உயிர்கட்கு அருத்தியபின் எஞ்சியவற்றை வித்தியா கலையினிடமாக வைத்தல் 12
பரன் பிரமசாரி 139
பரனருளின் வசமாகிப் பணிசெய்வோர் தன்மை 148
பரனுக்குச் சிவலோகமாதல் பராபரை 37
பானுடைய மனம் இலிங்கம் வாக்கு குரு ; சங்கமம் மேனி பராசத்தியானது ஞானசத்தி முதலானவற்றைச் செலுத்துதல் 87
பரிசதன்மாத்திரையிலிருந்து காற்றுத் தோன்றல் 92
பரிசன தேவி 14
பரைகன்னிகை 139
பரை பரம்பரனை அனுபவியாமல் உயிர்த்தோழி போல் உயிர்களை இறைவனுடன் கூட்டிய பின்தான் நீங்குதல் 139
பரை முதலானவை சத்தி கஞ்சுகம் 158
பரை யுதவுங் கரிமுகவன் 1
பலவகை நட்டங்கள் 154
பலவாகும் தத்துவம் 9

பாச இருள் ஐவகை 8
பாச ஞானம் அஞ்ஞானம் 154
பாச ஞானம் இன்னது என்றல் 154
பாணியின் விடயம் இடுதல் ஏற்றல் 77
பாத விடயம் கமனம் 77
பாயுருவின் விடயம் மலங்கழித்தல் 78

பாட்டெண்

பிரதிக்கிணை 141
பிரபஞ்ச வாழ்க்கை 1
பிரளயா கலர் 7
பிராசாத கலை 47
பிராணமயம் 147
பிராண வாயு சமாதி முதலானவற்றில் இயங்கும் அளவு 21
பிராணவாயு முதலானவற்றின் நிறம் 20
பிராண வாயுவை ஆதார தெய்வங்கட்குப் பகிர்ந்தளித்தல் 22
பிராணன் முதலான காற்றுக்கள் உடம்புள் தங்கியிருக்கும் இடம் 49
பிராரத்தம் மூன்று 63
பிருதுவியின் கூறு ஐந்து 51
புத்தியில் ஆங்காரம் தோன்றல் 90
புத்திர ஏடணை 51
புத்தி வன்னியிடமாக நின்று நிச்சயித்தல் 100
புரியட்டகம் 91
புரியட்டகமாம் சூக்குமத்தே முப்பத்தாறு தத்துவங்களும் அடங்குதல் 94
புருட தத்துவத்திற்குரிய பெயர் பதினேழு 85
புருடன் புலன் நுகருங் காலந் தோன்றல் 90
புருடனுடன் இருபத்தைந்து 48
புலன்கள் ஐந்து 76
புவி சிக்கனவு 158
புவி முதலைந்தும் பூத கஞ்சுகம் 76
புறச்சமய நிலையோர் பெறும் வேறு தலையினால் நடந்து கதியை அடைதல் போன்றது 35
புறக்கருவி அறுபதும் முப்பத்தாறில் ஒடுங்கும் 93
புனல் நெகிழ்ச்சியினை யுடையது 76
புனிதன் மலம் 51
பூத காரியம் இருபத்தைந்தும் பூதத்தில் ஒடுங்கும் 93

| | பாட்டெண் |
|---|---|
| பூதங்கள் நாற்கரணைத்தைப் பொருந்தித் தொழிலியற்றல் | 99 |
| பூத சுத்தி | 160 |
| பூதம் ஐந்து | 48 |
| பூதாதி | 91 |
| பூதாதியில் சத்தாதி தோன்றல் | 91 |
| பூத வாயு | 55 |
| பெத்த நிலை | 76 |
| பெத்தத்தில் உயிர் நமய நிலை பொருந்துதல் | 121 |
| பெரும்பற்றப் புலியூரைப் பிரியாதார் இவர் என்றல் | 127 |
| பெறுதி யொழிந்த பொழுது இச்சை நீங்கும் | 156 |
| பைசந்தி வாக்கின் இயல்பு | 88 |
| பொருளும் உடலும் ஆவியும் இறைவன் உடைமை | 9 |
| பொறி ஐந்து | 48 |
| பொறிகள் பத்தும் மாத்திரை பத்தும் மனம் முதலானவையும் பிரகிருதி கஞ்சுகம் | 158 |
| பொறியற்றபொழுது விடயம் நீங்கும் | 157 |
| பொன் இரச குளிகையில் அடங்குதல் | 148 |
| மண்டலம் மூன்று | 57 |
| மண்ணாதி ஐந்தினை இயக்கும் சிவமூர்த்தம் | 147 |
| (மத்திம) சீடர் உருத்திர உலகம் புகுவர் | 9 |
| மத்திமை வாக்கின் இயல்பு | 88 |
| மத்தியாலவத்தை | 64 |
| மதி இரவி பொருந்தும் | 18 |
| மதி மண்டலம் | 24 |
| மந்திர சுத்தி | 160 |
| மரணாவத்தை உறில் உற்பவம் உண்டு | 172 |
| மருத்துவன் செயல்போன்றது முதல்வன் செயல் | 4 |
| மலம் ஐந்து | 40, 50 |
| மறை முடிவினில் நடமுடையவன் இணையடி தொழும் அடியவர் அடியாரின் சிறப்பு | 174 |

பாட்டெண்


| | |
|---|---|
| மன்றுளாடும் பெருமான் | 2 |
| மனம் புத்தி ஆங்காரம் சித்தத்தின் தொழில் | 84 |
| மனமாதி ந்தினை ஐஇயக்கும் சிவமூர்த்தம் | 147 |
| மனம் வாக்கு உடலால் கன்மம் அணைதல் | 14 |
| மனம், வாயு, இடமாகச் சஞ்சலமாய் நினைத்தல் | 190 |
| மனோமயம் | 48 |
| மாயா என்ற அச்சொல்லின் பொருள் | 45 |
| மாயா காரியம் நான்கு | 68 |
| மாயேயம் (சுத்தமாயை) உருத்திரர் முதலானவர்க்கு உலகு உடல் கரணம் போகம் ஆதல் | 37 |
| மாயை இருபத்துநாலு | 95 |
| மாயை நட்டமாதல் | 155 |
| மாயை, புருடன், ஈசன் என்பவற்றை. முறையே மான், மோகினி, விந்து, என்றும் வழங்குவர் | 65 |
| மாயையின் கூறு | 44 |
| மான் | 3 |
| மீதானம் | 25 |
| முக்குணத்தில் ஒன்றுயர்ந்தது புத்தி | 90 |
| முக்குணமும் ஒத்தநிலை சித்தம் | 90 |
| முத்திநெறி மூன்று | 172 |
| முத்தியினும் மும்முதலும் அழியாதென்றல் | 12 |
| முத்தியில் உயிர் 'சிவம்' நிலை அடைதல் | 121 |
| முதல்வன உருவத்தல் ஆக்கலும் அருவுருவத்தாற் காத்தலும் அருவத்தால் ஒடுக்குதலும் செய்தல் | 27 |
| முதல்வன் குருலிங்க சங்கமமாகி நின்றே உயிர்களின் மலத்தைத் தீர்ப்பன் | 199 |
| முப்பத்தாறு தத்துவம் | 49 |
| மும்மலம் | 7 |
| மும்முதலும் அநாதி | 11 |
| மூக்கின் குணம் மண்ணிடமாய் நின்று மணம் அறிதல் | 78 |
| மூலம் முதல் எண்மூன்றும் மாயை | 95 |
| மூலமலம் உயிரை அடக்குதல் | 143 |

பாட்டெண்


மூலாதாரமாகிய துரியாதீதத்தில் உயிருடன் புருடன் உளன் என்பது பொருந்தாது 70
மூவகை உயிர்க்கும் அசுத்தமாயையும், மாயேயமும் (சுத்தமாயையும்) உலகமாகும் 37
மூன்று ஏடணை ஆகாயத்தில் ஒடுங்கும் 93

மெய்ஞ்ஞான உண்மை நிலையவர் இயல்பு 152
மெய்ஞ்ஞானிகட்கு எல்லாச் செயலும் அமலன் பணி 145
மெய்ஞ்ஞானிகள் நன்மை தீமை செய்யினும் அப்பலன் நுகரார்; அவை அவரைத் தொழுவார் பாற் செல்லும் 145
மெய்த்தேசிகன் இன்னான் என்பது 125
மெய்ப்பொருள் நாயனார் 172
மேல்வினை நணுகுதற்குக் காரணம் 15
மேலாலவத்தை 64
மேலாலவத்தைக்குச் சுத்தவித்தை முதலியன உடன் 71
மேலான ஞானம் இதுவெனல் 10
மோகினி 3

வசனாதி காரியம் வாக்காதியில் ஒடுங்கும் 93
வனி என்னும் தத்துவத்தின் தச காரியம் 82

வாக்காதிகளின் விடயம் ஐந்து 54
வாக்கின் விடயம் வசனம் 76
வாக்கு நான்கு 51
வாதம் 36
வாமதேவகலை பதின்மூன்று 102, 104
வாயுப் பத்து 55
வாரியும் நாரமும் ஒன்றுமன்று : இரண்டுமன்று 132
வான்குணம் சோத்திரத்துக் கிடங்கொடுத்தல் 76
விசும்பில் அடங்குவது 108
விசையன் மாலை வழுத்திய முறை 31
விஞ்ஞான கலர் 7

பாட்டெண்

| | |
|---|---|
| விஞ்ஞான மயம் | 140 |
| விடயத்தைக் காண்பது சாக்கிரம் | 74 |
| விண் என்னுந் தத்துவத்தின் தச காரியம் | 83 |
| விண்ணவர் கோன் | 1 |
| வித்தியா தத்துவம் | 50 |
| வித்தியா தத்துவம் ஏழு | 49 |
| விதண்டை | 36 |
| வீதி, மால், அரன், மகேசன், சதாசிவன், விந்து, நாதம், ஆணவம், திரோதானம், பரை, சிவம் என்பனவற்றின் நிறமும் இடமும் | 26 |
| விந்து | |
| விந்துவில் தோன்றுவன வாக்கு முதலியன | 89 |
| வியாதி மூன்று | 59 |
| விழிகளிலாதவர் யானையைக் கண்டது போன்றதாம் கபட நெறிச் சமயத்தோர் பரன் இயல்பினை உணர்ந்தது | 34 |
| விழிக்கு உதவுவது கதிர் | 142 |
| விழியொளி ஞாயிற்றின் ஒளியுள் அடங்குதல்போல் | 143 |
| வினைப்பயனை மருள் அறிவால் அருந்தில் அது நமன் தூதர் அருத்துவதாம் | 150 |
| வைகரி | 91 |
| வைகரி வாக்கின் இயல்பு | 88 |
| வைகாரிக அகங்காரத்திற் கன்மேந்திரியம் தோன்றல் | 91 |
| வேதாந்திகள் ஐம்பூத நெறியாகத் தோன்றியவற்றையே இருபத்தைந்து தத்துவம் என்பார் | 100 |

## நூல் குறித்த செய்திகள் ...

காமிகாகமம் பரம், அபரம் என்னும் வேறுபாட்டால் ஞானம் இருவகைப்படும் என்றும், பதியாகிய பொருளைக் காட்டுவது பரஞானமாகும் என்றும், உயிர்களை அறிவுறுத்துவது அபரஞானமாகும் என்றும், சிவத்தைப் பிரகாசிக்கச் செய்யும் ஞானமே பரம் என்னும் சிவஞானமாகக் கருதப்படுகிறதென்றும் இந்நூல் கூறுகிறது.

